திரு. ச. சங்குமுத்து தேவர் : இந்த முருகன் கோயிலின் சிறப்பு பற்றி அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : முருகனுக்குள்ள சிறப்புத்தான் கோயிலுக்கும்.

திரு. ந. சோமசுந்தரம் : தமிழ்நாட்டில் ஏற்கெனவே கட்டியிருக்கும் கோயில்களுக்கே திருப்பணி செய்ய முடியாது சீரழிந்து இருக்கும் நிலையில் இப்போது புதிய கோயில் கட்ட வேண்டியது அவசியந்தானு என்று அரசு மறு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அவசியம் என்று மக்களில் ஒரு பகுதியினர் கருதுகிறார்கள்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : பழமுதிர்ச் சோலையில் ஏற்கெனவே ஒரு கோயில் இருக்கிறது. அதற்குத் திருப்பணி செய்ய திரு. பி. டி. ராஜன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டதாக அறிகிறேன். அதற்கு அறநிலையம் அங்கீகாரம் கொடுத்திருக்கிறதா ? திருப்பணியை மேற்கொள்வது அந்தக் குழுவா அல்லது அறநிலையமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஏற்கெனவே சில சட்டச் சிக்கல்கள் இருந்த காரணத்தால் சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டிருந்தும் இதுவரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. சட்டச் சிக்கல்கள் தற்போது நீக்கப்பட்டு அறநிலையத் துறையே அந்த வேலையை எடுத்துச் செய்ய இருக்கிறதே அல்லாமல் யாருடைய தலைமையிலும் குழு அமைக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(திருமதி ஜோதி வெங்கடாசலம்—நிலைமை.)

2. பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : அடுத்து பேரவைத் தலைவரை பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் முன் மொழியப்பட்டு விவாதிக்கப்பட வேண்டும்.

ஐந்து மாண்புமிகு உறுப்பினர்கள் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஒருவர் அதை முன்மொழிய வேண்டும். பின்னர் வழி மொழியப்பட வேண்டும். பின்னர் விவாதம் நடக்கும். பேரவைத் தலைவர் பற்றிய விவாதமாக இருப்பதால் விவாதம் உயர்ந்த முறையில்

[மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாஜலம்)]

நடக்க எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு திரு. கோவை செழியன் அவர்களை தீர்மானத்தை முன் மூ ப 10 00 மொழிய வேண்டுமென்று அழைக்கிறேன்.

3. நடை முறைக் கேள்விகள்

(அ) பேரவைத் தலைவரைப் பதவி நீக்கம செய்யக்கோரும் தீர்மானம் விவாதிக்கப்படும்போது, அவருக்கு அவையில் ஒதுக்கப் பட்டுள்ள இருக்கை குறித்து உறுப்பினர்களுக்கு அறிவிக்காதது குறித்தும் இத்தீர்மானத்தின்மீது கருத்துகள் கூற முழு சுதந்திரம் அளிக்கப் படுமா என்பது குறித்தும்.

Dr. H. V. HANDE : Madam, on a point of order. In order to see that the debate is in perfect order, I would like to elicit information on two points from the hon. Chairman.

According to the Rules of the Assembly, whoever sits in the seat must be allotted a particular seat by the Hon. Speaker. Normally when a seat is allotted, we will get a communication the previous night. But till last night we have not received any communication from the Office of the Hon. Speaker the seat which is to be allotted to the Hon. Speaker and from where he is going to exercise his right of reply. This is one point.

The second point is whether full freedom will be given to the Members to express certain things. For instance, Members may express views as to how the Hon. Speaker has conducted the House and the way in which he has allowed or disallowed adjournment motions which are not normally allowed during the debate. The Chair should not suddenly say that these cannot be discussed. So, I request the Chairman to see that full freedom is given to Members to express their views. Only unparliamentary words can be expunged. These are the two points on which I want clarification from the Chairman.

(ஆ) பேரவைத் தலைவரைப் பதவி நீக்கம் செய்யக்கோரும் தீர்மானம் தெளிவாக இல்லாதிருப்பது குறித்து.

Thiru K. KANDASAMY : Sir, on a point of order. Before proceeding with the discussion on the Resolution, I would like to know whether the Resolution is in order. According to the rules of procedure, the Resolution expressing want of confidence against the Chair, should be specific and clear. But it is very vague and not clear. . . . . .

CHAIRMAN (THIRUMATHI JOTHI VENCATACHELLUM) : I am sorry it is not a point of order.....

THIRU K. KANDASAMY : Vague allegations are levelled against the Chair and they are highly defamatory to the democratic genius of our paliamentary system. That is my point. I want the opinion of the Chair.....

CHAIRMAN (THIRUMATHI JOTHI VENCATACHELLUM) : The Resolution has already been admitted and so, there is no point of order in the point raised by the hon. Member, Thiru Kandasami.

DR. H. V. HANDE : Madam, I want a ruling on the two points raised by me.

CHAIRMAN : (THIRUMATHI JOTHI VENCATACHELLUM) : I will give the ruling மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டுவந்த ஒழுங்குப் பிரச்னைக்கு நான் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். சபாநாயகருக்கு தனிப்பட்ட இடம் ஒதுக்கவேண்டுமென்பது அவசியமில்லை. அவருக்குப் பேச வாய்ப்புக் கொடுப்பதற்கு, உரிமை உண்டு. மற்ற உறுப்பினர்களுக்கு இடம் கொடுக்கப்படுகிறபோது அவருக்கு மாத்திரம் ஏன் கொடுக்கவில்லை என்ற பிரச்னையை எழுப்புவதற்கே இடமில்லை. எல்லா உறுப்பினர்களும் இந்த ரிஸல்யூஷன் மீது பேசுவதற்கு வாய்ப்பு நிறைய இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அவர் எந்த இடத்திலிருந்து பேசலாம் ? அவர் எந்த இடத்திலிருந்து பேசலாம் என்ற அந்த வாசகம் நம்முடைய ரூல்ஸ் புத்தகத்திலே எந்த இடத்திலே இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

CHAIR MAN (THIRU MATHI JOTHI VENCATACHELLUM) : There is no particular rule as the 1 o. Member refers to. But the Hon. Speaker can speak from whichever seat he prefers.

THIRU V. M. ABDUL JABBAR : Mr Speaker, Sir. On a point of Order. While the hon. Member, Dr. Hande, has addressed the Chair as 'Madam', the hon. Member, Thiru Kandasamy, has addressed the Chair as 'Sir' Has the Hon. Speaker any gender ? (Laughter).

1974 மார்ச் 29]

THIRU R. PONNAPPA NADAR: Is it very important to know the gender of the Chairman ? Such sort of insinuation should not be made.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, பொதுவாக நம்முடைய பேரவையில் நான் ஏற்கனவே சொல்லலாம் என்று நினைத்தேன் மறந்துவிட்டேன். தலைவர் அவர்களே என்று விளித்தால் போதும். தாற்காலிக சபாநாயகர் என்று விளிக்கிறார்கள். சபாநாயகர் ஒருவரைத் தான் ஸ்பீக்கர் சார் என்று அழைக்கலாம், மற்றவர்களையும் ஸ்பீக்கர் சார் என்று விளிப்பது முறையாகுமா என்பதை அறிந்துகொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : கனம் உறுப்பினர்கள் எப்படி சேர்மேன அட்ரஸ் செய்யவேண்டுமென்று அவர்களுக்குத் தெரியும். அது அவர்களைப் பொறுத்தது. அதற்காக ஒரு ரூலிங் கொடுப்பதற்கு முடியாது.

பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் தொடர்ச்சி.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்களைத் தலைமைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் கீழ்க்கண்ட இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழி கிறேன் :—

" இப்பேரவையின் நடவடிக்கைகளை பாரபட்சமற்ற முறையில் நடத்தத் தவறியதாலும், பேரவையில் 45 நிமிடங்களுக்கு மேல் நடந்த நடவடிக்கைகளை குறிப்பேட்டிலிருந்து நீக்க ஆணை பிறப்பித்ததாலும், எதிர்க்கட்சித் தலைவர்களால் எழுப்பப்படும் ஒழுங்குப் பிரச்சினைகளை அனுமதிக்க மறுப்பதாலும், முறையற்ற கருத்துக்களைக் கூறுவதற்கும், எதிர்க் கட்சி உறுப்பினர்கள் செயல்படாமல் உரத்த குரலெழுப்பித் தடுக்கவும் ஆளுங்கட்சி உறுப்பினர்களை அனுமதிப்பதாலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்களைப் பதவியிலிருந்து நீக்க இப்பேரவை தீர்மானிக்கிறது ".

திரு. கே. டி. கே. தங்கமணி : காங்கேயம் உறுப்பினர் திரு. செழியன் அவர்கள் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழி கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : இந்த விவாதத்திலே எத்தனை உறுப பினர்கள் ஒரு கட்சிக்குக் கலந்துகொள்ளலாம். எங்கள் கட்சியிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை செழியன் அவர்கள் இந்த தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள். அவர்கள் முன்மொழிந்த காரணத்தினால் அவர்கள் இந்த விவாதத்திலே கலந்து கொள்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. எங்கள் கட்சியின் சார்பாக இந்த விவாதத்திலே நானும் கலந்துகொள்ள விரும்புகிறேன்.

[1974 மார்ச் 29]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) ஒவ்வொரு கட்சியிலும் இரண்டு பேர்கள் பேசலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, மக்கள் சபையிலே இம்மாதிரியான தீர்மானம் வந்தபோது இரண்டு மணி நேரம் விவாதம் என்று சொல்லி அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு நேரம் என்று சபாநாயகர் அவர்கள் தெரிவித்தார்கள். இங்கு எங்களுடைய கட்சியின் சார்பாக இரண்டு பேர்கள் பேசுகிறோம். மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் பேச விரும்புகிறார்கள் என்ற கணக்கை எடுத்து ஆரம்பிக்கவர்களுக்கு எவ்வளவு நேரம், பேசக்கூடியவர்களுக்கு எவ்வளவு நேரம், முடிக்கக்கூடியவர்களுக்கு எவ்வளவு நேரம் என்று சொன்னால் நலமாக இருக்கும். நமக்கு மூன்றரை மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : ஒரு இக்கட்டான நிலைமை இருக்கிறது. கட்சித் தலைவர்கள் எத்தனை பேர்கள் அவரவர்கள் கட்சியிலிருந்து பேசப்போகிறார்கள் என்று லிஸ்டு கொடுக்கவில்லை. டைம் எப்படி ஒதுக்குவது என்பது பெயர்கள் வந்த தற்குப் பிறகுதான் தெரியமுடியும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : எங்கள் கட்சியின் சார்பிலே ஏற்கெனவே கொடுத்திருக்கிறோம், வந்திருக்கும் என்று நினைக்கிறேன். எங்கள் கட்சியின் சார்பிலே கே. டி. கே. தங்கமணியும், திரு. வடிவேலும் பேச விரும்புகிறார்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, நேரம் ஒதுக்குகின்ற பிரச்சினையிலே எத்தனை உறுப்பினர்கள் பேசுகிறார்கள் எவ்வளவு நேரம் ஒதுக்கவேண்டும் என்று ஒவ்வொரு கட்சிக்கும் எவ்வளவு நேரம் ஒதுக்க வேண்டுமென்று ஒதுக்கிவிட்டால் அந்தக் கட்சியிலே ஒருவரா அல்லது இருவரா என்பதை அவர்களே தீர்மானித்துக் கொள்ளலாம். ஒரு கட்சியிலே ஒருவரே அதிகமாக நேரம் எடுத்துக்கொண்டு பேசலாம். இன்னொரு கட்சியிலே குறைந்த நேரத்தினை எடுத்துக்கொண்டு இரண்டு பேர்கள் பேசவிரும்பலாம். ஆகவே, கட்சிக்கு என்ற அடிப்படையிலே நேரம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தீர்மானத்தை கொடுத்திருக்கிற கட்சிகளுக்கு விசேஷ சலுகை கொடுக்கப்படவேண்டும். அதேமாதிரி ஆளுங் கட்சிக்கு விசேஷ சலுகை கொடுக்கப்படவேண்டும். அந்த முறையிலே நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : தலைவர் அவர்கள், தங்கமணி அவர்கள் ஒரு கருத்தை வெளியிடுகிறபோது எதிர்க்கட்சிக்கும் ஆளுங் கட்சிக்கும் நேரம் ஒதுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். தோழமைக் கட்சிகள் என்ன தெருவிற்குப் போவதா ? அதற்குத் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

1974 மார்ச் 29]

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, நம்முடைய இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவரவர்கள் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று மட்டும் சொல்லி அவர்களை ஒதுக்குவதாகச் சொல்கிறார்கள். பாராளுமன்ற முறைப்படி தோழமைக்கட்சி என்று ஒன்று இருக்கிறதா ? பாராளுமன்ற முறைப்படி ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று இருப்பதால் எனக்குத் தெரியும். தோழமைக்கட்சி என்று பாகுபாடு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்தச் சட்டசபையில் உண்டு.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பாராளுமன்ற மரபு முறைப்படி எந்தெந்தக் கட்சிகள் பாராளுமன்றத்தில் சட்டப்படி கட்சிகளாக ஒத்துக்கொள்ளப்பட்டிருந்தாலும் அந்தக் கட்சிகளின் அங்கத்தினர்களின் எண்ணிக்கைப்படி எல்லா நேரத்தையும் வகுத்து நேரம் ஒதுக்கி, 7 நிமிஷம், 3½ நிமிஷம், 6 நிமிஷம் என்ற எண்ணிக்கை அடிப்படையில் வகுத்து ஒதுக்கப்படுகிறது. மிகக்குறைவான அங்கத்தினர்கள் உள்ள கட்சிகளுக்கு ஒரு நிமிஷம் என்றுகூட வரும். ஆகவே ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்று நேரம் ஒதுக்குவதில் வேற்றுமை காட்டப்படுவதில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : அமைச்சர் சொல்வது ஒருவேளை பாராளுமன்றத்திற்கு உகந்ததாக இருக்கலாம். ஆனால் இன்றையதினம் தமிழக சட்டசபையை எடுத்துக்கொண்டால் 174 பேர்கள் அவர்கள் இருக்கிறார்கள். நாங்களெல்லாம் சேர்ந்து 60-க்கு மேல் இருக்காது, தோழமையெல்லாம் சேர்த்து. இங்கே கட்சிவாரியாக நேரத்தை ஒதுக்கினால் அவர்களேதான் பேசிக்கொண்டிருக்க வேண்டும். பேராசிரியரின் பேச்சைத்தான் கேட்க முடியுமே தவிர எதிர்க்கட்சிக்காரர்களின் பேச்சைக் கேட்க முடியாது.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர்களே, 62-ஆம் ஆண்டிலேயிருந்து 67-ஆம் ஆண்டுவரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் 8 உறுப்பினர்கள்தான் பாராளுமன்றத்தில் இருந்தோம். அம்மையார் அவர்களது கட்சிதான் அப்பொழுது ஆளுங்கட்சியாக இருந்தது. எங்களைப் பேச விட்டதே கிடையாது. இங்கே நாங்கள் அவர்களைப் பேசவிட்டுக் கொண்டிருக்கிறோம். அதை அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், அது சாதாரண விவாதத்திற்குப் பொருந்துமே தவிர, ஸ்பீக்கர் நியமன தீர்மானத்தில் பாராளுமன்ற நடவடிக்கைகளை எடுத்துப் பார்த்தால் அங்கே ஆளுங்கட்சியைவிட அதிக நேரம், குறைவாக இருந்த எதிர்க்கட்சியினருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு மணி நேரத்தில் கிட்டத்தட்ட 1½ மணி நேரம் எதிர்க்கட்சிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, தோழமைக் கட்சியைப்பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. இங்கே ஒரு தீர்மானம் வருகிறது என்றால் அதற்கு ஆதரவாகப் பேசுபவர்கள் இருக்கிறார்கள். எதிர்த்துப் பேசுபவர்களும் இருக்கிறார்கள். ஆனால் நடுநிலைமையில் இருந்து உண்மையைப் பேசுபவர்கள் தோழமை கட்சியினராகத்தான் இருக்கிறார்கள். அப்படி உண்மையைச் சொல்வதால் எங்களது கட்சிக்குத்தான் அதிக நேரம் கொடுக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : உங்கள் கட்சியிலேயிருந்து இன்னும் பெயரே கொடுக்கவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த முக்கியமான விவாதத்திலே நாம் கொஞ்சம் பொறுப்புணர்ச்சியோடு இந்த மன்றத்தில் விவாதத்தை நடத்த வேண்டும். ஏதோ நாம் மாறிமாறி ஒவ்வொரு கட்சியும் குற்றஞ்சாட்டுவது நல்லதல்ல. உண்மை அத்தனையும் தோழமைக் கட்சிகளின் குத்தகை அல்ல என்பதை அவர்கள் உணர வேண்டும். உண்மையை யார் சொன்னாலும் இந்த மன்றமும் உலகமும் ஏற்றுக்கொள்ளும். ஆகவே இந்த விவாதத்தை நல்லமுறையில் ஆரம்பிக்க உதவியாகத் துவங்கி தங்கள் மூலமாக எல்லா உறுப்பினர்களும் ஒத்துழைத்து எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

திரு. கே. என். குமாரசாமி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார்.

CHAIRMAN (THIRUMATHI JOTHI VENCATACHALAM) : No point of order, I am sorry பதினைந்து நிமிஷங்கள் இந்தபாயிண்ட் ஆஃப் ஆர்டருக்காக ஆகியிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : அந்த அடிப்படையிலேயே நானும் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புகிறேன். அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்து கொள்ள வேண்டிய விஷயத்தைச் சபையிலே பேசி ஒரு மணி நேரம் அதற்காக வீணாவதா ? அலுவல் ஆய்வுக்குழு காற்றில் பறந்துவிட்டதா ? எதிர்க்கட்சியும், ஆளுங்கட்சியும் அங்கேயே இதைப்பற்றி முடிவு செய்திருக்க வேண்டும். இப்படி ஒரு மணி நேரம் இதற்காக வேஸ்டானால் யார் பொறுப்பு ? என் இதை இங்கே வந்து பேசுகிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவிலே, இந்த அவையிலே வருகின்ற பல்வேறு விவாதங்களின்பொழுது நேரத்தை எப்படிப் பங்கிடுவது என்பதைப்பற்றி பல்லாண்டு காலமாக ஒரு வரம்பை வகுத்திருக்கிறோம். அந்த முறையின்படி ஆளுங்கட்சியிலே ஏராளமான உறுப்பினர்கள் இருக்கிறார்கள், எதிர்க்கட்சியிலே குறைவாக உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று இல்லாமல் பாதி நேரம் ஆளுங்கட்சிக்கும், பாதி நேரம் எதிர்க்கட்சிக்கும் என்று வரைமுறை செய்து பிரித்துக்கொடுத்தாலும் அது நடைமுறையிலே வரும்பொழுது எதிர்க்கட்சிகளுக்குத்தான் நேரம் அதிகமாக வந்திருக்கிறது.

1974 மார்ச் 29] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஆனால், இன்றைக்குள்ள பிரச்னையைப் பொறுத்தவரையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர்களுக்கு ஓரளவு அதிக நேரத்தைக் கொடுக்க வேண்டும். அதைத் தொடர்ந்து பேசுபவர்களுக்கு இடம் கொடுத்த பிறகு இதற்கு மறுமொழி பகர இருக்கின்ற மாண்புமிகு அவைத் தலைவர் புலவர் அவர்களுக்கும் நேரம் ஒதுக்க வேண்டும். அதையும் நாம் சரிக்கட்டி, தீர்மானத்தைக் கொண்டுவந்தவர்களுக்கு ஒரு நேரத்தையும், தொடர்ந்து பேசுபவர்களுக்கு குறைந்த நேரமும், பதில் உரைக்கின்றவர்களுக்கு ஓரளவு நேரத்தையும் இந்த 190 நிமிஷங்களில் ஒதுக்கி அதற்கேற்ப செய்ய வேண்டும். நேரத்தை ஒதுக்குவதுபற்றியே நேரம் போய்க்கொண்டிருந்தால் விவாதத்திற்கு நேரம் கிடைக்காது. எனவே, விவாதத்தைத் துவக்குவதுதான் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, இன்றைக்கு எதிர்க் கட்சிகளின் சார்பில் இந்த மன்றத்திலே இந்தத் தீர்மானத்தை முன்மொழிகின்ற நேரத்தில் எதிர்க் கட்சிகளைச் சார்ந்த எங்களுக்கு உண்மையிலேயே மகிழ்ச்சி இல்லை என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தகைய ஒரு சூழ்நிலை இந்த மன்றத்திற்கு ஏற்பட்டிருப்பது குறித்து நான் மெத்த வருத்தமடைகிறேன். சபாநாயகர் என்று ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பின்னால் அந்த சபாநாயகருக்கு ஆளுங் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், எதிர்க் கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் ஒரே மாதிரி மதிப்பையும், ஒரே மாதிரி மரியாதையையும் தருகின்ற மரபு பார்லிமெண்டரி முறை தெரிந்த எல்லா நாடுகளிலும் கடைப் பிடிக்கப்படுகிறது.

அதேபோல எந்தக் கட்சியின் சார்பிலே அவர் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் சபாநாயகருடைய அந்த இடத்திலே அமர்ந்ததற்குப் பின்னால் தான் எந்தக் கட்சியிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறோம் என்பதை மறந்துவிட்டு எல்லாக் கட்சிகளையும் அரவணைத்துச் செல்கின்ற பழக்கத்தை இதுவரையிலே எல்லா சபாநாயகர்களும் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள்,

அதற்கு மாறுபட்ட முறையிலே நடந்துகொண்ட காரணத்தினாலே தான் எதிர்க்கட்சிகளாகிய நாங்கள் அனைவரும் சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டிய அவசியமேற்பட்டது.

நம்முடைய சபாநாயகர் புலவர் கோவிந்தன் அவர்கள் அந்தப் பதவியிலே அமர்ந்ததற்குப் பின்னால் இன்று வரையிலேயும் தான் ஒரு கட்சி சார்பற்றவர் என்ற முறையில் நடந்துகொள்ளவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் ஒரு கட்சி சார்புடையவராகத் தான் நடந்துகொண்டிருக்கிறாரே தவிர, கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர் என்பதைக் காட்டிக்கொள்ளவில்லை.

இதற்கு முன்னால் நமக்கெல்லாம் தெரிய பல பேர் அந்த இடத்திலே இருந்து இருக்கிறார்கள். அவருக்கு அருகிலே அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு மதியழகன் அவர்கள் அந்த இடத்திலே இருந்திருக்கிறார்கள்.

அவர்கள் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சார்ந்திருந்தாலும் அந்த இடத்திலே இருக்கின்ற வரையிலும் நியாயமான முறையிலே நடந்து நல்ல பெயரை எடுத்திருக்கிறார்கள். அதை ஆளுங் கட்சிக்காரர்களே கூட மறுக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஆனால், இன்றைக்கு புலவர் கோவிந்தன் அவர்கள் அங்கே அமர்ந்த தற்குப் பின்னால் இதுவரையிலே நடத்திய நடவடிக்கைகள் அனைத்திலும் ஆளுங் கட்சியின் விருப்பு வெறுப்புகளுக்குத் தகுந்த மாதிரி நடந்து கொண்டு வந்திருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், சபாநாயகர் அவர்கள் அங்கத்தினர்களைப் பார்க்கின்ற நேரத்தை விட அங்கே அமர்ந்துள்ள முதலமைச்சர் அவர்களைப் பார்த்துக்கொண்டே, அதற்குச் செலவிடுகின்ற நேரம்தான் அதிகம். அங்கத்தினர்களைப் பார்த்துத் தன்னிச்சையாக அவர்கள் நடக்க முடியவில்லை அவ்வாறு அவர்கள் தொந்திரவு செய்யப்படுகிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது.

எந்தவொரு பிரச்னையானாலும் முதலமைச்சரின் கண் அசைவைப் பார்த்துக்கொண்டுதான் தீர்ப்பைத் தருகிறாரே தவிர தானாக ஒரு தீர்ப்பைத் தரவில்லை என்பதை நான் வருத்தத்துடன் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை.

எந்தப் பிரச்னையாக இருந்தாலும் முதலமைச்சரைப் பார்ப்பது—முதலமைச்சரின் அருகில் இருக்கிற ஆளுங் கட்சித் தலைவரைப் பார்ப்பது தன்னுடைய தீர்ப்பைத் தருவது என்பதாகத்தான் நடந்துகொள்கிறாரே தவிர—தானாக தீர்ப்புத் தருவதில்லை. இப்படி ஆளுங் கட்சியை ஆதரிக்கின்ற வகையில்தான் நடந்துகொள்கிறார் என்கிற குற்றச்சாட்டை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் எதிர்க் கட்சிக்காரர்களுக்கு நியாயமாகக் கொடுக்க வேண்டிய எந்தச் சலுகைகளையும் தருவதில்லை.

என்னைப் பொறுத்த வரையில் தனிப்பட்ட முறையில் சொல்லிக் கொள்வேன். இந்த மன்றத்தில் பல சபாநாயகர்கள் இருந்த நேரத்தில் எனக்கு அதிகமான வாய்ப்புக்களையும், உரிமைகளையும் தந்தார்கள்.

மாண்புமிகு புலவர் கோவிந்தன் வந்த பிறகு—கேள்விகள் கேட்கக் கூட நான் அனுமதிக்கப்படுவதில்லை. பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பினால் அனுமதிப்பதில்லை.

நான் ஆளுங் கட்சியில் இருந்த காலத்தில் அவரைச் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற தீர்மானம் வந்தபோது—நான் அதை எதிர்த்தேன்—அப்படி எதிர்த்ததற்குக் காரணம் அவர் இந்த மன்றத்திற்குள் நுழையாமல், வெளியில் இருந்தே கையெழுத்துப் போட்டுவிட்டுச் சென்றதும், கட்சியின் மீது நம்பிக்கையில்லை என்கிற முக்கியமான தீர்மானங்கள் வந்தபோதும் கூட இந்த மன்றத்திற்குள் வராமல் இருந்ததும் சரியல்ல என்பதைச் சுட்டிக்காட்டி அவரைச் சபாநாயகராகத் தேர்ந்

1974 மார்ச் 29] [திரு. கோவை செழியன்]

தெடுக்கக் கூடாது என்று அந்த நேரத்தில் குறிப்பிட்டேன். அதனால் அவருக்கு என் மீது ஏற்பட்ட கோபம் நான் எதிர்க் கட்சிக்கு வந்த பின்னனும் கூட இருக்கிறது. எனக்கு எந்தவிதமான வாய்ப்பும் தருவதில்லை.

அதேபோல் எங்கள் கட்சியைச் சார்ந்த பலருக்கும் அவர் வாய்ப்புத் தர மறுத்திருக்கிறார்கள்.

எங்கள் கட்சியைச் சார்ந்த டாக்டர் ஹாண்டே அவர்கள் பல பிரச்னைகளை எழுப்பினார்கள். அவரது பாயின்ட் ஆப் ஆர்டர்கள் நியாயமானவையாக இருந்தும் கூட, அவருக்கு வாய்ப்பளிக்க மறுத்திருக்கிறார்கள். ஒரு முறை இந்த மன்றத்தில் இருந்து அவரை வெளியேற்றினார்கள். அப்படி வெளியேற்றுவதற்கு அவர் சொன்ன வாசகங்களை இப்போது நான் சொல்ல விரும்பவில்லை. காரணம் அந்தச் சொற்கள் நடவடிக்கைக் குறிப்பில் இருந்து எடுக்கப்பட்டுவிட்டன. ஆயினும், டாக்டர் ஹாண்டே அவர்களை அந்த வாசகத்தைச் சொல்லும்படியாக துரத்தியதே நமது மாண்புமிகு சபாநாயகர் அவர்கள்தான்.

எதிர்க் கட்சியில் இருக்கிறவர்கள் சட்டப்படி எதையும் பேசுவதற்கு இங்கே உரிமை இருக்கிறது. அவர்கள் மன்றத்தில் பேசுகிறார்கள். ஆனால், எதிர்க் கட்சியினர்கள் அப்படிப் பேசிய பேச்சுக்களை எல்லாம் காரணம் இல்லாமல் சபாநாயகர் அவர்கள் எக்ஸ்கபன்ஜ் செய்திருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு நான் பலவற்றைச் சொல்ல முடியும். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. காளிமுத்து அவர்கள் ஒரு கடிதத்தை இந்த மன்றத்தில் வாசித்தார்கள். அது முதல்மைச்சருக்கு விரோதமாக இருந்தது என்கிற ஒரே ஒரு காரணத்தைக் கொண்டு அந்தக் கடிதம், அது சம்பந்தப்பட்ட உரைகளை நடவடிக்கைக் குறிப்புகளில் இருந்து நீக்கிவிட உத்திரவிட்டார்கள். அது ஆளுங் கட்சிக்கு விரோதமாக இருந்தது என்கிற காரணத்தினால்தான் எக்ஸ்பன்ஜ் செய்யப்பட்டது.

ஆனால், எங்கள் கட்சியைச் சார்ந்த திரு. சௌந்திரபாண்டியன் மீது முதல்மைச்சர் அவர்கள் குற்றம் சாட்டி ஒரு கடிதத்தை இந்த அவையில் படித்தார்கள். அது தவறுன கடிதம் என்பதை எடுத்துக் காட்டியும் அது அவை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து எடுக்கப்படவில்லை. அது தவறுனது என்பதை இரண்டு தினங்களுக்குப் பின்னர் பேரவைத் தலைவரே ஒப்புக்கொண்ட பிறகு—இது போன்ற கடிதங்கள் இனி தன்னிடம் காட்டப்பட்டு, அனுமதி பெற்ற பிறகே அவையில் படிக்க வேண்டும் என்கிற சூலிங்கைக் கொடுத்தார்கள். என்றாலும், வெளிஉலகத்திற்கு எங்களுடைய நல்ல நோக்கத்தை எடுத்துக்காட்ட வகையில்லாமல் எக்ஸ் பன்ஜ் பண்ணிவிடுகிற காரணத்தினால் அந்தக் குறிப்புகளை எல்லாம் பத்திரிகைகளில் வெளியிடுவதில்லை. இந்தச் செயல் ஏரவஞ்சனையாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. கோவை செழியன்] [1974 மார்ச் 29

அதுபோல் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தாலும்—அவை ஆளுங் கட்சிக்கு விரோதமாக இருக்கிறது என்கிற காரணத்தினால்—சபா நாயகர் கட்சிக் கண்ணோட்டத்தோடேயே அவற்றை அனுமதிக்க மறுக் கிறார்கள்.

குறிப்பாக, கோவையில் நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு பல நிகழ்ச்சி களைக் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டுவந்தோம். தேர்த லில் எங்களுக்காகப் பாடுபட்டார்கள், எங்களுக்கு ஒத்துழைப்புத் தந்தார் கள் என்பதற்காக போலீசாரால் நிறையப் பேர்கள் கைது செய்யப்பட்டார் கள். காரணம் இல்லாமல் ரிமாண்டில் வைத்து அடித்தார்கள். அது பற்றி நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தபோதும் அதற்கு அனுமதி அளிக்க மறுத்தார்கள்.

கோவையில் அண்ணு தி.மு.க.வுக்காகப் பலரும் ஒத்துழைத்த நேரத் தில் முத்தமிழ் சேனை என்ற பெயரால் பல மலையாளிகள் கடைகள் சூறையாடப்பட்டன. அவர்களை அடித்துத் துரத்தினார்கள்.

அதுவும், புலிகுளம், பாபநாயக்கன்பாளையம் என்ற இடத்தில் "மலை யாளிகள் தாங்களாகவே ஓடிவிட வேண்டும். இல்லாவிட்டால் அடித்துத் துரத்தப்படுவார்கள்" என்று பொதுக் கூட்டத்தில் பேசி, அதன் பின்னர் போலீசாரின் உதவியுடன் இதனைச் செய்திருக்கிறார்கள். இதற்காக ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்தோம். சபாநாயகர் அவர்கள் அதையும் தள்ளிவிட்டார்கள்.

என்னுடைய தொகுதியில் அரிசன மக்களுடைய—பல பேர்களுடைய வீடுகளை எல்லாம் கொளுத்தினார்கள். அந்த வீடுகளைக் கொளுத்தியதற்குக் காரணம் அவர்கள் பண்ணைகளுக்கு குறைந்த கூலிக்கு வேலை செய்ய வர வில்லை என்பதாகும். பல பேர்கள் பயத்தினால் ஊரை விட்டே ஓடிவிட்டார் கள். அதை விவாதிக்க வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்த நேரத்திலும்—ஆளுங் கட்சிக்கு சங்கடமான நிலைமையை அது உருவாக்குகிறது என்கிற ஒரே காரணத்தினால் அதையும் தள்ளி யிருக்கிறார்கள்.

இப்படி மாண்புமிகு சபாநாயகர் புலவர் கோவிந்தன் அவர்கள் நடந்து கொள்கிற முறை ஆளுங் கட்சிக்கு சாதகமாக இருக்கிறது, எதிர்க் கட்சி களின் உரிமைகளை நசுக்குகிறார்கள் என்கிற குற்றச்சாட்டை இங்கே சுமத்து கிறேன்.

அதே நேரத்தில் எதிர்க் கட்சியில் உள்ள நாங்கள் மைனாரிட்டி எண்ணிக்கையில் இருக்கிறோம். இங்கே நாங்கள் ஏதாவது கருத்தைச் சொல்லும்போது ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் சத்தம் போட்டே உட்கார வைக்கிறார்கள். வேண்டுமென்றே நக்கல் செய்கிறார்கள். எதா வது சத்தத்தை எழுப்பிப் பயப்படுத்துகிறார்கள்.

அந்த மாதிரி நேரத்தில் சபாநாயகர் எங்களுக்குப் பாதுகாப்பாக— பேரவையில் அமைதியை ஏற்படுத்தி எங்களுக்குப் பேசுகிற உரிமையை அளிப்பதில்லை. எல்லாச் சத்தங்களும் முடிந்த பிறகு ஒரு தீர்ப்பைத்

1974 மார்ச் 29] [திரு. கோவை செழியன்]

சொல்கிறார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் தைரியமாகப் பேச முடியவில்லை. மன்றத்தில் எங்களுக்குப் பாதுகாப்பு கிடையாது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : உறுப்பினர் அவர்கள் பேசும்போது ஆளுங் கட்சிக்காரர்கள் நக்கல் செய்கிறார்கள் என்று சொன்னார். அது பார்லி மென்டரி வார்த்தைதானு என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. கோவை செழியன் : நம்முடைய முன்னாள் உதவி சபாநாயகா சீனிவாசன் அவர்களை விருதுநகரில் தாக்கினார்கள் என்கிற ஒரு பிரச்சினையை டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த மன்றத்தில் கிளப்பி, அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னபோது அதற்குச் சரியான பதில் கொடுக்கப்படவில்லை, அவருக்குப் பாதுகாப்புத் தரப்படும் என்கிற உத்திர வாதமும் தரவில்லை.

அதைக் கேட்ட டாக்டர் ஹாண்டே அவர்களை அடக்கி உட்கார வைத்தார் கள்.

எதிர்க் கட்சிக்காரர்களுக்கு நியாயமான உரிமைகளைக் கொடுக்க மறுத்த காரணத்தினால், ஒரு கட்சிக்காரரைப் போலவே நடந்துகொண்டு வருகிற காரணத்தினால் அவர் இந்தப் பதவியில் இருப்பதற்கு அருகதை அற்றவர் என்று கூறி, அவர் மீது கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவு தருவார்கள் என்ற நம்பிக்கையில் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவர் அவர்களே, நம்முடைய சபாநாயகர் புலவர் அவர்கள் மீது கொண்டுவந்திருக்கக் கூடிய நம்பிகை இன்மையைத் தெரிவிக்கும் பிரேரணையின் மீது என் கட்சியின் சார்பாக நான் சில கருத்துக்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சில குற்றச்சாட்டுக்களை, நம்முடைய புலவர் அவர்கள் மீது, இங்கே சொன்னார்கள். நம்முடைய சபாநாயகர் அவர்களும் அவற்றை இங்கே இருந்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அதைப் போல பல குற்றச்சாட்டுகளை எல்லாம் பின்னாலே பேசப்படுபவர்களால் சொல்லப்படலாம். இந்த நேரத்தில் நான் என்ன சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் என்றால், நம்முடைய புலவர் இதை ஒரு அக்னிப் பரீட்சை யாகத்தான் எற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நாம் நீதியை வழங்கினாலும் கூட, நீதி வழங்கப்பட்டதாக மற்றவர்கள் நினைக்கும்படி அது வழங்கப்பட வேண்டுமென்ற ஒரு சொல் பழக்கத்தில் இருந்து வருகிறது.

எனவே பொறுத்த அளவில் இங்கே சபாநாயகர் மீது கொண்டு வந்திருக்கக்கூடிய நம்பிக்கையின்மைத் தீர்மானம் எதைக் காட்டுகிறது என்று நினைக்கிறேன் என்றால்—நீங்கள் எல்லாக் கட்சிகளைச் சார்ந்தவர

[திரு. செய்டி எஸ். சுந்தரபாதி] [1974 மார்ச் 29

களுக்கும் நீதியை வழங்கி வந்தாலும், அந்த நீதியை நீங்கள் வழங்குவ தாக அவர்களுக்குப் படவில்லை என்ற கருத்தை அது பிரதிபலிக்கிறதே தவிர, நீங்கள் **நீதியே** வழங்கவில்லை எந்தச் சாராருக்கும் என்று நான் நினைக்கவில்லை. **நான்** ஆரம்பத்தில்கூட சொன்னேன், இதை நீங்கள் ஒரு அக்னிப் **பரீட்சையாக** ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று. இராம பிரான் தன் **மனைவி** சீதாபிராட்டியைப் பிரிந்தபோதும் இந்த உலகத்து மக்களெல்லாம் **தெரிந்துகொள்ள** வேண்டும் என்பதற்காக அக்னி பரீட்சை ஒன்றை நடத்திக் **காட்டினார்கள்**. அதே போல தங்களுக்கும் ஒரு அக்னிப் பரீட்டை நடக்கிறது **என்றுதான்** நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நான் **ஆசைப்படுகிறேன்**.

மு.ப. 10-30

உங்கள் மீது நம்பிக்கையில்லை; கட்சி சார்பாக இருக்கிறீர்கள் என்று யாருமே நினைக்கவில்லை. ஆனால் இங்கே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த எதிர்க் கட்சிக்காரர்களுக்கும் தெரியும், அவர்கள் உள்ளத்திலே நெஞ்சிலே அவர்களுக்குப் பாதகம் செய்கிறீர்கள் என்ற எண்ணம் அவர் களுக்கு இல்லை. இருந்தாலுங்கூட அவர்கள் நெஞ்சத்திலே ஒரு குறுகுறுப்பு. இனிமேல் அந்த எண்ணம் கூட அவர்கள் நெஞ்சத்திலே வளராத அளவுக்கு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

ஏழ்மையான குடும்பத்திலே பிறந்து, வளர்ந்த நீங்கள் அந்த மாதிரி கட்சி சார்பாக நடக்கிறீர்கள் என்று எண்ணம் அவர்கள் மனதிலே எழாமல் இருக்க வேண்டும்.

பலரும் பகிய நண்பர்கள் கூட வேண்டுமென்று எதையாவது மனதிலே வைத்துக்கொண்டு செயல்படக்கூடியவர்கள் அல்ல என்பது எனக்குத் தெரியும். அப்படி இருந்தாலும் கூட அவர்கள் அந்த மாதிரி நினைக்க வேண்டியவருகிறது என்று சொன்னால் இந்த நேரத்தில் அனைத்துக் கட்சி களும்—இந்த மன்றத்தில் இருக்கிற ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல—இந்த மன்றத்தில் இருக்கிற எல்லாருமே தங்கள் மீது சந்தேகத்தின் சாயல் கூட இல்லாத அளவுக்கு நீங்கள் நடந்துகொள்ள வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதற்கு மேலாக இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தவர்களும்—என்ன சொன்னாலும் கூட அவர்களுக்குத் தெரியும்—நிச்சயமாக யாரும் இதிலே தப்பு இருக்கிறது என்று சொல்ல முடியாது—எனவே இனிமேலும் அவர்கள் மனதிலே சந்தேகம் இல்லாத அளவுக்கு நீங்கள் நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதன் காரணமாக இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவளிக்காத நிலையில் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF: Madam Chairman, a motion has been moved by a respected and learned Honhember of this House for the removal of the Hon. Speaker from the office that he holds.

1974 மார்ச் 29] [திரு. எம். ஏ. லத்தீப்]

இன்றையதினம் இந்த நம்பிக்கையில்லாத தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே முன் மொழிந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தின் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர் சௌடி சுந்தர பாரதி அவர்கள் சொல்லியதைப் போல எதிர்க்கட்சியிலே இருக்கிற உறுப்பினர்கள் அதிகமான வாய்ப்புகளைப் பெற வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே, இந்த நம்பிக்கையில்லாத தீர்மானத்தைக் கொண்டு வந்தாலாவது நம்முடைய பேரவைத் தலைவர்கள் அதிகமான வாய்ப்புகளை அளிப்பார்கள் என்ற எண்ணத்தில்தான் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் அதுவும் குறிப்பாக இன்றைய விசித்திரமான அரசியல் சூழ்நிலையிலே நாட்டிலே நடக்கிற பல பிரச்சினைகள் இந்த அவையிலே விவாதித்து அதன் வாயிலாக நாட்டிலே ஒரு குழப்பமான நிலைமை இருக்கிறது. அசாதாரணமான நிலைமை இருக்கிறது. மக்களிடையே ஒரு கொந்தளிப்பு இருக்கிறது. அடிக்கடி இந்த மாதிரி விஷயங்களை பத்திரிகையின் வாயிலாக நாட்டுக்கு தெரிவிப்பதன் காரணமாகதான் விரும்புகிற மாற்றத்தை அரசியலிலே குழப்பம் என்ற ஆயுதத்தின் அடிப்படையிலே அடிக்கடி செய்து வருகிறார்கள்.

இந்த விசித்திரமான சூழ்நிலையிலே சபையின் தலைவராக இருக்கக் கூடியவர்கள் நீங்கள்—மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள்—அவர்களுக்கு இருக்கிற நெருக்கடியான நிலைமையை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் உணர்ந்து இருக்கலாம். எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்களும் உணர்ந்திருக்கிறார்கள்.

ஆனால் ஆளுங்கட்சியிலே இருக்கிறவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் என்ன சொல்வார்களோ அதற்கு முற்றிலும் மாறான கருத்தை சொல்லக் கூடிய இடத்திலே அவர்கள் இருக்கிறார்கள், தீர்மானத்தைக் கொண்டு வந்து விட்டோமே என்று அதற்கு ஆதரவான ஒரு விவாதத்தை பிரதி பலிப்பதற்கு எதிர்க்கட்சிக்காரர்கள் நினைப்பார்கள்.

நாங்கள் எதிர்க்கட்சியிலே இருந்தாலும் சபாநாயகருடைய ஸ்தானம் மிக மிக புனிதமான ஸ்தானம், இந்த அவையின் நடுவராக இருப்பவர் சபாநாயகர் என்ற அடிப்படையிலே சபாநாயகருக்கு விரோதமான நம்பிக்கையின்மை தீர்மானத்தைக் கொண்டுவருவது அசாதாரணமான நிலையிலே மிகப்பெரிய ஸ்தானத்தில் இருப்பவர் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர் பட்சபாதமான, பாகுபாடான அல்லது அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு நடக்கிறார் என்று கூறி அதன் காரணமாக மன்றத்தின் கவுரவத்தைக் குறைக்கும் வகையில் மன்றத்தின் செயல் முறைகள் நடப்பதற்கு தடங்கலாக அவர்கள் நடக்கிறார்கள் என்று நினைக்கும்போது தான் கடைசி ஆயுதமாக இதைப் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்பது என் கருத்து.

ஆட்சியை எதிர்த்து நம்பிக்கையின்மை தீர்மானத்தைக் கொண்டு வரலாம். அதைப் பயன்படுத்தி ஆட்சியாளர்கள் தவறு செய்து விட்டிருக்கிறார்கள் என்று மக்களுக்கு எடுத்து போதிக்க வேண்டுமென்று நினைக்கும் அடிப்படையிலே ஆட்சியாளர்களுக்கு விரோதமாக தீர்மானத்தைக் கொண்டு வந்து விவாதிப்பது தவறல்ல.

[திரு. எம். எ. லத்தீப்] [1974 மார்ச் 29

ஆனால், மன்றத்தின் தலைவர் அவர்கள் பாரபட்சமாக நடந்துகொள்கிறார், ஆளுங்கட்சிக்கு ஆதரவாக இருக்கிறார், எதிர்க்கட்சிக்கு பாதகமாக நடக்கிறார் என்ற அடிப்படையிலே நம்பிக்கையில்லா தீர்மானத்தை சபைத் தலைவருக்கு எதிராக, விரோதமாக கொண்டு வருவார்களேயானால், அதையே வழக்கமாக வைத்துக்கொள்வார்களானால் நிச்சயமாக நாம் ஜனநாயகத்திலே போதிய நம்பிக்கையும், ஜனநாயகத்திலே போதிய பயிற்சியும் இல்லாமல் இருக்கிறோம் என்ற அபாயத்துக்கு ஆளாகிவிடுவோம் என்ற எண்ணத்திலே எங்களைப் போன்றவர்கள் இருக்கிறார்கள்.

நான் மிகவும் வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். இது 3-வது, 4-வது தடவையாக இந்த துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சபைத் தலைவர் அவர்கள் ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் இந்த மன்றத்தின் நடவடிக்கை விதிகளுக்குட்பட்டு எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு கிடைக்கிற வகையிலே நடத்தக்கூடியவர் என்ற ஒரு நடுநிலையிலே இருந்து பணியாற்றக்கூடியவர்.

ஆனால் இன்று அவர்கள் மீது சாட்டப்படுகிற குற்றச்சாட்டு, ஏழுங்குப் பிரச்சினைகளை அவர்கள் அனுமதிப்பதில்லை என்பது. 45 நிமிடங்களுக்கு நடந்த ஒரு நிகழ்ச்சியை சபைக் குறிப்பேட்டிலிருந்து அவர்கள் அகற்றி விட்டார்கள். தேவையில்லாத குற்றச்சாட்டுகளையெல்லாம் நீங்கள் இங்கே சொல்லியிருக்கிறீர்கள்.

ஆனால் இந்த முடிவுகளைச் செய்யக்கூடிய அதிகாரங்கள் முழுமையும், ஒழுங்குப் பிரச்சினைகள் மீது எந்த நேரத்தில் தீர்ப்பு வழங்கவேண்டும், சபையை எப்படி நடத்த வேண்டும் என்பவற்றைக் குறித்துள்ள அதிகாரங்களை எல்லாம் பரிபூர்ணமாக இந்த மன்றம் ஒத்துக்கொண்டு இந்த தலைமைக்கு அளித்து விட்டது. ஆகவே, தலைமைக்கு, அதாவது அவைத் தலைமைக்கு முழு அதிகாரமும் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது, மறக்கவும் மாட்டார்கள்.

அவர்கள் உள்நோக்கத்தோடு செய்கிறார்களா அல்லது வேறு நோக்கத்தோடு செய்கிறார்களா என்பதை யார் அறிவது? அது ஒரு மனோநிலை. அமைச்சர்களுக்கு ஒரு உரிமம் கொடுத்து குற்றஞ் சாட்டுவது ஜனநாயகத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ஒரு முறையாக இருந்தாலும், தலைவர் அவர்கள் இந்த மாதிரியான ஒரு போக்கில் செல்கிறார்கள் என்று சொல்கிற ஒரு மனோபாவம் இருந்தால், அவர்கள் சொல்லாத அல்லது மனதில் நினைக்காத ஒரு எண்ணத்தை இருப்பதாகக் குறிப்பிட்டுச் சொல்லி நம்பிக்கையில்லாத் தீர்மானம் வழக்கமாகக் கொண்டு வருவதாக இருந்தால் நான் நிச்சயமாகச் சொல்கிறேன். இந்த இடத்திலே உட்கார்ந்திருக்கக்கூடியவர்கள் ஒரு கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படுவார்கள்.

இந்த அவையில் நடந்துள்ள பல்வேறு நிகழ்ச்சிகளின் அடிப்படையில் கூறுகிறேன். **After all he is also a human being.** சபாநாயகர் ஸ்தானத்தில் உட்காரக் கூடியவர்களும் ஒரு மனிதர் தான். மற்ற உறுப்பினர்களும் மனிதர்கள் தான். யாரும் தவறு செய்யாமல் இருக்கக்கூடியவர்கள் என்றோ அல்லது முழுமையான பக்குவம் பெற்றவர்

1974 மார்ச் 29] [திரு. எம். ஏ. லத்தீப்]

கள் என்றே யாரும் சொல்லமாட்டார்கள். அப்படிச் சொல்வதாக இருந்தால் அதை ஏற்றுக்கொள்ளவும் முடியாது. தவறு செய்யலாம். ஆனால் தெரிந்து தவறு செய்கிறார்கள், ஒரு குறிப்பிட்ட சாராருக்குச் சாதகமாகச் செய்கிறார்கள் என்று சொல்லக்கூடிய ஒரு நிலைமை இருக்குமானால் தலைவராக இருப்பவர்களுக்கு என்ன தோன்றும்?

நாம் பாரபட்சமின்றி நடந்தாலும் எதிர்க்கட்சிகளுக்கு எதிராக இருக்கிறார், ஆளும் கட்சிக்கு சாதகமாக இருக்கிறார் என்று சொல்கிறார்கள் ஆகவே ஆளும் கட்சியின் ஆதரவு நமக்குத் தேவையாக இருக்கிறது. எந்த நேரத்திலும் எதிர்க்கட்சிக்காரர்கள் நம்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள். நாம் எவ்வளவு தான் பாரபட்சமில்லாமல் நடந்துகொண்டாலும் அந்தப் பணியைக் குறை சொல்லும் ஒரு தன்மை எதிர்க்கட்சிக்காரர்களுக்கு இருக்கிற காரணத்தால் ஆளுங் கட்சியை நமக்கு எப்போதும் சாதகமாக வைத்துக்கொள்வேண்டும் என்ற ஒரு எண்ணம் உருவாகுமானால் அதற்கு என்ன செய்யமுடியும்? அந்த மாதிரியான ஒரு எண்ணம் சபைத் தலைவரின் உள்ளத்தில் எற்பட இடம் கொடுக்கக்கூடாது.

ஏனெனில், அவர்களும் ஒரு மனிதர் தானே. Always there are some presumptions. சபைத் தலைவர் எதோ தவறுக நடந்திருக்கிறார் என்ற ஒரு உணர்வு வந்தாலும் அவர் பாரபட்சமின்றி நடந்து கொள்கிறார் என்பதை இந்த சபை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நிலை இருக்கவேண்டும்.

இந்த அவையில் சில சமயங்களில் என்னைப் போன்றோர்கள் சபா நாயகரை இறக்குவதை ஆதரித்துப் பேசுவது, சில நேரங்களில் சபா நாயகரை இறக்கக்கூடாது என்று ஆதரித்து பேசுவது என்று ஒரு துர்ப் பாக்கியகரமான நிலையில் இந்த சபை இருக்கிறது.

நான் அருள்கூர்ந்து கேட்டுக் கொள்கிறேன், இப்படிப்பட்ட முறை களைக் கையாளக் கூடாது. அன்றே நான் சபாநாயகர் அவர்களிடம் சொன்னேன். (மணியடிக்கப்பட்டது.) நான் ராத்திரி எல்லாம் உட் கார்ந்து படித்தேன். இவர்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களே, இதில் ஏதாவது பாயிண்ட் இருக்கிறதா என்று பார்த்தேன்.

மதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கிலாந்தில் இருந்து சட்டம் பயின்றவர். ஹௌஸ் ஆப் காமன்ஸ் பற்றியெல்லாம் அவர்களுக்கு நன்கு தெரியும். அவர்கள் ஒரு பாரிஸ்டர். நிதானமான வர். விவேகமானவர். அப்படிப்பட்ட தங்கமணி அவர்கள் கூட இப்படி ஒரு தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்களே என்று பார்த்தேன்.

நிதானத்திற்கு இலக்கணம் வகுத்தவர், நிதானத்தின் இருப்பிடமாக இருக்கும் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூட ஒரு நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களே என்று பார்த்தேன்.

[1974 மார்ச் 29

THIRU R. PONNAPPA NADAR : Sir, I need not take lessons from the hon. Member Mr. Latheef. He need not treat me as a school boy.

(VOICES : He is only paying compliments to you!)

திரு. எம். ஏ. லத்தீப் : திரு. பொன்னப்ப நாடார் அவர்களைப் புகழ்ந்து அவர்களது பண்புகளைப் பாராட்டுகிறேனே தவிர அவர்களை எப்போதுமே இந்த அவையில் என் சீனியராக ஏற்றுக்கொண்டிருக்கிறேனே தவிர அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கக்கூடிய அளவிற்கு எனக்கு வயதும் இல்லை, அறிவும் இல்லை என்பதை நான் நிச்சயமாக ஒப்புக்கொள்கிறேன்.

அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்களே, அதில் ஏதாவது விஷயம் இருக்கிறதா என்று பார்த்தேன். புதிதாக தெரிந்துகொள்ள ஏதாவது இருக்கிறதா என்று இரவு முழுவதும் உட்கார்ந்து படித்தேன். ஸ்டேட் மெண்ட்ஸ் எப்போது அனுமதிக்கப்படும், பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால் என்ன, அதன் தன்மை என்ன, அதன் இலக்கணம் என்ன, ஒத்திவைப்புப் பிரேரணைகள் கொண்டு வரும்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் மிகப் பெரிய ஜனநாயக அமைப்பாகிய ஹவுஸ் ஆப் காமன்ஸ் வரலாற்றில் நல்ல முறையில் விளக்கியிருக்கிறார்கள்.

பேரவைத் தலைவர் அவர்கள் நடந்துகொண்டிருக்கிற முறையில் ஏதாவது தவறு இருக்கிறதா என்று நானும் துருவித் துருவிப் பார்த்தேன், எனக்கு எதுவும் கிடைக்கவில்லை. சில நேரங்களில் அதிருப்தி ஏற்படலாம். நான் பேசுவதற்கு போதிய நேரம் கொடுக்கவில்லை என்ற அதிருப்தி எனக்கு ஏற்படலாம். ஆனால் அவைத் தலைவர் ஒட்டு மொத்தமாக அவையின் நடவடிக்கையைக் கவனிக்க வேண்டியவர், எல்லோரையும் திருப்திப்படுத்தவேண்டிய நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். என் திருப்தி அல்லது அதிருப்தி என்பது என் மனநிலை.

ஆனால் சபாநாயகர் அவர்களுக்கு ஒரு கடமை இருக்கிறது. அவர்களுக்கு இந்தச் சபையின் நடவடிக்கைகளை நடத்தி, ஜனநாயக மரபுகளைப் பாதுகாத்து, உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவேண்டும். அது கடினமானதொன்றுதான். ஆனால் ஒன்றை நான் சொல்லிக் கொள்கிறேன். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருப்பது அவர்களுக்கு விரோதமாக எதோ அநீதி செய்து விட்டார்கள் என்று அவர்கள் நினைக்கக் கூடாது.

எதிர்க் கட்சிக்காரர்கள் தாங்கள் நினைக்கிற முறையில் சில வழிமுறைகளை சபாநாயகர் அவர்கள் கையாளவேண்டும் என்ற ஒரு எண்ணத்தில் இதைக் கொண்டு வந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். ஆகவே அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அல்லது அதிகமான நேரத்தைப் பெற வேண்டும் என்ற ஒரு துடிப்பின் அடிப்படையில்தான் இதைக்

1974 மார்ச் 29] (திரு எம். ஏ. லத்திப்)

கொண்டு வந்திருக்கிறார்களே தவிர தனிப்பட்ட முறையில் உங்கள் பேரில் உள்ள அவநம்பிக்கையினாலோ அல்லது எந்தவிதமான அகௌரவமாகவோ கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நான் நினைக்க வில்லை.

ஆனால் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அடிக்கடி இப்படி நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டு வருவது என்பது நல்லதொரு முறை அல்ல. அது நல்லதொரு பாரம்பரியத்தை, நல்லதொரு மரபை ஏற்படுத்தாது. சபைத் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தால் அது இந்த சபை தன் மீது நம்பிக்கையில்லை என்று சொல்கிற அளவிற்குத் தான் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறி இந்தத் தீர்மானத்தை நான் கடுமையாக ஆட்சேபித்து எதிர்த்து அமர்கிறேன்.

திரு. எஸ். வடிவேல் : மன்றத் தலைவர் அவர்களே, நம்முடைய அவைத் தலைவர் மீது கொண்டு வந்திருக்கிற இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஏதோ அவைத் தலைவரை நீக்குவதற்கல்ல என்பது எனக்கு நன்முகத் தெரிகிறது. அப்படி நாங்கள் நினைத்தாலும் நீக்கக் கூடிய ஒரு நிலையில் இன்றைக்கு வோட்டுகள் அந்த அளவிற்கு இல்லை.

சபைத் தலைவராக இருப்பவர்கள் குறிப்பாக நடுநிலையோடு ஒரு தராசு முனையாக இருக்க வேண்டும் என்பதுதான் எங்கள் தாழ்மையான கருத்தாகும். மாண்புமிகு திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள், டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்கள், மாண்புமிகு மதியழகன் அவர்கள், இன்று புலவர் அவர்கள் அவைத் தலைவராக இருக்கிற காலத்திலும், இந்த நான்கு பேர்கள் அவைத் தலைவர்களாக இருந்த காலத்தில் நான் அவை உறுப்பினராக இருந்து வருகிறேன்.

1952-ல் ஆளும் கட்சியைச் சார்ந்த திரு. சிவஷண்முகம் பிள்ளை அவர்கள் சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் காங்கிரஸ் கட்சியிலிருந்து ராஜினாமா செய்து, ஒரு சுயேச்சையாக இந்த அவையில் கௌரவத்தையும் அந்தஸ்தையும் பாதுகாக்கக்கூடியவனாக நான் இருப்பேன் என்று அவர்கள் அறிக்கை வெளியிட்டார்கள். அப்போது இன்று மன்றத்தில் வீற்றிருக்கக்கூடிய அம்மையார் அவர்கள் அமைச்சராக இருந்தார்கள் என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அன்றைய நிலைக்கும் இன்றிருக்கக் கூடிய நிலைக்கும் இடையே பல்வேறு எற்றத்தாழ்வுகளைப் பார்க்கிறேன்.

குறிப்பாக என்னைப் போன்றவர்கள்—நான் கல்லூரியில் அல்லது ஹைஸ்கூலில் படித்துவிட்டு இந்த அவை உறுப்பினராக வந்ததில்லை. என். இளமைப் பிராயத்தில் சுயமரியாதை இயக்கத்திலும் வாலிபப் பருவத்தில் கம்யூனிஸ்டு பார்ட்டியிலும் இருந்து ஏறத்தாழ 32 ஆண்டுக் காலம் அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டவன் நான். 22 ஆண்டுகளுக்கு முன்பு நான் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறேன் என்றால் என் வயது எம்மாத்திரம் இருந்திருக்கும், என் அனுபவம் எம்மாத்திரம் இருந்

(திரு எஸ். வடிவேல்) [1974 மார்ச் 29

திருக்கும் † பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று அப்போது சொல்லக் கூடத் தெரியாது. என்னவோ சொல்கிறார்கள் என்று நினைப்பேன். எப்படியோ இந்த அவையில் உறுப்பினராக இருக்கக் கூடிய பாக்கியம் இருந்தது.

மூதறிஞர் ராஜாஜி அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது என் பேச்சில் அவர்கள் அடிக்கடி குறுக்கிட்டபோது அவைத் தலைவர் திரு. சிவ ஷண்முகம் பிள்ளை அவர்கள் ஆங்கிலத்தில் என்ன சொன்னார்கள் தெரியுமா ? "

'Hon. Chief Minister, please sit down, Order, Order.'

என்று அவர்கள் அன்று சொன்னது இன்றும் என் நெஞ்சில் நிழலாடுவது போல் இருக்கிறது.

இன்றைக்கு நம்முடைய அவைத் தலைவர் ஒரு நடுநிலையான பார்வை பார்க்கவில்லை என்பதை நான் சொல்கிற நேரத்தில், என் சொல்கிறேன் என்றால், நாங்கள் வெட்டிப் பிரேரணைகள் கொடுத்தாலும் சரி, கேள்விகள் கேட்க வேண்டுமானாலும் சரி, அவர்கள் அனுமதி கொடுப்பது இல்லை. பல்வேறு சந்தர்ப்பங்களில் எங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை. நாங்கள் தாழ்த்தப்பட்டவர்கள், நாங்கள் ரூல் 42 என்று தீர்மானம் கொண்டு வர முடியாது. எங்களுடைய மனக்குமுறலை எடுத்துச் சொல்லத் தான் இதைக் கொண்டு வருகிறோம்.

இந்த மூன்று ஆண்டுக் காலத்தில் சட்டமன்ற உறுப்பினர் என் கையில் ஒரு மனு கொடுத்தது இல்லை என்று அமைச்சர் சொல்கிறார். 15 தடவை கொடுத்து இருக்கிறேன். நீங்கள் சொல்வது பச்சைப்பொய் என்று

THIRU R. PONNAPPA NADAR : How is this relevant to the discussion ? Why should the name of another Minister be dragged in here ?

CHAIRMAN (THIRUMATHI JOTHI VENCATACHELLUM) : He is relating his experiences in the House.

THIRU K. T. K. TANGAMANI : It is relevant, for, when particular Minister say a certain thing which is not accepted by the Member, any other Speaker would have pulledup the Minister. The Member has not given a petition to the Minister on a particular issue ' is a tall statement. The Speaker should have pulled her up when the Minister said so. That is what he is trying to say.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த விவாதத்தில் நண்பர் வடிவேல் அவர்கள் அன்று தான் சொன்ன வார்த்தையை "சுத்தப்பொய்" (குறுக்கீடு) "பச்சைப்பொய்" வாயஸ் பெற வேண்டிய நிலை வந்தது என்று சொல்லவந்திருப்பார் என்று நான் கருதுகிறேன். கொடுத்ததற்கும், அவர்கள் வாங்கவில்லை என்று சொல்வதற்கும் எந்த விதத ஆதாரமும் இல்லை. சபாநாயகர் அவர்களுக்கு அங்கத்தினர் சொல்வது சரியா, மாண்புமிகு அமைச்சர் சொல்வது சரியா என்று சொல்லமுடி

யாது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அங்கத்தினரும், அமைச்சரும் தான் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : வடிவேல் சொல்லிக்கொண்டு வருவது எப்படி அந்தக் காலத்தில் மூதறிஞர் ராஜாஜி அவர்களையே சபாநாயகர் உட்கார வைத்தார்கள் என்பதற்காகச் சொல்லி வருகிறார்கள். அமைச்சர்கள் சொல்வதை வேதவாக்கு என்றும் மற்றவர்கள் சொல்வது எல்லாம் தவறு என்று எடுக்கும் சூழ்நிலை இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதற்காக அவர்கள் சொல்லக் கூடிய பாணியில் சொன்னார்கள். பேராசிரியர் சொல்வதிலே உண்மை நிலை இருக்குமானால்

if it is not relevant, you can pull him up and the Member should be pulled up. I have no objection. அது நிலவனட் இல்லை என்று சொனனால், நான் நிலவன்ட். என்று சொல்கிறேன். You may say it is not relevant ; I say it is relevant to the issue.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : சபாநாயகர் அவர்களுக்கு மாண்புமிகு அமைச்சருக்கும், உறுப்பினருக்கும் இடையே என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு இல்லை. Dr. Krishna Rau has given a ruling that when the Speaker says a thing, not knowing what has happened between the hon. Member and the Hon. Minister, in such circumstances it is not proper to find fault with the Speaker. Hon. Member should not put the Chair in an embarassing situation of deciding as to who is speaking the truth. ஆகையால் அந்த ரூலிங்கை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. எஸ். வடிவேல் : அது மாதிரி ஒரு துணிவோடு சபாநாயகர் அவர்கள் ராஜாஜி அவர்களையே உட்கார வைத்தார் என்ற பெருமை உண்டு. அது மாதிரி ஒவ்வொரு முறையும் நடுநிலைப் பார்வையோடு சபாநாயகர் அவர்கள் நடந்து கொண்டார்கள்.

அந்தக் காலத்தில் ஆங்கிலத்தில் தான் கேள்வி கேட்கவேண்டுமென்ற நிலை இருந்தது. தமிழில் பேட முடியாது. இருந்தபோதிலும் துணிவுடன் 18 உறுப்பினர்கள் தமிழில் எழுதிக்கொடுத்தேன். ஒப்புக்கொள்ள மறுத்தார்கள். அது அவையில் வரவேண்டுமென்று போராட்டம் நடத்தினேன். அப்படி முடியாது என்று ஆட்சேபணை செய்தும் கூட, அன்றைக்கு சபாநாயகராக இருந்த சிவசண்முகம் பிள்ளை அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி செய்யும் வகையில் தமிழ் சுருக்கெழுத்தாளர்களை அவையில் போடும் அளவுக்கு செய்தார்கள். என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்.

[திரு எஸ். வடிவேல்] [1974 மார்ச் 29

அன்று பெரிய வழக்கறிஞர்கள் இருந்தார்கள். அந்த சமயத்தில் நான் பேசும்போது மாண்புமிகு சௌடி சுந்தரபாரதி சொன்னது போல் —இராமருக்கும் சீதைக்குமிடையே சச்சரவு என்று சொல்லிக் கொண்டு வந்தபோது, வடிவேல் அவர்கள் ராமர் பக்தரா, அனுமார் பக்தரா என்று வினுயகம் கேட்க, உடனடியாக அவர்கள் உண்மை தொண்டுள்ளம்கொண்ட பக்தன் ராம பக்தனுக இருந்தாலும் சரி, அனுமான் பக்தனுக இருந்தாலும் சரி, உன்னைப்போல் ஓட்டு வாங்கி விட்டு லா காலேஜில் படித்தால் எந்தப் பக்தனும் இல்லை என்று குறிப்பிட்டார். அப்போது நீங்களும் இருந்தீர்கள். உங்களுடைய ஞாபகத்தில் அது இருக்கும் என்று நினைக்கிறேன்.

ஆனல் இப்போது நாங்கள் அவசரத் தீர்மானம் கொண்டு வருகிற நேரத்தில் சபாநாயகர் அவர்கள் எனனே தானே என்று பார்க்கிறார்கள். இந்த அவையில் பல அறிஞர்கள், நாவலர்கள் பங்கேற்றாலும் இந்த அவை யாருக்கும் குத்தகையாகி விடாது.

நல்லறம் பாடிய மன்னனே வாழ்த்தி
நலம்புரிவாள் எங்கள் தாய்
அவர் வல்லவர் ஆயினும்

அவனே விழுங்கி ஆனந்தக் கூத்திடுவாள் என்று சொன்னார் பாரதி. ஆகவே, நல்லறத்தோடு, நீதியோடு, கட்சி வித்தியாசம் இல்லாமல் இந்த அவை நடப்பதற்கு முக்கியமாக சபாநாயகர் அவர்கள் பார்க்க வேண்டும். நீங்கள் நடுநிலைமையில் இருக்க வேண்டும். நாங்கள் ஓட்டுப் போட்டு சபாநாயகரை பதவியிலிருந்து விலக்கக் கோரி இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரவில்லை. உண்மை நிலையை விளக்கக் கோரி, எங்களுடைய எண்ணங்களை இந்த அவைக்கு எடுத்துக் காட்டத் தான் இதைக் கொண்டு வந்தோம் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இன்று சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டிய ஒரு சங்கடமான நிலை ஏற்பட்டதற்கு நான் உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். ஆனல் இங்கே இருக்கக் கூடிய எதிர்கட்சி அங்கத்தினர்கள், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு கையெழுத்து போட்ட அங்கத்தினர்கள் எல்லாம் திரு. லத்தீப் சொன்ன மாதிரி பொறுப்பற்ற முறையிலோ, அல்லது அவசரப்பட்டோ, ஆத்திரப்பட்டோ கொண்டு வந்தோம் என்று சொன்னல் அது ஜனநாயகத்திற்கு மரியாதை காட்டக்கூடிய செய்கை இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

என் இதைச் சொல்கிறேன் என்றால் 1971-ல் சட்டசபை கூடியது. இன்றைக்கு 1974. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தான் எதிர்கட்சிக்காரர்கள் நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தோம். ஆனல் உண்மையிலேயே ஜனநாயகத்தை மதிக்கக்கூடிய அவர் தோழமை கட்சி இருக்குமானல் உண்மையிலேயே ஜனநாயகத்திற்கு மதிப்பு

1974 மார்ச் 29] [திருமதி. த. ந. அனந்தநாயகி]

கொடுக்கக்கூடிய அவர் எந்தக் கட்சிக்கு ஒத்தாசை செய்துகொண்டிருக்கிறார்களோ அந்தக் கட்சி இருக்குமானால் இந்த சட்டசபையில் இப்படி ஒரு பெருத்த எண்ணிக்கையை வைத்துக் கொண்டு அவர்களே ஒரு சபாநாயகர், துணை சபாநாயகரைத் தேர்ந்தெடுத்துவிட்டு அவர்களே இரண்டு முறை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்த அவல நிலைமையை அகில இந்தியாவிலும் இந்த மாநிலத்தில் தவிர வேறு எந்த மாநிலத்திலும் இருக்க முடியாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, நாங்கள் ஆட்சிக்கு ஒத்தாசை செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். கட்சிக்கு ஒத்தாசை செய்வது என்பது வேறு. ஜனநாயகத்திற்குள், நாங்கள் ஒத்தாசைசெய்து கொண்டு வருகிறோம். ஆகவே, அம்மையார் அவர்கள் எங்களைப் பார்த்து கட்சிக்கு ஒத்தாசை செய்து கொண்டு இருக்கிறோம் என்று சொல்வதை ஆட்சேபிக்கிறேன்.

மக்களுக்கும், ஜனநாயகத்திற்கும் நாங்கள் ஆக்கமும், ஊக்கமும் தந்து ஒத்தாசை செய்து வருகிறோம். அந்த அளவுக்குத்தான் இந்த மன்றத்தின் மரபுகள் காக்கப்படவேண்டுமென்பதற்கு வாதாடுகிறோம் என்பதை அம்மையார் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அவர் இல்லை என்று சொல்லி வெளியே தெரியவேண்டாம். அவர் பேசிய பேச்சைப் படித்தால்போதும். நேற்று பேசினாரே அவர் பேச்சு, முத்துப்பதித்த கிரீடம் மாதிரி இருக்கிறது.

THIRU M. A. LATHEEF : On a point of order, Sir. The hon. Member cannot attribute motives and insinuations. The no-confidence motion is not against Latheef. It is not a matterfor discussion.....

THIRU K. T. K. THANGAMANI : Sir, point of order..... (Many hon. Members rose in their seats.)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிற போது மற்றொரு உறுப்பினர் இடைமறிக்கக் கூடாது. அரசாங்கத்தை ஆதரிக்கிறார்கள் என்று சொல்வது கெட்டவார்த்தையோ, பெரிய குற்றச் சாட்டோ அல்ல. அவர் அரசாங்கத்தை ஆதரித்தக்கொண்டு தான் இருக்கிறார். அப்படியிருக்கும்போது திரு. லத்தீப் அவர்கள் என் இவ்வளவு கோபமாக குறுக்கிடுகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

CHAIRMAN (THIRUMATHI JOTHI VENCATACHELLUM): Order, order. All of you please sit down.

மு. பகல் 11.

THIRU G. R. EDMUND : Sir, on a point of order.....

THIRU R. PONNAPPA NADAR : Sir, I am also on a point of order. May I submit that interruptions should be avoided and the proceedings of the House should be carried in a peaceful manner ? It may be that when one hon. Member is speaking another hon Member may wish to raise a point of order and seek a point of clarification. In such a case, the latter should get the permission. previous permission, of the Chair. I think that rule will be followed by all of us in this House.

CHAIRMAN (THIRUMATHI JOTHI VENKATACHELLUM) ;: I request all members who speak on the Resolution to confine and stick to the matter before the House as far as possible.

திரு. க. உரொ. எட்மண்ட் : I am on a point of order. எதிர்கட்சித் தலைவர் மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் இப்பொழுது எழுப்பிய ஒழுங்குப் பிரச்னையை நான் ஒப்புக்கொண்டு அதற்கு மேல் ஒரு சில கருத்துக்களை நான் இங்கே ஒழுங்குப் பிரச்னையாக சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த மன்றத்தில் உள்ள மரபு எந்த உறுப்பினரும் பேசும்பொழுது மற்ற எந்த உறுப்பினரும் எழுந்து குறுக்கிடுவதற்கு உரிமை இருக்கிறது. பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம் அல்லது பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் எழுப்பலாம். பாயின்ட் ஆப் இன்பர்மேஷன், பாயின்ட் ஆப் செல்ஃப் எக்ஸ்ப்ளனேஷன் என்றெல்லாம் இருக்கிறது . . . .

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் எங்கே இருக்கிறது ? அப்படி ஒரு பாயின்ட் கூட கிடையாது.

திரு. எம். சுரேந்திரன் : எப்பொழுது வேண்டுமானாலும் குறுக்கிட்டுக் கொண்டு இருக்கக்கூடாது.

திரு. க. உரொ. எட்மண்ட் : நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்களுக்கு இது கூடத் தெரியவில்லை. ஒரு உறுப்பினர் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, அவர் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வேண்டுமானால் சபாநாயகர் அவர்களுடைய அனுமதியைப் பெறவேண்டும். அவர் இரண்டு காலம் சபாநாயகராக இருந்திருக்கிறார். நான் இரண்டு ஆண்டுக் காலம் துணைச் சபாநாயகராக இருந்திருக்கிறேன்.

(மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் எழுந்திருந்தார்.)

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே,

I am on a point of order and even the Einister has no right of interruption.

1974 மார்ச் 29] திரு. உரொ. எட்மாண்ட்.[

நான் சொல்வதெல்லாம் இந்த மன்றத்தில் என்ன நடக்கிறது என்றால், ஆளும் கட்சி உறுப்பினர்களோ அல்லது அவர்களுக்கு ஆதரவாக இருக்கிற எதிர்க் கட்சி வரிசையில் உள்ள உறுப்பினர்களோ பேச எழும்பினால் உடனே நம்முடைய ஒலிபெருக்கி வேலை செய்யக் கூடிய அளவுக்கும், அங்கே உள்ளவர்களுக்கு அதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் எழும்பும்பொழுது ஒலிபெருக்கி வேலை செய்யாது. நீங்கள் அனுமதி கொடுத்தால்தான் வேலை செய்யும். இங்கே மன்ற உறுப்பினர்கள் ஒரு முக்கியமான பிரச்னையை விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இந்தத் தீர்மானத்தை எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

THIRU N. GANAPATHI : What is the point of Order ?

THIRU G. R. EDMUND : You are not the Chair to give a ruling. I do not want any.....

தலைவர் அவர்களே, மன்ற உறுப்பினர்கள் எழுப்புகிற ஒழுங்குப் பிரச்னையைப் பற்றி அது ஒழுங்குப் பிரச்னையா, இல்லையா என்று தீர்ப்பு வழங்குவது தலைவரே தவிர, உறுப்பினர் அல்ல. அது கூட வழக்கறிஞராக இருப்பவருக்குத் தெரியவில்லையே என்று நான் [illegible]

நான் பேசும்பொழுது குறுக்கீடு இல்லாமல் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். இதை நீங்கள் ஒழுங்கு செய்ய வேண்டும். நாங்கள் பேசும் பொழுது ஒலி பெருக்கி துண்டிக்கப்படக் கூடாது என்று நீங்கள் உத்தரவிட வேண்டும். இல்லாவிட்டால் யாராக இருந்தாலும் நீங்கள் அனுமதி கொடுத்தால் தான் ஒலிபெருக்கிக்குத் தொடர்பு கொடுப்பார்கள் என்ற ஒரு நிலை வேண்டும். அதற்கான ஒரு உத்தரவை நீங்கள் மிகக் கண்டிப்பான முறையில் போடவேண்டும். எந்த உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும் பொழுதும் அனாவசியமான குறுக்கீடு இருக்கக் கூடாது. அப்பொழுதுதான் உறுப்பினர்கள் விவாதத்தில் தடங்கல் இல்லாமல் மிகத் தெளிவான முறையில் விளக்கமாகப் பேச முடியும். அதற்கான தீர்ப்பை நீங்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : இங்கே பேசுகிற பொழுது மாண்புமிகு அம்மையார் அவர்கள் திரு. எத்தீப் அவர்களுடைய பேச்சைக் குறிப்பிட்டு, அவர்கள் ஆட்சியை ஆதரிக்கிறார்கள், அல்லது சபாநாயகர் மீது கொடுக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கிறார்கள் என்றெல்லாம் விளக்கிப் பேசினார்கள். ஒரு கட்சியோ அல்லது அந்தக் கட்சியினுடைய உறுப்பினரோ ஆட்சியை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்பதை அந்தக் கட்சிதான் முடிவு செய்ய வேண்டும். அவரவர்கள் தங்களுடைய கட்சியின் கருத்தையொட்டி இங்கே எடுத்துச் சொல்கிறார்கள். ஆகவே ஆதரிப்பதோ எதிர்ப்பதோ கூடாது என்று அம்மையார் அவர்கள் விளக்கம் தந்து கொண்டிருப்பது முறை தானா ?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : அங்கத்தினர் தன்னுடைய இருக்கையில் இல்லாமல் பேசுவதே முறையல்ல. (சிரிப்பு).

திருமதி த. ந. அனந்தநாயகி : நான் சொல்ல வந்தது என்னவெண்றால், இம்மாதிரி நம்பிக்கையில்லாத் தீர்மானம் சாதாரணமாக சட்டசபையில் எதிர்க் கட்சியினரால் கொண்டுவரப்படும். ஆனால் தமிழகத்தினுடைய தனிச் சரித்திரம், இங்கே நம்பிக்கையில்லாத் தீர்மானம் சபாநாயகர் மீதும், துணை சபாநாயகர் மீதும் ஆளும் கட்சியினரால் கொண்டுவரப்பட்டது. அதைத்தான் சொன்னேன். இவர்கள் எந்தக் கட்சிக்குத் தோழமையாக இருக்கிறார்களோ அந்தக் கட்சி ஜனநாயகப் பண்பு இல்லாத முறையில் அன்றைக்கு நடந்து கொண்டது. அப்பொழுது எல்லாம் ஒன்றும் சொல்லாமல் இப்பொழுது உறுப்பினர் அவர்கள் "சபாநாயகர் பதவி மிக உயர்ந்த பதவி, நீதிபதிக்குச் சமமான பதவி, அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரலாமா, அது ஜனநாயகத்திற்கு அழகா" என்றெல்லாம் இப்பொழுது கேள்விகளைக் கேட்கிறார். அப்பொழுது அல்லவா அவர் இந்த மாதிரிக் கேள்விகளைக் கேட்டிருக்க வேண்டும். வாதிப் பிரதிவாதி போலத் தான் . . . . . .

(திரு. எம். எ. லத்தீப் எழுந்திருந்தார்)

CHAIRMAN (THIRUMATHI JOTHI VENCATACHELLUM) : Please sit down. Let her finish her speech.

திரு. எம். சுரேந்திரன் : இம்மாதிரியான முறை கையாளப்பட்டால் (பல உறுப்பினர்கள் எழுந்திருந்தார்கள். கூச்சல் குழப்பம்)

CHAIRMAN (THIRUMATHI JOTHI VENCATACHELLUM) : Order, . . Order. Please sit down. There should be order in the House.

திருமதி த.ந. அனந்த நாயகி : என்னைச் சற்றுப் பேச அனுமதித்தால்தானே .....(மறுபடியும் திரு. எம்.எ. லத்தீப் எழுந்திருந்தார்(.

CHAIRMAN (THIRUMATHI JOTHI VENCATACHELLUM) : Please sit down. Let the hon. Member Thirumathi Anandanayaki continue. I am not allowing anybody excepting Anandanayaki.

திரு. எம். சுரேந்திரன் : அவரை உட்காரச் சொல்லுங்கள்.

CHAIRMAN (THIRUMATHI JOTHI VENCATACHELLUM) : Please sit down. Let the hon. Member Thiru Latheef say what he has got to say.

1974 மார்ச் 29]

திரு. எம். சுரேந்திரன்: ஒரு மெம்பருக்கு மட்டும் என்ன பிரிவிலேஜ்? (கூச்சல்-குழப்பம்)

THIRU M. A. LATHEEF: When the Chair has allowed me, I have got the right to raise a point of order.

(Thiru M. Surendren and some other members also rose.)

CHAIRMAN (THIRUMATHI JOTHI VENCATACHELLUM): Let there be order. I request the hon. Members to take their seats. Let the hon. Member Thirumathi Anandanayaki continue.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தில் பேசும்பொழுது அவரவர்கள் கஷ்டம் என்ன என்பதைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பாக இருக்கிறது. நான் பேசுவதைக் கூட கேட்பதற்கு பொறுமை இல்லாமல் இருந்தால் எப்படி இங்கே இருக்கக் கூடிய எதிர்க் கட்சிகள் வேலை செய்ய முடியும் என்பதை எல்லோரும் யோசித்துப் பார்க்க வேண்டும். நான் முன்னாலே சொன்னது போல பலத்த எண்ணிக்கையுள்ள ஆளும் கட்சியினர் சபாநாயகர் மீதும், துணைச் சபாநாயகர் மீதும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்ததைப் பார்க்கும் பொழுது உண்மையிலேயே ஜனநாயக மரபுக்கு அவர்கள் மதிப்புக் கொடுத்தார்களா என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. இந்த அவலநிலை இந்தச் சபைக்கு வந்ததனால் என்ன கதி?

சபாநாயகர் பதவியில் இருப்பவர்கள் பாரபட்சம் இல்லாமல் தைரியமாக எல்லாக் கட்சியினருக்கும் நிம்மதி அளிக்கக் கூடிய வகையில், நான் உங்களுடைய பிரதிநிதி, சட்சபைக்கு உள்ளே எதிர்க் கட்சியாக இருந்தாலும் சரி, ஆளும் கட்சியாக இருந்தாலும் எல்லோருக்கும் சம உரிமை அளித்து தைரியமாக பாரபட்சமின்றி எல்லோருடைய உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற முறையில் நடந்துகொள்ள முடியாத நிலை இருக்கிறது. எல்லா உறுப்பினர்களுக்கும் நீதி நிலைமைக்கு ஏற்ற பாதுகாப்பு சபாநாயகரினால கொடுக்க முடியவில்லை என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் கூடச் சொன்னார், சபாநாயகர் தீர்ப்புக் கொடுப்பதாக இருந்தாலும் சரி, எக்ஸ்பஞ்சு பண்ணுவதானாலும் சரி, சப்ளிமென்டரி கேள்வி கொடுப்பதானாலும் சரி, அமைச்சர்களுக்கு இக்கட்டு ஏற்படாமல் எப்படி பாதுகாக்க வேண்டுமோ அப்படிப் பாதுகாக்கவேண்டும் என்ற நிலைமையில் தன்னுடைய கடமையைச் செய்ய வேண்டும் என்ற நிலைக்கு சபாநாயகர் இழுத்து வரப்பட்டிருக்கிறார்.

சபாநாயகர் பதவி உயர்ந்த பதவி, நீதிபதிக்குச் சமமான பதவி என்ற எண்ணத்தில் அவர் தைரியமாக நடந்து கொள்ள வேண்டும். அந்த முறையில் வரக்கூடிய சபாநாயகர் தைரியமாக தன்னுடைய கடமையைச் சரிவரச் செய்ய முடியவில்லை.

[திருமதி த.ந. அனந்தநாயகி] [1974 மார்ச் 29

அந்த அளவுக்கு தங்களுடைய எண்ணிக்கைப் பலத்தை வைத்துக் கொண்டு, இந்த அவையிலே 174 பேர்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணத்தில் காரணத்தைக் கூட கொடுக்காமல் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆளும் கட்சியினர் சபாநாயகர் மீதும், துணைச் சபாநாயகர் மீதும் கொண்டு வரக்கூடிய நிலைமை இருக்கிறது. இன்றைக்கு எங்களுடைய தீர்மானத்தில் நாங்கள் காரணங்களைக் கொடுத்திருக்கிறோம். அது கூட ஒரு அங்கத்தினர் சொன்னார், No reason is given என்று. இதைவிட என்ன காரணம் கொடுக்க முடியும் ?

இந்தக் காரணங்கள் புரியவில்லை என்றால் வேறு எந்த காரணத்தைச் சொல்லி புரிய வைக்க முடியும்? நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே திட்டவட்டமாக காரணத்தைச் சொல்லியிருக்கிறோம். அதைப் புரிந்து கொள்ளமுடியவில்லை என்கிறார்கள்.

நாங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினால் அலவ் பண்ணமாட்டேன் என்கிறார் சபாநாயகர் ; ஆனால் ஆளும் கட்சியில் இருப்பவர்கள் எழுப்பினால் அனுமதிக்கிறார்கள்.

ரூல் 41, ரூல் 42-லே மோஷனைக் கொடுத்தால் திருப்பி அனுப்பி விடுகிறார். ஆளும் கட்சிக்காரர்கள் அல்லது அவர்களுக்கு வேண்டியவர்கள் கொடுத்தால் எடுத்துக்கொள்கிறார். இப்படி பாரபட்சமாக நடந்து கொள்கிறார் சபாநாயகர். இதை எடுத்துச்சொல்ல நாங்கள் கடமைப் பட்டிருக்கிறோம். அதற்காகத்தான் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம்.

இந்தச் சபையின் பொறுப்புணர்ச்சி, இந்தச் சபையின் கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும் ; தமிழகத்து சட்டசபையின் தூய்மை பாதுகாக்கப்பட வேண்டும் ; தமிழகத்தின் பெருமை காப்பாற்றப்பட்ட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடுதான் எங்கள் கருத்தை எடுத்துச் சொல்வதற்காக இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம்.

நாங்கள் எண்ணிக்கையிலே குறைவாக இருக்கலாம். ஆனால் எங்களுடைய எண்ணம் பெரிது. நாங்கள் சிறிய அளவிலே இருந்தாலும் 174 உறுப்பினர்களைக் கொண்டு ஆளும் கட்சியாக இருக்கின்ற உங்களை ஆட்டிப் படைக்கக்கூடிய ஆற்றல் உள்ளவர்களாக இருக்கிறோம். இங்கே நேர்மையுள்ள ஒரு சபாநாயகர் இருந்தால்தான் ஜனநாயகம் பிழைக்கும் ; ஜனநாயகம் தழைக்கும் ; ஜனநாயகம் வளரும். இல்லாவிட்டால் ஜனநாயகம் அடியோடு சம்மட்டி கொண்டு அடித்துக் கொலை செய்யப்படும். அப்படிக் கொலை செய்து கொண்டிருக்கிறார் என்று முன்னாலேயே நான் சொல்லியிருக்கிறேன்.

174 பேர்கள் சேர்ந்து சபாநாயகரைத் தேர்ந்தெடுத்துவிட்டு, பின்னால் வீட்டுக்குப் போ என்று சொல்கிறார்கள்.

1974 மார்ச் 29] [திருமதி த.ந. அனந்தநாயகி]

அதைப் போலவே, துணை சபாநாயகரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அதன் பின்னால் அவர்களை வீட்டுக்குப் போ என்று சொல்கிறார்கள். இது என்ன ஜனநாயகம்? துணை சபாநாயகர் கட்சி மாறினால உடனே நீக்கிவிட வேண்டுமா? வேறு கட்சியிலே உள்ளவர்களைத் துணை சபாநாயகராகப் போட்டு சபையை யாரும் நடத்தவில்லையா? துணை சபாநாயகர் தவறு செய்தால் பரவாயில்லை. கட்சி மாறிவிட்டார் என்பதற்காக அவர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, அவரைத் துணை சபாநாயகராகத் தேர்ந்தெடுத்தவர்களே வீட்டுக்குப் போ என்று அனுப்பி விடுவது என்ன முறையில் நியாயமாகும்?

சபாநாயகராக இருக்கக்கூடியவர் ஆளும் கட்சிக்கு மட்டும் பாதுகாப்பாக இருக்கக்கூடாது. எதிர்க்கட்சிக்காரர்களின் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும். எதிர்கட்சிக்காரர்களுக்கும் போதுமான வாய்ப்பு கொடுக்க வேண்டும். கருத்துக்களைச் சொல்வதற்கு எல்லோருக்கும் சம வாய்ப்பு வேண்டும். அதைப் பார்த்துக்கொள்ள வேண்டியது சபாநாயகரின் கடமை இல்லையா?

நாங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினால் உடனே அமைச்சர்களிடம் இருந்து என்ன பதில் வருகிறது என்று உற்றுப் பார்க்கிறார். அவர்கள் என்ன கட்டளை இடுகிறார்கள் என்று தெரிந்து, அதற்குத்தக்கபடி கடமையாற்றிக்கொண்டு இருக்கிறார் சபாநாயகர். அப்படிச் செய்தால் சபாநாயகரால் ஒழுங்காகக் கடமையாற்ற முடியுமா?

ரூல் 41, ரூல் 42 நாங்கள் கொடுத்தால் டிஸ் அலவ் பண்ணிவிடுகிறார். அவர்கள் கொடுத்தால் பதில் வருகிறது; சபையில் எடுத்துக்கொள்கிறார். "The spiralling prices of essential commodities" என்று ஒரு தீர்மானம் கொடுத்தேன். அது டிஸ் அலவ் என்று திரும்பி வந்து விட்டது.

அதன் பின்னால் "கிரோசின்" பற்றி ஒரு தீர்மானம் வந்தது. அது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கேட்டால் அது எசன்ஷியல் கமாடிட்டீசில் வருகிறது என்று சொல்கிறார்கள். நான் கொடுத்த தீர்மானத்திலேயே அதுவும் வருமே. நானும் எசன்ஷியல் கமாடிட்டீஸ் பற்றித்தானே கொடுத்திருந்தேன். அதிலே உப்பு, புளி, மிளகாய் எல்லாம சேர்த்துக் கொடுத்திருந்தேன். கிரோசின் விலை ஏறியிருக்கிறது என்பதைப்பற்றி விவாதிக்கும்போது என்னுடைய தீர்மானத்தையும் ஏன் எடுத்துக்கொள்ளக்கூடாது?

நாங்கள் ரூல் 41-லே கொடுத்தால் அதை டிஸ் அலவ் செய்துவிட்டு அதே விஷயத்தை அவர்கள் தரப்பிலே ரூல் 42-ல் எடுத்துக் கொள்கிறார்கள்.

அதே போல, ரூல் 42-லே நாங்கள் தீர்மானம் கொடுத்தால் அதை டிஸ் அலவ செய்துவிட்டு, அவர்கள் தரப்பிலே அதை ரூல் 41-ல் கொண்டு வருகிறார்கள்; அதற்கு அனுமதி கொடுக்கிறார்கள். நாங்கள் எந்த ரூலில் கொடுத்தால் எடுத்துக்கொள்வார்கள் என்று தெரியவில்லை.

[திருமதி த.ந. அனந்தநாயகி] [1974 மார்ச் 29

அதனால், நான் ஒரே விஷயத்தை ரூல் 41-ஐும், ரூல் 42-ஐும் கொடுத்தேன். எதிலாவது வரட்டும் என்று கொடுத்தேன். அப்படியும் வரவில்லை.

இவர்களுக்கு எல்லாம் நேரத்தை ஒதுக்கி, தொந்தரவு பிடித்தவர்களை என் பேச வைக்கவேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

எதோ எங்கள் கருத்துக்களை சொல்வதற்குக் கொஞ்சம் வாய்ப்புக் கிடைக்கும் என்று நாங்கள் நினைத்தால், அதையும் ஏன் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் கருதுகிறார்கள். என் அப்படிக் கருதுகிறார்கள்?

ரூல் 41, ரூல் 42-க்கு உள்ளே புகுவதற்கு எங்களுக்கு உரிமை இல்லையா ?

ரூல் 143-லே ஒரு ரெசலூஷன் கொண்டுவரப்படுகிறது. அதை எந்தெந்த அடிப்படையிலே கொண்டுவர வேண்டும் என்று விதி இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டுமானால் குறைந்தது 15 நாள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அதைச் செய்யாமல், ஒரே நாளில் அவசரம் அவசரமாக அந்தத் தீர்மானத்தை ஆளும் கட்சியிலே இருக்கக்கூடிய அமைச்சர் கொண்டு வருகிறார். என்ன தீர்மானம் தெரியுமா ? ஒரு மெம்பரை சபையைவிட்டு ஒரு மாத காலத்திற்கு வெளியேற்ற வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வருகிறார். அப்போது சபாநாயகர் என்ன சொல்ல வேண்டும் ?

'The Speaker, what he should do ? He must pull up the Minister and say that he has no right to move such a motion and that it must have 15 days notice. Otherwise, it would amount to breach of privilege.' என்று சொல்ல வேண்டாமா. அப்போது தானே அமைச்சர்களுக்கும் பயம் இருக்கும். ஒரு மெம்பரை வெளியேற்ற வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து, அதை முன்மொழிகிறார்கள். சபாநாயகர் பார்த்துக் கொண்டிருக்கிறார். சபா நாயகர் கடுமையாக இருந்தால்தான் ஆளும் கட்சி சீராக இருக்கும். அமைச்சர்களும் சரி, அங்கத்தினர்களும் சரி, எல்லோரும் ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும் ; விதிகளை யாரும் மீறக் கூடாது.

Law has only eyes and no heart.

சட்டத்திற்கு கண் உண்டு ; இதயம் தான் இல்லை. ஆனால் இங்கே கண் தான் இல்லை ; இதயம் இருக்கிறது. ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, ரூல் என்றால் ரூல்தான். விதி என்றால் விதி தான். அதை சபாநாயகர் பார்த்துக்கொள்ள வேண்டும்.

நாங்கள் கொஸ்டின் அனுப்பினால் அலவ் பண்ணுவதில்லை. திருப்பி அனுப்பினிடுகிறார்கள்.

"தீப்பிடிக்காத வீடுகள் மீண்டும் கட்டப்படுமா" என்று ஒரு கேள்வி அனுப்பியிருந்தேன். அதைத் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். என்ன காரணம் சொல்லியிருக்கிறார்கள் என்றால், தீப் பிடிக்காத வீட்டை யார் கட்டியது என்று கேட்டுத் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். யார் கட்டினது, எங்கே கட்டினது, எந்த மேஸ்திரி கட்டினார் என்றெல்லாம் நான் தெரிந்துகொண்டுதான் இனிக் கேள்வி போடவேண்டும்.

1974 மார்ச் 29] [திருமதி த.ந. அனந்தநாயகி]

நேற்றே முன் தினமோ அமைச்சரவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொன்னார்கள். டி.வி.எஸ். பஸ் என்று கேள்வி கேட்கப்பட்டிருந்தது. அப்படிக் கிடையாது. சதர்ன் ரோட்வேஸ் என்றுதான் இருக்கிறது. இருந்தாலும் அங்கத்தினருடைய உணர்வைப் புரிந்துகொண்டு பதில் சொல்கிறேன் என்று அமைச்சர் சொன்னர். அதேமாதிரி நான் கேட்ட கேள்விக்கும் பதில் சொல்லக்கூடாதா? என்னுடைய கேள்வியை மட்டும் ஏன் திருப்பி அனுப்ப வேண்டும். இதிலே பாரபட்சம் காட்டுவதுதான் இதற்குக் காரணம்.

ஒரு கேள்வியைத் தயாரித்து அனுப்பி வைப்பதே எங்களுக்கு இருக்கின்ற வேலையில் கஷ்டமான காரியம். அப்படி அனுப்புவதையும் திருப்பி அனுப்பினால் யார் கட்டினர், எங்கே கட்டினர், எந்த மேஸ்திரி கட்டினர் என்று நான் எங்கே போய் கேட்க முடியும். இப்படிப்பட்ட காரியங்களை யெல்லாம் எடுத்துச் சொல்வதற்குத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேம்.

அடுத்தது, எக்ஸ்பஞ்ச் செய்கின்ற விஷயம். இதிலே ரொம்ப பாரபட்சம் காட்டப்படுகிறது. அமைச்சர்கள் உத்தரவு கொடுத்தால் எக்ஸ்பஞ்ச் செய்வது; இல்லை என்றால் விட்டுவிடுவது என்ற நிலைமை இருக்கிறது. அமைச்சர்கள் எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டாமென்று சொல்லிவிட்டால் பிரம்மா வந்தாலும் கூட முடியாது. அவர்களுக்குச் சாதகமாக இருந்தால் ஒன்று. பாதகமாக இருந்தால் ஒன்று.

திரு. சௌந்தரபாண்டியன் அவர்களைப்பற்றிய ஒரு கடிதத்தை முதல மைச்சர் இந்த அவையிலே படித்தார். மறுநாள் எதிர்க் கடிதம் வந்தது. இப்படி ஒரு இக்கட்டான நிலைமை ஏற்பட்டது. அதைப்பற்றிய விவாதம் 45 நிமிட நேரம் நடைபெற்றிருந்தாலும், 1½ நாள் நடைபெற்றிருந்தாலும் மொத்தத்தையும் எக்ஸ்பஞ்ச் செய்துவிடுவது என்ற நிலைமை ஏற்பட்டால் இந்தச் சபை நடக்க வேண்டுமா அல்லது வேண்டாமா? இது என்ன முறை?

நேற்று இந்தச் சபையிலே சுவைக் குறைவான வார்த்தைகள் சொல்லப் பட்டன. அப்போது அதை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டுமென்று சொன் னேன். ஆனால் சிப்மினிஸ்டர் சொல்லவில்லை. அதனால் அது எக்ஸ்பஞ்ச் செய்யப்படவில்லை. அவர்களுக்கு இக்கட்டான சூழ்நிலை வரும்போது எக்ஸ்பஞ்ச் செய்வது. The Speaker can expunge when a word is defamatory or indecent. அவர்களுக்குச் சாதகமாக இருந்தால் எக்ஸ்பஞ்ச் கிடையாது. When a critical situation arises for the Government, the whole thing is removed. What is the impartiality of the Speaker here? Can't we question that? இங்கே இருக்கக்கூடிய சபாநாயகர் ஆளும் கட்சியின் சார்பில் சொன்னாலும் சரி. எதிர்க்கட்சியின் சார்பில் சொன்னாலும் எல்லாவற்றையும் ஒரே முறையில் பார்க்க வேண்டும். எல்லா அங்கத் தினர்களின் உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும். யார் தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தினாலும் அவைகளை எக்ஸ்பஞ்ச் செய்யவேண்டும். அப்படி நடந்து கொண்டால்தான் எங்களுக்கு எல்லாம் சபாநாயகர் மீது

[திருமதி த.ந. அனந்தநாயகி] [1974 மார்ச் 29

நம்பிக்கை இருக்கும். அப்படி இல்லாமல் 1½ மணி நேரம் விவாதம் நடைபெற்றிருந்தாலும் அமைச்சர்கள் எக்ஸ்பஞ்ச் செய்யவேண்டுமென்று சொல்லிவிட்டால் எல்லாவற்றையும் எக்ஸ்பஞ்ச் பண்ணுவது முறையல்ல. அது தவறு என்பதை எடுத்துச் சொல்ல நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழகச் சட்டசபையில் இவ்வளவு மோசமான முறையில் சபாநாயகர் நடந்து கொள்ளக்கூடாது. நியாயமாகவும், நேர்மையாகவும் இந்தச் சபை நடைபெற வேண்டும். எங்கள் எண்ணத்தை வெளியிடுவதற்கான வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்க வேண்டும்.

தமிழ்நாடு சட்டசபை எப்போதுமே ஒரு முன்மாதிரியாக இருந்து வந்திருக்கிறது. அந்தப் பெருமை மேலும் காப்பாற்றப்பட வேண்டும். அந்தப் புகழ் ஓங்க வேண்டும். அந்தத் தூய்மை நிலைக்க வேண்டும். பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இப்போதும் முன்னணியில் தான் இருக்கிறது. அதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட களங்கம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

விசிட்டர்ஸ் பாஸ் கொடுப்பதிலே கூட பாரபட்சம். சபாநாயகராக இருக்கக்கூடியவருக்கு இருக்கக்கூடிய அதிகாரங்கள் மிகவும் குறைவு. அவருக்கு இப்போது இருக்கின்ற அதிகாரம் சபையைப் பார்த்துக் கொள்ள வேண்டும்; அடுத்தது விசிட்டர்களுக்கு டிக்கட் கொடுக்க வேண்டும். வேறு அதிகாரம் இல்லை.

ஸ்பீக்கர்ஸ் காலரிக்குப் பாஸ் வேண்டுமென்று அங்கத்தினர்கள் கேட்டால் எங்களைப் போன்றவர்கள் கேட்டால் கொடுப்பதில்லை. அமைச்சர்களுடைய குடும்பங்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. பல அங்கத்தினர்கள் இதைப் பற்றி பல்வேறு நேரங்களிலே கேட்டிருக்கிறார்கள். எங்களுக்கு ஒரு சீட் கூடக் கொடுப்பதில்லை. அமைச்சர்களுடைய கஸ்டடிகளுக்கு என்று சொல்லி விடுகிறார்கள். அமைச்சர்களுடைய கெஸ்டுகள் இங்கே ஏன் வருகிறார்கள். அமைச்சர்களுடைய அறைகளிலேயே உட்கார்ந்து கேட்க லாமே. அதற்கு வசதி இருக்கிறதே. அவர்களை அங்கே உட்கார வைத்து, காப்பி வாங்கிக் கொடுத்து, சுச்சை போட்டுவிட்டால் வசதியாக உட்கார்ந்து கேட்டுவிட்டுப் போகிறார்கள் இங்கே வந்து ஏன் அவர்கள் கஷ்டப்பட வேண்டும்.? அமைச்சர்களுடைய அறைகளிலேயே இருந்து கேட்கலாம்; அங்கே காப்பி சாப்பிடலாம். மந்திரிகளுடைய கெஸ்டுகள் இங்கே வராமல் அங்கே இருந்து கேட்கலாம். சபாநாயகர் காலரியில் 1 மணிதான் உட்காரலாம். ½ மணிதான் உட்காரலாம்—அங்கே 3 மணியும் இருந்து கேட்கலாம்—காப்பியும் வாங்கிக் கொடுத்தால் ரொம்பக் குளுமையாகப் போவார்கள். அதைவிட்டு உறுப்பினர்கள் கொடுக்கக்கூடிய ஒரு பாஸ் கூட அன்னைக்கு இல்லை என்றுவிட்டார்கள் என்றால் என்ன செய்வது?

All the Ministers' visitors are permitted.

இப்படி இல்லாது உறுப்பினர்களுக்கும் கொஞ்சம் பங்கு கொடுத்துச் செய்திருந்தால் வரவேற்கத்தக்கது. அப்படிச் செய்யாதது வருந்தத் தக்கதுதான்.

1974 மார்ச் 29] [திருமதி த. ந. ஆனந்தநாயகி]

அதேபோல உறுப்பினர்கள் லாபியை எடுத்துக் கொள்ளுங்கள்—அதுவும் எதிர்க்கட்சிக்காரர்கள் தங்கிப் பேசக்கூடிய லாபியில் வி.ஐ.டி.க்கள் வருகிறார்கள். நாங்கள் என்ன சமுதாயக் குற்றவாளிகளா? இந்த பிரிங் டுக்குள் வி.ஐ.டி.க்கள் வரக்கூடாது. We see C. I. Ds. How can they come in They must be kept aloof and there should be no interference by outsiders.

இது ரொம்ப வருந்தத்தக்கது. அங்கத்தினர்களுடைய உரிமையைப் பாதிக்கக்கூடியது—இதைக்கூடத் தடுத்து, அங்கத்தினர்களுடைய உரிமைகளைப் காப்பாற்ற சபாநாயகர் முன்வராதது மிகவும் வருந்தத் தக்கதாகும். இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அப்புறம்—இந்த சீட்டுகளை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு லேடி மெம்பர்—மூன்று பேர்கள் உட்காரக்கூடிய இந்த இடத்தில் நான்கு பேர்களுக்கு இடம்—அதுவும் நான் ஒரு லேடி மெம்பர்—ம்யூசிகல் சேர் போலத்தான் இங்கே நடக்கிறது. ஒருவர் போகிறபோது இன்னொருவர் உட்கார வேண்டியதாக இருக்கிறது. அதுவும் சமயத்தில்—என் காப்பிகளை எல்லாம் கூட திரு. பொம்மன் தூக்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். அவ்வளவு கன்யூஷன். நாங்கள் டெபுடி லீடர்கள் என்று சொல்லலாம். அதற்காக மூன்று பேர்களுக்குள்ள சீட்டுகளில் நான்கு பேர்கள் உட்கார வேண்டுமா? இதையும் சபாநாயகரிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

இன்னும் பாயின்ட் ஆப் ஆர்டர்களை எடுத்துக் கொள்ளுங்கள். பாயின்ட்ஸ் ஆப் ஆர்டர் என்றால்—உடனே "உட்கார், உட்கார்" என்கிறார்களே தவிர—நாங்கள் சொல்வது என்ன என்பதைக் கேட்பதில்லை. நாங்கள் எழுப்புவது பாயின்ட்ஸ் ஆப் ஆர்டராக இல்லாது இருக்கலாம்.

The Hon member raises only irrelevant point of order—என்று சொல்லிவிடலாம். நாங்கள் கூட The Speaker does not pull up any hon. Member for his irrelevant talk in the Assembly. என்று சொல்லிவிடலாம். இங்கே எவ்வளவோ பேசுகின்றோம். அந்த உரிமையைப் பயன்படுத்தியிருக்கிறோம்.

'No, No.Your point of order is irrelevant. You do not raise a relevant point of order. You do not speak relevant matters. You do not raise proper point of order.' என்றெல்லாம் எங்களைப் பேச அனுமதிக்காது சொல்லிவிட்டால் இங்கே சட்டசபையிலேயே யாருக்கும் வேலை செய்ய தைரியம் இருக்காது. நாங்கள் எல்லாம், என்ன எல்லாம் கற்றுக்கொண்டா இங்கே வந்திருக்கிறோம். கற்றுக்கொள்ளத்தான் வந்திருக்கிறோம். நாங்கள் சொல்வதைக் கேட்டு, இது இன்ன விதிப்படி சரியல்ல என்று சொன்னால் பலவற்றை நாங்கள் தெரிந்துகொள்ள முடியும். அதைவிட்டு உட்கார் உட்கார் என்று கடுமையாகச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன? இனிய வார்த்தைகள் இருப்ப—கடுமையான வார்த்தையைப் பயன்படுத்தி என்ன பயன்? இனிய உளவாக இன்னா கூறல் கனியிருப்பக் காய்கவர்ந் தற்று என்பதாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே வள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 மார்ச் 29

சற்று இனிய வார்த்தைகளைப் பயன்படுத்தி, எங்களுக்கும் பேச அனுமதி அளித்து இந்த அவையை நடத்திச் சென்றிருப்பார்களேயானால் உண்மையில் எங்களுக்கு எல்லாம் மகிழ்ச்சியாக இருந்திருக்கும்.

இந்தச் சபையின் பெருமையைக் காப்பதிலே, தூய தன்மையைக் காப்பதிலே, கண்ணியத்தைக் காப்பதிலே ஆளுங்கட்சியைக் காட்டிலும் எதிர்க் கட்சியில் இருக்கிறவர்கள் அக்கறை கொண்டிருக்கிறார்கள். நாங்கள் மாத்திரம் பொறுப்பில்லாமல் நடந்துகொள்வதாக இருந்தால் தமிழகத்தின் சட்டசபை நடவடிக்கை இப்படி நடக்காது. வேறு எப்படி எப்படியோ இருந்திருக்கும். எதிர்க்கட்சிக்காரர்களாகிய நாங்கள் பொறுப்புணர்ச்சியோடு நான் நடந்து கொண்டு வருகிறோம்.

சபாநாயகர் அவர்கள் ஆளுங்கட்சிச் சார்பாகவே நடந்துகொள்ளாது, அவையிலுள்ள எல்லா உறுப்பினர்களின் உரிமைக்குப் பாதுகாவலராக அந்தப் பதவிக்கு களங்கம் விளைவிக்காத அளவில் Justice should not only be done, but it should seen to be done. என்கிறபடி அவர் வழங்குகிற தீர்ப்பு நியாயமானதுதான் என்பதை நாங்களும் உணரும் வகையில் சபையின் நடவடிக்கையை நடத்திச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. செ. கந்தப்பன் : தலைவர் அவர்களே, ஆளுங்கட்சித் தரப்பில் இரண்டு உறுப்பினர்களே பேச இருக்கின்ற காரணத்தினால் எனக்குக் கொஞ்சம் நேரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறவர்கள் ஜனநாயகத்தின் மீது அக்கறை கொண்டு, அந்த மரபைக் காக்கின்ற நல்ல உணர்வோடு அதைக் கொண்டு வரவில்லை என்பது என்னுடைய குற்றச் சாட்டாகும்.

அப்படிக் கொண்டு வந்திருப்பார்களானால்—தீர்மானத்தின் ஒரு வாசகம் refusing to allow points of order raised by opposition leaders என்பதாக சபாநாயகர் மீது எந்தக் குற்றச்சாட்டைச் செய்தார்களோ, அதே குற்றத்தை இன்றைக்கு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் திரு லத்தீப் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பிய நேரத்தில் பிடிவாதமாக அவரை எழுப்ப விடாது செய்தார்கள். அவரும் இந்தப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர். மற்ற உறுப்பினர்களுக்கு எந்த உரிமை இருக்கிறதோ அதில் சற்றும் குறையாத உரிமைகளை அவரும் கொண்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் எழுந்து நின்று, உரத்த குரல் எழுப்பி, அதற்கு நீங்களும் உணர்ச்சி வயப்பட்டு—நீங்கள் இணங்கி ஒத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லாது செய்திருக்கிறார்கள்.

1974 மார்ச் 29] [திரு செ. கந்தப்பன்]

இன்று இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர்கள் ஜனநாயக மரபைக் காக்க வேண்டும் என்ற உணர்வோடு இதைக் கொண்டுவந்திருக்கிறார்களா என்று ஐயப்படுகிறேன்.

இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த திரு. செழியன் அவர்களும் எதோ தங்களுக்கு நேரம் கொடுக்கப்படவில்லை எனகிற குற்றச்சாட்டைத் தான் சொன்னார்கள். வேறு அவர் மீது நம்பிக்கையில்லை யென்பதான தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கான காரண காரிய விளக்கத்தைத் தெரிவிக்கவில்லை.

சற்று முன்பு பேசிய திருமதி அனந்தநாயகி அவர்களும் சிறு சிறு பிரச்சினைகளைப் பற்றித்தான் சொன்னார்கள். சபாநாயகர் பதவிக்கு அவரால் என்ன களங்கம் ஏற்படுத்தப்பட்டது, ஜனநாயக மரபுகள் அவரால் எப்படிக் குலைக்கப்பட்டது என்பது போன்ற எந்தப் பிரச்னையையும் குறிப்பிடவில்லை.

இங்கே முன்பு ஆளுகிற கட்சியின் தரப்பில் இருந்து சபாநாயகரை நீக்கினார்களே என்கிறார்கள். இந்த அவையில் இருக்கிற அதிக எண்ணிக்கையுடைய கட்சியின் சார்பில் சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இடையிலே ஏற்பட்ட ஒரு சூழ்நிலை காரணமாக இந்த அவையில் ஆளும் கட்சியாக இருந்தது தன்னுடைய மெஜாரிட்டி பலத்தை இழந்து விட்டது என்கிற தவறான மதிப்பீடு எழுந்த காரணத்தினால் முன்பு இருந்த சபாநாயகர் பதவியில் இருந்து நீக்கப்படுகிற நிலை வந்தது.

இங்குள்ள உறுப்பினர்கள் எல்லோரும் மக்கள் உணர்ச்சியைப் பிரதிபலிப்பவர்கள். என்றாலும்—ஆளுங் கட்சியாக இருப்பதற்கான தகுதியை அளிப்பதற்கு எடுத்துக் காட்டாக இருப்பது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை அரசியல் சட்டப்படி வருகிற பொதுத் தேர்தல்தான். இடையிலே ஆளுங் கட்சி தன் பலத்தை இழந்துவிட்டது என்கிற தவறான மதிப்பீடு வந்த போதுதான் அந்த நிலை ஏற்பட்டது.

அடுத்து துணை சபாநாயகராக இருந்தவர் மீது நான்தான் நிர்மூவல் மோஷன் கொண்டு வந்தேன். அதன் மீது அன்றைக்குப் பலரும் பேசினார்கள். ஆனால் நான் சொன்ன ஒரு கருத்துக்கு யாரும் பதில் தரவில்லை. இன்றைக் ஏவது பதில் தர வேண்டும்.

எதிர்க் கட்சியில் இருந்து துணை சபாநாயகர் வரக் கூடாது என்று நான் சொல்லவில்லை. எதிர்க் கட்சிகள் பலவும் சேர்ந்து ஒருவரை துணை சபாநாயகராகக் கொண்டு வரக் கூடாது என்று யாரும் சொல்ல மாட்டார்கள். பார்லிமென்டில் உள்ள துணை சபாநாயகர் ஆளுகிற கட்சியைச் சேர்ந்தவர் அல்ல. இன்றைக்குச் சேர்ந்துவிட்டாரோ என்னவோ—துணை சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அன்றைக்கு அவர் ஆளுங் கட்சியில் இல்லை.

[திரு. செ. கந்தப்பன்] [1974 மார்ச் 29

ஆனால் இங்கே 173 பேர்களைக் கொண்ட ஆளுங் கட்சியாக இருக்கிற ஒரு கட்சியில இருந்தே துணை சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்—அன்றைக்கு நடந்துகொண்ட முறை—வேறு மொழியில் சொல்வதாக இருந்தால் மனம் புண்படும் என்பதால் அன்றைக்குச் சொல்லவில்லே. இன்றைக்குச் சொல்கிறேன். (It is a defection) டிபக்ஷன், செய்துவிட்டு—இந்தக் கட்சியைப் பற்றியே வெளியில் இதில் நம்பிக்கையில்லே என்று சொல்லிவிட்ட பிறகு—பெரும்பான்மைக் கட்சியினரால் தேர்ந்தெடுக்கப் பட்டவுடன்—இந்த அவையில் எந்தக் கட்சி சார்பும் இல்லாது நடு நிலைமையாக ஒரு நீதிபதியைப் போல் இருக்க வேண்டியவர்—அவரே அப்படி டிபெக்ஷன் செய்துவிட்டு இந்தக் கட்சியில் நம்பிக்கையில்லே என்று சொன்னவுடன் ரிமூவல் மோஷன் கொண்டு வருவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லே. பிறகு அவரே விலகிக் கொண்டார்கள் இறுதியில். அதற்கும் இன்றைக்குப் புலவர் கோவிந்தன் அவர்கள் மீது நம்பிக்கையில்லே என்று கொண்டுவந்திருக்கிற தீர்மானத்திற்கும் என்ன பொருத்தம் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நான் இன்னொன்றையும் குறிப்பிட விரும்பு கிறேன். திரும்பத் திரும்ப இந்த சபையிலே இது எழுப்பப்படுகிறது, நேரம் ஒதுக்குவதைப் பற்றி. ஜனநாயகமரபிலே நான் இங்கு பேசுகிறேன் என்றால் ஒரு கட்சியின் பிரதிநிதியாகமட்டுமல்ல, தொகுதியின் பிரதிநிதியாகவும் பேசுகிறேன்.

11-30 மு.ப. **Each one of the members is representing a Constituency. They get elected to represent their Constituencies. In the eye of law every member is equal.**

இன்றைக்கு இந்த பொசிஷனை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். இந்த பொசிஷனை யாராவது ஒத்துக் கொள்ளவில்லே யென்றால் அவர்கள் அதற்கு ஆதாரத்தைக் காட்ட வேண்டும். அந்த அடிப்படையிலே இன்று நேரம் ஒதுக்கவில்லே என்று சொல்பவர்கள் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களாகத் தான் இருக்க வேண்டுமே தவிர, எதிர்க் கட்சி உறுப்பினர்களாக இருக்க முடியாது. **This resolution is motivated.** அவர்களுக்கு ஏற்கனவே அதிக சலுகை அளிப்பதை ஒரு மரபாக ஆக்கி அனுமதிக்கிற காரணத்தினால்தான் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபாநாயகரை மேலும் மேலும் இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு ஆளாக்குவதன் மூலம் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு இப்போதிருக்கிற சலுகையைக்கூடத் தர முடியாத அளவுக்கு நிலைமையை உருவாக்குகிறார்கள். இதுவன்மையாகக் கண்டிக்கத்தக்க ஒன்றாகும்.

உண்மையிலேயே இந்தச் சபையில் எதிர்க் கட்சிக்காரர்களுக்கு அதிக மான சலுகை காட்டப்படுகிறது.

உதாரணமாக ஒரு விவாதத்திற்த 4 மணி நேரம். அது பொதுப் பணித் துறையைச் சேர்ந்தது என்று வைத்துக்கொள்ளுங்கள். எல்லா தொகுதிகளிலும், ஓடைகள், இருக்கின்றன. நான் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், எதிர்க் கட்சியாக இருந்தாலும் தொகுதி மக்களின் குரலைப் பிரதிபலிக்கிறேனே என்று பார்க்கும் உரிமை படைத்தவர்கள் மக்கள்.

1974 மார்ச் 29] [திரு. செ. கந்தப்பன்]

ஒவ்வொரு நாளும் நான் பார்க்கிறேன் அது எந்த விவாதமாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சித் தரப்பிலே பேசுவதற்கு வாய்ப்பு 4, 5 பேருக்குக் கிடைக்கிறது. ஆளும் ஆளுகிற கட்சிக்கு 2 பேருக்குத்தான் அந்த வாய்ப்புக் கிடைக்கிறது. இந்த நிலைமையை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுத்திருக்கிற அவைத் தலைவரைப் பாராட்டுவதை விட்டுவிட்டு அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதன் மூலம் ஆளுங் கட்சிக்குக் கொஞ்ச நஞ்சம் இருக்கிற வாய்ப்பையும் பறித்துவிட வேண்டும் என்ற மோடிவேஷம்தான் இந்தத் தீர்மானத்திற்குப் பின்னாலே இருக்கிறது.

இங்கே சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் நாட் டெனபிள்

அம்மையார் அவர்கள் பாயின்ட்ஸ் ஆப் ஆர்டரைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இதுவரையில் எதிர்க் கட்சித் தரப்பிலே மாண்புமிகு உறுப்பினர்கள் யாரேனும் ஒழுங்குப் பிரச்னை எழுப்பி அதைப் புறக்கணித்து விட்டு அதை அனுமதிக்காமல் சபாநாயகர் இருந்திருக்கிறார்களா என்பதற்கு ரெக்காட்டிலேயிருந்து ஒரு ஆதாரம் கூட எனக்கு ஞாபகம் வரவில்லை. அதைத் தந்தால் நான் மகிழ்ச்சியடைவேன்.

ஆனால் அப்படி எழுப்புகிறபோது குறுக்கிட்டு இதை நீ எழுப்பாதே என்று தடுத்ததில்லை.

நாங்கள் அதைத் தடுத்திருக்கிறோம். ஆளுகிற கட்சிக்காரர்கள் என்பதாலே எங்களுடைய நியாயமான உரிமைகளைப் பறிக்கிற காரணத்தினால் நாங்கள் தடுத்திருக்கிறோம்.

சில நடைமுறை விதிகள் எதிர்க்கட்சிக்காரர்களுக்குச் சலுகை தரக் கூடியதாக இருக்கின்றன. நான் அதைப் பொருமையோடு பார்க்க வில்லை.

ஒன்றை அவர்களே ஒத்துக் கொள்கிறார்கள். எதிர்க்கட்சியினர் மிக மிகக் குறைவாக இருக்கிறோம் என்று. அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் வாய்ப்புத் தேவை என்ற காரணத்தாலே அட்ஜர்ன்மெண்ட் மோஷன், கால் அட்டென்ஷன் மோஷன் போன்ற பிரச்னைகளிலே நியாயம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும் என்று நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இதை நிரூபிக்கக் கூடத் தயாராக இருக்கிறேன். இந்த 3 ஆண்டுகளில் கொண்டுவந்த தீர்மானங்களில் சரிபாதிக்கு மேல் அந்த விதி முறைகளுக்கு உட்பட்டவையல்ல என்பதை என்னால் நிரூபிக்க முடியும். அது எதிர்க்கட்சிகளுக்கு ஒரு சலுகையாகத்தான் அளிக்கப்படுகிறது என்பதை நாம் கண்டிப்பாக ஒத்துக் கொள்ள முடியும்.

ஆக, இந்த அளவிற்கு எல்லைக் கோட்டிற்கு அப்பால் போய்த்தான் எதிர்க்கட்சிக்காரர்களுக்குச் சலுகை அளித்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே நான் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் ஜனநாயக மரபு காக்கப்பட்டால்தான் எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளுங் கட்சியாக இருந்தாலும் சமுதாய நல்னுக்காக நாம் செயல்பட முடியும்.

[திரு. செ. கந்தப்பன்] [1974 மார்ச் 29

அந்த மரபை தவறக் கூடிய அளவுக்கு, கெடக்கூடிய அளவிற்கு சபா நாயகர் மீது தீர்மானங்கள் கொண்டு வருவது நிச்சயமாக ஜனநாயகத்தைக் காக்கிற மரபுக்குக் குந்தகமாக இருக்குமென்றுதான் எதிர்க்கட்சி நண்பர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அடிப்படையிலே அவர்கள் இந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்று ஜனநாயக மரபை உண்டாக்க வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள். நாங்கள் எங்கே நிறைவேற்றப் போகிறோம், நீங்கள் எங்கே விடப் போகிறீர்கள் என்று சொன்னார்கள். ஆனாலுங்கூட மரபு கருதி அருள்கூர்ந்து இந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெற வேண்டும். நான் அப்படித்தான் கருதுகிறேன். உங்களுக்கு வாய்ப்பு அதிகமாக வேண்டுமென்று கொண்டு வந்திருப்பீர்கள் என்ற எண்ணத்தில்தான் சொல்கிறேன், வலியுறுத்திச் சொல்கிறேன்.

நாங்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மட்டுமல்ல, பல தொகுதியின் பிரதிநிதிகள். அந்தந்தத் தொகுதிக்கு இருக்கிற பிரச்சினைகளை அமைச்சரிடத்திலே அறையிலே சொன்னால் மட்டும் போதாது. என்னுடைய தொகுதி மக்கள் நம்புகிற வகையில் அதைச் சொல்ல வேண்டிய இடத்திலே சொல்லியாக வேண்டும். அதுதான் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரின் கடமை என்று நான் பல புத்தகங்களிலே படித்திருக்கிறேன்.

ஆகவே, இப்போதே எங்களுக்கு வாய்ப்புக் குறைவாக இருக்கிறது, அதை இன்னும் குறைத்து விடாதீர்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் உங்கள் பசி அதிகமாகி சபாநாயகரைப் போட்டு அதிகமாக நசுக்கி விடாதீர்கள் என்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன். நான் மனப் பூர்வமாகச் சொல்கிறேன்.

நான் உதவி சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தேன். மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்பினர்கள். பெரிய விவாதமே நடந்தது. நான் இரண்டு முறை கை தூக்கினேன். நான்தான் ஒரு சிறிய வாக்கியமாக அதைக் கொடுத்தேன்.

ஒரு சென்டன்ஸாக இருக்கலாமா என்ற பிரச்னை இங்கே அன்றைய தினம் விவாதத்திற்கு வந்தது. தீர்மானத்தைக் கொடுத்த நான் இரண்டு மூன்று முறைகள் பேச விரும்பினேன். ஆனால் பேரவைத் தலைவர் அவர்கள் அன்றைய தினம் நீங்களும் சொல்லுங்கள், எதற்காகக் கொடுத்தீர்கள் என்று கேட்கவில்லை, சாதாரணமாக நாடாளுமன்றத்திலே கேட்பார்கள், என்னுடைய பதிலைக் கேட்டு அன்றைக்கு அவர்கள் தீர்ப்புக் கொடுத்திருக்கலாம். நான் அதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. அவர்களுக்கு இருக்கிற உரிமையின்படி அவர்கள் நடந்து கொண்டார்கள். நான் அவர்களிடம் பிறகு கேட்டேன், மீண்டும் இப்படிப்பட்ட நிலைமைகள் வந்தால் தயவு செய்து வாய்ப்புக் கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டேன்

1974 மார்ச் 29] [திரு. செ. கந்தப்பன]

ஆகவே அவர்கள் எந்தத் தரப்புக்கு அதிகமான முறையில் சாதகமாக இருக்கிறார்கள், எதிர்த் தரப்புக்கு அது தேவைதான். அவர்கள் பலகீனமானவர்கள் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அப்படிச் சொல்வதன் மூலமாக நீங்கள் இன்னும் அவர்களை எங்கள் பக்கத்திலிருந்து இழுத்துக் கொள்வீர்களானால், நாங்கள் எல்லாம் செல்லாக் காசுகளாக இருக்க வேண்டிய நிலைமை ஏற்படும். நாங்களும் கொஞ்சம் பேச, எங்களுக்கும் சான்ஸ் கொடுங்கள் என்றுதான் நாங்கள் கேட்கிறோம் என்ற முறையில்தான் நான் இதைத் தெரிவிக்கிறேன். நீங்களே எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டால் அது நன்றாக இருக்காது.

இந்தத் தீர்மானத்திலே இருக்கிற வாசகங்களைப் பார்க்கிற நேரத்திலே தீர்மானத்தைக் கொடுத்தவர்களே சற்று சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வாசகத்தை ஸ்ட்ரிக்ட்டாக, நுணுக்கமாகப் பார்த்தால், நிறைய இன்சுன்யுவேஷன்ஸ் இருக்கின்றன. திரு. எட்மண்ட் அவர்கள் இல்லை என்பதைப்போல் தலையை ஆட்டுகிறார்கள்.

This House resolves to remove the Hon. the Speaker, Pulavar K. Govindan from his office on account of his failure to conduct the proceedings of this House in an impartial manner.

இதுவரையிலே இன்சுன்யுவேஷன்ஸ் இருப்பதாக நான் சொல்லவில்லை. ஆனால், அதற்குப் பிறகு and by ordering expunction of proceedings lasting more than forty five minutes. என்று சொல்லியிருக்கிறார்கள். அன்றையதினம் பேரவைத் தலைவர் நடந்து கொண்டது தன்னிச்சையாக நடந்து கொண்ட முடிவல்ல. அவை எடுத்த முடிவு. சில நிலைமைகளைத் தெரிந்து கொண்டுதான் முடிவை எடுத்தார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : Is it not arbitrary ?

THIRU S. KANDAPPAN : He used his discretion. You can say that he has used his discretion. I will say he has differed in his judgment. He has used the best of judgment. He has done it honestly. You may say it is mala fide. But I say it is bona fide judgment.

அடுத்துவருகிற வாசகத்திலே refusing to allow points of order raised by Opposition Leaders' என்று இருக்கிறது.

I say, this is misleading. It is a distortion of facts. It is no correct.

திரு. கோவை செழியன் : பாயிண்ட் ஆப் ஆர்டர். பாயிண்ட் ஆப் ஆர்டரே அலோ பண்ணுவதில்லே என்றால் எப்படி ? உங்கள் பேரிலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வேண்டியதுதான். அவர்கள் பேசிக் கொண்டே போனால் என்ன அர்த்தம் ?

CHAIRMAN : THIRUMATHI JOTHI VENCATACHELLUM: I have got the discretion.

திரு. கோவை செழியன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பக் கூடாது என்று எப்படிச் சொல்ல முடியும் ? அப்படியென்றால் ஆளுங் கட்சிக்குச் சாதகமாகவே நீங்கள் போகலாம்.....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : **You can't cast aspersion on the Chair. I am a different person when I am here. Please understand that.** இன்டர்ப்ஷன்ஸ் மூல மாக டைம் போய்க்கொண்டிருக்கிறது. நீங்கள் பிறகு டைம் இல்லே என்று சொல்லக் கூடாது. அவரவர்களுக்கு இருக்கிற நேரத்திலே முடித்தாக வேண்டும்.....

திரு. கோவை செழியன் : டைம் இல்லாவிட்டால் பரவாயில்லே....

CHAIRMAN ; THIRUMATHI JOTHI VENCATACHELLUM What is your Point of Order ?

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினர் கந்தப்பன் அவர்கள் பேசுகின்றபோது இந்தத் தீர்மானத்தைக் கொடுத்ததே முறை அற்றது, ஏற்கனவே தான் கொடுத்த தீர்மானத்திலே ஆளுங் கட்சியினுடைய ஆதரவை இழந்துவிட்ட காரணத்தினாலே துணை சபாநாயகர் பதவியிலிருந்து நீக்கத் தீர்மானம் கொண்டு வந்தேன், ஆளுங் கட்சியின் ஆதரவை இழந்துவிட்டால்தான் தீர்மானம் கொண்டுவரலாம் என்று சொல்கிறார்களா ? அவர்கள் சொல்வது ஆளுங் கட்சியின் ஆதரவை மந்திரி இழந்துவிட்டார் என்று சொல்வதற்கு வேண்டுமானால் சொல்லலாமே தவிர சபாநாயகர் இரண்டு கட்சிகளுக்கும் பொதுவானவர், அவர் ஆளுங் கட்சியின் ஆதரவை இழந்தால்தான் கீழே இறங்கவேண்டு மென்று கூறுகிறாரா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. செ. கந்தப்பன் : தலைவர் அவர்களே, இன்னும் ஒரு கருத்தைச் சொல்லி நான் முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். இந்தத் தீர்மானத்திலே ஒரு வாசகம் **refusing to allow points of order raised by Opposition Leaders'** என்று கொடுத்திருக்கிறார்கள். எனவே இது ஒரு மிஸ் லீடிங், தவறுத கவலைத் தருகிறது.

1974 மார்ச் 29] [திரு. செ. கந்தப்பன்]

There has been no single instance when raising points of order has been refused. But ruling has been given that it is not a point of order. Raising of point of order had been permitted most of the time. In fact indulgence has been shown with regard to Opposition and not with regard to ruling party. That is my contention and I still maintain it. It can be verified from records;

அடுத்து அவர்கள் சொல்கிறபோது

Permitting the members of the ruling party to make uncalled for remarks

என்று கொடுத்திருக்கிறார்கள். இது சபாநாயகர் மேலே மட்டும் அலிகேஷன் சொல்லவில்லை, அவர்கள்

permitting the members of ruling party to make uncalled for remarks

என்று சொல்லியிருப்பது ஏதோ ஆளுங் கட்சியில் இருக்கிறவர்கள அத்தனை பேர்களும் பொருத்தமில்லாத முறையிலே குறுக்கே எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வதாக இருக்கிறது.

This is definitely an insinuation.

சபாநாயகர் மீது நம்பிக்கையில்லையென்று தீர்மானம் கொண்டுவந்துவிட்டு அதிலே குறுக்கே ஆளுங் கட்சி உறுப்பினர்கள் கத்துவதற்கு நீங்கள் அனுமதிக்கிறீர்கள். அது அவர்கள் பேச்சிலே வேண்டுமானால் வரலாம், தீர்மானத்திலே வரக் கூடாது.

(Thiru G. R. Edmund rose)

I will complete my points against the motion.....

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, சபாநாயகர் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்ற தீர்மானத்தை எதிர்க் கட்சியைச் சேர்ந்த நான்கு பேர்கள் கொடுத்திருக்கிறார்கள். அன்றைய தினம் அது இந்த அவையிலே வைக்கப்பட்டு இந்த அவையினால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அதிலே இன்சுன்யுவேஷன் இருக்கிறது என்று உறுப்பினர் வாதம் பண்ணிக் கொண்டிருக்கிறார். அதிலே எதாவது இன்சுன்யுவேஷன் இருக்குமானால் அன்றையதினமே அவர் வாதாடி இருக்கலாம். ஆனால் அவை அன்றைக்கே அனுமதித்துவிட்டது.

அப்படி அனுமதித்த பிறகு இதிலே இன்சுன்யுவேஷன் இருக்கிறது என்று சொன்னால் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அதற்குத் தாங்கள் தீர்ப்புக் கொடுக்க வேண்டும். இந்தத் தீர்மானத்தை இந்த அவையிலே வைத்த பிறகு விவாதம் நடந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே அந்தத் தீர்மானத்திற்கு அனுமதி அளித்ததே தவறு என்று வாதாடுவதுதான் இன்சுன்யுவேஷனே தவிர, வேறு அதிலே எதுவும் இன்சுன்யுவேஷன் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : திரு. கந்தப்பன் சப்ஜெக்டுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அனுமதிக்கப்பட்டாகிவிட்டது, அதிலே வேறு எதாவது இருந்தால் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதை அனுமதித்ததே தவறு என்று உறுப்பினர் அவர்கள் வாதாடவில்லை. அன்றைக்கு 35 உறுப்பினர்கள் ஆதரவு தந்து எடுத்துக் கொள்ளப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் அதைச் சொல்லவில்லை, வாசகங்கள் வேறு மாதிரியான கருத்துக்களை உள்ளடக்கியிருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கிறார்கள், அப்படிச் சொல்வதிலே ஒன்றும் தவறு இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, இந்தத் தீர்மானம் ஏற்கெனவே கொடுக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பிறகு அந்த அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற வரையிலே இருக்கின்ற வாசகத்தை பற்றிக் குறிப்பிட வேண்டுமே தவிர தீர்மான வாசகத்தையே விவாதத்திற்குக் கொண்டு வருவது ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டதற்கு விரோதமானது என்ற கருத்து வரும். எனவே, அப்படிக் கூறுவது சரியல்ல என்பதுதான் என்னுடைய கருத்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இங்கே இந்த விவாதத்திற்கு இந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளும் அளவிற்கு இந்த அவை அனுமதி தந்திருக்கிறது. எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் தீர்மானத்திலுள்ள ஒவ்வொரு கருத்தையும் முழுக்க முழுக்க ஆதரித்துப் பேசுவதற்கு ஒரு சாராருக்கு உரிமை உண்டு. இந்தக் கருத்தில் இன்ன தவறு என்று சுட்டிக்காட்ட மற்ற உறுப்பினர்களுக்கும் உரிமை உண்டு. எனவே, இதை விவாதத்திற்குக் கொண்டு வந்ததே தவறு என்று பேசினால் அது தவறு. ஆனால் அவர் அப்படிப் பேசவில்லை. இதைக் கொண்டு வந்ததில் தவறு இல்லை, இதை அங்கீகரிக்கிறோமா இல்லையா என்பது விவாதம் முடிந்து எடுக்கின்ற ஓட்டைப் பொறுத்தது. இந்த அவை அதைத் தள்ளலாம் அல்லது அதை ஏற்றுக் கொள்ளலாம்.

எனவே, இந்த விவாதம் நடைபெறும்பொழுது சில கருத்துக்களை ஆதரிக்க அல்லது எதிர்க்க அல்லது ஒப்புக்கொள்ள அல்லது மறுக்க அல்லது ஒட்டிப் பேச அல்லது வெட்டிப் பேச உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. கருத்துக்கள் சரியா இல்லையா என்று பேச அங்கத்தினர்களுக்கு உரிமை உண்டு. அந்த அளவில் பேசுகிறாரே தவிர தீர்மானத்தைக் கொண்டு வந்ததே தவறு என்று அவர் பேசவில்லை.

திரு. எம. சுரேந்திரன் : சார், வாசகத்தில் இருப்பது சரியா தவறு என்பதைப் பற்றிப் பிரச்சினை எழுப்பப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட பிறகு அதைப்பற்றி....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : அதைப் பற்றி ஏற்கெனவே சொல்லிவிட்டேன்.

திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எட்மண்ட் அவர்கள் கொண்டு வந்த ஒழுங்குப் பிரச்சினையில் இந்த மோஷன் கொண்டுவரப்பட்டபொழுதே இன்ஸினுவேஷனு

1974 மார்ச் 29] [திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி]

இல்லையா என்ற வாதத்தைக் கிளப்பியிருக்கலாம் என்று சொல்கிறார்கள். அந்தத் தேதியிலேயே கிளப்பியிருக்கலாம் என்று சொல்வது சரி தான். ஆனால் அன்றைக்குக் கிளப்பவில்லை என்பதற்காக ஏதாவது குற்றச்சாட்டு இருந்தால் பிறகு சொல்லக்கூடிய வாய்ப்பை அந்த மெம்பர் இழந்து விட்டாரா என்றால், இல்லை. அப்படி ஒரு மெம்பர் ஒரு நேரத்தில் ஒரு பிரச்னையைச் சொல்ல வாய்ப்பு ஏற்படாவிட்டால், பிறகும் சொல்ல முடியாது என்று சொல்வது சரியான முறை அல்ல. அதற்குத் தங்கள் தீர்ப்பைக் கேட்க விரும்புகிறேன்.

திரு. செ. கந்தப்பன் : தலைவரவர்களே, நான் என்னுடைய பேச்சின் இடையிலேயே சொன்னேன், வேண்டுகோளாகச் சொன்னேன். ஆரோக்கிய மான மரபுகளை ஏற்படுத்துவதற்காக இந்தத் தீர்மானத்தை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டேன். அதன் அடிப்படையில் தான் இந்தக் கருத்துக்களைச் சொன்னேன். பொதுவாக "லீகாலிட்டி" வந்தால் எந்த அமெண்ட்மெண்டை எற்படுத்துவதானாலும், ரிசல்யூஷன் ஆனாலும் "அட்மிசிபிலிட்டி" கேட்பார்கள். என்றாலும் இன்றைக்கு அவை முன்னவர் அவர்கள் சொன்னது மாதிரி, பேராசிரியர் அவர்கள் சொன்னது மாதிரி நான் அங்கத்தினர்களுக்குச் சொல்ல விரும்பினேனே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்படிப்பட்ட நிலைமையில் இன்றையதினம் எதிர்க் கட்சித் தரப்பில் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. திரு. செழியன் அவர்கள் இன்னொரு கருத்தை வெளியிட்டார்கள். நான் திரும்பவும் சொல்கிறேன். எதிர்க் கட்சியின் தரப்பில் சபாநாயகரோ அல்லது துணை சபாநாயகரோ இருக்கலாம். அது தவறு அல்ல. ஆனால் சபாநாயகராக இருக்கின்றவர் எல்லாத் தரப்பிற்கும் ஒருபடித்தான ஒரு கண்ணோட்டத் தோடு நடந்துகொள்ள வேண்டுமென்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

ஆனால் துணை சபாநாயகராக இருந்து கொண்டிருந்த ஒருவர் பெரும் பான்மையின் மீது தனக்கு நம்பிக்கையில்லை என்று அறிவிப்பு செய்கிறார். அப்படி அறிவிப்பு செய்த பிறகு அவர் அந்த இடத்தில் இருக்கலாமா என்பதுதான் என்னுடைய கருத்து. எதிர்க்கட்சி உறுப்பினர் யாரும் துணை சபாநாயகராக இருக்கக் கூடாது என்று வாதாடவில்லை.

ஆளுங்கட்சியிலே தான் நாங்கள் வாரிப்போட்டுக்கொள்ள வேண்டும் என்ற பேராசை இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் அதற்கு அப்பாற்பட்ட இயக்கம் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். அந்தப் பாரம்பர்யத்தின் அடிப்படையில் கடந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளை இதனுடன் தொடர்பு படுத்தத் தேவையில்லை.

இன்றைக்குள்ள சூழ்நிலையில் அவைத் தலைவர் பொறுப்பிலே உள்ள மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் மேலும் செயல்பட முடியாத நெருக்கடியை உண்டாக்கும் நோக்கம் கொண்டதாக இந்தத் தீர்மானம் இருக்கிறது. அல்லது அவர் அப்படிச் செயல்படுவதாக இருந்தால் முழுக்க முழுக்க ஆளுங்கட்சி உறுப்பினர்களைப் புறக்கணித்து விட்டு எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு அளவிற்கு மீறிய சலுகைகளை வழங்கினால்தான் செயல்பட முடியும் என்ற நெருக்கடியை ஏற்படுத்துவதாக இருக்கிறது.

[திரு. செ. கந்தப்பன்] [1974 மார்ச் 29

ஆளுங் கட்சிக்கு உள்ள நெருக்கடியையும் சொன்னேன். ஆகவே அதையும் நீங்கள் புரிந்து கொண்டு, நல்ல மரபுகளை ஏற்படுத்தும் விதத்தில் இந்தத் தீர்மானத்தை நீங்கள் திரும்பப் பெற்றுக் கொண்டால் அது நிச்சயமாக மிக மிக நன்முக இருக்கும். அந்த மரபை மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டு இந்தத் தீர்மானத்தை மிகவும் வன்மையாக எதிர்த்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அவையின் முன்னால் இருக்கின்ற இந்த மாமன்றத்தின் தலைவர் மாண்புமிகு புலவர் கோவிந்தன் மீது இந்த மன்றம் தனது நம்பிக்கையை இழந்துவிட்டது என்ற தீர்மானத்தை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்களுடைய பதவிக் காலத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட கட்சியாக இருப்பது இங்கே செயலாற்றுகின்ற காங்கிரஸ் கட்சி என்பதை முதற்கண் நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இந்த நாட்டிற்கே ஜனநாயகத்தையும், பாராளுமன்ற முறைகளையும் வகுத்துக் கொடுத்தது காங்கிரஸ் கட்சி. ஆனால் இன்றைக்கு நாங்களே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இருக்கிறோம் என்றால் மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் எந்த அளவிற்கு ஜனநாயகத்தை மீறி, பாராளுமன்ற முறைகளை மீறி செயலாற்றியிருக்கிறார் என்பதை அது எடுத்துக்காட்டுகிறது.

நாங்கள் இங்கே பிரதான எதிர்க் கட்சியாக இருக்கிறோம். ஒரு வேளை சில நாட்களுக்கு முன் வந்து எங்களைப் போன்ற எண்ணிக்கையுள்ள இன்னொரு கட்சி இங்கேயிருந்தாலும்கூட, அதுவரையிலேயும் பிரதான எதிர்க்கட்சியாக செயலாற்றியது காங்கிரஸ் கட்சியாகும்.

ஆனால் புலவர் கோவிந்தன் அவர்களால் நாங்கள் பிரதான எதிர்க் கட்சியாகக் கருதப்படவில்லை, மதிக்கப்படவில்லை என்ற குறைப்பாட்டை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

ஒரு வேளை எதிர்க்கட்சியாக செயலாற்றுவதற்குப் போதுமான எண்ணிக்கை எங்களுக்கு இல்லை என்றாலும் கூட இங்கே செயலாற்றுகின்ற அனைத்து எதிர்க் கட்சிகளையும்விட கூடுதலான எண்ணிக்கையை உடைய ஒரே கட்சி எங்களது கட்சி என்பதை நன்முக உணர்ந்து அவர்கள் எங்களை எதிர்க் கட்சியாக நடத்தியிருக்க வேண்டும். ஆனால் அதில் அவர்கள் தவறி விட்டார்கள் என்ற குற்றச்சாட்டை நான் எடுத்துக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதற்குக் காரணம் என்னவென்றால், பேரவைத் தலைவர் என்ற முறையில் அவர்கள் ஒரு "இன்டிபென்டன்ட் ஸ்பீக்கராக", எந்தக் கட்சிக்குமோ அல்லது இந்த நாட்டை ஆளுகின்ற அரசுக்கோ அடிபணியாது "இன்டிபென்டென்ட் ஸ்பீக்கராக" செயல் ஆற்றுவதற்குத் தவறிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். ஆளுகின்ற அரசின்

1974 மார்ச் 29] [திரு. ஜே. ஜேம்ஸ்]

விருப்பு வெறுப்புக்கு இசைந்து அவர்களுடைய தாளத்திற்குப் பாடுகின்ற ஒரு புலவரைப்போல் செயலாற்றினாரே தவிர, சுதந்திர நீதிபதியாக, இங்கேயுள்ள அனைத்துக் கட்சிகளையும் அரவணைத்துக்கொண்டு, எங்கள் உரிமையையும் பாதுகாக்கின்ற முறையில் செயலாற்றவில்லை என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதற்குக் காரணம் என்னைப் பொறுத்த வரையில் புலவர் கோவிந்தன் மட்டுமல்ல, நாட்டை ஆளும் திராவிட முன்னேற்றக் கழக அரசும் பொறுப்பு என்று நான் கூற விரும்புகிறேன்.

புலவர் கோவிந்தன் அவர்கள் இப்போது அமர்ந்திருக்கின்ற ஆசனத்தை அரசு இன்னும் காலியாக வைத்திருக்கிறார்கள். இதற்கு முன்னுல் இரண்டு இடங்களைக் காலியாக வைத்திருந்தார்கள்.

ஒரு இடத்தில் அன்றைக்குத் தலைவராக இருந்த திரு. மதியழகன் அவர்கள் அந்தப் பதவியிலிருந்து இறக்கப்பட்டு அமர்த்தினார்கள். இன்னும் ஒரு இடத்தில் துணைத் தலைவராக இருந்து பதவியிலிருந்து இறங்கி இங்கே வந்த அமர்ந்திருக்கிறார்கள். இன்னும் ஒரு இடத்தைக் காலியாகவே வைத்திருந்து, புலவர் கோவிந்தன் அவர்களே எங்கள் ஆணைக்குக் கட்டுப்பட்டு நீங்கள் செயலாற்றவில்லை என்றால் நீங்களும் இங்கே வந்து இருக்க வேண்டுமென்று காலியாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே புலவர் கோவிந்தன் அவர்கள் சுதந்திரமாகச் செயலாற்றவில்லை என்ற குறிப்பையும் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இதற்கு முன்னுல் இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் இந்த அரசு இங்கே செயலாற்றிய தலைவர் மீதும், துணைத் தலைவர் மீதும் கொண்டு வந்தது, அதற்குத் தேவை இருந்ததா ? ஏறத்தாழ 180 அங்கத்தினர்களைக் கொண்டு, பெரும் பலத்தைக் கொண்ட ஒரு ஆளும் கட்சிக்கு இங்கே செயலாற்றுகின்ற ஒரு தலைவரால் தீமை வருவிக்க முடியாது என்பது நமக்குத் தெரியும். இருந்தாலும் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் நடைபெறுத முறையில் இங்கே செயலாற்றிய ஒரு தலைவரையும், ஒரு துணைத் தலைவரையும் பதவியிலிருந்து இறக்கி ஜனநாயகத்தைப் படுகொலை செய்த இந்த அரசுதான் இன்றைக்கு இந்தத் தீர்மானத்தை நாங்கள் கொண்டு வருவதற்குக் காரணமாக இருந்தார்களே தவிர நாங்கள் காரணம் இல்லை என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நண்பகல் 12·00.

நாங்கள் மெத்த வேதனையோடு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஏனென்றால் நாங்கள் ஜனநாயகத்தை மதிக்கிறோம், பாராளுமன்ற முறைகளை மதிக்கிறோம். இந்த மன்றத்தின் தலைவர் யாராக இருந்தாலும் அவரை நாங்கள் மிக அதிகமாக மதிக்கிறோம். இந்த மன்றத்திலுள்ள அவ்வளவு பேருக்கும் அவர்கள் தலைவர் என்ற முறையில் அன்னாரின் ஆணைக்கு—ஒரு சில நேரங்களில் தவருக இருந்தாலும்—கட்டுப்படுகிறோம். மதிக்கின்ற மரபில் வந்த காரணத்தாலே மதிக்கிறோம்.

[திரு. ஜே. ஜெம்ஸ்] [1974 மார்ச் 29

தலைவர் அவர்கள் தவருக நடந்து கொள்கிறார்கள் என்றால் அதற்கு அரசு தான் காரணம் என்ற குற்றச் சாட்டைக் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

மதிப்பிற்குரிய புலவர் கோவிந்தன் அவர்கள் அரசியலுக்கு அப்பாற் பட்டு செயலாற்றவில்லை. எப்போது தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டாரோ அப்போதே அவர்கள் பாராளுமன்ற முறைப்படி தான் சார்ந்திருந்த கட்சியை விட்டு அப்பாற்பட்டு இங்கு செயலாற்றக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

ஆனால் புலவர் கோவிந்தனைப் பொறுத்த மட்டில் இன்னும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அங்கத்தினராக, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பாதுகாக்கின்ற முறையில் திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பாதுகாக்கின்ற முறையில் செயலாற்றினார்கள் என்ற குற்றச்சாட்டைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பல மெம்பர்கள் கூறினார்கள். விதி 42 மோஷன்களுக்கான தீர்ப்புகள் 41 மோஷனுக்கான தீர்ப்புகள் எந்த அளவுக்கு முறைகேடாக இருந்தது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் ஒரு மோஷனை 42-வது விதியின்கீழ் தேவிகுளம் பீர்மேடு, தமிழர்களுடைய நிலை மிகவும் மோசமாக இருக்கிறது, அந்த விஷயத்தைப் பற்றி இந்த மாமன்றத்தில் விவாதிக்க வேண்டுமென்று கொடுத்திருந்தேன். அதை அவர்கள் சாதார ணமாக டிஸ்போஸ் பண்ணுவது போல் அனுமதிக்க மறுத்து தகவல் கொடுத்து விட்டார்கள்.

ஆனால் இரண்டு தினங்களுக்குப் பிறகு நண்பர் லத்தீப் அவர்கள் ஏற்கனவே கொடுத்திருந்த தீர்மானத்தை அனுமதித்து அந்தத் தீர்மானத் தில் என்னையும் பேச அழைத்தார்கள். ஆகவே, எந்த அளவுக்கு ஆளும் கட்சி, தோழமைக் கட்சி அதற்குப் பிறகுதான் எதிர்க் கட்சி என்ற முறையைக் கையாண்டார்கள் என்பதற்கு இந்த ஒரு எடுத்துக் காட்டு போதும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தலைவர் அவர்கள் எப்போதும் இந்த மன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றவர்களாக இருக்கவேண்டும்.

He must be the conscience-keeper of the House.

அதற்குப் பதிலாக—

He has acted as conscience-keeper of the Government.

எந்தத் தீர்ப்பை வழங்கினாலும் அரசுக்கு அதனால் எந்த விதமான இக்கட்டான நிலைமையும் வந்துவிடக் கூடாது. இந்த அரசு இங்கு பாது காக்கப்பட வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் அன்னார் தீர்ப்பு வழங்கி யிருக்கிறார்கள்.

புலவர் கோவிந்தன் அவர்கள் பாராளுமன்றத்தில் இன்றைய தினமானாலும் சரி, இதற்கு முன்னாலும் சரி அங்கு செயலாற்றுகின்ற தலைவர்கள் ஒவ்வொரு நாளும் கொடுக்கின்ற தீர்ப்புகளைப் பார்த்துக் கொண்டுதான் இருப்பார்கள் என்று கருதுகிறேன்.

1974 மார்ச் 29] [திரு. ஜே. ஜேம்ஸ்]

ஒவ்வொரு நாளும் பாராளுமன்ற நடவடிக்கையைப் பார்க்கும்போது எதாவது ஒரு அமைச்சரைக் கண்டித்து பாராளுமன்றத் தலைவர் கூறுகிறார்கள். கடந்த மூன்று ஆண்டுக் காலத்தில் இங்குள்ள அமைச்சர்கள் பல தவறைச் செய்திருந்த போதிலும் எதாவது ஒரு நாளாவது கண்டித்தார்களா ?

ஆக, இந்த மாமன்றத்திற்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்குப் பதிலாக இங்கு செயலாற்றுகின்ற அரசைப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள்.

நண்பர் கந்தப்பன் அவர்கள் சொன்னார்கள்—இந்தத் தீர்மானத்தை இந்தத் தருணத்திலாகிலும் வாபஸ் பெற்றுக் கொள்ளலாம் என்று கூறினார்கள். நான் ஒன்றைக் கூறுகின்றேன். எப்போது ஒரு நீதிபதி மீது தனக்கு நம்பிக்கையில்லை என்று குற்றவாளி கூறுவானே உடனே அந்த நீதிபதி வழக்கை விசாரிக்காமல் இன்னொரு கோர்ட்டுக்கு மாற்றுவதற்கான போதுமான காரணம் ஆகிறது. **Apprehension of injustice** இந்தக் கோர்ட்டில் நீதி கிடைக்காது என்ற எண்ணம் தோன்றினால் போதும், அந்த நீதிபதி அந்த வழக்கை நடத்த லாயக்கில்லை என்று சட்டம் இருக்கிறது.

அது போல் மாண்புமிகு புலவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த மாமன்றத்தில் உள்ள எதிர்க் கட்சிகளுக்குத் தங்கள் மீது நம்பிக்கை இல்லை எல்லோரும் கூறுகின்ற சூழ்நிலையில் எந்த அளவுக்கு அரசு நீங்கள் தான் இருக்க வேண்டுமென்று கூறினாலும் கூட, ஒரு வேளை 180 அங்கத்தினர்களும் ஆதரவு தர இருக்கிறார்கள் என்று சொன்னாலும்கூட இதற்கு முன்னதாக சீனிவாசன் மீது தீர்மானம் வந்தபோது ராஜினாமா எழுதிக் கொடுத்தது போல் இந்தத் தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு விடுவதற்கு முன்னதாக தாங்களும் ராஜினாமாச் செய்தால் எதிர்க் கட்சிகளுக்குத் திருப்தியாக இருக்குமென்று கூறி இந்தத் தீர்மானத்தை ஆதரித்து விடைபெறுகிறேன்.

திரு. நா. வீராசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, எதிர்க் கட்சிக் காரர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

173 பேர் இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் உள்ளடியே இந்த மன்றத்திலே எப்படி நடத்தப்படுகிறார்கள், எப்படி அலட்சியப்படுத்தப்படுகிறார்கள், எப்படி உரிமைகள் இழந்து இருக்கிறார்கள், எப்படி பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கும் நேரத்தில் உண்மையில் இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வருவதில் வேண்டுமானால் நியாயம் இருக்குமே தவிர, எதிர்க்கட்சிக்காரர்கள் இதைக் கொண்டு வருவது ஆச்சரியமாக இருக்கிறது.

என் இதைச் சொல்லுகிறேன் என்றால் புலவர் அவர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கும் இடம் அப்போர்ப்பட்ட இடம். அந்த இடம் உள்ளடியே ஒரு ஆபத்தான இடம் என்பதை இன்று தமிழ் நாட்டில் இருக்கும்

சபாநாயகர் அல்ல, பல நாடுகளில் இருக்கும் சபாநாயகர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

1857-ஆம் ஆண்டிலேயே John Evelyn Denison என்ற மாண்புமிகு அவைத் தலைவர் "கப்பலை ஓட்டுகின்ற மாலுமியைப் போல் இந்த ஆசனம். எந்த நேரத்தில் கவிழுமோ, எந்த நேரத்தில் புயலடிக்குமோ" என்று சொல்லிவிட்டு மேலும் சொல்லுகிறார்கள். சபாநாயகர் பதவியில் இருக்கிறவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதை—நம்முடைய நாட்டில் அல்ல—அவரே சொல்லுகிறார்—

No doubt it is difficult for the Speaker to appear impartial at all moments to all sections of the House.

இதிலிருந்து அந்த ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு யார் தீர்ப்புக் கொடுத்தாலும் எதிரில் இருப்பவர்களுக்குக் கொஞ்சம் பாதகமாகத்தான் தெரியும்.

புலவர் அவர்கள் உள்ளடியே எங்களுக்குச் சாதகமாக இல்லை என்பதற்குப் பல ஆதாரங்கள் காட்ட முடியும். சில மணி நேரமாக இந்த ஆசனத்தை அலங்கரிக்கும் தாங்கள் வேறு கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அனுபவம் வாய்ந்தவர்களாக இருந்தாலும், இந்த மன்றத்தின் மாண்பு தெரிந்தவர்களாக இருந்தாலும் இந்த இரண்டு மணி நேரத்திற்குள்ளாகவே அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கும் தங்களை அச்சுறுத்தும் அளவுக்கு வாதங்கள் நடக்கின்றன. அதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் . . . . .

திரு. பெ. சீனிவாசன் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்.

That does not amount to a threat.

பேரவை தலைவர் ஆசனத்தில் இருக்கும் தங்களை அச்சுறுத்துகின்ற சூழ்நிலை உருவாயிற்று என்று சொல்லுகிறார்கள். யார் அச்சுறுத்தியது ?

திரு. நா. வீராசாமி : இதிலே சூடேற்ற வேண்டுமென்று நான் பேசவில்லை.

மாண்புமிகு கோவை செழியன் அவர்கள் "உங்கள் மீது கூட ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரவேண்டியிருக்கும்" என்று சொன்னார்கள். அது என்ன அர்த்தத்தைக் காட்டுகிறது ? நாங்கள் எதை வேண்டுமானாலும் பேசுவோம், அதை எல்லாம் அனுமதிக்க வேண்டும், அனுமதிக்கவில்லை என்றால் நம்பிக்கை இல்லை. உங்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்க 14 நாட்கள் அவகாசம் இல்லை. அதனால் தப்பித்துக் கொள்கிறீர்கள்.

புலவர் நிலை அப்படி அல்ல. தொடர்ந்து இருக்க வேண்டும். ஆகவே, இந்த நிலைமையைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். சொல்லப்பட்ட வாதங்கள் எந்த அளவுக்கு உண்மை என்று பரிசீலிக்க வேண்டும். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர்களுக்குப் பாஸ் கொடுப்பதற்காகவா ஸ்பீக்கர் காலரி இருக்கிறது என்று கேட்டார்கள். ஸ்பீக்கர் எதற்காகக் கொடுக்கிறார். இங்கே வருகிறவர்கள் பேச்சைக் கேட்க மட்டும் வருகிறார்கள் என்று சொல்ல முடியாது.

1974 மார்ச் 29] [திரு. நா. வீராசாமி]

திருமதி அனந்தநாயகி அம்மையார் போன்றவர்கள் பேச்சைப் பத்திரிகையில் பார்க்கிறார்கள், ரேடியோவில் கேட்கிறார்கள், அந்த அம்மையார் எப்படி இருக்கிறார்கள், அவர்களை ஒருமுறை பார்க்கலாமே என்ற ஆர்வத்தோடு வருகிறார்கள். அமைச்சர்களுக்கு இருக்கும் உரிமையை இழக்க வேண்டும், அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இன்னொரு உண்மையை அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அந்த அம்மையார் சொன்னார்— இங்கு எனனென்னமோ நடக்கிறது, என்னென்னவோ பேசுகிறோம், ஆனால் நீங்கள் கண்டு கொள்ளக் கூடாது என்று சொன்னார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பாயிண்ட் ஆப் ஆர்டர். மினிஸ்டர்ஸ்க்கு எல்லாம் விவிட்டோஸ் காலரி பாஸ் கொடுத்து விடுகிறீர்கள். திரு. வீராசாமி அவர்கள் அன்போடு சொன்னார்கள், இவ்வளவு வேகமாக வேலை செய்கிற அனந்தநாயகியைப் பார்க்க வேண்டுமென்று வருகிறார்கள் என்று. இவ்வளவு மந்தமாக வேலை செய்கிற உறுப்பினரைப் பார்க்க வருகிறார்கள் என்று இன்னொருவர் சொல்லலாம். The speaker's galleries are full with visitors of Ministers இதற்கு ஒரு ப்ரொப்போர்ஷன் வேண்டாமா ? மினிஸ்டர்ஸுக்கு இவ்வளவு, மெம்பர்களுக்கு இவ்வளவு என்று ஒரு ப்ரொப்போர்ஷன் இருக்க வேண்டாமா ? மினிஸ்டோஸ் தங்கள் அட்வான்ஸ்டேஜியஸ் பொஸிஷனை வைத்துக்கொண்டு எல்லாப் பாஸ்களையும் அவர்களே எடுத்துக் கொடுத்தால் எப்படி என்று தான் சொல்கிறேன். என்னென்னவோ பேசிக் கொண்டிருக்கிறார்கள். இற்செல்வன்டாக இன்ப்ராட்டிக்காக பேசும்போதெல்லாம் அவர்கள் அப்போது புல் அப் செய்கிறார்களா என்று கேட்கிறேன்.

திரு. நா. வீராசாமி : அந்த ஆசனத்தில் உட்கார்ந்திருப்பவர்கள் இங்கிருக்கிற உறுப்பினர்கள் எதைப் பேசினாலும் கண்டு கொள்ளாதீர்கள் என்று ஒரு தீர்மானம் போட்டு சட்டத்தை உருவாக்கிக் கொடுத்துவிட்டால் எந்தச் சபாநாயகருக்கும் ஆபத்து இருக்காது.

ஆனால் சட்டமன்றத்தில் சில விதிமுறைகளை வைத்து அதை ஒரு புத்தகமாக அச்சடித்து உங்கள் கையில் கொடுத்ததன் விளைவு உங்களுக்கு இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வந்திருக்கிறது என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியும்.

நான் பணிவன்புடன் எதிர்க் கட்சிக்காரர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த மன்றத்தில் மட்டுமல்ல. இந்த ஆசனத்தில் உட்கார்ந்திருக்கக் கூடிய ஒரே ஒரு காரணத்திற்காக இந்த மன்றத்திற்கு வெளியே உங்களைப் பற்றி எப்படியெல்லாம் வர்ணிக்கிறார்கள் என்று ஒரு கணம் எண்ணிப் பார்க்கிறேன். அதை நான் இங்கே சொல்ல விரும்பவில்லை.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் வெளியே கூட்டங்களுக்குப் போகும் போது கூட அவர்களைப் போன்ற மாண்புமிகு உறுப்பினர்களை வைத்துக் கொண்டு, ஏக வசனத்தில் பேசுவது என்பதை அவர்கள்

கண்டித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இரண்டு தினங்களுக்கு முன்னால் செய்யாறில் அவர்கள் முன்னால் பேசப்பட்ட வார்த்தைகளை அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் மீது . . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : செய்யாறு கூட்டத்தில் என்னென்ன பேசப்பட்டன என்பதை எல்லாம் நான் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். தரக்குறைவாக எந்த வார்த்தையும் பேசியதாக எனக்குத் தெரியவில்லை. அப்படியிருந்தால், தரக்குறைவாக யாராவது பேசியிருந்தால் நிச்சயமாக நான் அதைப் பார்த்துக்கொண்டிருக்க மாட்டேன் என்பதை தங்கள் மூலம் உறுதி கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

திரு. நா. வீராசாமி : இதை ஒரு விவாதமாக நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் நாகரீகமான வார்த்தைகளாக அவற்றை எடுத்துக் கொண்டால் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் மக்களுக்குத் தெரிகிறது. எப்பேர்ப்பட்ட வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன. யார் யாரால் பயன்படுத்தப்படுகின்றன என்பதை எண்ணிப்பார்க்கும்போது உள்ளபடியே அந்த ஆசனத்தில் இருந்து கொண்டு நீங்கள் எவ்வளவு இன்னல்களை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்று புரிகிறது.

ஆனால் உண்மை என்ன ? 1957-ல பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்தில் இருந்தபோது டாக்டர் கிருஷ்ணா ராவ் அவர்கள் இந்த ஆசனத்தில் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் ஆளும் கட்சியிடம் அந்த நேரத்தில் எப்படி நடந்து கொண்டார்கள், எதிர்கட்சிகளிடம் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை நான் சொல்ல விரும்பவில்லை. அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் கூடுதல் பேசுவதற்கு நேரம் வேண்டுமென்று கேட்டபோது ஒரு குறிப்பிட்ட நேரத்தைத்தான் ஒதுக்கினார்களே தவிர அவர்கள் ஒரு கட்சித் தலைவர் என்பதற்காக சலுகைகள் கொடுக்கப்படவில்லை.

அதற்குப் பிறகு நம் நாவலர் அவர்கள் எதிர்கட்சித் தலைவராக இருந்தபோது திரு. செல்லபாண்டியன் அவர்கள் இந்த ஆசனத்தை அலங்கரிக்கிற நேரத்தில் நியாயத்தின் அடிப்படையில் ப்ரொப்போர்ஷனேட்டாக நேரம் ஒதுக்கப்பட்டதே தவிர 50 உறுப்பினர்கள் இருக்கிறார்களே சிறிது தாராளமாகக் கொடுக்கலாம் என்று ஒரு நாள் கூட திரு. செல்ல பாண்டியன் அவர்கள் இந்த மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு அதிக நேரம் ஒதுக்கியதில்லை.

அப்போது அது எங்களுக்கு எரிச்சலாக இருந்தது. ஆனால் இப்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரவில்லை. தலைவரிடம் முறையிட்டோம். பிறகு சபாநாயகர் அவர்களிடம் கெஞ்சினோம். கெஞ்சி சலுகைகள் காட்டுங்கள் என்று வேண்டிக் கொண்டோம். அப்படித்தான் நடந்துகொண்டோமே தவிர, ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் அந்த மரபைக் கடைப் பிடித்ததே தவிர இப்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரவில்லை.

1974 மார்ச் 29] [திரு. நா. வீராசாமி]

ஆனால் உண்மை என்ன? நீங்கள் ஆளும்கட்சிக்குச் சாதகமாக இருக்கிறீர்கள் என்பது உண்மையா? வேதனையோடு சொல்கிறேன். எப்படியெல்லாம் நீங்கள் அவமானப்படுத்தப்படுகீறீர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை செழியன் அவர்கள் வேளாண்மைத் துறை மானியத்தின் மீதான விவாதத்தில் பங்குகொண்டு அவர்கள் ஒரு வார்த்தை சொன்னார்கள். உடனடியாக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். உடனடியாகக் கண்டித்தீர்கள். அமைச்சர் என்று பார்த்தீர்களா? ஒரு அமைச்சரை அப்படிக் கண்டித்த அந்த நேரத்தில் எங்களுக்கு வேதனையாக இருந்தது. மறுநாள் நம் உணவு அமைச்சர் அவர்கள் பேசுகிற நேரத்தில் உணவு அமைச்சரைக் கூப்பிட்டுக் கண்டித்தீர்கள். இப்படி அமைச்சர்களாக இருந்தாலும் உங்களுக்கு இருக்கிற அந்த உரிமைகளைப் பயன்படுத்தி இங்கே கண்டித்திருக்கிறீர்களே தவிர அப்படிக் கண்டிக்கிற நேரத்தில் எங்களுக்கு வேதனையாக இருந்தது. ஆனால் என்ன செய்வது? உங்கள் கடமை. உங்கள் கடமையைச் செய்தீர்கள். அதைத் தாங்கிக் கொண்டோம்.

உங்களை ஒரு மாணவனைப் போல் கிராஸ் செய்திருக்கிறார்கள் இந்த மன்றத்திலேயே. இரண்டு நாட்கள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு வரவில்லை. அமைச்சர் அவர்களின் வேண்டு கோளுக்கிணங்க அவர்களது கேள்விகள் ஒத்திவைக்கப்படுகின்றன என்று சொன்னீர்கள். உடனே டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுந்து நின்று கேள்விகளை ஒத்திவைக்கிறேன் என்று சொல்கிறீர்களே, அமைச்சரிட மிருந்து வேண்டுகோள் வந்திருக்கிறதா, என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டதற்கு நீங்கள் வந்திருந்த கடிதத்தை எடுத்துப் படித்தீர்கள். எந்தச் சட்டமன்றத்திலாவது இப்படி நடந்திருக்கிறதா? நியாயத்தின் அடிப்படையில், தர்மத்தின் அடிப்படையில் உள்ளபடியே அமைச்சர் களுக்குப் பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலையில் இந்த மன்றத்தில் தராவிட முன்னேற்றக் கழகம் பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிற நேரத்தில் நான் வேதனைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல. என்னுடைய அருமைத் தோழர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள், ஆளும்கட்சி உறுப்பினர், வேறு ஒன்றும் கேட்கவில்லை. ஒரு பாயின்ட் ஆப் க்ளாரிபிக்கேஷன் கேட்டார்கள். அவர்களது வேண்டு கோளை நீங்கள் அனுமதிக்கவில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): என்னைப் பற்றி நண்பர் வீராசாமி அவர்கள் பேசுவதற்கு முன்பாக, அது தேவை இல்லை என்று நான் கருதுகிறேன். அவர்கள் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகிறார்களா அல்லது எதிர்த்துப் பேசுகிறார்களா என்று தெரியவில்லை. எனெனில் மாட்டர் எல்லாம் வேறுவிதமாக இருக்கிறது (கைதட்டல்).

திரு. நா. வீராசாமி: நான் சொல்கிற வாதங்கள், இங்கிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் சில உண்மைகளைப் புரிந்து கொள்ள முடியும் என்பதற்காகச் சொல்கிறேன்.

[திரு. நா. வீராசாமி] [1974 மார்ச் 29

எந்த ஒரு ஆளும் கட்சி உறுப்பினருக்கும் இங்கு வாய்ப்பளிக்கப்பட வில்லை, ஆனால் ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் நேற்றைய தினம் பேசுவதற்கு நேரம் போதவில்லை என்பதால் உடனடியாக வெளிநடப்புச் செய்தார்கள். அப்படி வெளிநடப்புச் செய்த அவரையே அறைக்குக் கூப்பிட்டு.....

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசும்போது—மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் சபாநாயகர் ஆசனத்தில் அமரவில்லை—மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்களைப் பார்த்து நீங்கள் நீங்கள் என்று நேரடியாகப் பேசுகிறார்கள். சபைத் தலைவரைப் பார்த்து பேசவேண்டுமே தவிர, "direct address to the Speaker" செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : ரொம்ப நன்றி. நாம் இந்த விவாதத்தை இன்றைய தினம் வைத்துக் கொண்டிருக்கிறோம். நான் சொல்வது தலைவர் அவர்கள் மூலமாக அவர்களுக்குப் போய்ச் சேரும் என்பது மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களுக்குத் தெரியும். ஆகவே இதை ஒரு விவாதமாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

திரு. ஏ. சுப்பிரமண்யம் அவர்கள் வெளிநடப்புச் செய்தார்கள். நீங்கள் அவர்களை அழைத்து, பேச மறுபடியும் வாய்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : வெளிநடப்பு அதற்காகச் செய்யவில்லை. அவர் வெளியே போனார். பின், டைம் கேட்கிறேன் என்று சொன்னார். அதுதான் நடந்தது.

திரு. நா. வீராசாமி : மன்னிக்க வேண்டும். நான் பத்திரிகைகளில் பார்க்கிறேன். நானகூட அப்படித்தான் நினைத்துக் கொண்டேன். ஆனால் பத்திரிகைகளில் வெளிநடப்பு என்ற செய்தி வந்திருக்கிறது.

திரு. க. உரொ. எட்மண்ட் : பாயிண்ட் ஆப் ஆர்டர். நேற்றைய தினம் ஆளும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் வெளிநடப்பு பற்றி திரு. வீராசாமி அவர்கள் சொன்னதன் பேரில், அப்படி வெளிநடப்பு செய்யவில்லை என்று தாங்கள் ஒரு தீர்ப்புக் கொடுத்தற்குப் பின்னால் அவர் பத்திரிக்கையைக் காட்டுவது முறைதானா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. நா. வீராசாமி : எனக்குக் கொஞ்சம் பாதுகாப்பு இருந்தால் நல்லது. இப்படி. எதிர்கட்சிக்காரர்களுக்கு நியாயமான முறையில் பல சலுகைகளை இந்த மன்றத்தை அலங்கரிக்கிற புலவர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

இன்னும் ஒன்று. இந்தச் சபைக் குறிப்பிலிருந்து நீக்குவது பற்றி பேசப்பட்டது. நான் நம்முடைய நாடாளுமன்றத்தில் கடைப்பிடிக்கக்கூடிய முறைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாடாளுமன்றத்தில் ஒரு விதியில்

1974 மார்ச் 29] [திரு. நா. வீராசாமி]

The Speaker as the guardian and protector of the rights of the Members of the House has inherent power to order expunction of unparliamentary and objectionable expressions in the proceedings என்று சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. மேற்கு வங்கத்தில் சட்டமன்றம் நடைபெற்றிருக்கிறது. அந்த நாடுகளை எல்லாம் அழைப்பது கூட அவ்வளவு நல்லதல்ல. சட்டமன்றம் நடைபெற்றபோது ஒரு உறுப்பினர் 27 நிமிடங்கள் தொடர்ந்து பேசுகிறார். அந்த உறுப்பினர் பேசியதில் ஒரு வரி கூட அந்தப் பிரொஸ்டிங்ஸ்களில் கிடையாது. எல்லா வற்றையும் நீக்கிவிட்டார்கள். அதேபோல் நம் சட்டமன்றத்தில் In the year 1958, in the Tamil Nadu Legislative Assembly, a major portion of a member's speech, though withdrawn, was ordered to be expunged from the proceedings. எதோ சட்டசபைக் குறிப்புகளில் இருந்து நீக்குவது எதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பின்னால்தான் இதுமாதிரி நடைபெறுவதுபோல் சொன்னார்கள்.

1956-ம் ஆண்டு மே மாதம் முதல் நாள் நாடாளுமன்றத்தில் லோக் சபாவில் ஒரு விவாதம். அதில் துணைக் கேள்வி என்ற பெயரால்—நம்முடைய சட்டமன்றத்தில் ஒரு நாளைக்கு முதல் அமைச்சர் முதல் எல்லா அமைச்சர்களும் பதில் சொல்வது மாதிரி இல்லை, 4—5 அமைச்சர்கள்தான் இருப்பார்கள், பதில் சொல்வார்கள்—அந்த விவாதம் நடைபெற்ற நேரத்தில் ஒரு துணைக் கேள்வி கேட்கப்பட்டது. அதற்குப் பிறகு ஏறத்தாழ ¾ மணி நேரம் விவாதம் நடைபெற்று இருக்கிறது. திரு. சதன் குப்தா அவர்களும் சி. கே. பாது அவர்களும் கேள்வி போட சாதிக் அலிகான் என்ற அமைச்சர் தொடர்ந்து பதில் அளித்து வந்தார்கள். அதற்குப் பிறகு, சபாநாயகர் அவர்கள் அவை அனைத்தும் மன்றக் குறிப்பேட்டில் ஏறுவது நாட்டிற்கு உகந்தது அல்ல, ஏற்றதல்ல என்று சொல்லி, எல்லாவற்றையுமே சபைக்குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறார்கள். இது ஒன்றும் புதிது அல்ல.

இங்கே பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது பற்றிச் சொன்னார்கள். திருமதி அனந்தநாயகி அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் கோபித்துக் கொள்ளக்கூடாது. சில பேர் இந்த சட்டமன்றத்தில் செல்லப் பிள்ளைகளாக இருக்கிறார்கள். அவர்கள் எழுந்தால் புலவர் அவர்கள் இடம் தருகிறார்கள். அப்படி இடம் கொடுத்து என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்பார்கள். என்னிடத்தில் புள்ளிவிவரம் இருக்கிறது. திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களுக்கு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது என்பது இப்போதுதான் பழக்கம் என்று இல்லை. 1957-க்கு முன்னாலே சில பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பி இருக்கிறார்கள். எதோ முன்னேற்றக் கழகம் சபாநாயகர் புலவர் உட்கார்ந்து இருக்கிற நேரத்தில் தான் இப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். 1966-மார்ச்சு மாதம் 29-ம் தேதி ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பியிருக்கிறார்கள். சபாநாயகர் சொல்கிறார், 'It is not a point of order' 1965-ம் வருஷம் ஜனவரி 22-ம் தேதி ஒன்று எழுப்புகிறார்கள், அதற்கும் 'It is not a point of order.'

திருமதி த. ந. அனந்தநாயகி : பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி அவ்வப்போது உறுப்பினர்கள் எழுப்புவார்கள். அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லே என்று தீர்ப்பு கொடுக்க வேண்டியது சபாநாயகர் பொறுப்பு. திரு. வீராசாமி அவர்கள் எழுப்பியிருக்கிற பாயின்ட் ஆப் ஆர்டர் எத்தனை பாயின்ட் ஆப் ஆர்டராக இருந்து இருக்கிறது என்று எடுத்துப்பாருங்கள்.

திரு. நா. வீராசாமி : நான் சொல்வதற்குக் காரணம் முறையாகக் கேட்கிறீர்களா, முறையில்லாமல் கேட்கிறீர்களா என்பதற்கு அல்ல. அனுமதிக்கவில்லே என்று சொல்கிறீர்கள். இப்படி ஏராளமாக இருக்கின்றன. இது கூட வேடிக்கை இல்லே.

நம்முடைய அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஆளும் கட்சியில் உறுப்பினராக இருந்த நேரத்தில் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த Speaker திரு. செல்லப்பாண்டியன் அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அது என்னுடைய வாதத்திற்கு மிக உதவியாக இருக்கும்.

" SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of order. The Hon. Member, Mr. Karunanidhi never goes to a temple ; how can he know about the worship and other things ?

MR. SPEAKER : It is not a point of order. The Hon. Lady Member, Thirumathi T. N. Anandanayaki, I think, is a lawyer ; She must know what is a point of order. It is not at all a point of order. Let the lady Member resume her seat."

அதுமாதிரி எங்களுடைய சபாநாயகர் சொன்னால் உடனே கோபம் வருகிறது. திரு. செல்லப்பாண்டியன் சொன்னால் கோபம் வரவில்லே. இப்படி ஏராளமாகச் சொல்ல முடியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : திரு. வீராசாமி அவர்கள் சொன்னதற்காகச் சொல்கிறேன். அன்று திரு. செல்லப்பாண்டியன் அவர்கள் சொன்னபோது உடனே நானும் வக்கீல் நீங்களும் வக்கீல், அதைப் பற்றி இங்கே சட்டமன்றத்தில் பேசவேண்டாம் என்று திருப்பிச் சொல்லியிருக்கிறேன். அதையும் சேர்த்துப் படித்துப் பாருங்கள்.

(திரு. கோவை செழியன் : குறுக்கிடு).

திரு. துரைமுருகன் : இந்த அவையில் ஒரு அங்கத்தினர் எழுந்து பேச வேண்டுமானால் பாயின்ட் ஆப் ஆர்டர் அல்லது இளாரிபிகேஷம என்ற முறையில் ஏதாவது எழுந்து சொல்லி, அவரின் அனுமதியைப் பெற்றுத்தான் பேச வேண்டும். இப்போது திரு. கோவை செழியன் அவர்கள் எழுந்து பேசினார், எந்த அடிப்படையில் பேசினார் என்று கேட்கிறேன்.

1974 மார்ச் 29]

திரு. நா. வீராசாமி : இப்படி நான் ஏராளமான ஆதாரங்களைக் காட்ட முடியும். இங்கே என்னென்ன மரபுகள் கடைபிடிக்கப்பட்டிருக்கின்றன என்று பார்த்தால் தெரியும். நண்பர் சீனிவாசன் அவர்கள் துணைச் சபாநாயகராக இருந்த நேரத்தில் அவர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவது அநியாயம் என்று சொன்னார்கள். அந்த விவாதத்திலே நான் தூழைய நான் விரும்பவில்லை. சீனிவாசனுக் காகப் பரிந்து பேசிய அம்மையார் அவர்களுக்கு, சீனிவாசன் அவர்கள் கொடுத்த தீர்ப்பைப் படிக்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : On a point of Order, Sri. When the Education Minister is here, why should another Minister intervene ?

அது ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுபினார்கள். அதற்கு அவர் தீர்ப்புச் சொல்லியிருக்கிறார். " திருமதி அனந்தநாயகி அவர்கள் நேரத்தை கெடுக்கிற மாதிரி பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறார்கள். வேறெரு அமைச்சர் பதில் சொல்லக் கூடாது என்று எந்த விதிமுறையில் இருக் கிறது ? சம்பந்தப்பட்ட அமைச்சர் இருக்கும்போது மற்றெரு அமைச்சர் பதில் சொல்லலாம். இல்லாமல் இருக்கும்போதும் பதில் சொல்லலாம். இது பற்றி பேரவைத் தலைவரின் தீர்ப்பு ஒன்று இருக்கிறது. உங்களுக்குத் தெரியும். தற்போது நீங்கள் எழுப்பியிருப்பது தேவையில்லாத பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவையில் பேசுகிறோம் என்பதை மறந்துவிட்டுப் பேசுகிறீர்கள். உங்கள் கட்சித் தலைவர் மாரிமுத்து இருக்கும்போது நீங்கள் எப்படிப் பேசுகிறீர்கள் ? கட்சித் தலைவர் இருக்கிறபோது இன்னெரு உறுப்பினர் என் பேச வேண்டும் ? மந்திரி சபையில் எல்லா மந்திரிகளுக்கும் ஜாயின்ட் ரெஸ்பான்சிபிலிடி இருக்கிறது " என்று சொல்லி யிருக்கிறார்கள். இதிலே நான் என்ன சொல்ல விரும்புகிறேன என்றால் :

திரு. பெ. சீனிவாசன் : என்னுடைய பெயரை இழுத்ததால் நான் சொல்ல விரும்புகிறேன். அங்கத்தினர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதும், அதற்கு பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று கூறுவதும் சர்வ சாதாரணம். ஒரு உறுப்பினர் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பி அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று கூறுவதால் அந்த உறுப்பினருக்கு பேரவையில் பேசுகிற ஆற்றல் இல்லை என்று கருதக் கூடாது. அப்போது உறுப்பினர் வைத்த கருத்தின் அடிப்படையில் நான் தீர்ப்புச் சொல்லியிருக்கிறேன். பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்ப உரிமை இல்லை என்று சொல்வது சரியல்ல.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, சீனிவாசன் விளக்கத்திற்கு நன்றி. அவர்களெல்லாம் தீர்ப்புக் கொடுத்த நேரத்தில் அவர் மீது நம்பிக்கையில்லை என்று சொல்லவில்லையே, எங்களுடைய புலவர் அவர்கள் சொல்கிறபோது நம்பிக்கையில்லை என்று சொல்கிறீர்களே அது நியாயமா என்று கேட்கிறேன்.

இந்த நேரம் கொடுப்பதைப் பற்றிச் சொன்னார்கள். ஆளும்கட்சிக்கு நிறைய சலுகை கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

திரு. முனு. ஆதி. : எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும் 15 நிமிடம், 10 நிமிடம் என்று கொடுத்தீர்கள். அவர் 25 நிமிடம் எடுத்துக் கொண்டு பேசிக்கொண்டிருக்கிறார்கள். தலைவரவர்களே, மற்றவர்களுக்குமஇந்த நேரத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : இப்போது நான் பேச வருவது அந்த பாயின்ட் தான்.

நாங்கள் 174 உறுப்பினர்கள் இருக்கிறோம். எப்படிப் புலவர் அவர்களைத் தலைவராக வந்த பின்பு ஆளும் கட்சிக்காரர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய நேரம் கிடைக்காமல் இருக்கிறது என்பதற்காகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்களுக்கு இருக்கும் வருத்தம் எல்லாம் இப்படிப் பல விவாதங்கள் வருகிறபோது எதிர்க் கட்சிக்காரர்களுக்கு அதிகச் சலுகைகளை அளித்து, எங்களுக்குக் குறைந்த நேரத்தை அளித்து இருக்கிறீர்களே என்பதுதான்.

இவர்கள் வெளியே போய் என்ன சொல்கிறார்கள். ஆளும் கட்சிக் காரர்கள் தூங்குமூஞ்சிகள் என்று சொல்லுகிறார்கள்.

உண்மை என்னவென்று கேட்டால் 1974–75 ' ஜெனரல் டிஸ்கஷன் ஆன் தி பட்ஜெட் ' வருகிற நேரத்தில் அதிலே 78 உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். நான் நியாயத்தின் அடிப்படையில் 174 பேர் இருக்கிறோம். குறைந்தது 60 பேராவது பேச வேண்டும். ஆனால் நாங்கள் பேசியது 36 பேர். மொத்தம் ஒதுக்கப்பட்ட நேரம் 1,418 நிமிடங்கள். அதிலே 174 பேர் உள்ள எங்கள் கட்சிக்கு 1,032 நிமிடங்கள் நியாயமாக ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால் எங்களுக்குக் கொடுத்தது 502 நிமிடங்கள். பாதிக்கும் குறைவாக இருக்கிறது.

அதேபோல் கவர்னர் அட்ரஸ் டிஸ்கஷனிலும் 63 பேர் பேசினார்கள். நியாயத்தின் அடிப்படையில் நாங்கள் 52 பேர் பேச வேண்டும். ஆனால் 32 பேர்தான் பங்கு கொண்டோம். மொத்தம் ஒதுக்கப்பட்ட நேரம் 1,186 நிமிடங்கள். எங்களுக்கு நியாயமாக கொடுத்திருக்க வேண்டியது 932. ஆனால் எங்களுக்குக் கொடுத்தது 593 நிமிடங்கள். நாலிலே ஒரு பங்கு நேரம் எங்களுக்குப் பல சமயங்களில் ஒதுக்கப்படுகிறது.

அதேபோல் மின்சார இலாகா பட்ஜெட் வருகிற நேரத்திலும் அதிலே மொத்தம் 41 பேர் பங்கு கொண்டனர். நாங்கள் 32 பேர் பேச வேண்டும். ஆனால் எங்களுக்குக் கொடுக்கப்பட்டது 21 பேர். மொத்தம் 601 நிமிடம் விவாதம் நடைபெற்றது. எங்களுக்குக் கொடுத்தது 200 நிமிடங்கள்தான்.

இப்படி எங்களுடைய உரிமைகள் புறக்கணிக்கப்படுகின்றன. அதற்காக நாங்கள் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில் எதிர்க் கட்சிக்காரர்கள், எண்ணிக்கையிலே குறைவாக இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக பல சலுகைகளைக் கொடுக்கிற நேரத்தில் இப்படித் தீர்மானம் கொண்டு வருவது முறையல்ல. ஆகவே, அதை எதிர்த்து என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

1974 மார்ச் 29]

திரு பெ. சீனிவாசன் : நேரம் பற்றிச் சொன்னார்கள். எதிர்க் கட்சிக் காரர்களுக்கு சலுகை தருவதாக வீராசாமி அவர்கள் சொல்கிறார்கள். ஆளும் கட்சியில் 174 பேர் இருந்தாலும் 174 பேரும் ஒரே கொள்கை உடையவர்கள். எதிர்க் கட்சியில் இருக்கும் ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு நோக்கம் உடையவர்கள், அடிப்படைக் கொள்கைகள் வேறு. ஆகவே, பேசுகிற நேரத்தை அந்த அடிப்படையில் தந்து இருக்கிறார்கள். சலுகை கொடுத்ததாக அவர்கள் நினைக்க வேண்டாம்.

திரு அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் 174 பேர் இருந்தாலும் நாங்கள் ஒரே தொகுதியில் இருந்து தேர்ந் தெடுக்கப்பட்டு வரவில்லை, எங்களுடைய தொகுதிப் பிரச்னைகள் இருக்கின்றன. ஆகவே, நாங்கள் தனித்தனியாக எங்களுடைய தொகுதியைப் பற்றி ரெப்ரசென்டேஷன் இங்கே பண்ண வேண்டியிருக்கிறது. ஆகவே, மெஜாரிட்டி அடிப்படையில் நேரம் ஒதுக்கப்பட வேண்டும் என்பதுதான் எனனுடைய எண்ணம். ஆகவே, அதுதான் சரி என்று கருதுகிறேன்.

திரு கே. என். குமாரசாமி : எதிர்க் கட்சி சார்பாக மட்டுமின்றி, ஆளுகின்ற கட்சியைச் சார்ந்தவர்களும் அலுவல் ஆய்வுக் குழுவில் இடம் பெற்றிருக்கிறார்கள். அந்தக் குழுவில் டிமாண்டுக்கு எவ்வளவு நேரம் ஒதுக்குவது என்று ஒரு முடிவு மேற்கொள்ளப்பட்டு, அது சட்ட சபையில் தினிக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கப்பட்ட நேரத்தை எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு நேரத்தை ஒதுக்கிவிட்டு, மீதியுள்ள நேரம் ஆளும் கட்சியினருக்கு அளிக்கப்படுகிறது. எங்களுடைய கருத்தைக் கேட்டுக் கொண்டு, பிரச்னைகளுக்கு ஆளும் கட்சியினர் தான் பதில் சொல்ல வேண்டும். எதிர்க் கட்சியினர்கள் பதில் சொல்லத் தயாராக இல்லை.

சட்டமன்றத்தில் ஒவ்வொரு மாநிலத்திலும் இன்றைக்கு 2 மாதம், 3 மாதம் என்று நீண்ட நாட்கள் சந்தர்ப்பம் கொடுத்து, அங்கத்தினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு அளிப்பதைப் பார்க்கிறோம். பிஹினல் அட் வைஸரி கமிட்டியில் ஆளுகின்ற கட்சியைச் சார்ந்த அமைச்சர்களும் இருக் கிறார்கள். மற்ற ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் அவர்கள் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்று நினைத்திருந்தால், ஆளும் கட்சித் தலைவர் கள் நினைத்திருந்தால், அவர்களால் சந்தர்ப்பம் கொடுக்க முடியும். அவர்கள் அப்படிச் சந்தர்ப்பம் கொடுக்காவிட்டால் இங்கே வந்து தலைவர் அவர்களை ஆளும் கட்சியினருக்குச் சந்தர்ப்பம் அளிக்கவில்லை என்று சொன்னால், அதற்குத் தலைவர் பொறுப்பு அல்ல, ஆளுகின்ற கட்சித் தலைவர்கள்தான் பொறுப்பு என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள்மீது எதிர்க் கட்சியினரால் கொண்டு வரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து அண்ணா தி. மு. க.வின் சார்பில் என்னுடைய கருத்துக்களை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 மார்ச் 29

இந்த விவாதத்தின்போது தோழமை கட்சி என்று சொல்லிக் கொண்டிருக்கிற இந்திய யூனியன் முஸ்லீம் கட்சியினுடைய சார்பில் நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு லத்தீப் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் அடிக்கடி எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் சபாநாயகர்மீது 6 மாதங்களுக்கு ஒரு முறையாவது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்திலே செயல்படுவது சபாநாயகர் பதவிக்குக் களங்கம் விளைவிப்பதாக இருக்கிறது என்ற கருத்தில் தன்னுடைய உரையை இங்கே ஆற்றினார்கள்.

என்னுடைய எண்ணமெல்லாம், என்னுடைய விருப்பம் எல்லாம், பேரவைத் தலைவராக இருக்கின்றவர் இந்த மன்றத்தை நடத்துகின்ற நேரத்தில் விதி முறைக்கு உட்பட்டு அந்த விதி முறையின்படி நடக்க வேண்டும் என்று விரும்புகிறேமே தவிர, ஆளும் கட்சிக்கென்றும் அவர்கள் சலுகை காட்டத் தேவையில்லை. எதிர்க் கட்சியினருக்கு என்று சலுகை கூட அவர்கள் காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்ற அடிப்படையில் சபாநாயகர் இந்த மன்றத்தில் செயல்பட வேண்டும் ஜனநாயகத்தின் அடிப்படையில் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இந்த மன்றம் நடைபெறுகிறது என்றால், அதற்கென்று பல விதி முறைகள் இருக்கின்றன. அந்த விதி முறைகளையொட்டித்தான் பேரவைத் தலைவர் அவர்கள் இந்த மன்றத்தினுடைய நிகழ்ச்சிகளை நடத்த கடமைப் பட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் அந்தக் கடமையிலிருந்து தவறி விட்டார்கள்.

நீதியினுடைய ஆசனத்திலிருக்கிற பேரவைத் தலைவர் சில சந்தர்ப்பங்களில் நீதி தவறிவிட்டார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையிலும், நீதி தவறிய சபாநாயகர் அவர்கள் இந்த அவைக்குத் தேவையில்லை என்கின்ற அளவுக்கும், நாங்கள் அவர்களைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்பதற்காக இந்தத் தீர்மானத்தை இங்கே கொடுத்திருக்கிறோம்.

இங்கே எடுத்துச் சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய லத்தீப் அவர்களுடைய கவனத்திற்கும், ஆளும் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினராக இருக்கிற மதிப்பிற்குரிய கந்தப்பன் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். இந்த மன்றத்திலே உள்ள ஆளும் கட்சியினர்கள் இதற்கு முன்னாலே இருந்த பேரவைத் தலைவர்மீதும் துணைத் தலைவர் அவர்கள் மீதும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இந்த மன்றத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் மதிப்பிற்குரிய திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசுகின்ற நேரத்தில்கூட அதைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

உலக வரலாற்றிலேயே எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவரை தேர்ந்தெடுத்தவர்களே சில காலம் கழித்து பதவியிலிருந்து நீக்குவதற்கு உண்டான தீர்மானத்தைக் கொண்டு வருகிறார்கள். இது உலக வரலாற்றில் தமிழ்நாடு சட்ட மன்றத்தில்தான் நடந்திருக்கிறது என்பதையெல்லாம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த

அடிப்படையிலேதான் அவர்கள்கூடச் சொன்னார்கள், அன்று அவர்கள் காரணம் காட்டவில்லை, இன்றையதினம் நாங்கள் காரணங்கள் கொடுத் திருக்கிறோம்.

நாங்கள் காரணம் கொடுத்திருப்பதற்கு அவர்கள் விளக்கம் சொல்கிற நேரத்தில் அதிலே சில பதங்கள் "இன்வினுவேஷன்" ஆக இருக்கிறது. என்றுகூட அவர்கள் இங்கே விளக்கம் அளித்தார்கள். 'இன்வினு வேஷன்' இருக்கிறது என்று அவர்கள் சொல்வார்களாயோலை, என்னுடைய வாதமெல்லாம் நாங்கள் அதை சார்ஜஸாக, குற்றச்சாட்டுகளாகத்தான் கொடுத்திருக்கிறோமே ஒழிய, 'இன்வினுவேஷன்' எதையும் நாங்கள் அந்த தீர்மானத்தில் சேர்க்கவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய புலவர் கோவிந்தன் அவர்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருகிற நேரத்தில் நம்முடைய ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் இந்தத் தீர்மானத்தை எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பழைய வரலாற்றை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நம்முடைய கந்தப்பன் அவர்கள் பார்லிமென்டரி மரபு பற்றி, ஜனநாயக மரபு பற்றியெல்லாம் இந்த மன்றத்தில் எடுத்துச் சொன்னார்கள். பார்லி மென்டரி மரபு மட்டுமல்ல, ஜனநாயக மரபு மட்டுமல்ல. மேல் நாடுகளில் எப்படி நிலைமை இருக்கிறது என்பது நம்முடைய கந்தப்பன் அவர்களுக்கு நல்ல முறையில் தெரியும். காரணம் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பின ராக இருந்திருக்கிறார், அப்பொழுது வெளி நாட்டுச் சுற்றுப் பிரயாணம் செய்து திரும்பியுள்ளார்.

மற்ற நாடுகளிலெல்லாம் சபாநாயகர் பதவியிலிருந்து விட்டு, அந்தப் பதவி முடிந்து, அவர் மீண்டும் ஒரு பொதுத் தேர்தலைச் சந்தித்தால், அந்தத் தேர்தலில் அவர் மீண்டும் வெற்றி பெற்று வருவார்களேயானால், அந்த சபாநாயகர் பதவியை அவருக்கே கொடுக்கலாம் என்ற அடிப்படை இருக்கிறது.

நம்முடைய சபாநாயகர் புலவர் கோவிந்தன் அவர்கள் 1971-ம் ஆண்டு வரையிலும் இந்த மன்றத்தில் இரண்டு ஆண்டுகள் சபாநாயகராக இருந்தவர். 1967-ம் ஆண்டிலிருந்து 1969-ம் ஆண்டு முடிய இரண்டு ஆண்டு துணைச் சபாநாயகராக இருந்து, அதற்குப் பிறகு 1969-லிருந்து 1970-ம் ஆண்டு முடிய இந்த மன்றத்தில் சபாநாயகராக இருந்திருக் கிறார்கள். அவர்கள் தன்னுடைய பதவி முடிந்து 1971-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று வந்ததற்குப் பின்னால், ஆளும் கட்சியினுடைய நிலைமை என்ன? அன்றைக்கு அவரை சபாநாயகராகக் கொண்டுவர அவர்கள் விரும்பவில்லை. வேறு ஒருவரை சபாநாயகராகக் கொண்டு வந்தார்கள்.

பிறகு அந்தச் சபாநாயகர் அவர்களுடைய போக்கு அவர்களுக்குப் பிடிக்கவில்லை, அவர் கட்சி மாறிவிட்டார் என்று உடனே அவரை பதவியி லிருந்து நீக்கிவிட்டார்கள். எந்தப் புலவர் கோவிந்தனை 1971-ம் ஆண்டு

பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 மார்ச் 29

சபாநாயகர் பதவிக்குத் தேவையில்லை, எந்தப் புலவர் கோவிந்தன் சபாநாயகர் பதவிக்கு வருவதற்குத் தகுதியில்லை என்று ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் அன்று கருதினார்களோ, அதே கட்சியைச் சார்ந்தவர்கள், அதே புலவர் கோவிந்தனை 1973-ம் ஆண்டு அவையிலே மீண்டும் சபாநாயகராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். நான் இதைத்தான் ஆளும் கட்சியினரைச் சார்ந்தவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1973-வது ஆண்டு அவையிலே சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மீது பல குற்றச்சாட்டுக்கள் இருந்திருக்கலாம். ஊழல் விவரங்கள், பட்டா செய்த விவரங்கள் இந்த மன்றத்தில் பேசப்பட்டது. ஆகவே அந்தக் காரணத்தின் அடிப்படையில் அவர்களைக் கொண்டுவராமல் இருந்திருக்கலாம். பத்திரிகையில் கூட வந்திருக்கிறது. நாத்திகம் என்ற பத்திரிகையில் வந்திருக்கிறது. 5-11-1970-ம் தேதி அன்று வெளியிடப்பட்டிருக்கிற நாத்திகம் பத்திரிகையில் இந்தக் குற்றச்சாட்டைப் பற்றி அன்றைக்கு எழுதியிருக்கிறார்கள். இன்றைக்கு ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அன்றைக்கு நாத்திகம் பத்திரிகை அதை எழுதியிருந்தது : இன்றைக்கு அந்தப் பத்திரிகை அவர்கள் பக்கம் திரும்பியிருக்கிறது. எதற்காகச் சொல்கிறேன் என்றால் புலவர் கோவிந்தன் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம் என்றால் அந்தக் குற்றச்சாட்டை நாங்கள் இதிலே காட்டவில்லை, நாங்கள் காட்ட விரும்பவும் இல்லை. நாங்கள் விரும்புவதெல்லாம் இந்த மன்றத்தில் சபாநாயகராக இருப்பவர் நீதிபதியைப் போல் நடந்துகொள்ள வேண்டும். ஆளும் கட்சிக்கு ஆதரவு கொடுக்கக் கூடாது, ஆளும் கட்சிப் பக்கம் பரிந்து பேசக் கூடாது. அதே நேரத்தில் எதிர்க் கட்சியினருக்கும் அவர்கள் வக்காலத்து வாங்கக் கூடாது என்பதை இந்த மன்றத்தில் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். அந்த அளவுக்கு நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நம்முடைய புலவர் கோவிந்தன் சபாநாயகராக இருப்பவர் அந்த அளவுக்கு நடந்திருக்கிறார்களா என்பதை மனச்சாட்சி உள்ளவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். எதோ இன்றைக்கு அவர் நம்முடைய கட்சியில் இருக்கிறார், அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறோம் என்ற அளவில் எதிர்க்கக் கூடாது.

நாங்கள் அவர் செய்த தவறுகளை சுட்டிக் காட்டியிருக்கிறோம். நம்முடைய மதியழகன் அவர்கள் சபாநாயகராக இருந்தபொழுது, அல்லது சீனிவாசன் அவர்கள் துணைச் சபாநாயகராக இருந்தபொழுது இம்மாதிரி குற்றச்சாட்டுக்களை எதாவது உங்களால் சுட்டிக்காட்ட முடிந்ததா? நாங்கள் காரணங்களைக் கூறியிருக்கிறோம்.

நம்முடைய கந்தப்பன் அவர்கள் சொன்னார், திரு. சீனிவாசன் அவர்கள் பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அவர் முன்மொழிந்து பேசுகின்ற நேரத்தில் அவர்கள் அன்றும் சொன்னார்கள், இன்றும் விவாதத்தில் சொல்கிறார்கள். 173 பேர்கள் மீது திரு சீனிவாசனுக்கு நம்பிக்கையில்லாமல் இருந்தது என்று சொன்னார்கள். மதியழகன் அவர்களை என் நீக்கினோம் [illegible], அன்று 173 பேர்கள் மீதும் அவர்களுக்கு

1974 மார்ச் 29] [திரு. க. உரொ. எட்மண்ட்]

நம்பிக்கையில்லை என்று அவர்கள் சொன்னார்கள். அப்படித்தான் ஒருவர் சபாநாயகராக இருக்க வேண்டும். 173 பேர்கள் மீதும் நம்பிக்கையில்லாமல் எங்கள் மீதும் நம்பிக்கையில்லாமல், இந்த அவையின் மீது இந்த அவையின் நடவடிக்கைகளின் மீது நம்பிக்கை உள்ளவராக சபாநாயகர் இருக்க வேண்டும். அத்தகையவர் சபாநாயகராக இருக்கிறார் என்ற முறையில் அவர்கள் எப்பொழுதும் இம்பார்ஷியலாக இருக்க வேண்டும். பார்ஷியலாக இருக்கக் கூடாது.

நம்முடைய வீராசாமி அவர்கள் கூடச் சொன்னார்கள். நம்முடைய நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூட வெளிநடப்புச் செய்தார்கள் என்று கூறினார்கள். ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்பினார்கள். அதற்கு சபாநாயகர் அனுமதி கொடுக்கவில்லை. ஆகவே, வெளிநடப்புச் செய்தார். ஆகவே சபாநாயகர் பாரபட்சமற்ற முறையில் நடந்திருக்கிறார் என்ற கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்த மன்றத்தில் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பதைப் பற்றிச் சபாநாயகருக்குத் தெரியும். அதனால்தான் அவர் பேச முற்பட்டபோது சபாநாயகர் இடம் கொடுக்கவில்லை.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : He is putting wrongly நான் பாயிண்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணவும் இல்லை ; சபாநாயகரைக் கண்டித்து வெளிநடப்பும் செய்யவில்லை. கடைசியில் ஒரு விளக்கம் கேட்க எழும்பினேன். நான் எழும்பியதை சபாநாயகர் அவர்கள் பார்க்கவில்லை. அதனால் எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதனால் போகலாம் என்று சொல்லி, போய்விட்டேன். அது எங்களுக்குள் உள்ள விவகாரம். அதை என் நீங்கள் இழுத்துக் கொள்கிறீர்கள். உங்கள் சொந்தக் காலிலேயே நின்றுகொள்ளுங்கள். you depend on your own legs and not on my legs

திரு. க. உரொ. எட்மண்ட் : அப்படியானால் அவர்கள் எதோ வெளி நடப்பு செய்வதன் மூலமாக பத்திரிகையில் பரபரப்பான செய்தி வந்து விளம்பரம் கிடைக்கும் என்று போயிருப்பார்கள். சபாநாயகர் என் அவர்களுக்குப் பேச அனுமதி கொடுக்கவில்லை என்பது எனக்குத் தெரியும். ஆளும் கட்சி உறுப்பினராக இருந்தாலும் அவர் சபையிலே நடந்து கொள்ளும் முறை. . . .

திரு வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : இந்த மாதிரியான பத்திரிகை விளம்பரம் எங்களுக்குத் தேவையில்லை. ஒருவேளை உங்களுக்குத் தேவைப்படலாம்.

Chairman (Thirumathi Jothi Venketachellum) Please come to the subject.

திரு. க. உரொ. எட்மண்ட் : அவர்கள் வெளிநடப்புச் செய்ததற்குக் காரணம் சபாநாயகர் பேச அனுமதி அளிக்காததுதான். சபாநாயகர் என் அனுமதி கொடுக்கவில்லை என்பதும் எங்களுக்குத் தெரியும். இந்த

மன்றத்திலே அவர்கள் ஆற்றுகின்ற உரையைப் பார்த்தால் தெரியும். எதிர்க்கட்சிக்காரர்கள் ஆளும் கட்சியைச் குற்றஞ்சாட்டுவது போல் அவர்கள் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர்கள் மீது குற்றஞ் சாட்டியிருக்கிறார்கள். அமைச்சர்களுடைய கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்துக்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் தான் சபா நாயகர் அவருக்குப் பேச அனுமதி அளிக்கவில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : என்னுடைய அருமை நண்பர், முன்னாள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினரும் முன்னாள் துணைச் சபாநாயகருமான எட்மண்ட் அவர்கள் விவாதத்திற்கு வேறு கருத்துக்களை எடுத்துக்கொள்ளலாம். சபாநாயகர் பேரில் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். என்னை இழுத்து, உங்கள் விவாதத்திற்கு சப்பைக் கட்டு கட்டிக்கொள்ள வேண்டாம். எங்களுக்குள் உள்ள விவ காரங்களை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். எங்கள் கட்சியை மீறி ஏதாவது நான் செய்திருந்தால் எங்கள் கட்சித் தலைவர்கள் அதை பார்த்துக்கொள்வார்கள். எங்கள் வீட்டுக்குள் எது வேண்டுமானாலும் நடக்கட்டும். அதை என் நீங்கள் ஜன்னல் வைத்துப் பார்த்துக்கொண்டிருக் கிறீர்கள் ? பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. க. உரொ. எட்மண்ட் : நீங்கள் என்ன தவறைச் செய்தாலும் இப்போது உங்களைத் தண்டிக்க மாட்டார்கள். உங்கள் மீது நடவடிக்கை எடுக்க மாட்டார்கள். அந்த உத்தரவாதத்தை நான் தர முடியும். ராஜ்ய சபா தேர்தலில் ஒரு வேட்பாளரை நீங்கள்....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : உங்களுடைய விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டாம். இந்தத் தீர்மானத் தின் மீது பேசுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தன்னுடைய கருத்தைச் சொல்வதற்கு வாய்ப்பளிக்காததால் தான் திருஷ்ணமூர்த்தி அவர்கள் வெளிநடப்புச் செய்தார்கள். அமைச்சர்களுடைய கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்துக் களைச் சொல்வதனால் வாய்ப்பளிக்கப்படவில்லை. அதற்கு சில எடுத்துக் காட்டுக்களை கூற முடியும். விவசாய அமைச்சரவர்களும், தொழில் அமைச்சரவர்களும் கரும்புக்கு விலை நிர்ணயம் செய்கிறபோது, இது விவசாயிகளுக்குச் சாதகமாக இல்லை ; முதலாளிகளுக்குத் தான் சாதகமாக இருக்கிறது என்று அமைச்சர்களுக்கு மாறுபட்ட கருத்தைச் சொன்னார்கள்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் நண்பர் திருஷ்ணமூர்த்தி அவர்களை மட்டும் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஆளுங் கட்சியைச் சார்ந்த திருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு அனுமதி கொடுக்காததால் வெளிநடப்புச் செய்தார். அது மட்டுமல்ல. மாண்புமிகு

1974 மார்ச் 29] [திரு நா. வீராசாமி]

அமைச்சர்களைக் கூட அடித்து உட்கார வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் ஆதித்தனார் அவர்களை உட்கார வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் மன்னை அவர்களை உட்கார வைத்திருக்கிறார்கள். இப்படியெல்லாம் பாரபட்சமற்ற முறையிலே நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேனே தவிர கிருஷ்ணமூர்த்திக்கு மட்டும் அனுமதி அளிக்கவில்லை என்று சொல்லவில்லை.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, அமைச்சர்களை அடித்து உட்கார வைத்தார்கள் என்று சொன்னார்கள். யாரையும் அடித்ததாகத் தெரியவில்லை. ஆகவே, அமைச்சர்களை அடித்து உட்கார வைத்தார்கள் என்ற ஒரு தவருன தகவலைத் தருகிறார்கள். இது முறையா ?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : மணி அடித்து உட்கார வைத்தார்கள் என்று அதற்குப் பொருள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், பேரவைத் தலைவர் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் ; உங்கள் கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்லக்கூடிய நிலையில் இருக்கக்கூடாது. பேரவைத் தலைவர் நம்மவர் என்ற எண்ணம் இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் அனைவரிடத்திலும் ஏற்படவேண்டும். அந்த அளவுக்கு அவர்கள் நடந்துகொள்ளவேண்டும். அதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கிறோம். இந்த நேரத்தில் என்னுடைய சொந்த அனுபவங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

விதி 41-ன் கீழ் பல்வேறு கவன ஈர்ப்புத் தீர்மானங்களை பேரவைத் தலைவருக்கு அனுப்பியிருக்கிறேன். அவ்வளவும் திரும்பி வந்திருக்கின்றன. விதி முறைகளை ஒட்டித்தான் கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறேன். விதி 41-ல் " அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காரியமாக இருக்க வேண்டும்." என்றுதான் இருக்கிறது. அதை ஒட்டித்தான் கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறேன். Speaker has disallowed என்று வந்திருக்கிறது. காரணம் No public importance is involved இது தான் கொடுத்திருக்கிற காரணம்.

அதே மாதிரி கேள்விகள் கொடுத்திருக்கிறேன். எத்தனையோ கேள்விகள் "டிஸ் அலவ்" என்று வந்திருக்கின்றன. அதற்கான காரணத்தைச் சொல்லவில்லை. உதாரணத்திற்கு ஒன்றிரண்டைக் கூற விரும்புகிறேன்.

" Whether the Madras police has issued any pamphlet to the visitors to the Tourist Pongal Fair at Madras ".

என்று கேட்டிருந்தேன். அதற்கு No public importance is involved in this question என்று பதில் வந்திருக்கிறது.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். சபாநாயகர் அவர்களால் டிஸ் அலவ் செய்யப்பட்ட கேள்விகளைப் பற்றி சபையில் எழுப்புவது முறையா? இது சபாநாயகருடைய தீர்ப்பை மீறுவதாகாதா ?

திரு. க. உரொ. எட்மண்ட் : அதனால் தான் இந்தத் தீர்மானத்தையே கொண்டு வந்திருக்கிறேம் No public importance is involved in this question ; No Government responsibility is involved in this question. The question gives information, it suggests action என்றெல்லாம் சொல்லி, அத்தனை கேள்விகளையும் திருப்பி அனுப்பி இருக்கிறார்கள்.

கேள்விகள் போடுவதற்குக் கூட விதிமுறைகள் இருக்கின்றன. சாப்டர் 6—விதிகள் 30, 32, 33 ஆகியவைகளில் ஒரு உறுப்பினர் எந்த அடிப்படையில் கேள்விகள் கேட்கலாம்? எவை அனுமதிக்கப்படமாட்டா என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சபாநாயகர் கொடுக்கின்ற தீர்ப்புகள் இந்த விதிமுறைகளுக்குள் வரவில்லை. எதிர்க்கட்சியில் இருக்கிற எங்களால் என்ன செய்ய முடியும் ? 4 கேள்விகளைக் கேட்க முடியும். 4 கவனஈர்ப்புத் தீர்மானங்களை கொடுப்போம் அல்லது 2 ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டு வர முடியும். அந்தந்தத் துறைகளிலே நாங்கள் போய்க் கேட்டால் விபரங்கள் கொடுக்க மாட்டார்கள். அதனால் இந்த முறையிலே கேட்போம்.

மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் எத்தனை மணி நேரம் பேசினார்கள். ஆளும் கட்சி உறுப்பினர்கள் எத்தனை பேர் எத்தனை மணி நேரம் பேசினார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எத்தனை பேர் எத்தனை மணி நேரம் பேசினார்கள் என்ற புள்ளி விவரங்களை எல்லாம் கொடுத்தார்கள். நாங்கள் போய்க் கேட்டால் அந்த விவரங்கள் கிடைக்காது. அவர்கள் ஆளும் கட்சியில் இருப்பதால் இப்படிப்பட்ட புள்ளி விவரங்களை எல்லாம் சேகரிக்க முடிகிறது.

திருமதி அனந்தநாயகி அவர்கள் எந்தெந்த நேரங்களிலே ஒழுங்குப் பிரச்சினை எழுப்பலாம் என்று சொன்னார்கள்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்றவர்கள் இந்த மன்றத்திலே அவ்வப்போது எழுப்புகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. சட்டமன்றக் குறிப்புகளில் அவை இருக்கின்றன. அவைகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம். அதுமட்டுமில்லாமல் தலைவரவர்கள் இங்கே அறிவிப்புத் தருகிறார்கள். அவைகளை எல்லாம் வைத்துத்தான் நான் விபரங்களைச் சேகரித்து சொல்கிறேன். வேறு எங்கும் போய் ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கவில்லை.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்கள் இந்த அவையிலே பொது விவாதத்தின் போது எத்தனை பேர், எத்தனை மணி நேரம் பேசினார்கள் என்று அறிவித்ததாக தகவல் இல்லை. அந்த அளவுக்கு அவர்களுக்கு விவரங்கள் கிடைக்கின்றன. என்றால் அவர்கள் ஆளும் கட்சியில் இருப்பதுதான் காரணம்.

திரு. என். கணபதி : விபரங்களைச் சேகரிப்பதற்கும் சாமர்த்தியம் வேண்டும்.

1974 மார்ச் 29]

திரு. க. உரொ. எட்மண்ட் : ஆளும் கட்சியிலுள்ளவர்களுக்குள்ள சாமார்த்தியம் எங்களுக்கு எப்படி வரும்? நாங்கள் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள். ஆளும் கட்சியில் இருக்கின்ற உங்களைப் போன்றவர்களின் ஆணைக்குக் கட்டுப்பட்டு அதிகாரிகள் நடக்கிறார்கள். எங்களை யாரும் கேட்க மாட்டார்கள்.

திரு. நா. வீராசாமி : ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல எதிர்க்கட்சியிலிருப்பவர்கள் கூட இந்தத் துறையின் மூலம் விவரங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த மன்றத்தில் எவ்வளவு நேரம் பேசுகிறார்கள் ; எத்தனை பேர் பேசுகிறார்கள் என்ற விவரம் நடவடிக்கைக் குறிப்பில் இருக்கிறது. எந்த நேரத்தில் வேண்டுமானாலும் அதைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். எதிர்க் கட்சியிலே இருந்து எத்தனை பேர் எவ்வளவு நேரம் பேசியிருக்கிறார்கள், ஆளும் கட்சியிலே இருந்து எத்தனை பேர் எவ்வளவு நேரம் பேசியிருக் கிறார்கள், எழுப்பப்பட்ட பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன, அதற்கு என்ன பதில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை எல்லாம் குறிப்புகளில் இருந்து தெரிந்துகொள்ளலாம். இங்கிருந்து தான் கேட்டுப் பெறலாம்—அதிகாரி களைக் கேட்டுத் தான் பெறலாம் என்று இல்லை.

சட்டமன்றத் துறையிலே கூட ஆராய்ச்சிப் பிரிவு என்று ஒன்று இருக் கிறது. இந்த இந்த விவரங்கள் வேண்டுமென்று எந்த உறுப்பினர் கேட்டாலும் அவர்கள் விவரம் கொடுப்பார்கள். அந்த வசதியும் இந்தப் பேரவைத் துறையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, இந்த மன்றத்திலே நம்முடைய சபாநாயகர் புலவர் கோவிந்தன் அவர்கள் இருக்கும்போது ஆளும் கட்சியிடம் எப்படி நடந்துகொண்டார்கள், எதிர்க்கட்சிகளிடம் எப்படி நடந்துகொண்டார்கள் என்பது உறுப்பினர்களுக்கு எல்லாம் தெரியும். ஒருவர் பேசுகின்ற பேச்சு முழுவதையும் அல்லது சில பகுதிகளை நட வடிக்கை குறிப்பிலிருந்து நீக்குவதற்கு சபாநாயகருக்கு அதிகாரம் இருக் கிறது. ஆனால் அவர்கள் எப்படி பாரபட்சமாக நடந்திருக்கிறார்கள் என் பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[redacted]

இந்த மன்றத்திலே ஒரு முறை எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. காளி முத்து அவர்கள் ஒரு கடிதத்தைப் படித்தார்கள். அதில் சில அமைச்சர் கள் லஞ்சம் வாங்கியிருந்தார்கள், சில அதிகாரிகள் லஞ்சம் வாங்கி இருந் தார்கள் என்பதான குற்றச்சாட்டுகள் இருந்தன. அவர் அந்தக் கடிதத் தைப் படித்தவுடனே, அந்தக் கடிதம் முழுவதையும் நமது அவைக் குறிப்பில் இருந்து சபாநாயகர் அவர்கள் நீக்கிவிட உத்திரவிட்டிருக் கிறார்கள்.

ஆனால் எங்கள் கட்சி உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் மீது குற்றஞ்சாட்டி முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் படித்த கடிதம் அதுவும் அவரே இரண்டு நாட்களுக்குப் பிறகு அது தவறான கடிதம் என்று ஒப்புக்கொண்ட பிறகும் கூட அவை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து எடுக்கப்படவில்லை. இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில் அமைச்சரும் ஒரு உறுப்பினர்தான். சாதாரண ஒரு உறுப்பினரும் ஒரு உறுப்பினர் தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. சௌந்தரபாண்டியன் கடிதம் பற்றி இதற்கு முன்பும் பேசப்பட்டது. முதல் நாள் அந்த விவரங்களை நான் இந்த அவையில் சொன்னபோது விவரங்களை சௌந்தர பாண்டியன் அவர்கள் மறுக்கவில்லை. அந்தக் கடிதம் என் எழுதினேன் தெரியுமா என்று கேட்டார்கள். மறுநாள் அந்தக் கடிதம் நான் எழுத வில்லை என்று சொன்னார்கள். இவர் சொல்லி வேறு ஒருவர் எழுதிய டிதம் இவர் கைப்பட எழுதிய கடிதம் அல்ல என்பதைத்தான் நான் த் துக்கொண்டது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அந்தக் கடிதம் என்று சொன்ன வுடனேயே நான் இரண்டு முறை மறுத்திருக்கிறேன். அதுவும் குறி பேட்டில் இடம் பெற்றிருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அன்றைக்கு திரு. சௌந்தர பாண்டியன் அவர்கள் "என் எழுதப்பட்டது தெரியுமா? எந்தச் சூழ்நிலை யில் எழுதப்பட்டது தெரியுமா? என்று தான் விளக்கங்களைச் சொன்னார் கள். மறுநாள் தான் அந்தக் கடிதம் தம் கையினால் எழுதப்பட்டது அல்ல என்று தெரிவித்தார்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : விஸ்வநாதன் யார் தெரியுமா என்று கேட்டேனே தவிர, என் எழுதப்பட்டது தெரியுமா என்று கேட்க வில்லை. இது அனைவருக்கும் தெரியும். இது தான் உண்மை. இன் னொரு முறை வேண்டுமானாலும் நடவடிக்கைக் குறிப்பை எடுத்துப் பார்க்கலாம்.

திரு. க. உரொ. எட்மண்ட் : நான் இந்த வாதத்திற்குள் எல்லாம் போக விரும்பவில்லை. என்னுடைய வாதம் எல்லாம் சட்டமன்றத்தில் ஏதாவது ஒரு தஸ்தாவேஜியைப் படிக்க வேண்டுமென்றால் அது யாராக இருந்தாலும், முதலமைச்சராகவே இருந்தாலும் சபாநாயகரை அவரது அறையிலே போய்ப் பார்த்து, அவர் கையில் கடிதத்தைக் கொடுத்து, அவர் அதைப் படித்துப் பார்த்து அனுமதி தந்தால் தான், அதைப்பற்றி அவையில் வந்து சொல்ல முடியும் என்று தெரிவித்தார்கள்.

1974 மார்ச் 29]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் அவரது அனுமதியை வாங்கியிருந்தேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : நீங்கள் வாங்கியிருந்தேன் என்றால் சபாநாயகரும் நீங்கள் வாங்கியிருந்ததாகத்தான் சொல்வார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்போதே அந்தக் கடிதத்தில் சபாநாயகர் தம்முடைய அனுமதியைத் தந்து போட்டிருந்த கையெழுத்தைக் காட்டினேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : முதலமைச்சர் சபாநாயகரை அவரது அறையில் போய்ப் பார்த்தார்களா என்பது எங்களுக்கு எப்படித் தெரியும் ? அவரது அறையில் போய் அவர்கள் வாங்கி வந்திருக்கலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது தான் சபாநாயகர் அறையில் போய் அனுமதி பெற்றுவந்து இங்கே படிக்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் அதுபோல அனுமதி பெற்றுவந்துதான் படித்தேன் என்று சொன்னேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : சபாநாயகர் அறையில் கொண்டுபோய்க் காட்டி அனுமதி பெற்று வந்திருக்கலாம். "அந்தக் கடிதம் தவறான கடிதம், சௌந்தரபாண்டியனால் எழுதப்பட்ட கடிதம் அல்ல" என்பதை முதலமைச்சரே இந்தப் பேரவையில் ஒப்புக்கொண்ட பின்னால்—முதலமைச்சர் அவர்கள் அந்தக் கடிதத்தைப் படித்து அதையொட்டிப் பேசிய வற்றை நமது பேரவை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட உத்தரவிட்டார்களா என்றால், இல்லை.

பொய்யான கடிதம்—அண்ணா தி. மு. க. உறுப்பினர் ஒருவர் இருந்தார்—அவர் சிலருக்கு லஞ்சம் கேட்டுக் கடிதம் எழுதினார் என்கிற தவறான விவரங்களை நமது சந்ததியினர் தெரிந்துகொள்ள வேண்டாம் என்பதற்காக அதையும் நீக்கிவிடவேண்டும் என்று சொன்னதற்கு சபாநாயகர் மறுத்துவிட்டார்.

இன்னும் எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. வேலப்பன் அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் உண்மையில் அப்போது அவையில் இல்லை. அவர்கள் அப்படிப் பேசியதற்காக மனவேதனை அடைந்தேன். என்றைக்கும் தனிப்பட்டவர்கள் பிரச்சினை—தனிப்பட்ட கட்சிகளின் பிரச்சினை என்கிறபோது அதை இந்த அவையில் கொண்டு வருவதில் விருப்பம் கிடையாது. நான் அதை விரும்பாவதன்.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 மார்ச் 29

நானே முதலமைச்சர் அவர்களைப் பார்த்து, அதற்காக வருந்துகிறேன் என்று தெரிவித்து, நான் வேண்டுமென்றுல் மன்றத்திலேயே வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன் என்று சொன்னேன். சபாநாயகர் அவர்களும் அவரது அறையிலே பார்த்து, திரு. வேலப்பன் அவர்கள் பேசியது நடவடிக்கைக் குறிப்பில் இருக்கக் கூடாது, அதை எக்ஸ்பஞ்ஜ் பண்ணி விடுங்கள் என்று கேட்டுக்கொண்டேன். அவர் அதற்கு "முதலமைச்சரைக் கேளுங்கள்" என்று சொன்னர்.

இந்த மன்றத்திலே எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் தவருன வார்த்தையை உபயோகப்படுத்தியிருந்தால் அதை அவைக்குறிப்பில் இருந்து நீக்கிவிட பேரவைத் தலைவருக்கு உரிமையிருக்கிறது. முதலமைச்சர் சொல்லித் தான் நீக்க வேண்டும், இல்லையானுல் வைத்துக்கொள்ள வேண்டும் என்கிற நிலை இல்லை. எதிர்க் கட்சியைச் சேர்ந்த எங்கள் உறுப்பினர்களை—தெரிந்தோ, தெரியாமலோ, அறிந்தோ, அறியாமலோ அன்பார்லிமென்டரியாகப் பேசிவிட்டால்—அந்தச் சொற்களை அவைக் குறிப்பில் இருந்து சபாநாயகரே நீக்கிவிடலாம். "இல்லை இல்லை, அவைக் குறிப்பில் இருக்கட்டும்" என்று முதலமைச்சர் சொன்னர் என்பதற்காக பேரவைத் தலைவர் அதை நீக்க வேண்டியதில்லை என்று சொல்வது சரியல்ல. அன்பார்லிமென்டரி வார்த்தைகளை நீக்குவதற்கு தலைவருக்கு இந்த அவையில் யாருடைய அனுமதியும் தேவையில்லை. நானே பேரவைத் தலைவரிடம் சென்று அதை நீக்கிவிடுங்கள் என்று கேட்டுக்கொண்ட போதிலும் அவர் முதலமைச்சர் இருக்கட்டும் என்று சொல்லிவிட்டார், நீக்கத் தேவையில்லை என்று சொல்லி விட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : நண்பர் எட்மண்ட் அவர்கள் திரு. வேலப்பன் பேசியதைப் பற்றிச் சொன்னர்கள். அன்றைய தினம் அவையில் இருந்த யாருமே அதை எக்ஸ்பஞ்ஜ் செய்ய வேண்டுமென்று கேட்கவில்லை. அவை பத்திரிகைகளில் வெளி வந்த இரண்டு நாளைக்குப் பிறகு, திரு. எட்மண்ட் அவர்கள் என்னிடம் வந்து, "நானே அதற்கு அவையில் வருத்தம் தெரிவிக்கலாம் என்று இருக்கிறேன்" என்று சொன்னர்கள். அதை நான் சொல்ல முடியாது. சபாநாயகரைக் கேட்டுக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். பிறகு தலைவரைக் கலந்துகொண்டு தாம் வருத்தம் தெரிவிப்பதாகச் சொன்னர்கள். நான் கூட மறுநாள் அவைக்கு வந்தபோது "அப்படிச் சொன்னவர்—அவரைக் காணவில்லையே" என்று வேடிக்கையாகக் கேட்டேன். எல்லாப் பத்திரிகைகளிலும் செய்தி வந்த பிறகு இது நடைபெற்றது.

திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைய தினம் யாரும் அந்த வார்த்தைகளை எக்ஸ்பஞ்ஜ் செய்யவேண்டுமென்று இந்த அவையில் சொல்லவில்லை என்று சொன்னர்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருந்தும் அது நீக்கப்படவில்லை.

நாம் ஒரு மரபு வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு நீதி என்றுல் இரண்டு பக்கமும் ஒரேயளவாகக் காட்டவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : அன்றைய தினமே சபாநாயகர் அவர்கள் திரு. வேலப்பனிடம் "இனிய உளவாக இன்னுத கூறல் கனி

1974 மார்ச் 29] [டாக்டர் மு. கருணாநிதி]

மிருப்பக் காய் கவர்ந்தற்று'' என்பதாக இனிய சொற்களைச் சொல்லலாம், கடுமையான இந்தப் பேச்சுக்களைப் பேசவேண்டாம் என்று சொன்ன பிறகும்—மறுபடியும் திரும்பச் சொல்கிறேன் என்று அவர்கள் சொன்னார்கள். அது ரெக்கார்டில் இருக்கிறது.

திரு. க. உரொ. எட்மண்ட் : இனிய சொற்கள் இருக்கும்போது பொல்லாத சொற்களைச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை சபாநாயகரே சொல்லியிருக்கிற போது—பொல்லாத—அன்பார்லிமென்டரி வார்த்தைகளை அவை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட பேரவைத் தலைவர் ஆணையிடாததற்குக் காரணம்—அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் அது இருக்கட்டும் என்று சொன்னது தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இன்னுத சொற்கள் எல்லாம் அன்பார்லிமென்டரி அல்ல. அன்பார்லிமென்டரி வேறு—இன்னுத சொற்கள் வேறு.

திரு. க. உரொ. எட்மண்ட் : எல்லா இன்னுத சொற்களும் அன்பார்லிமென்டரி ஆகாது. ஆனால் எல்லா அன்பார்லிமென்டரி சொற்களும் இன்னு சொற்கள் தான். தீய சொற்கள் தான். என்னுடைய கருத்தெல்லாம்—எக்ஸ்பன்ஜ் பண்ணுவதற்கு சபாநாயகருக்கு உரிமையிருக்கிறது. அவருக்கு அதிகாரம் இருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர் சொல்லித்தான் செய்யவேண்டும் என்கிற நிலையில்லை. எதை எதை அவை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட வேண்டும் என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த ஆசனத்தில் வந்து உட்கார்ந்த பிறகு முதலமைச்சரைக் கேட்டுத்தான் எக்ஸ்பன்ஜ் பண்ண வேண்டும் என்ற நிலை இல்லை. அன்றைய தினம் சபாநாயகர் தம் கடமையில் தவறியிருக்கிறார்கள்.

திரு. திருப்பூர் எ. எம். மொய்தீன் : தலைவரவர்களே, கனம் அங்கத்தினர் அவர்களுக்கு எவ்வளவு நேரம் பேச அனுமதித்திருக்கிறீர்கள் என்பதை நாங்கள் அறியலாமா ? பி.ப. 11–0

திரு. க. உரொ. எட்மண்ட் : எழே உறுப்பினர்களைக் கொண்ட முஸ்லீம் லீக் உறுப்பினர்கள் பேசிய நேரத்தை விட 13 உறுப்பினர்களைக் கொண்ட எங்களுக்கு அதிக உரிமை இருக்கிறது என்று முஸ்லிம் லீக் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதிகமான குறுக்கீடுகள் இருக்கிற காரணத்தால்தான் அதிக நேரம் பேசவேண்டியிருக்கிறது.

டாகடர் ஹாண்டே அவர்கள் இங்கே ஒழுங்கு பிரச்னைகள் எழுப்பினார்கள். அப்போது, உதவி சபாநாயகராக இருந்த மாண்புமிகு சீனிவாசன் அவர்கள் ஒழுங்கு பிரச்னை எழுப்பினார்கள், விருதுநகரிலே அவரைத் தாக்க முற்பட்டார்கள் என்று. நண்பர் வீராசாமி அவர்கள் பல உதாரணங்களைக் காட்டி அது ஒழுங்குப் பிரச்னையில்லை என்று சொன்னார்கள். ஒழுங்குப்

[திரு. க. உரை. எட்மண்ட்] [1974 மார்ச் 29

பிரச்னை இல்லை என்று தீர்ப்பளிக்கிற அதிகாரம் சபாநாயகருக்கு இருக்கிறது. ஆனால் இங்கு ஒழுங்குப் பிரச்னை குறிப்பேட்டிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறது.

அதே போல டாக்டர் ஹாண்டே அவர்கள் உரிமைப் பிரச்னை கொண்டு வந்தார்கள். அது எப்போது என்றால் அவை ஆரம்பித்து 10 நிமிடம் கழித்து. சபாநாயகர் அந்த உரிமைப் பிரச்னையை எடுத்துக் கொள்ள மறுத்து விட்டார்கள். ஆனால் அதே பிரச்னையில் பல உறுப்பினர்கள், அதைக் கொடுக்காத உறுப்பினர்கள், கலந்து கொள்வதற்கு அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு நம்முடைய பேரவைத் தலைவரவர்கள் இந்த மன்றத்திலே தான் ஒரு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர், அவர்கள் திர்ப்புகளெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கம்தான் இருக்கும் என்பதும், நீதி நேர்மையாக இருக்க வேண்டுமென்று கடந்த ஓராண்டு காலமாக அவர்கள் செயல்படவில்லை என்றுதான் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த அடிப்படையிலேதான் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். நம்முடைய திரு. லத்தீப் அவர்களும், திரு. கந்தப்பன் அவர்களும் சொன்னதைப் போல ஏதோ கொண்டுவர வேண்டும் என்பதற்காகக் கொண்டுவரவில்லை. தகுந்த காரணங்களுடனேயே கொண்டுவந்திருக்கிறோம்.

ஆகவே ஜனநாயகத்திற்கு முரண்பாடான நிலைமை இருக்கிறது. இந்த நிலைமை நீடிக்குமானால் நாம் சட்ட மன்றத்திலே ஜனநாயகத்தைக் காப்பாற்ற முடியாது. ஜனநாயக மரபுகளுக்கு உட்பட்டு இந்த மன்ற உறுப்பினர்கள் அதிலும் குறிப்பாக எதிர்க் கட்சி உறுப்பினர்கள் செயலாற்ற முடியாது.

நம்முடைய ஜேம்ஸ் அவர்கள் சொன்னதைப் போல, உதவி சபாநாயகர் பதவி நீக்கத் தீர்மானத்தின் மீதான விவாதம் முடிவதற்கு முன்னாலேயே உதவி சபாநாயகர் அவர்கள் பதவியை ராஜினாமா செய்து விட்டார்கள்.

சபாநாயகர் பதவி பொறுப்புள்ள பதவி. சபையில் 234 உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்றால் 234 உறுப்பினர்களும் சபாநாயகர் நேர்மையானவர், நியாயமாக நடந்திருக்கிறார் என்று கூற வேண்டும். அந்த நம்பிக்கை வரவேண்டும். அவையிலே இருக்கிறவர்கள் 20 பேராவது, 40 பேராவது, அல்லது 35 பேராவது சரி, அவர்கள் என்று நம்பிக்கையில்லை என்று சொல்கிறார்களோ அன்றே ஜனநாயகத்திலே நம்பிக்கை வைத்திருக்கிற பேரவைத் தலைவரா இருந்தால் இந்தத் தீர்மானம் தோல்வியுறுகிறதோ அல்லது தோற்கடிக்கப்படுகிறதோ, அல்லது இது வெற்றி பெறுகிறதோ அதைப்பற்றி கவலைப்படவில்லை, எதிர்க்கட்சிக்காரர்கள் தன்மேலே நம்பிக்கையில்லை என்று சொல்வதை ஏற்றுக்கொண்டு அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தீர்மானத்தை ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப்பொழுதே ஒரு மணி ஆகிறது. இன்னும் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எ. சுப்பிரமணியம், திரு. வெங்கடசாமி, திரு. மணலி, திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. பொன்னப்ப நாடார் ஆகியோர் பேச வேண்டும். பிறகு அவை முன்னவர் பேசி, அதற்குப்பிறகு பேரவைத் தலைவர் பதில் என்ற அளவுக்கு இத்தனை பேர் பேச வேண்டியிருக்கிறது. ஆகவே, நேரத்தை இப்போதே வகுத்துக்கொள்வது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : ஒவ்வொருவரும் எழு நிமிடங்கள் வீதம் எடுத்துக்கொண்டு பேசி முடித்து விட்டால் சௌகரியமாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த விவாதத்தைப் பிற்பகல் வைத்துக்கொள்ளலாம் என்றால், துணை மானியம் குறித்த நிதி ஒதுக்க மசோதா நிறைவேற்றப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே, இடையில் நிதி ஒதுக்க மசோதாவை எடுத்துக்கொள்ள முடியுமானால், அதற்குச் சட்டம் இடம் தருமானால், அதை இப்பொழுது எடுத்துக் கொள்ளலாம். எனென்றால், அது இன்றே நிறைவேற வேண்டிய மசோதா.

தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க மசோதாவில் பேச வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். எனென்றால், அது துணை மானியம் குறித்த நிதி ஒதுக்க மசோதா தான். நடப்பாண்டுக்குரிய நிதி ஒதுக்க மசோதா அடுத்த வாரத்தில் வருகிறது. அப்பொழுது உறுப்பினர்கள் அதன் மீது விவாதிப்பதற்கு அதிக நேரம் கேட்பார்கள். ஆகவே, இன்று மாலை அவை ஆரம்பமானதும் நிதி ஒதுக்க மசோதாவை எடுத்துக்கொண்டு நிறைவேற்றிவிடலாம். பிறகு இந்த விவாதத்தைத் தொடரலாம். சட்டத்தில் வழிவகை இருந்தால் இவ்வாறு செய்யலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : நிதி ஒதுக்க மசோதாவை இப்பொழுதே எடுத்துக்கொண்டு "பாஸ்" பண்ணி விடலாம். பத்து நிமிஷம் ஆகலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஒரு ஸஜஷன். நிதி ஒதுக்க மசோதாவை மாலை 4 மணிக்கு எடுத்துக் கொண்டால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க மசோதா இன்று இங்கு நிறைவேறி, இன்றே மேல்அவைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இப்பொழுது நடைபெறுகிற விவாதத்தை இந்த அளவில் நிறுத்திவிட்டு, நிதி ஒதுக்க மசோதாவை எடுத்துக்கொண்டு நிறைவேற்றிவிட்டு, அதற்குப் பிறகு தொடர்ந்து இந்த விவாதத்தை 1-30 வரை வைத்துக்கொண்டு, அவையை ஒத்திவைத்து, மீண்டும் மாலை 4 மணிக்குப் பேரவை கூடும்போது விவாதத்தை தொடர்ந்து வைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) இது குறித்த தீர்மானத்தை "மூவ்" பண்ணுங்கள்.

4. அரசினர் தீர்மானம்

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே,

"மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானத்தின் மீதான விவாதத்தை நிறுத்தி வைத்து விட்டு, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/74) ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு நிறைவேற்றிவிட்டு, அதற்குப்பின் இந்த விவாதத்தைத் தொடரலாம்"

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

THIRU K. T. K. TANGAMANI: The House should not be treated like this.

தீர்மானம் என்னவென்றே தெரியவில்லை. என்ன தீர்மானம் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே நான் முதலிலேயே தீர்மான வடிவில் இதைக் குறிப்பிட்டேன். இப் பொழுது நடைபெறும் இந்த விவாதத்தை நிறுத்திவிட்டு, நிதி ஒதுக்க மசோதாவை எடுத்துக் கொண்டு, அது நிறைவேறியதற்குப் பிறகு, இந்த விவாதத்தைத் தொடரலாம். பிற்பகல் 1-30 மணி அளவில் அவையை ஒத்திவைத்து, மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடி அலுவல்களைத் தொடரலாம் என்ற தீர்மானத்தை நான் முன்மொழிந்து அது நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

(5) அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/74).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கோருவார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

என்று நான் முன்மொழிகின்றேன்.

ஆகவே அது அப்ஜக்ஷனபிள் ஆக இருக்கும் என்பதால் அப்படிப்பட்ட மரபைக்கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பி.ஏ.சி.யிலே முடிவு சொல்லட்டும் whatever is decided in the Business Advisory Committee we are going to accept it பெஜிஸ்லேடிவ் கவுன்சில்லே தான் விரிவாகப் பேசப் படுகிறது. அசெம்பிளியிலே விரிவாகப் பேசப்படவில்லே பேசவிடாமல் தடுக்கப் படுகிறது. அது இந்த மன்றத்தின் பாரம்பரியத்திற்கும் நல்லதல்ல. நான் நீங்கள் என்ன முடிவு சொன்னலும் கட்டுப்படுகிறேன். இதை என்னுடைய யோசனையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : இங்கேயும் பேசுவதற்கு, விரிவாகப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே அலுவல் ஆய்வு குழுவில் முடிவு எடுக்கப் பட்டிருக்கிறது. இப்பொழுது வாக்கெடுப்பு.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவைசட்ட முன்வடிவு எண் 12/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, அட்டவணை முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் : 12/74) நிறைவேற்றப்பட வேண்டும்." என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

2. பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்—தொடர்ச்சி.

*திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்பு மிகு பேரவைத் தலைவராக இருக்கிற புலவர் கோவிந்தன் அவர்கள் மீது கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் வேதனையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து இங்கே விவாதித்துப் பேசுவது என்பது கொஞ்சம் கஷ்டமானதுதான். இருந்தபோதிலும் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு இங்கே சபாநாயகருக்கு உரிய அந்தப் பதவிக்கான இலக்கணப்படி அந்தப் பதவியில் இருப்பவர் நடக்க வேண்டு மென்ற அக்கறையின் காரணத்தினாலும் ஆர்வத்தின் காரணத்தினாலும் இந்தத் தீர்மானம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இதைப்பற்றிப் பேசிய உறுப்பினர் திரு. கந்தப்பன் அவர்கள் சொன்னார்கள் என்று சொன்னார்கள்.

இந்த தீர்மானத்திலே **There are many insinuations in the resolution** என்று சொன்னார்கள், இந்தத் தீர்மானத்திலே எந்த இன்சுன்யுவேஷனும் கிடையாது. தீர்மானம் மொட்டையாக இல்லாமல், பால்ட் ஆக இல்லாமல் சில காரணங்களோடு தெளிவாக இருக்கிறது, வெளிப்படையாக இருக்கிறது. மறைமுகமாக எதுவும் இதிலே, இல்லை. ஆகவே இதிலே இன்சுன்யுவேஷனும் கிடையாது. இனண்டோவும் கிடையாது. தெளிவான திட்டவட்டமான காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

சபாநாயகராக இருப்பவர் எப்படி இருக்க வேண்டுமென்று சில இலக்கணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

Mr. Philip Laundy, in his book 'The Office of Speaker', has stated—

The Speaker is above sectional interests and immune from party influences. Each individual Member receives, and is entitled to expect, the same consideration from him.'

இந்த முறையிலே சபாநாயகருக்கு இருக்கவேண்டிய சில இலக்கணங்களைச் சொல்லி இருக்கிறார்கள் இன்னொன்றும் சொல்லியிருக்கிறார்கள்.

The Speaker is not only impartial; he is seen to be impartial என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, மற்றொன்றும் சொல்லியிருக்கிறார்கள்.

He is equipped with powers to limit obstruction and to check unruly behaviour, his authority being exercised at all times with strict impartiality.'

என்று சபாநாயகருடைய இலக்கணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த இலக்கணங்களுக்கு மாறுக இங்கே காரியங்கள் நடக்கின்றன என்பது குற்றச்சாட்டு.

சபாநாயகரும் ஒரு மனிதர் தான், அவருக்கும் இன் தி ஹீட் ஆப் தி மோமண்ட் திடீரென்று சில வார்த்தைகள் தவறான வார்த்தைகள் வெளியே வந்து விடலாம். தவறான ரூலிங் கொடுத்துவிடக்கூடும். அப்படியிருந்தால் அதற்குச் சில வழிகள் உண்டு.

We see a certain mode of conduct

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1974 மார்ச் 29

ஆனால் அது சபாநாயகருக்குரிய இலக்கணத்திற்கு உகந்ததாயில்லை என் பதுதான் குற்றச்சாட்டு.

ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. கந்தப்பன் அவர்கள், திரு. வீராசாமி அவர்கள் எல்லாம் பேசும்போது ஆளுங்கட்சிக்கு குறை வாக நேரம் கொடுக்கப்படுவதாகவும் எதிர்க்கட்சிகளுக்குக் கூடுதலாக நேரம் கொடுக்கப்படுவதாகவும் சொன்னார்கள்.

They also represent certain constituencies. Their constituents also expect them to speak about their grievances.' என்றெல்லாம் சொன்னார்கள்.

ஆனால், இங்கேயிருப்பது கட்சிகள், பல கட்சிகள் இருக்கின்றன. ஒரு தொகுதியின் பிரதிநிதி என்ற முறையிலே உறுப்பினர்கள் இருந்தாலும் கட்சிகள் இருக்கின்றன. பட்ஜெட்டைப் பற்றியோ டிமாண்டைப் பற்றியோ பேசுகின்ற நேரத்திலே அதைப்பற்றி கட்சிகளின் கருத்துக்கள்தான் பேசப்படுகின்றன. கூடவே தொகுதிப் பிரச்சினைகள் பற்றியும் பேசப்படு கின்றது. கட்சிகளின் அடிப்படையில் நேரம் ஒதுக்கப்படுகின்றபோது சட்ட மன்றத்திலே ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிகமான எண்ணிக்கை யிலே இருக்கிறார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவு. அதிலும் பல கட்சிகள் இருக்கின்றன. சட்டமன்ற நடவடிக்கை களைப் படிக்கிறவர்கள், சட்டமன்றத்திலுள்ள கட்சிகள் என்ன கருத்துக்களைப் பேசியிருக்கிறார்கள் என்றுதான் பார்ப்பார்கள். அந்த அடிப்படையிலே தான் கட்சிகள் அடிப்படையில் நேரம் ஒதுக்கப்படுகிறது.

இந்தத் தீர்மானத்தை ஒரு மோடிவேட்டட் ரிசொல்யூஷன் என்று திரு. கந்தப்பன் அவர்கள் சொன்னார்கள். நான் 1971–ஆம் ஆண்டி லேயிருந்து இந்தச் சட்டமன்றத்திலே இருக்கிறேன்.

உறுப்பினர் திரு. மதியழகன் அவர்களுக்கு எதிராக முன்னால் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அவர் ஆளுங்கட்சியைச் சேர்ந்த சபாநாயகராக இருந்தாலும் நாங்கள் காண்டு வரவில்லை. ஆனால் இப் பொழுது ஒரு டிரெண்டை நாங்கள் பார்க்கிறோம். அதனால் ஜனநாயகத் திற்கு ஆபத்து வருகின்ற நிலையைப் பார்க்கிறோம். தலைவர் அவர்கள் டிஸ்ஆர்டர்களை இம்பார்ஷியலாகக் கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டோம்.

இங்கே என்ன நடக்கிறது? நாங்கள் வலுவில் குறைந்தவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள். எதிர்க்கட்சித் தரப்பிலே யாராவது பேசும்பொழுது ஆளுங்கட்சி மீது ஏதாவது மாறுபாடான கருத்துக்களைச் சொல்லிவிட்டால் உடனே பலர் எழுந்து பேசுகிறார்கள். uncalled for remarks என்பதற்கு கந்தப்பன் அவர்கள் தவறான அர்த்தத்தைச் சொன்னார்கள். uncalled for remarks என்றால் கத்துகிறார்கள் என்று அர்த்தம் அல்ல. தேவையற்ற முறையிலே இடையூறு செய்கிறார்கள். அப்படிச் செய்யும்பொழுது அதனைப் பேரவைத் தலைவர் கட்டுப்படுத்துவதில்லை.

1974 மார்ச் 29] [திரு. எ. சுப்பிரமணியம்]

ஆனால் இந்தத் தரப்பிலேயிருந்து பேசினால் கட்டுப்படுத்துகிறார்கள்.

எனக்குள்ள பயம் என்னவென்றால் இந்த நிலைமை வளர்ந்துவிட்டால் இந்தத் தொற்று நோய் எங்களையும் தொற்றிக்கொண்டுவிடுமோ என்று பயப்படுகிறோம். அந்தப் பக்கமும் வந்திருக்கிறது. இந்தப் பக்கமும் வந்திருக்கிறது. இரண்டு பக்கங்களுக்கும் நடுவிலே மாட்டிக்கொண்டிருக்கிறோம். இந்தத் தொற்று நோய் இரண்டு பக்கத்திலும் வராத அளவிற்கு இருக்க வேண்டும்.

சபாநாயகர் சொல்லலாம், அமைச்சர்கள் சொல்லலாம், ஆனால் சபா நாயகருடைய தீர்ப்பை உறுப்பினர்களே சொல்கிறார்கள், அதற்கு அவர்கள் அனுமதிக்கிறார்கள். ஆனால் அதேபோல் எதிர்க்கட்சி உறுப் பினர்கள் சொன்னால் உடனே புத்திமதி சொல்கிறார்கள், இப்படிப் பேசக் கூடாது என்று.

இன்னொரு விஷயமும் சில நாட்களுக்கு முன்னால் நடந்தது. சபா நாயகர் ஒரு விஷயத்தைப் பேசக்கூடாது என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லி முடித்தவுடனே முதலமைச்சரவர்கள் உள்ளே வந்தார்கள். வந்தவுடன் அதைப் பற்றிப் பேசலாம் என்று சொன்னார்கள். உடனே பேசலாம் என்று சபாநாயகரும் அனுமதி கொடுக்கிறார்கள்.

அதேபோல் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள், இதைப் பேசக் கூடாது என்று சொன்னால், உடனே சபாநாயகர் அதைப் பேசக்கூடாது என்று சொல்கிறார்கள். இப்படியாக அமைச்சர்கள் எதைச் சொல் கிறார்களோ அதைச் சபாநாயகர் சொல்கிறார்கள்.

அப்படி அமைச்சர்கள் சொன்னாலும்கூட அதைப்பற்றி நான்கு வரி விமர்சனம் செய்து பிறகு வேண்டுமானால் கூடச் சொல்லலாம். அப்படி யில்லாமல் உடனே சொல்லும்பொழுது என்ன ஏற்படுகிறது? இந்த மன்றத்தை காக்கின்ற பொறுப்பு சபாநாயகரிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக் கிறது. இந்த மன்றத்தின் நடவடிக்கைகளை வெளியிலே இருப்பவர்கள் பார்க்கிறார்கள், மற்ற மன்றங்களிலேயிருப்பவர்களும் பார்க்கிறார்கள். அவர்கள் அதைப்பார்த்து சபாநாயகரைப் பற்றிக் குறைவாக நினைத்து விட்டால் இந்த மன்றத்தையே குறைவாக நினைக்கக்கூடிய நிலைமை நேரிடும். இது நடந்து கொண்டிருக்கிறது.

நேரக் கணக்குகளைப் பற்றி திரு. வீராசாமி அவர்கள் சொன்னார்கள். இந்த நேரக் கணக்கைப் படிக்கும்பொழுது அவர்கள் ஒன்றை விட்டு விட்டார்கள். நாங்கள் பேசும்பொழுது வருகின்ற இடையீடுகளையும் சேர்த்துத் தான் எங்கள் நேரத்திலே கணக்கிடப்படுகிறது. அமைச்சர்கள், உறுப்பினர்கள் இடையீடு செய்கிறார்கள். அதையும் அந்தக் கணக்கில் சேர்த்து.....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைப்போல அமைச்சர்கள் பேசும்பொழுது எதிர்க்கட்சி உறுப்பினர்களின் இடையீடுகளும் நிறைய

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 மார்ச் 29

இருக்கின்றன. அதைப்போல ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசும்பொழுது எதிர்க்கட்சி உறுப்பினர்களின் குறுக்கீடுகள் நிறைய இருக்கிறது. ஆகவே, கணக்குப் பார்த்தால் இரண்டும் சரியாகி விடும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : மிகுந்த வேற்றுமை இருக்கிறது, ரிக்கார்டைப் பார்த்தால் தெரியும்.

எக்ஸ்பங்ஷன் செய்வதைப் பற்றியும் இங்கே பேசப்பட்டது. அதே போல் அட்ஜர்ன்மெண்ட் மோஷன் கொடுத்தால் அதை மறுப்பதற்கான காரணத்தைச் சொல்ல வேண்டும். காரணம் சொல்லாமல் ரெஃப்யூஸ் செய்யப்படுகிறது.

பல்வேறு விஷயங்களை எடுத்துக்கொண்டாலும் இந்த டிரெண்டையே தான் பார்க்க முடிகிறது. ஆளுங் கட்சியின் நிர்ப்பந்தத்திற்குக் கட்டுப்படும் நிலைமை சபாநாயகரிடத்தில் இருக்கிறது.

திரு. கந்தப்பன் அவர்கள் கூட மறைமுகமாக இந்தக் கருத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எனென்றால், எதிர்க்கட்சியினர் இம்மாதிரி தீர்மானம் கொண்டு வந்து நிர்ப்பந்தத்தைச் செலுத்தினால் சபாநாயகர், கட்டுப்படுவாரோ என்ற அச்சத்தை அவர்கள் வெளியிட்டார்கள். ஆக, நிர்ப்பந்தத்திற்குக் கட்டுப்படக்கூடிய சபாநாயகர் அவர் என்பதை திரு. கந்தப்பன் அவர்கள் மறைமுகமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

அப்படி நிர்ப்பந்தத்திற்குக் கட்டுப்படுகின்ற சபாநாயகராக இருந்தால் இங்கே அவருடைய கடமைகளை அவரால் ஆற்ற முடியாத நிலைமை ஏற்படும். ஆகவே, இந்த நிலைமைகளிலேயிருந்து எங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும், எதிர்க்கட்சிகளுக்குப் பாதுகாப்பு வேண்டும்.

நாங்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்கிறோம். இருந்தபோதிலும் இன்றைக்கு எண்ணிக்கையில் குறைவாக இருக்கும் நாங்கள் நாளைக்கு அதிக எண்ணிக்கையில் வரலாம். எனவே, நாங்கள் இப்பொழுது எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் நாங்கள் கட்சிகளைப் பிரதிபலிக்கிறோம். எனவே, சபாநாயகராக இருப்பவர் கஸ்டோடியனாக இருந்து எங்களைப் பாதுகாக்க வேண்டியவராக இருக்கிறார். அவர் நடுநிலை நின்று, பாரபட்சமற்ற முறையில் நடந்தால்தான் எங்களைப் பாதுகாக்க முடியும்.

கூட பல இடங்களிலே, பல சட்ட மன்றங்களிலே எதிர்க்கட்சிகள் பல கலாட்டாக்களைச் செய்கிறார்கள். ஆனால், இங்கே எதிர்க்கட்சிகளிலே இருப்பவர்கள் அப்படியெல்லாம் செய்யவில்லை. மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு நடக்கிறார்கள். சில நேரங்களில் அவர்கள் அறிகிறார்கள். அதைத்தான் நான் முன்பே சொன்னேன், தொற்று நோய் என்று, அந்தத் தொற்று நோய் ஆளுங் கட்சியிலிருந்து எதிர்க்கட்சிகளையும் தொற்றிக்கொள்கிறது.

பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்.

1974 மார்ச் 29] [திரு. எ. சுப்பிரமணியம்]

ஆனால் பெரும்பாலும் சட்டமன்ற நடவடிக்கைகளைப் பார்த்தால் தெரியும். ஆளுங் கட்சித் தரப்பிலேயிருந்து இளம்பிளை அதை சபாநாயகர் அவர்கள் அனுமதிக்கின்ற நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறார்கள். அமைச்சர்கள் என்ன சொல்கிறார்களோ அதன்படி சொல்கிறார்கள்.

உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள், வேளாண்மைத் துறை அமைச்சரைக்கூட கண்டித்தார்கள் என்று சொன்னார்கள். இதில் புதுமை இல்லை. நாடாளுமன்றத்தில் அமைச்சர்கள் மீது கடுமையான "ஸ்டிக்சர்ஸ்" கூட நாடாளுமன்ற சபாநாயகர் கொடுக்கிறார்கள்.

ஆனால் இங்கே அதெல்லாம் நடைபெறுவதில்லை. எங்களுடைய குற்றச் சாட்டு வருவதற்குக் காரணமே, எங்களால்—எதிர்க்கட்சிகளால் சுயேச்சையாக இந்தச் சட்டமன்ற விதிமுறைகளுக்கு உட்பட்டு கடமைகளை ஆற்ற சபாநாயகர் பாதுகாப்பு தர முடியாத நிலையிலே இருக்கிறார்கள்.

ஆகவே, இந்த நிலையிலே இருக்கும்பொழுது சபாநாயகர் "இம்பார்ஷியலாக" இல்லை. நடுநிலை நின்று செயல்பட முடியவில்லை என்று தான் இன்றைக்கு இதைக் கொண்டு வந்திருக்கிறோமே தவிர, "..பிரிவல்ஸ்" ஆகவோ, "மோடிவேஷனுகவோ" கொண்டு வரவில்லை.

இந்த மன்றம் சீராக நடக்க வேண்டும், எல்லா உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும், பாரபட்சமற்ற முறையில் இருக்கவேண்டுமென்ற காரணத்திற்காகத்தான் இது வந்திருக்கிறது.

ஆகவே, இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியிருக்கிறோம் என்று சொல்லி இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன், வணக்கம்.

திரு. இ. எஸ். தியாகராசன் : மாண்புமிகு தலைவரவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் மீது கொண்டு வரப்பட்டிருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து தமிழரசுக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் தமிழகத்தின் சட்டமன்றத்திலே கடந்த மூன்று தேர்தல்களிலேயும் வெற்றிபெற்று சட்டமன்றத்திலே எதிர்கட்சியிலேயும், ஆளுங்கட்சியிலேயும் இருந்திருக்கிறார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

காங்கிரஸ் கட்சி ஆண்ட பொழுது அவர்கள் எதிர்கட்சியிலே இருந்த பொழுதுகூட மிகத்திறமையாக வாதாடி தங்களுக்கு வேண்டிய காரியங்களைப் பெற தொகுதி மக்களுக்காக திறமையாக வாதாடி செயல்பட்டவர்கள் என்பதையும், கடந்த இரண்டு தேர்தல்களிலேயும் அவர்கள் வெற்றி பெற்று இந்தச சட்டமன்றத்தில் துணைத் தலைவராகவும், தலைவராகவும் இருந்து மிகவும் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறார்கள் என்பதையும் இந்த மன்றத்திலே கூறிக்கொள்வதிலே நான் பெருமைப்படுகிறேன்.

அவர்கள் தலைவராக இருந்து வரு இந்த நாட்களிலே ஆளுங்கட்சி என்று பாராமல் அல்லது எதிர்க்கட்சி என்று பாராமல் சபையை மிகவும் அமைதியாக நடத்திச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வன்மையாக எதிர்த்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுக் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : பேரவையின் இன்றைய காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-28 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இடைவேளைக்குப்பின் மாலை 4-00 மணியளவில் மாற்றுத் தலைவர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

THIRU B. VENKATASWAMI : Madam Chairman

திரு. தொப்பூர் திருவேங்கடம் : தலைவர் அவர்களே மேலவைத் தொடர் முடிவு வந்திருக்கிறது. அதை இந்த சபையில் அறிவிப்பார்களா ?

THIRU B. VENKATASAMI : I support the notice given by the Opposition members about the removal of the Hon. Speaker.

On behalf of Swatantra Party I want to support that motion because of the partisan attitude of the Speaker in disallowing questions, in getting replies to the lot of questions that we are sending, rejecting adjourment motions and call attention notices of ours.

In the Opposition we are putting our views not for the sake of opposition but for the sake of the people. We like to bring to the notice of Government the grievances of the people, by bringing in call attention notices and adjournment motions. Then only we can represent to Government the grievances of the common man. Otherwise how can the difficulties of the common man be brought to the notice of Government ?

If such things are not allowed, it is anti-democratic. We do not bring in these things for the sake of personal things. It is for the interest of the people and for the interest of the Nation.

If these things are disallowed, it is anti-democratic. Here the ruling party is having brute majority of about 174. Even though we know that they are having this brute majority and this motion will be crashed, we are bringing it for the sake of showing to the people, how anti-democratic things are being done here by not allowing our legitimate points.

The Opposition must be given ample opportunities to explain their points. Then only there could be good administration. But that is not allowed. With its brute majority, if such things are not brought to their notice, the Government may not know the grievances of the common man.

The Communist party spokesman had brought to the notice of the House how Thiru Sivashanmugam Pillai gave the correct ruling and how Rajaji, the Chief Minister at that time, even though it was not to his liking appreciated the ruling given by the Speaker. Rajaji appreciated it because the Speaker acted according to law.

What I say is the Speaker should be like a balance. He must treat the two sides, ruling party and Opposition equally. Then only his rulings would be appreciated by one and all.

I want to bring to the notice of the House what Anna said once. He said that if more time is not given to Opposition parties, then it is a danger to democracy. The Opposition parties bring to the notice of Government the sufferings of the people which they may not be aware of. If such things are not allowed then it is undemocratic.

Even many of the ruling party members were saying that the Speaker was not giving them sufficient time to speak. That shows that the Speaker has not been impartial. He should not show any distinction between ruling side and Opposition. He should be above parties. He holds an exalted office.

But in this House many a time, the Speaker and the Deputy Speaker had declared their allegiance to the Ruling Party. The Opposition is not in a position to break it because of the brute majority of Government. If they do not act according to the whims and fancies of the ruling party they will bring a no-confidence motion. We have seen such things happening in this House. A no-confidence motion was brought against Thiru Mathialagan and then again a no-confidence motion was brought against Thiru Srinivasan, the then Deputy Speaker. That is really a great harm to democracy.

It creates the practice that if the ruling party does not like a particular gentleman, they are bringing a no-confidence motion. They do it because they have got a big majority. Therefore, it is necessary the Speaker must be above party.

I should like to make a suggestion to the ruling party. Because of the difficulties I have mentioned, you elect a non-party man as Speaker. Then only we can have justice. If the Speaker is from the ruling party, he cannot let down that party and the ministers and the ruling party members. I hope this suggestion of mine will be taken in the right spirit.

Because of the partisan attitude of the present Speaker, on behalf of the Swatantra Party, I strongly support the motion for the removal of the Speaker from his office. Thank you.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, சபாநாயகர் அவர்களை பதவியிலிருந்து விலக்க வேண்டுமென்று தீர்மானத்தைக் கொடுத்ததில் நானும் ஒருவன் என்ற முறையில் எங்கள் கட்சியின் சார்பிலும் என் சார்பிலும் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்தத் தீர்மானம் ஐந்து உறுப்பினர்கள் பேரில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றாலும், அவர்கள் நான்கு கட்சிகளைத்தான் சார்ந்தவர்கள் என்றாலும் எனக்கு முன்னால் பேசிய வெங்கடசாமி அவர்கள் சுதந்திராக் கட்சியின் சார்பில் நானும் ஆதரிக்கிறேன் என்று எடுத்துச் சொன்னார்கள். வேறு முறையில் சொல்லப் போனால் இங்கு செயல்படக் கூடிய எல்லா எதிர்க் கட்சிகளும் அண்ணா தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் கட்சி, ஸ்தாபன காங்கிரஸ் கட்சி, சுதந்திராக் கட்சி ஆகிய ஐந்து கட்சிகள் சார்பிலும் இந்தத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இதைச் சொல்லக் காரணம், முக்கியமாக செயல்படக் கூடிய எதிர்க் கட்சிகள் பொறுப்பான முறையில், சாதாரணமாக கொண்டுவரமுடியாத ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று சொல்வதற்காகத் தான் நாடாளுமன்றத்தில் முதன் முதலாக திரு. மௌலங்கர் அவர்கள் பேரில் கொண்டுவரப்பட்ட தீர்மானம், 21 பேர்கள் கையொப்பம் இட்டு கொண்டுவரப்பட்ட தீர்மானம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்தியாவிலே, குறிப்பாக நாடாளுமன்றத்தில், எங்கு எங்கெல்லாம் இம்மாதிரி தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்பதைப் புரட்டிப் பார்த்தேன்.

1951-ல் அன்றிருந்த ப்ரொவிஷனல் பார்லிமென்டில் டெப்டி ஸ்பீக்கர் அவர்கள் பேரில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். ஆனால் 14 நாட்கள் நோட்டீஸ் இல்லாத காரணத்தாலும், கூடிய ஏழாவது நாள் சட்டசபை கலைந்துவிட்ட காரணத்தாலும் அந்தத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

அதற்குப் பிறகு திரு. மௌலங்கர் அவர்கள் மீது ஒரு தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

1974 மார்ச் 29] [திரு; கே.டி.கே. தங்கமணி]

பிரட்டிஷ் பார்லிமென்டில் சமீப காலத்தில் இம்மாதிரி தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டதாகத் தெரியவில்லை. ஸ்பீக்கர் என்று சொன்னால் அவர்களுக்கு ஒரு தனி அந்தஸ்து இருக்கிறது என்பதைப் பற்றி இங்கிருக்கிற உறுப்பினர்களுக்கோ அல்லது தங்களுக்கோ நான் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை.

ஆனால் இந்தியாவைப் பொறுத்த வரையில் ஸ்பீக்கர் என்றால் எப்பேர்ப்பட்டவர் என்று 1958–ம் ஆண்டு ஜவஹர்லால் நேரு அவர்கள் படேல் அவர்களுடைய படத்தைத் திறந்து வைக்கிறபோது பேசினார்கள். அது ஓரளவிற்கு நம் இந்தியாவில் ஸ்பீக்கரைப்பற்றி என்ன கருதுகிறார்கள் என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக்கும். 1958ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 8ஆம் நாளன்று நேரு அவர்கள் பேசியதாவது :

"The Speaker represents the House, he represents the dignity of the House, the freedom of the House and because the House represents the Nation in a particular way the Speaker becomes the symbol of the Nation, Freedom and Liberty. Therefore it is right that that should be an honoured position, a free position and should be occupied always by men of outstanding ability and impartiality.

அவர்கள் வற்புறுத்தியிருப்பது ability and impriality எந்த ஸ்பீக்கர் வந்தாலும் அவர்களுடைய எபிலிட்டியைக் குறித்து குறைத்து மதிப்பிட்டு பேசவில்லை.

ஆனால் இம்பார்ஷியாலிட்டி என்பதை நான் முக்கியமாக கோடிட்டுக் காட்டவேண்டியிருக்கிறது, ஸ்பீக்கருக்கு எப்படி எப்படியெல்லாம் மரியாதை கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம் பிரட்டிஷ் பார்லிமென்டில்.

இரண்டு உதாரணங்கள் கொடுக்க விரும்புகிறேன் ஒன்று, 1934 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் தேதி என்று நினைக்கிறேன். யுத்தம் வருவதற்கு சிறிது நாட்களுக்கு முன்பு ஏக களேபரமாக இருக்கிறது. பார்லிமென்டை நடத்த முடியவில்லை. அப்போது சபையைக் கலைக்க வேண்டி வந்தது. நான்கு நாட்கள் சபையை ஒத்திவைத்தார்கள். அப்போது ஏக குழப்பமாக இருந்திருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவராக இருக்கக் கூடிய பனர்லா அவர்களும் அந்தக் குழப்பத்திற்குக் காரணமாக இருந்தார்கள் என்று ஸ்பீக்கர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான்கு தினங்களுக்குப் பிறகு பார்லிமென்ட் கூடியது. அப்போது ஸ்பீக்கர் சொன்னார்கள். அவர்கள் சொன்னது, அன்றைக்கு கோபத்தில் சபையை ஒத்திவைக்கவேண்டுமே என்ற கோபத்தில் சொல்லிவிட்டேன். நான் சொன்னதை நீங்கள் மனதில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்றும் மன்னிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள் அவர் கள் கேட்டுக் கொண்டது It was couched with so much sincerity iGgdndan

[திரு. கே.டி.கே. தங்கமணி] [1974 மார்ச் 29

அந்த நேரத்தில் பேனர்லா அந்த ஸ்பீக்கரைப் பற்றி சொன்ன உண்மை எந்த ஸ்பீக்கரும் பெருமைப்படக் கூடிய ஒரு விஷயமாகும்.

' Such statement as you have made, Sir, said Benner Law, "can only be made by one who is conscious of his strength, a strength which in your case, Sir, is derived not only from the high office which you fill, but in the knowledge that in exercise of the duties of that office during many years you have secured and now enjoy the complete confidence of the whole House of Commons.

ஸ்பீக்கர் எதிர்க்கட்சித் தலைவரைக் கோபித்து விட்டார். பிறகு மன்னிப்பு கேட்கிறார். முதல் உலக யுத்தத்தை ஞாபகத்தில் வைத்திருப்பவர்களுக்குத் தெரியும். பேனர்லாவே அப்படி ஸ்பீக்கரைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்.

ஒருவர் திறமையாகப் பேசிவிட்டார் என்றால் அவர் என்ன பெரிய பேனர்லா என்று சொல்வார்கள் அந்தக் காலத்தில்.

இரண்டாவது யுத்தம் முடிந்த பிறகு வின்ஸ்டன் சர்ச்சில் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறார்கள். அவர்கள் எப்போதுமே ஆளும் கட்சியில் இருந்து செல்வாக்குப் பெற்ற தலைவராக இருந்தவர்கள். ஆகவே அவருக்கு எதிர்க் கட்சியில் இருந்து தாக்குப் பிடிக்க முடியவில்லை.

கேள்வி கேட்பவருக்கு முதலில் உப கேள்வி கேட்க உரிமையுண்டு. அப்படி ஒருவர் கேள்வி கேட்பதற்கு எழுந்திருப்பதற்கு முன், சர்ச்சில் முன்வரிசையில் முன்னால் இருந்ததால் அவர் திடீரென்று எழுந்து விட்டார்கள். ஆகவே, பின்னால் இருப்பவருக்கு கேள்வி கேட்க முடியவில்லை. This is nothing but gate crashing என்று க்ளிப்டன் ப்ரௌன் சொன்னார். அவர் அப்படிச் சொன்னது. வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு வருத்தமாகப் போய்விட்டது. தன்னைப்பற்றி கேட் க்ராஷிங் என்று சொல்லிவிட்டாரே என்று வருத்தம். பின்னால் அவர் சேட் க்ராஷிங் என்று நான் சொன்னது சொன்னதுதான் என்று சொன்ன போது வின்ஸ்டன் சர்ச்சில் பேசாமல் உட்கார்ந்து விட்டார்கள்.

Mr. Winston Churchill although extremely nettled, accepted the rebuke like the great politician that he was, The Speaker for his part regretted the offence he might have caused, but still insisted that the word he had used explained exactly what he meant

இது இன்னொரு விஷயம். ஒரு எதிர்க்கட்சித் தலைவரைப் பார்த்து நீங்கள் செய்தது தவறு என்று சொல்லிவிட்டு நான் அப்படி தவறு என்று சொன்னது சரி தான், அது தவிர வேறு வார்த்தையே சொல்ல முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

1974 மார்ச் 29] [திரு. கே.டி.கே தங்கமணி]

இந்த உதாரணங்களை நான் சொல்லக் காரணம் ஸ்பீக்கராக இருந்தவர்கள் எந்த முறையில் செயல்பட்டார்கள் என்பதற்காகச் சொன்னேன். ஒன்று என் நினைவிற்கு வருகிறது.

திரு. அனந்தசயனம் ஐயங்கார் அவர்கள் ஸ்பீக்கராக இருந்தபோது நான் பார்லிமென்டில் இருந்திருக்கிறேன். திரு. அனந்தசயனம் ஐயங்கார் அவர்கள் கேள்வி நேரத்தில் ஒருவர் ஒரு கேள்விக்குச் சம்பந்தமில்லாத உபகேள்வியைப் போட்டால் உடனே மினிஸ்டரைப் பார்த்து நீங்கள் பதில் சொல்ல வேண்டியதில்லை என்று சொல்லிவிடுவார்கள். அல்லது கேள்வியை நீட்டித்துக்கொண்டு போக வேண்டுமென்று பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பினால்—கேள்வி நேரத்தில் பாயிண்ட் ஆப் ஆர்டர் ரெயிஸ் செய்யக்கூடாது என்று அதை ஸ்ட்ரிக்டாக என்போர்ஸ் செய்து கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் ஜவஹர்லால் நேரு அவர்கள் ஏதோ ஒரு விஷயத்தைச் சொல்வதற்காக "May I...." என்று எழுந்தார்கள். The Speaker, 'you may not, Sir, என்று சொன்னார்கள். அதை ரொம்ப மகிழ்ச்சியோடு அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

ஜவஹர்லால் நேரு என்று சொன்னால் அவர் வெறும் பிரதம மந்திரி மட்டுமல்ல. இந்தியாவிற்கே ஒப்பற்ற தலைவர். அந்த ஒப்பற்ற தலைவனைப் பார்த்து "உட்கார்" என்று சொல்கிற நேரத்தில், நான் உட்காருகிறேன் என்று சொல்லி மகிழ்ச்சியோடு உட்கார்ந்தார்கள்.

சிவசண்முகம் பிள்ளையைப் பற்றிய பல விவரங்களை எங்கள் கட்சியின் சார்பாக பேசிய வடிவேல் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

இது சாதாரண முறையாக இருக்கிறது. வரவர ஸ்பீக்கர் என்று சொல்பவர்கள் ஒரு கட்சியின் தலைவர்களில் ஒருவர் என்ற நிலைமை இருக்கிறது.

கட்சிமேல் பற்று இருக்காலம். விட்டல்பாய் படேல்போல் யாராவது காங்கிரஸ் மேல் பற்று கொண்டு இருப்பார்களா ? சிவசண்முகம் பிள்ளை அவர்களுக்கு காங்கிரஸ் கட்சியின் பேரிலும், ராஜாஜி அவர்கள் பேரிலும் எவ்வளவு மரியாதை பாசம் இருந்தது என்பது தெரியும். அப்படி மனதில் இருந்தாலும் அந்த "ஆபீஸ் ஆப் தி ஸ்பீக்கர்" என்ற முறையில் அவர்கள் நல்ல முறையில் இருந்தார்கள். இன்று நாங்கள் சொல்வதெல்லாம் தனிப்பட்ட முறையில் யாரும் ஸ்பீக்கர் மீது சொன்னால் நான் கண்டிப்பாக அதை எதிர்ப்பேன். குறைகள் இருந்தாலும் அவர் "ஆபீஸ் ஆப் தி ஸ்பீக்கர்" என்ற முறையில் என்ன செய்தார் என்பதற்கு மேல் எந்தக் குற்றச்சாட்டையும் நாங்கள் சொல்ல விரும்பவில்லை.

எனக்கு ஞாபகம் வருகிறது, ஜேகர்ஸ் என்ற ஒரு லாயர் இருந்தார். அவரிடத்தில் கேஸ் பற்றி ஒன்று கேட்டார்கள். அவர் வீட்டில் கேஸைப் பற்றி பேசுவது இல்லை. சேம்பருக்கு வாருங்கள் என்று சொன்னார்கள்.

[திரு. கே.டி.கே. தங்கமணி] [1974 மார்ச் 29

My chambers sentiments are one and Chancery sentiments are one.

ஆகவே, இரண்டு கேரக்டர் அவருக்கு இருந்தது ஒருவருக்கு வாழ்க்கையில் குடும்பத்தில் பற்று இருக்கலாம். பல்வேறு சிக்கல்கள் இருக்கலாம். அதைப் பற்றி கவனிக்க நாம் இல்லை. இங்கே ஸ்பீக்கராக இருக்கிற ஒருவர் ஸ்பீக்கராக செயல்படுகிறாரா ? ஸ்பீக்கர் என்ற அந்தஸ்திற்கு குந்தகம் இல்லாமல் செயல்படுகிறாரா என்பது தான் முக்கியம்.

நான் பொதுவாக இன்னொருவரை கம்பேர் செய்வதற்கு யாரும் தவறுக நினைத்துக்கொள்ளக் கூடாது என்று நான் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே சட்டமன்றத்திற்கு வந்தபோது முதலில் திரு. மதியழகன் அவர்கள் சபாநாயகராக இருந்தார்கள். அவர்கள் முதலில் உங்கள் கட்சியில் இருந்தார்கள். பிறகு அண்ணா தி.மு.க.விற்குச் சென்றார்கள். பிறகு உங்கள் கட்சிக்கு வந்திருக்கிறார்கள். அந்த விவரத்திற்குள் போக நான் விரும்பவில்லை.

இரண்டு ஆண்டுகள் அவர்கள் இருந்தார்கள் என்று நினைக்கிறேன். அந்த இரண்டாண்டு காலத்தில் எனக்குக் கிடைத்த அனுபவம் ஒரு சிறந்த ஸ்பீக்கர் என்பது தான். காரணம் பொதுவாக நான் நினைக்கிறேன், அரசியலில் ரொம்பவும் பயிற்சி பெற்று, அரசியலில் ரொம்பத் தெளிவாக இருக்கக் கூடியவர்கள், யாருக்கும் அஞ்ச வேண்டியது இல்லை என்ற நிலையில் வந்தால், ஸ்பீக்கராக வந்தால் நல்ல முறையில் செயல்படுகிறார்கள். எனென்றால் அவர் ஸ்பீக்கராக இருந்து மன்றத்தை சிறந்த முறையில் நடத்தி செயல்பட்டார் என்று யாருமே சொல்லவில்லை. அதிகாரிகள் நல்ல முறையில் செயல்படுகிறார்களோ இல்லையோ அவர்களை நல்ல முறையில் செயல்பட்டார்கள் என்று 4 வார்த்தை நல்ல முறையில் சொல்லக் கூடியது உண்டு. அந்த வார்த்தைகளை யாரும் மதியழகன் அவர்களுக்குச் சொல்லவில்லை. அந்த வார்த்தைகளைச் சொல்லவேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

நான்கூட கேட்டிருக்கிறேன். குறிப்பாக டாக்டர் ஹாண்டே அவர்கள் கோபிக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். "டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு நிறைய சான்ஸ் கொடுக்கிறீர்களே, அவர்கள் எழுப்புவது சில நேரங்களில் நிலவண்டாகக் கூட இல்லையே" என்று கூட கேட்டிருக்கிறேன். **With due respect to Dr. Hande, I would say that I am no casting aspersion on him.** இருந்தாலும்கூட, அவர் என்னை சரியாகப் புரிந்துகொள்வார் என்று நினைக்கிறேன். அவர் சொன்னார், "எதிர்க்கட்சியில் இருக்கிறவர்களில் முனைப்பாக செயல்படுகிறவர்கள் ஒரு அரை டஜன் பேர் தான் இருக்கிறீர்கள், அவர்களுக்குச் சரியான தர்ப்பம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சட்ட மன்றம் டல்லாக இருக்கும். உள்ளே இருப்பவர்களுக்கும் உற்சாகம் இருக்காது. வெளியே இருப்பவர்களுக்கும் உற்சாகம் இருக்காது. அதனால் தான் அந்த மாதிரி காரியங்களைச் செய்கிறேன்" என்று மனம் திறந்து சொன்னார்கள். இப்படி பல காரியங்களைப் பற்றி, பல விஷயங்களைப் பற்றி நான் அவர்களிடத்தில் கேட்டு இருக்கிறேன்.

1974 மார்ச் 29] [திரு. கே டி.கே தங்கமணி]

இங்கே நாங்கள் பல அட்ஜர்ன்மெண்ட் மோஷன்கள் கொண்டு வருகிறோம். அப்படிக் கொண்டு வருகிற போது அவற்றை அலவ் செய்யுங்கள் என்று கேட்கிறோம்.

பாராளுமன்றத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. பர்க்கி என்ற அரசன் காலனியில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. இரண்டு அரிசன மக்கள் இறந்துபோய் விட்டார்கள். அன்று காலையில் பாராளுமன்றத்தில் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருகிறார்கள். ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு ரொம்ப வேதனையாகப் போய்விட்டது. மகாத்மா காந்தி அவர்கள் எந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டு தியானம் செய்தார்களோ அந்த இடத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்து இரண்டு உயிர்கள் போய்விட்டதே என்று வேதனையாக இருக்கிறது என்று சொன்னார்கள். உடனே எங்கள் கட்சியைச் சேர்ந்த ஹிரேன் முகர்ஜி அவர்கள் வேதனைப்படுவதில் பிரயோசனம் இல்லை. காலையில் அந்த இடத்திற்குச் சென்று இறந்தவர்களின் குடும்பத்திற்கு ஆறுதல் சொல்லுங்கள், அதே நேரத்தில் பாராளுமன்றத்தில் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளித்து இரண்டு மணி நேரம் விவாதித்தால் உண்மையிலேயே நாட்டு மக்கள் பெரிதும் நம்மைப் போற்றுவார்கள் என்று சொன்னதன் பேரில் அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளித்து பிற்பகல் விவாதம் நடந்தது.

அது மாதிரி பல முக்கியமான ஒத்தி வைப்புத் தீர்மானங்களை இங்கே நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். ஒன்று கூட நீங்கள் அனுமதிக்கவில்லை. இங்கே கொண்டு வருகிற அளவுக்கு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் லோக் சபையில் கொண்டு வருவது இல்லை.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இங்கே சமீபத்தில் எல்லோரும்—ஆளும் கட்சி உள்பட—இந்த நாட்டில் எந்த முறையில் மின்சார வெட்டு ஏற்பட்டு விட்டது, அதனால் பயிர்கள் காய்ந்து கொண்டிருக்கின்றன, என்று எடுத்துச் சொன்ன நேரத்தில்—திரு. ராஜகோபால் கூட, நானும் பேச வேண்டும், பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ற முறையிலாவது பேசவிடுங்கள் என்று கேட்டார்கள்—அப்படிப்பட்ட நெருக்கடி இருந்த நேரத்தில் கூட அதற்கு அனுமதி தரவில்லை.

ஆளும் கட்சிக்காரர்கள், எதிர்க் கட்சியோடு கலந்து கொண்டு இரண்டு மணி நேரம் விவாதித்தால் என்ன ? உண்மையிலேயே அரசாங்கத்தின் மீது அதைக் குற்றச்சாட்டாக நான் சொல்ல விரும்புகிறேன்.

Every adjournment motion is in the nature of a censure motion. It is a temporary censure. நீங்கள் தவறு செய்து விட்டீர்கள், ஆகவே அரசாங்கத்தின் தவறு என்ன என்று சுட்டிக் காட்டத்தான் இம்மாதிரி ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருகிறோம். அதை அனுமதிக்காத நிலை இருக்கிறது என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்,

[திரு. கே.டி.கே. தங்கமணி] [1974 மார்ச் 29

இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததன் நோக்கத்தைச் சொல்கிறேன். இதற்குக் முன்பாக ஒரு அடிப்படையிலே நம்முடைய ஸ்பீக்கர் பேரிலே அவரை நீக்கவேண்டுமென்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தோம். அந்தத் தீர்மானத்திலே கூட We have lost confidence in the Speaker. As such, we are moving for his removal. ஒரு காரணம் சொல்லியிருந்தோம். எங்களுக்கு நம்பிக்கை இழந்து விட்டது என்று சொன்னோம்.

அன்று நடந்த சம்பவம் என்ன? 40 நிமிடம் நடந்த சம்பவங்கள் பூராவும் சபை எட்டிலே ஏறுது என்று சொல்லி விட்டார்கள். நான் அப்போது கேட்டேன், இந்த மாதிரி ரிக்கார்டு உண்டா என்று சொல்லி ஏதோ ஒரு காலத்தில் இங்கிலாந்து தேசத்தில் பாராளுமன்றத்தில் என்று நினைக்கிறேன். 20 நிமிட சம்பவங்கள் அழிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள்.

தமிழ்நாட்டில் இருக்கும் சட்டமன்றம், சிவசண்முகம் பிள்ளை பாரம்பர்யம் ஆரம்பித்து வைத்த சட்டமன்றம் அழிப்பதற்கான ரிக்கார்டு காட்ட வேண்டும். "அழிப்பதற்கு ரிகார்டு" எக்ஸ்பஞ்ச் செய்வதற்கு ரிகார்டு காட்டுவது என்ற நிலை ஏற்பட்டது. என்ன விஷயத்திற்காக அது செய்யப்பட்டது என்பதையும் சொல்ல வருகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் அதைப்பற்றி கொஞ்சம் கோபிக்காமல் இருந்தால் சொல்கிறேன். அன்று நடந்த சம்பவம் என்ன? ஒரு குறிப்பிட்ட கடிதத்தை வாசிக்கவேண்டுமென்று காளிமுத்து அவர்கள் கேட்டார்கள். சபாநாயகர் கொஞ்சம் தயங்குகிறார். முதலமைச்சர் வாசிக்கட்டும் என்று சொல்கிறார். வாசித்தாகிவிட்டது. வாசித்த உடனே ஆளும் கட்சி உறுப்பினர்களுக்குக் கோபம் வந்தது. மேற்கொண்டு ப்ரோசீட் செய்ய முடியவில்லை. அந்த நேரத்தில் எதிர்க்கட்சியில் இருக்கும் எங்களுக்கு.....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கடிதம், கடிதம் என்று மர்மப் பேழை போல் ஆக்கிக்கொண்டிருக்கிறீர்கள். அன்றைக்கே விளக்கம் சொல்லப்பட்டது. அது என்ன கடிதம் என்று வெளியிடாமல் இப்படி குற்றச்சாட்டு கூறிக்கொண்டிருப்பது நல்லதல்ல. அது என்ன கடிதம்? நான்கூட தங்கம்மணி ரூ. 1,000 லஞ்சம் வாங்கினார் என்று எழுதிய ஒரு கடிதத்தை காட்டலாம். யார் வேண்டுமானாலும் அந்தத் கடிதத்தை எழுதலாம். அதுபோல் யாரும் யார் பேரில் வேண்டுமானாலும் கடிதம் எழுதி, அதைக்கொண்டு வந்து படிக்கலாம். அது எழுதப்பட்ட கடிதம் கூட அல்ல. போடோஸ்ட்டட் காப்பித்தான். ஏதோ கடிதம் கடிதம் என்று மர்மப்பேழை மாதிரி சொல்லிக்கொண்டு போவது சரியல்ல. யார் வேண்டுமானாலும் கடிதம் எழுதலாம். அந்தக் கடிதங்களைப் படிப்பதற்கு அனுமதிப்பது என்று முறையை ஏற்றுக்கொண்டிருந்தால் யார் வேண்டுமானாலும் கடிதத்தைக்கொண்டு வந்து படிக்கலாம்.

1974 மார்ச் 29]

திரு. கே. டி. கே. தங்கமணி : அதற்காகத்தான் பீடிகையோ ஆரம்பித்தேன். Please don't divest my argument. அவ அதற்குள் வந்து விட்டார். அந்தக் கடிதம் உண்மையா பொய்யா என்று நான் சொல்லவில்லை. ஏதோ ஒரு பேப்பர். அதிலிருந்து பின்னாலே எற்பட்ட பல நிகழ்ச்சிகளை, அந்த நிகழ்ச்சிகளைப் பூராவுமே இன்றைக்கு எட்டிலே எறுது என்று சொல்வது, அது ஆளும்கட்சிக்கும், முதலமைச்சருக்கும் பாதுகாப்பதற்குத்தானே என்று நான் சொன்னால் அதிலே என்ன தவறு இருக்கிறது. ஆகவேதான் அந்த மாதிரி 40 நிமிஷம் வரையிலும் உள்ள சம்பவத்தைப் பூராவும் அழிக்கவேண்டும் என்று சொல்லிவிட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதல் அமைச்சரைப்பற்றி மாத்திரம் அல்ல, கே. டி. கே. தங்கமணி அவர்கள் பற்றி கடிதம் படிக்கப்பட்டாலும் அதுவும் நடவடிக்கை குறிப்பிலிருந்து எடுக்கப்பட வேண்டிய ஒன்று தான்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அதை நான் ரொம்ப ஒத்துக் கொள்கிறேன். அது பற்றி அல்ல நான் சொன்ன ஆர்குமெண்டு— I do not want that my argument should be directed against the Hon. Chief Minister, Please do not divert my argument. விஷயம் என்னவென்றால், அதிலே ஒரு அரசியல் இருக்கிறது என்பதைத் தான் சொல்ல வந்தேன். கடிதத்தைப் பற்றி வேண்டாம். அன்றைக்கு 4 நடந்த சம்பவம் நான் அன்றைக்கு சத்தம் போட்டு பேசியதெல்லாம் எனக்கே அவமானமாக இருக்கிறது. அந்த மாதிரி வார்த்தைகளை நான் உபயோகப்படுத்தியிருக்கக்கூடாது.

விவரம் என்னவென்றால் ஒரு அரசியல் பின்னணியை வைத்துக் கொண்டு ஆளும் கட்சியை பாதுகாக்கவேண்டும் என்ற நிலையிலே நடவடிக்கைக் குறிப்பிலே இருந்து அதை எடுத்தார் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படலாம், நிரூபிக்கப் படாமல் போகலாம். ஆகவேதான் இன்றைக்கு அவரை நிரூபிக்க வேண்டும் என்ற தீர்மானம் கொண்டுவந்தோம். இன்றைக்கு அதற்காகத்தான் ஸ்பெஷிபிக்காக குற்றம் சாட்டியிருக்கிறோம். கிட்டத்தட்ட 3/4 மணி நேர சம்பவத்தை அழித்துவிட்டார் என்று.

இந்தச் சபையில் இன்னொரு அனுபவம் இருக்கிறது. மதியழகன் அவர்கள் சபாநாயகராக இருந்த காலத்தில் ஒரு நாள் 1/2 மணி நேரம் நடந்த சம்பவங்கள் பூராவும் அழிக்கப்பட்டது. அன்றைக்கு நடந்த சம்பவம் என்ன தெரியுமா? காமராஜ் அவர்கள் ஏதோ 2 லட்சமோ 2 கோடி ரூபாயோ எங்கேயோ வங்கியில் போட்டிருக்கிறார்கள் என்று பேச, அதைப்பற்றி மற்றவர்கள் சொல்ல, கலீசியாக வெளி நடப்பில் முடிந்தது. அந்த வெளிநடப்பு உள்பட எல்லாவற்றையும் எக்ஸ்பஞ்ச் செய்யப்பட்டது. மறுநாள் வெளிநடப்பு செய்தது எக்ஸ்பஞ்ச் பண்ணியது தவறு என்று சொல்ல, அந்த மீண்டும் டி-எக்ஸ்பஞ்ச் செய்து, அதை திருப்பி குறிப்பு எட்டில் ஏற்றிய அனுபவம் இருக்கிறது. இப்படி 45 நிமிட நிகழ்ச்சிகளை எக்ஸ்பஞ்ச் பண்ணிவிட்டார்கள் என்பது ஒரு குற்றச்சாட்டு. அது ஒரு ரிகார்டு.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 29

I think it is a record for all Parliaments, Indian or foreign.

இந்த மாதிரியான நிலை நம்முடைய சபாநாயகர் காலத்தில் ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் என்னுடைய வாதமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நடவடிக்கை குறிப்பிலிருந்து 40 நிமிட நிகழ்ச்சிகள் எடுக்கப்பட்டது என்று சொல்லி அதற்காகக்கூட சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டது. அதன் தொடர்பாக அலுவல் ஆய்வுக் குழுவில் நீண்ட நேரம் அது பற்றிப் பேசி, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கைவிடுவது என்றும், அது போன்று இனிமேல் நிகழ்ச்சிகள் நடைபெறுமல் பார்த்துக்கொள்வதற்கு அவைத் தலைவர், அமைச்சர்கள் உள்பட எல்லோரும் அலுவல் ஆய்வுக் குழுவில் ஒத்துக்கொண்டார்கள். அதற்குப் பின் அந்தக் காரணத்தை நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே காட்டவேண்டிய அவசியம் என்ன ?

திரு. கே. டி. கே. தங்கமணி : நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு காரணங்கள் சொல்ல வேண்டும். நான்கு விஷயங்களிலே இது ஒரு முக்கியமான விஷயம். அன்றைக்கு அந்த விஷயம் அதோடு முடிந்துவிட்டாலும், அந்த சம்பவம் இன்னும் போய்விடவில்லை. ஆனால் அதற்குப் பிறகு ஒரு நல்ல மரபை ஏற்படுத்தியிருக்கிறோம். தனிப்பட்ட ஒருவருடைய கடிதத்தைப் படிக்கவேண்டுமென்றால், அந்தக் கடிதத்தைச் சபாநாயகர் பார்க்கவேண்டும். சம்பந்தப்பட்ட உறுப்பினரும் பார்க்கவேண்டும். அதற்குப் பிறகு அதைச் சபைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். அந்த நிலை உண்மைதான். 40 நிமிஷம் அழிக்கப்பட்டிருக்கிறதே அந்த சம்பவமும் உண்மைதான்.

அடுத்தாற்போல் இந்தத் தீர்மானம் கொண்டு வருவதற்கு

What was the immediate cause and what was the provocation.

திருமதி அனந்தநாயகி அவர்கள் ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டரை செய்ஸ் பண்ணினார்கள். எந்தப் பாயிண்ட் ஆப் ஆர்டர் அலௌ பண்ணியிருக்கிறார் என்பது எனக்குத் தெரியவில்லை. ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் செய்ஸ் பண்ணினால், கடைசியில் அது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று கூடச் சொல்லலாம். எப்படி பாயிண்டு ஆப் ஆர்டர் செய்ஸ் பண்ண வேண்டும் என்பதற்குச் சில நியதிகளை வைத்திருக்கிறோம். அதற்குப் பிறகு சபாநாயகர்தான் அதைப் பற்றி முடிவு செய்ய வேண்டும்.

அன்றைக்கு அம்மையார் எழுந்தார்கள், எழுந்தவுடனேயே " நீங்கள் எப்பொழுதும் இந்த மாதிரிதான். பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று கிளப்பி, வேறு ஏதாவது சொல்கிறீர்கள்" என்று சொல்லிவிட்டார்கள். அப்பொழுது நான் கூட சொன்னேன், "பொத்தாம் பொதுவாக ஜெனரலே ஸேஷன் கூடாது, எப்பொழுதும் நீங்கள் அப்படித்தான்" என்று சொல்லக் கூடாது என்று சபாநாயகருக்கு ஒத்தாசை செய்வதாக நினைத்துச் சொன்னேன். சபாநாயகர் என்ன சொன்னார்கள், " நாளைக் காலையில் வேண்டு

1974 மார்ச் 29] [திரு. கே.டி.கே. தங்கமணி]

மானுல் சொல்கிறேன், எவ்வளவு முறை நீங்கள் இந்த மாதிரி பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து வந்தீர்கள், எவ்வளவு ரிஜெக்ட் பண்ணி யிருக்கிறேன்" என்று சொல்கிறேன் என்று கூறினர். உடனே அந்த மாதிரி சொல்லவும் செய்தார்.

திருமதி அனந்தநாயகி அவர்கள் ஒரு சினியர் மெம்பர், சட்டமன்ற அனுபவம் உள்ளவர். 4, 5 தடவை சட்டமன்றத்திற்கு வந்திருக் கிறார்கள். அனுபவம் உள்ளவர்கள். படித்தவர்களும் கூட. படிப்பு இருக்கிறதோ, இல்லையோ சட்டமன்ற அனுபவம் உள்ளவர்கள். இப் பொழுதெல்லாம் படித்தவர் என்றுல் டிஸ்குவாலிபிகேஷன். என்னைக் கூட கூறுவார்கள், 'நீங்கள் கூட பாரிஸ்டர் பட்டம் பெற்றிருக்கிறீர்கள், என்று. குவாலிபிகேஷனை விட்டுவிடுங்கள். சட்டமன்ற விதிகளுக்குட் பட்டு நான் நடந்துகொண்டிருக்கிறவன் என்ற முறையில் சொல்கிறேன். இந்த மாதிரி வரக்கூடிய காலத்தில் அனந்தநாயகி அவர்கள் போன்ற அனுபவம் உள்ளவர்களையே இவ்வாறு நடத்தினுல் நாளைக்கு மற்றவர் களுக்கு என்ன நிலைமை ஏற்படும்? உடனே எதிர்க் கட்சியில் இருப்ப வர்கள் கலந்து இப்படி ஒரு தீர்மானத்தைக் கொடுத்தோம். இந்தத் தீர்மானத்தில் காரணம் என்ன என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

அடுத்தாற்போல, நான் இன்னெரு விஷயத்தைச் சொல்கிறேன். இப் பொழுது ஆளும் கட்சியில் சில பேர்கள் இருக்கிறார்கள். நம்முடைய சபாநாயகருக்கே தெரியும். சில பேர்கள் அமைச்சரைவிட அதிகமாகத் தாங்கள் சலுகை பெற்றவர்கள் போல எழுந்து நின்றுல் யாரும் அவர்களை உட்காரச் சொல்ல முடியாது. அப்படி 2, 3 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை உடனே அனுமதித்துவிடுகிறார்கள். அவர்களை அனுமதிக்காத போனுல் அவர்கள் வற்புறுத்துகிறார்கள்.

அவர்களை அனுமதிக்காவிட்டால் வேறு என்ன கஷ்டம் ஏற்படுமோ என்ற நிலையோ என்னவோ தெரியவில்லை. அந்த முறையில் பல தடவை நடந்திருக்கிறது. நான் கூட கேள்வி நேரத்தில் சில முக்கியமான கேள்வி கள் வந்து, ஏதாவது எனக்கு விவரம் வேண்டுமென்றுல், நான் படித் திருந்தால் உப கேள்வி கேட்க கையைத் தூக்குவேன், எனக்கு விஷயம் தெரியாமல் நான் கேட்க மாட்டேன். அந்த மாதிரி சில நேரங்களில் கூட நான் கை தூக்குகிறபொழுது எனனைக் கூப்பிடுவதில்லை. 'என் இந்த மாதிரி நீங்கள் கை தூக்கினுல் கூட, உங்களை உட்கார வைத்துவிடுகிறார் களே, உங்களுக்கே அப்படியென்றுல் எங்கள் பாடு என்ன ஆகும்" என்று என்னுடைய கட்சிக்காரர்கள் கேட்கிறார்கள். அதைப் பற்றி நான் தவருக நினைக்கவில்லை. எனக்கு சான்ஸ் இல்லையென்றும் சொல்லவில்லை. எங் கள் கட்சிக்காரர்கள் சொல்லியதைச் சொல்கிறேன். இந்த மாதிரி நிலைமை இருக்கிறது.

இன்னெரு முக்கியமான விஷயம் நான் சொல்ல வேண்டும். அதி லும் அரசியல் இருக்கிறது. எங்கே கூடு வந்துவிடுமோ என்னவோ என்று பயமாக இருக்கிறது. அண்ணு நிராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் இருக்கிறார்கள். எல்லோருக்கும் தெரியும். சில சமயங்களில் என்ன நடக்கிறது தெரியுமா? இங்கே

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 29

பேசும்பொழுது நிகழ்ச்சிக் குறிப்பைப் பார்த்தால் தெரியும். குல்லாய் போட்டவர் அல்லது பவுடர் பூசுகிறவர், நடிகர், கிழ நடிகர் என்று இம் மாதிரியான வார்த்தைகளைக் கேள்விகளில் கொஞ்சம் நாசூக்காக சேர்த்து விடுகிறார்கள். இம்மாதிரி செய்வதை கண்டிப்பாக பார்லிமென்டில் அனு மதிக்கமாட்டார்கள். பார்லிமென்டில் அனந்தசயனம் அய்யங்கார் அவர் கள் இம்மாதிரி வார்த்தைகளை வைத்து கேள்வி கேட்டால் இனிமேல் கேள்விகளை அனுமதிக்க மாட்டேன் என்று சொல்லிவிடுவார். அந்தத் தலைவரை அந்தக் கட்சியிலுள்ளவர்கள் ரொம்ப மதிக்கிறார்கள். அவர் களுக்குக் கொடுக்கக் கூடிய மரியாதையை கொடுக்க வேண்டும். முதல் அமைச்சருடைய கொள்கை எனக்குப் பிடிக்காமல் இருக்கலாம். முதல் அமைச்சர் சொல்வதை சிலவற்றை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். முதல் அமைச்சர் பற்றி அரசியல் விமர்சனம் பண்ணலாம். ஆனால் முதல் அமைச்சர் ஆள் குட்டையாக இருக்கிறார், வேறு எப்படியாவது இருக்கிறார் என்ற முறையில் பேசுவது பண்பாடு அல்ல. அப்படிப்பட்ட வார்த்தைகளை இந்த சட்டமன்றத்தில் பயன்படுத்தக் கூடாது.

திரு. துரைமுருகன் : திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொள்கையைப் பற்றிப் பேசலாமே தவிர, ஒரு உறுப்பினர் பற்றித் தனிப் பட்ட வகையில் பேசக் கூடாது என்று சொன்னார்கள். ஆளும் கட்சி யிலிருந்து நாங்கள் யாரையும் தொப்பி போட்டவர் என்றோ, கிழட்டு நடிகர் என்றோ, பெயரைக் குறிப்பிட்டு அழைக்கவில்லை. நானும் இந்தச் சபையில் தொடர்ந்து உறுப்பினராக இருக்கிறேன். இந்த அவையிலே அறிவுரை வழங்கும் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எதிர்க் கட்சி வரிசையில் உள்ளவர்கள் சில பேர் பண்பு இல்லாமல் பேசுகிறார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அன்று உறுப்பினர் திரு. வேலப்பன் அவர்கள் முதல் அமைச்சரைப் பற்றிக் கூறினார்கள். அப் பொழுது நான் அதை வன்மையாகக் கண்டிக்கிறேன், எதிர்க் கட்சியினர் பண்போடு பேசவேண்டும் என்று கே. டி. கே. தங்கமணி அவர்கள் எடுத்துச் சொல்லியிருந்தால் அவருடைய பெருந்தன்மைக்கு மெருகு ஏற்றியதாக இருக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அவர்கள் சொன்னதற்கு நன்றி....

திரு. கோவை செழியன் : அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தைச் சார்ந்த திரு. வேலப்பன் அவர்களுடைய பேச்சை இழுத்து திருப்பி திருப்பி அவர் முதல் அமைச்சரைப் பற்றிப் பேசினார் என்று சொல்கிறார்கள். தயவுசெய்து அவருடைய பேச்சை ஒரு முறை படித்துப் பார்க்க வேண்டும். அதே நிலையிலே எட்மண்ட் அவர்களும் தன்னுடைய கருத்தை எடுத்து சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலும் முதல் அமைச்சரைப் பற்றி பேசினார் என்று வலிந்து இழுத்து, பேசாத ஒன்றை தயவுசெய்து சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1974 மார்ச் 29]

திரு. கே. டி. கே. தங்கமணி : ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சார்ந்தவர்கள் இப்படி தவறுகப் பேசிவிட்டாலும், அந்தக் கட்சித் தலைவர் தான் அதை கண்டிக்க வேண்டும் என்பதுதான் சாதாரணமாக நடப்பது. சபாநாயகரே தவறு என்று சொல்லியிருக்க வேண்டும்.

என்னுடைய கட்சியைப் பொறுத்த வரையில், ஜாதிப் பிரச்னை என்பது கிடையாது. உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்று அம்மாதிரியாக யாரையும் அழைக்கக் கூடாது என்பதுதான் நாங்கள் கடைப்பிடிக்கக்கூடிய நியதி. திரு. சுப்பையா அவர்கள் முன்பு பாண்டிச்சேரியில் அமைச்சராக இருந்தவர். இப்பொழுது அமைச்சராக இருந்து, இப்பொழுது அந்த மந்திரி சபை போய்விட்டது. நானும் அவரும் ஒரே கமிட்டியில் சேர்ந்து இருந்தோம், 12 ஆண்டுகள் ஆகியும் அவருடைய ஜாதி எனக்குத் தெரியாது. திரு. கே. டி. ராஜு ஜாதி எனக்குத் தெரியாது. எந்தக் காலத்திலும் ஜாதியைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஜாதியினால் ஒருவருக்கு பெருமையோ, சிறுமையோ ஏற்படுவது என்பது கூடாது என்று பல நேரங்களில் எங்களுடைய கட்சித் தலைவர் டாங்கே அவர்கள் அடிக்கடி சொல்வார்கள்.

இன்றைக்கு நாட்டிலே தீண்டாமை இருக்கிறது என்று சொன்னால் என்ன செய்வது என்றெல்லாம் சொல்வார்கள். ஆகவே, இன்றைக்கு ஒரு ஜாதியைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள் என்றால், நான் அந்த நேரத்தில் இங்கே இல்லை வெளியே போயிருந்தேன், வந்த பிறகு தெரிந்தது இதிலே ஒன்றும் ரகசியம் இல்லை. உடனே நான் எட்மண்ட் அவர்களிடம் சொன்னேன், இம்மாதிரி அவர்கள் பேசுவது தவறு என்று சொல்ல வேண்டும் என்று கூறினேன். இம்மாதிரி எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் எல்லோரும் பேசிக்கொண்டோம். ஒரு கட்சியைச் சேர்ந்தவர் அப்படிப் பேசியது தவறு என்று டங்கிங்கமாக இன்னொரு கட்சியினர் சொல்ல முடியாது. அதை ஒரு முறையாகத்தான் சொல்லலாம். பக்குவமாக எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள், அவர்கள் பிரசங்கத்தில் ஒரு பகுதியில் இம்மாதிரி வந்தது பற்றி வருத்தப்படுகிறேன் என்று சொல்லி இருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் கே.டி.கே. அவர்கள் தனிப்பட்ட முறையிலே அவர்களுடைய அங்க லட்சணங்கள் எதையும் பேசக் கூடாது ; அரசியல் கட்சிகளைப் பற்றி விமரிசிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை நூற்றுக்கு நூறு வரவேற்கிறேன். அவர்களுடைய பேச்சிலே முதலமைச்சராவர்கள் குட்டையானவர்கள் என்று சொல்லுவதும் கூடாது என்று சொன்னார்கள். அப்படியானால் அவர்கள் என்னைக் குட்டையானவர் என்று இடித்துக் காட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விமரிசனமும் நல்லதா என்று யோசிக்க வேண்டும். (சிரிப்பு).

திரு கே. டி. கே. தங்கமணி : வெளியிலே யார் யாரோ எதை எதையோ சொல்லுவார்கள். இந்த சட்டமன்றத்திற்குள்ளே அந்த மாதிரியான விமரிசனங்கள் வரக் கூடாது ; யாரும் கொண்டுவா வேண்டாம் என்பதுதான் என்னுடைய கருத்து. (மணியடிக்கப்பட்டது) இன்னும் எவ்வளவு நேரம் இருக்கிறது ?

[1974 மார்ச் 29

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : உங்களுக்கு அரை மணி நேரம்தான் கொடுக்கப்பட்டது.

திரு கே. டி. கே. தங்கமணி : இன்னும் 5 நிமிடங்கள் கொடுங்கள். சபாநாயகரைப் பதவியிலிருந்து நீக்கவேண்டுமென்று சொல்லும்போது அதற்காகச் சில எற்பாடுகளை அரசியல் சட்டத்தில் செய்திருக்கிறார்கள்.

ஒரு சபாநாயகரை வெளியேற்ற வேண்டுமென்று சொன்னால் அரசியல் சட்டத்தின்படி 14 நாட்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். 14 நாள் நோட்டீஸ் கொடுத்ததற்குப் பிறகு, விவாதம் நடைபெற்று பாதி பேருக்கு மேல் சபாநாயகர் போக வேண்டுமென்று தீர்ப்புக் கொடுத்தால்தான் நீக்கப்படுவார். அப்படி இல்லாமல் சபாநாயகர் ராஜினாமா செய்கிறார் என்றால் ராஜினாமா கடிதத்தை கவர்னர் இடத்திலே கொடுக்கலாம் ; அல்லது பார்லிமென்டில் ஜனாதிபதியிடம் கொடுக்கலாம். அரசியல் சட்டத்தை நிர்ணயம் செய்யும்போது அப்படிக் குறிப்பிட்டிருந்தார்கள்.

அதன் பிறகு அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்கு மூலகர்த்தாவாக இருந்த டாக்டர் அம்பேத்கார் அவர்கள், சபாநாயகர் ஜனங்களுடைய பிரதிநிதியாக உட்கார்ந்திருக்கிறார்கள் ; ஆகவே, சட்டமன்றத்தில் உறுப்பினர்களிடம்தான் ராஜினாமாக் கடிதத்தைக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். உறுப்பினர்களிடம் கொடுக்க முடியாததால், சபாநாயகர் துணை சபாநாயகரிடம் கொடுக்க வேண்டும் ; துணை சபாநாயகர் ராஜினாமா செய்வதாக இருந்தால் சபாநாயகரிடம் கடிதத்தைக் கொடுக்க வேண்டும் என்ற நியதி உருவாகியிருக்கிறது. பார்லிமென்டிலே என்றால் கிளார்க்கிடம் கொடுத்துவிடுவார்கள். கிளார்க் என்றால் அவர் சாதாரணமான கிளார்க் அல்ல. Clerk is a very big Officer ஆகவேதான், சபாநாயகராக இருக்கக் கூடியவர் ஒருவர், என்ன செய்வார், அவர் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம் என்றால் அல்லது அரசியல் சட்டம் என்ன எதிர்பார்க்கிறது என்றால் அரசியல் சட்டத்தின் காரணகர்த்தாவான டாக்டர் அம்பேத்கார் போன்றவர்கள் அல்லது அரசியல் சட்டத்திற்கு முன் மாதிரியாக இருந்து சிறந்த பார்லிமென்டரி ஜனநாயகத்திற்கு இலக்கணம் வகுத்த ஜவஹர்லால் நேரு போன்றவர்கள் சொன்ன இலக்கணத்தின்படி நடந்துகொள்ள வேண்டும்.

அந்த முறையிலே நாங்கள் கொடுத்திருக்கிற நான்கு விஷயங்களை விதி 234 தெளிவாகக் குறிப்பிடுகிறது. எதாவது தவறான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டால் அல்லது அப்சின் வார்த்தைகள் உபயோகிக்கப் பட்டால் அந்த வார்த்தைகளை நீக்கிவிடலாம்.

Word or words will have to be expunged but words would not mean speeches lasting 30 or 40 minutes.

ஆகவே, ஒன்றிரண்டு வார்த்தைகளை, அல்லது அதோடு இணைந்திருக்கிற ஒன்றிரண்டு சென்டன்ஸை வேண்டுமென்றால் எடுத்துவிடலாம்.

1974 மார்ச் 29] [திரு. கே. டி. கே. தங்கமணி]

நம்முடைய சட்டமன்றம் ஒரு வருஷத்திலே 50 அல்லது 60 நாட்கள் தான் கூடுகிறது. நான் என்னுடைய தொகுதி மக்களின் பிரதிநிதி. அதைப் போலத்தான் ஒவ்வொருவரும் அந்தந்த தொகுதி மக்களின் பிரதிநிதிகள். அந்தத் தொகுதிகள் பற்றி முக்கியமான விஷயங்கள் எல்லாம் பேச வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். டிமாண்ட் வரும்போது ஒரு டிமாண்டுக்கு 2 அல்லது 3 நாட்கள் விவாதம் வைத்துக் கொண்டால் என்ன என்று கேட்கிறார்கள். எல்லாக் கட்சிக்காரர்களும் கேட்கிறார்கள். இப்போது நாம் முடிவு செய்திருக்கின்ற நாட்கள் போதாது. 50, 60 நாட்களுக்கு மேல் சட்ட மன்றம் நடக்கவில்லை. ஆகவேதான் பல தீர்மானங்களைக் கொடுக்கிறோம்.

Calling Attention Notice is a privilege given mostly to the members of the Ruling Party.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ரூல் 342-ல் நோட்டீஸ் கொடுக்க முடியாது. அவர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்க முடியாது. ஆகவே, ஆளும் கட்சியினர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு கிட்டத்தட்ட சமமாக 'வருகிற காலிங் அட்டென்ஷன் நோட்டீஸ்' கொடுக்கிறார்கள்.

இப்படிப் பல்வேறு விஷயங்களை உறுப்பினர்கள் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். அப்படிக் கொண்டுவரப்படுகிற விஷயங்களை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதா கூடாதா என்று முடிவு செய்கின்ற அதிகாரம் சபாநாயகருக்கு உண்டு. அப்படிக் கொடுக்கின்ற ஒரு தீர்மானத்திற்கு அனுமதி இல்லை என்று சபாநாயகர் எழுதி அனுப்பினால், அது முக்கியமான பிரச்சினையாக இருந்தால் நாங்கள் திருப்பி சபாநாயகருக்கு அனுப்பி வைக்கிறோம்.

சபாநாயகர் எங்கள் தீர்மானங்களைத் திருப்பி அனுப்புவதற்கு அனந்த நாயகி அவர்கள் சொல்லியபடி ரூல் 45-ன் படி சரியான காரணங்களைச் சொல்ல வேண்டும். இன்னின்ன காரணத்தால் ரிஜக்ட் செய்திருக்கிறேன் என்று சொல்ல வேண்டும்.

சபாநாயகர் ரிஜக்ட் செய்து அனுப்பிய தீர்மானத்தை முக்கியமானது என்று சொல்லி நாங்கள் திருப்பி சபாநாயகருக்கு எழுதி அனுப்பினால், அவர் ஒரு ஆளை அனுப்பி அந்த மெம்பரை அழைத்துவரச் செய்து அதன் முக்கியத்துவம் என்ன என்று கேட்கலாம். அதன் பிறகு அவர் முடிவு செய்யலாம்.

ஆனால், இந்த சபாநாயகர் ஒரு நாள் கூட அப்படிச் செய்தது கிடையாது. அதையே ஒரு முக்கிய காரணமாகக் கொண்டுதான், இந்தச் சட்டசபையில் சபாநாயகர் மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம்.

இப்போது நம்முடைய சட்டமன்றத்தில் புதிய புதிய முறைகள் எல்லாம் வருகின்றன. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே அவர்கள் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கிறார்கள். பின்னால் அவர்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் அவர்களாகவே ரிஸைன் செய்கிறார்கள்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 29

அதே மாதிரி டிபுடி ஸ்பீக்கரைப் பிடிக்கவில்லே என்றால் ஆளும் கட்சியின் சார்பிலேயே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து வெளியேற்றுகிறார்கள்.

இப்போது நாங்கள், எதிர்க் கட்சியினர் கொண்டுவந்திருக்கிறோம். எதிர்க் கட்சியினர் பலர் கருத்துக்களைச் சொல்கிறார்கள் என்றால், அது எதிர்க் கட்சியினருக்காக மட்டுமல்ல ; ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்கள் எதிர்த்துச் சொல்ல முடியாத நிலையில் இருப்பார்கள். அவர்களுக்காகவும் தான் நாங்கள் சொல்கிறோம். ஆகவே உறுப்பினர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை சபாநாயகர் கேட்டு, நியாயமான தீர்ப்பை வழங்க வேண்டும்.

இந்த சபாநாயகர் அப்படி நடந்துகொள்ளவில்லே என்பதால்தான் எங்களுடைய தீர்மானத்திலே நான்கு குற்றச்சாட்டுக்களைச் சொல்லியிருக்கிறோம். அனந்தநாயகி அம்மையார் அவர்கள் அதற்குப் பல்வேறு விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நான் கூறிய இந்தக் காரணங்களால் இந்த சபாநாயகரை நீக்க வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, இது மிகவும் முக்கியமானது என்று சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

(6) அறிவிப்பு

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : இன்று விவாதத்திற்கும் வாக்கெடுப்பிற்கும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கைகளான 25. சின்கோனு, 44. காட்டு வளத் துறை, 54. காட்டுவள மூலதனச் செலவு ஆகியவை நாளையதினம் எடுத்துக்கொள்ளப்படும்.

நாளை எடுத்துக்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த மானியக் கோரிக்கைகளான 8. தேர்தல்கள், 9. மாநில ஆட்சித் தலைவர்கள், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், 40. இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, 41. ஒய்வூதியங்களும், எனைய ஒய்வுகால நன்மைகளும், 42. பல்வகை, 45. இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும், 46. ஐநீன் தார்களுக்கு இழப்பீடு, மற்றும் 56. மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும், ஆகியவை 2-4-1974 அன்று முற்பகல் எடுத்துக் கொள்ளப்படும்.

2—4—1974 அன்று எடுத்துக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த மானியக் கோரிக்கை 23. கூட்டுறவு அன்று பிற்பகல் எடுத்துக்கொள்ளப் படும் என்பதைப் பேரவைக்கு அறிவித்துக்கொள்கிறேன்.

(2) பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்—தொடர்ச்சி.

திரு. மணலி சி. கந்தசாமி : தலைவரவர்களே, இன்றையதினம் சபாநாயகராக இருக்கும் புலவர் கோவிந்தன் அவர்கள் மீது கொண்டுவரப்

1974 மார்ச் 29] [திரு. மணலி சி. கந்தசாமி]

பட்டிருக்கிற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை நான் ஆதரிக்கவில்லை என்று சொல்லி, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை சொல்ல விரும்புகிறேன்.

மேலும், இன்றைக்கு இந்த சபையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரக்கூடிய ஒரு அவசர நிலையோ, அவசியமோ இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த சபை விவாதத்திலே புலவர் கோவிந்தன் பாரபட்சமாக நடந்துகொண்டார்; ஆளும் கட்சிக்கு ஆதரவாக நடந்துகொண்டார், எதிர்க் கட்சிகளுக்கு அநீதி இழைத்துவிட்டார் என்ற கருத்துக்கள் எல்லாம் இந்த சபையின் நடவடிக்கைக் குறிப்புகளைப் புரட்டிப் பார்த்தால், அவர் ஒரு குறிப்பிட்ட அரசியல் சூழ்நிலையில எவ்வளவு நேர்மையோடு இருந்திருக்கிறார் என்பதை நம்மால் காண முடியும். குறிப்பாகத் தி.மு.க. விலிருந்து அ.தி.மு.க. பிரிந்ததிலிருந்து தமிழக அரசியலில் ஒரு புதிய அரசியல் பாதை இன்றையதினம் வளர்ந்து வருகிறது. அது வளர்வதும் தேய்வதும், வளர்வதும், தேய்வதுமாக இப்படிப் பல்வேறு விதங்களிலே கோணிக் கோணி வருகின்ற பாதையைப் பார்க்கிறேன்.

இன்றையதினம் ஆளும் கட்சி ஒரு பெரிய மெஜாரிட்டி கட்சியாக இருக்கிறது. எதிர்க் கட்சி பலவீனமான கட்சியாக இருக்கிறது. பலமும், பலவீனமும் எண்ணிக்கையில் இருப்பதல்ல. எதிர்க் கட்சியில் இருக்கக்கூடிய வர்கள் முறைப்படி பணியாற்றி வந்தால ஆளும் கட்சி இன்னும் பயனுள்ள வகையில் பல்வேறு காரியங்களைச் செய்திருக்கும் என்பது என்னுடைய கருத்து. அப்படி எதிர்ப்பதற்குப் பதிலாக—கொள்கை அடிப்படையில் எதிர்ப்பதற்குப் பதிலாக எப்படியோ இந்த சர்க்காரைக் கவிழ்க்க வேண்டும் என்கிற முறையில் குறுக்கு வழியில் போவது எனக்குப் பிடிக்கவில்லை. (திருமதி அனந்தநாயகி குறுக்கீடு).

பார்லிமென்டரி முறை ரொம்பக் கத்துக்கிட்ட பெண் (Interruption).

She must be attentive and I am not going to repeat it.

ஆகவே எனக்குப் போலித்தனமாகப் பேச வராது. சிலபேர் வேஷம் போட்டுக்கொண்டு பேசுகிறார்கள். காரியம் வரும்போது பல காரியங்களைச் சாதித்துக்கொண்டு போகிறார்கள்.

மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் சென்ற ஒரு வருஷமாக எவ்வளவு சங்கடமான நிலைமையில் இந்தச் சபையை நடத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் பார்த்திருக்கிறேன்.

கொள்கை அடிப்படையில் இன்றைக்கு முற்போக்கு அணி என்பதாக ஒரு அணியை உருவாக்க முன்வந்தால் நான் அந்த அணியில் இருக்கத் தயாராய் இருக்கிறேன். ஆனால், எப்படியோ சந்தர்ப்ப சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு இந்த மந்திரி சபையைக் கவிழ்த்துவிட வேண்டும் என்கிற அடிப்படையில் அணி திரட்டுவார்கள் என்றால் அதற்கு நான்

தயாராய் இல்லை. என்னைப் பற்றிச் சொல்வார்கள்—ஜாலரா அடிப்பார் என்று சொல்வார்கள்—என்னைப் பற்றிப் பேசப்படுகிற பல்வேறு விஷயங்கள் தெரியும்.

திருமதி. அனந்தநாயகி அவர்களே கொள்கை அடிப்படையில்—நிலச் சீர்திருத்தத்தையே எடுத்துக்கொள்ளுங்கள்—இந்த அரசின் கொள்கையை எதிர்க்க முன்வருவார்களா ? அதற்கு வருவதில்லை.

திருமதி. த. ந. அனந்தநாயகி : நிலச் சீர்திருத்தம் என்று கோயில் நிலங்களை எல்லாம் எடுத்து ஸ்டேட்டுக்கு நீங்கள் கொடுக்கச் சொல்கிறீர்கள். ஆனால் ஸ்டேட்டுக்கு வேண்டாம், கோயில் நிலங்களாகவே இருக்கட்டும் என்கிறேன். இதில் ஒன்றும் வித்தியாசம் கிடையாது.

திரு. மணலி சி. கந்தசாமி : விஷயம் வெளியாகிவிட்டது. அது தான் வித்தியாசம். (பலத்த சிரிப்பு).

திருமதி. த. ந. அனந்தநாயகி : மனதிலே ஒரு விஷயத்தை வைத்துக்கொண்டு வெளியே ஒன்று பேசுவது எனக்கு பழக்கம் இல்லை. உள்ளதைச் சொன்னேன்.

திரு. மணலி சி. கந்தசாமி : நீங்கள் ஒரு வருஷமாக இந்த அவையில் நடந்து வருகிற விஷயங்களை எடுத்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். கொள்கை அடிப்படையில் இந்த சர்க்காரோடு மோதுவதற்கு—நாட்டு மக்களுக்கு அதனால் நல்ல பலன் விளைவிக்கக்கூடிய விதத்தில் யாராவது முன்வந்தார்களா என்று கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால்—என் அபிப்பிராயம் இல்லை என்பதுதான்.

பாயின்ட் ஆப் ஆர்டர்களை எடுத்துக்கொள்ளுங்கள். ரெயிலில் சங்கிலி ஒன்று தொங்கிக்கொண்டிருக்கும்—ஆபத்துக் காலத்தில் ரெயிலை நிறுத்த அந்தச் சங்கிலியைப் பிடித்து இழுத்தால் வண்டி நின்றுவிடும்—தவறுதலாகப் பிடித்து இழுப்பவர்களுக்கு பெனல்டி உண்டு.

இந்தச் சபையிலே நான் பார்க்கிறேன்—பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி விடுவது. பாயின்ட் ஆப் ஆர்டர் என்கிற மூன்று வார்த்தை களைத் தவிர வேறு ஏதாவது இருக்கிறதா என்றால் இதுவரை கூண்டு பிடிக்க முடியவில்லை. நானும் இரண்டு தரம் பாயின்ட் ஆப் ஆர்டர் சொல்லிப் பார்ப்போம் என்று பார்க்கிறேன்—வரமாட்டேன் என்கிறது.

யாராவது பேசிக்கொண்டிருந்தால் அவரது பேச்சை மடக்கவேண்டு மென்றால், உடனே பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது. நாம் பல ஆயிரக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்து இந்தச் சபையை நடத்துகிறோம். நாம் போட்டுக்கொள்ள வேண்டிய வேடிக்கைச் சண்டை; விளையாட்டுச் சண்டை எல்லாம் இங்கே தான். இது எந்த அடிப்படையில் என்று பார்க்க வேண்டும்.

நான் பாராளுமன்றத்தில் இருந்ததில்லை. இரண்டு முறை தேர்தலுக்கு நின்றேன். இவர்கள்தான் தோற்கடித்து விட்டார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தத் தடவை ஜெயிக்கலாம்.

1974 மார்ச் 29]

திரு. மணலி சி. கந்தசாமி : அதற்கு நீங்கள் விடமாட்டீர்கள் போல இருக்கே. (பலத்த சிரிப்பு) உங்கள் அணி பெரிதாக அல்லவா உருவாகிறது.

சர்க்காரைப் பொறுத்த வரையில் கொள்கை அடிப்படையில் மோதுவதற்கு நான் தயார். கொள்கையே இல்லாது—எனகிட்டே கூட கையெழுத்து வாங்க வந்தார்கள். அப்பா, நமக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை—நம்மை விட்டுவிடுங்கள் என்று நான் சொல்லிவிட்டேன்—இவங்களுக்குள்ளே எப்படி அணி உருவாகி இருக்கிறது—கொஞ்சமாவது கருத்து ஒற்றுமை உண்டா ?

திரு. க. உரொ. எட்மண்ட் : மதிப்பிற்குரிய மணலி கந்தசாமி அவர்கள் பேசும்போது எந்தக் கருத்து ஒற்றுமையில் இப்போது நாங்கள் சேர்ந்திருக்கிறோம் என்றார்கள். அவர்கள் இல்லாத்தனம் ஆளுங் கட்சியை ஆதரிக்கிறார்களே, அவர்களோடு இவர்களுக்குக் கருத்தொற்றுமை உண்டா என்று விளக்க வேண்டும்.

திரு. மணலி சி. கந்தசாமி : எவ்வளவோ இருக்கிறது—இங்கேயே பேசியிருக்கிறேன்—அடிப்படையிலேயே பல கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன. அவர்களை வெளியேற்ற வேண்டும் எனகிறபோது எனன முற்போக்குக் கொள்கை அடிப்படையில் எதிர்ப்பு அணி உருவாகியிருக்கிறது ?

நான் யாருக்கும் எதிரி இல்லை. நிரந்தர நண்பனும் இல்லை. அரசியலில் பர்மனெனன்ட் விரோதியும் கிடையாது—பர்மனெனன்ட் நண்பரும் கிடையாது என்று முதல் மந்திரி அவர்களே சொல்லியிருக்கிறார்கள்—கொள்கை இல்லாமல் எப்படியோ இந்த அரசைக் கவிழ்க்க வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. இன்றைக்கு அவர்களை எதிர்க்கிற நீங்களே நாளைக்கு அவர்களை ஆதரிக்கின்ற நிலை வரலாம். அவர்களை ஆதரிக்கின்ற நான் நாளையே அவர்களை எதிர்த்து நிற்கும் நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியம் இல்லை.

என் சொல்கிறேன் என்றால் உள்ளபடியே கேட்கிறேன்—கொள்கை அடிப்படையில் இந்த அரசைப் பதவியில் இருந்து வெளியேற்ற ஒரு அணி வகுப்பதாகச் சொல்லுங்கள்—நான் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன். குறுக்கு வழியில்—ஒரு இருட்டடிப்புச் செய்கிற பாலிசியில் இறங்குவது என்றால் அது உங்களுக்கும் நல்லது அல்ல—எனக்கும் நல்லதல்ல—ஆளுங் கட்சிக்கும் நல்லதல்ல.

மாண்புமிகு புலவர் கோவிந்தனை நீக்க அவர்கள் சொன்னது ஒரு கடிதம்—அப்புறம் அவர் முதலமைச்சரையே பார்த்துக்கொண்டு செய்கிறார் என்பது—இவை எல்லாம் சரியான காரணம் என்று நினைக்கவில்லை.

என்னைப் பொறுத்த வரையில் அவர் புலவர்—கொஞ்சம் கண்டிப்பு இல்லாத அடிப்படையில் மற்றவர்கள் குறுக்குகின்றபோது பேசாமல் இருக்கிறார்—கருணாக இல்லை என்பதனால் என் குறை—நான் ஆடுமாடுபோல உட்கார வேண்டியிருக்கிறது—கொஞ்சம் சத்தம்போட்டுப் பேசுகிறவர்களுக்

குத்தான் இந்தச் சபை என்பது போல போய்க்கொண்டிருக்கிறது—அம்மையார் சொன்னது போல பல விஷயங்களைத் தெரிந்துகொள்ளத்தான் நான் வந்திருக்கிறேன். அவங்க என்ன சொல்லிக்கொடுக்கிறார்கள்? பார்லிமென்டரி ப்ரொஸீஜரைக் கொஞ்சமாவது தெரிந்துகொள்ள எதாவது சொல்லிக் கொடுக்கிறாரா? (சிரிப்பு).

திருமதி த. ந. அனந்தநாயகி: உங்கள் மாதிரியான ஆட்களை நான் மாணவர்களாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

திரு. மணலி சி. கந்தசாமி: அம்மையாரைப் போன்ற ஆசிரியரிடம் படித்தால் எட்டு ஜன்மத்திற்கு உருப்பட முடியாது. (சிரிப்பு).

THIRU K. T. K. TANGAMANI; Sir, this is not a No Confidence Motion against the Government. Many things which the hon. Member has stated, are very interesting but how are they relevant to the matter under discussion?

அவரது பேச்சுக்கும் இந்தத் தீர்மானத்திற்கும் என்ன சம்பந்தம்—சொல்ல வேண்டும். இதுபோலத்தான் சபாநாயகர் எங்கள் பக்கத்திலும் அனுமதிக்கிறார்—அவர்கள் பக்கத்திலும் அனுமதிக்கிறார் என்பது எங்கள் குறை. தயவுசெய்து நீங்களாவது இந்தக் காரியத்தை அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி: இந்தத் தீர்மானத்தில் அந்த மாதிரியாகப் போட்டிருந்தால் கூட யோசித்திருப்பேன். இது ஒரு தலைப்பட்சமாக இருக்கிறது என்று சொல்கிறேன்.

ரொம்ப பார்லிமென்டரி அனுபவம் பெற்றவர்—டாக்டர் ஹாண்டே அவர்கள் அன்றைக்கு என்னடாவென்றால்—கோவிந்தா கோவிந்தா என்கிறார். இதற்கு என்ன சொல்வது? "நீ போ" என்றால் "நீ போ" என்கிறார். இதுதான் இந்தச் சபைக்குக் கொடுக்கக் கூடிய மரியாதையா?

திரு. க. உரோ. எட்மண்ட்: இங்கே சபாநாயகரைப் பதவியில் இருந்து நீக்கக் கோரும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறுகிறது. திரு. மணலி கந்தசாமி அவர்கள் அந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேச வேண்டும். அல்லது எதிர்த்துப் பேசவேண்டும். ஆனால் அவர் இந்தப் பேரவையில் இவர் அப்படிப் பேசினார், அவர் இப்படிப் பேசினார் என்கிற அளவில் சொல்வது முறைதானா?

திரு. கே. டி. கே. தங்கமணி: சர்க்காரை அவர் முழுக்க முழுக்க ஆதரித்துப் பேசுவது பற்றி எனக்கு ஒன்றும் அபிப்பிராயம் கிடையாது. ஆனால் எட்மண்ட் சொன்னதுபோல் டாக்டர் ஹாண்டே அவர்கள் அப்படிப் பேசினார்கள் என்றெல்லாம் சொல்வது முறை அல்ல என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1974 மார்ச் 29] [திரு. மணலி. சி. கந்தசாமி]

திரு. மணலி சி. கந்தசாமி : ஆதரிக்கிறேன், எதிர்க்கிறேன் என்று சொல்வதோடு நிறுத்திவிட வேண்டுமென்று நினைக்கிறார்களா ? மாலை 5·00

திரு. க. உரொ. எட்மண்ட் : ஆதரிப்பதற்குக் காரணம் என்ன, எதிர்ப்பதற்குக் காரணம் என்ன என்பதைக் கூற வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒரு கட்சியின் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார். அதிலே நம்மைப் பற்றி பேசும்போது பதில் சொல்லலாம். அதை ஒலிபெருக்கியை விட்டு அப்பால் போய்ப் பேசுவது முறையல்ல.

திரு. க. உரொ. எட்மண்ட் : இதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கும் சொல்லவேண்டும்.

திரு. மணலி சி. கந்தசாமி : நான் பேசுவது அத்தனையும் இந்த ஆறு மாத காலத்தில் சபையில் நடந்திருக்கிற விஷயங்களைப் பற்றிச் சொன்னேன். நான் ஒன்றும் ஒவ்வாத விஷயங்களைப் பற்றிச் சொல்லவில்லை என்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

கடந்த காலத்தில் எவ்வளவோ குழப்பமான சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்கு மத்தியிலே சபாநாயகர் தன்னுடைய வேலையைச் செய்திருக்கிறார். நானே சொன்னேன். அவர் சில சமயங்களில் ஆளுங் கட்சிக்கு ஆதரவாக நடந்து இருக்கிறார், எதிர்ப்பாகவும் நடந்திருக்கிறார் என்பதைத்தான் சொன்னேன்.

டாக்டர் ஹரண்டேயைப் பற்றிச் சொன்னது, அவர் ஆத்திரப்பட்டுப் பேசுவது இப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்குகிறது என்பதற்காகத்தானே தவிர, அவர்களைக் கண்டிப்பதற்காக அல்ல. அந்தச் சந்தர்ப்பத்தில் சபாநாயகர் நடந்துகொண்ட முறையை சுட்டிக்காட்டத்தானே ஒழிய வேறொன்றுமில்லை.

நானும் 7, 8 தடவை இந்த சபையிலே உறுப்பினராக இருந்திருக்கிறேன். அப்போது ராஜாஜி இருந்திருக்கிறார், காமராஜ் இருந்திருக்கிறார், அதற்கு அடுத்து பக்தவத்சலம் இருந்திருக்கிறார். இப்போது நம் கலைஞர் அவர்கள் இருக்கிறார். இதையெல்லாம் பார்த்திருக்கிறேன்.

நம்முடைய விவாதங்கள் எல்லாம் கொள்கை அடிப்படையில் விவாதங்களாக இருந்தால் அது நல்லது. ஒரு சில சந்தர்ப்பங்களில் நான் வெளியே கூட உட்கார்ந்துகொண்டு இருப்பேன். அம்மையார் கூடச் சொல்வார்கள் வெளியே உட்காருவதற்கா சம்பளம் கொடுக்கிறார்கள் என்று. நான் வேதனையோடு சொல்கிறேன். பலர் அங்கே வருவார்கள். வேடிக்கையாகப் பேசிக்கொண்டு இருப்பேன். நான் என் இதைச் சொல்கிறேன் என்றால், சாட்டப்பட்டிருக்கிற குற்றம் அது எவராக இருந்தாலும் கூட ஒரு சந்தர்ப்பத்தில் சர்க்காருக்கு சாதகமாகவும், இன்னொரு சந்தர்ப்பத்தில் எதிர்க் கட்சிக்கு சாதகமாகவும் இருந்திருக்கிறார் என்று சொல்வ

[திரு. மணலி சி.. கந்தசாமி] [1974 மார்ச் 29

தற்கு இடமிருந்திருக்கிறது. சபையிலே சபாநாயகருக்கு மட்டும்தான் பொறுப்பு என்பதல்ல. சபையிலே எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதிலே எதிர்க் கட்சிக்காரர்களுக்கும் பொறுப்பு உண்டு என்று சொல்கிற அளவிலே ஒரு கொள்கைப் பேராட்டம் எதிர்க் கட்சிக்காரர்கள் தங்களுடைய குற்றங் குறைகளை எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதற்கு அரசியல் சட்டத்திலுள்ள விதி முறைகள் இருக்கின்றன.

சென்ற ஒரு வருஷ காலத்தில் குறிப்பாக அண்ணு தி.மு.க. பிறந்த தற்குப் பிறகு அரசியலிலே ஒரு கொள்கையற்ற சூழ்நிலை உருவாகி யிருக்கிறது என்று சொல்லக்கூடிய வகையிலே மிகக் கடினமான சூழ் நிலையிலே அவர் சபாநாயகராக இருந்திருக்கிறார் என்ற காரணத்தாலே இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதற்கில்லை என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவரவர்களே, மாண்புமிகு மணலி கந்தசாமி பேசும்போது நான் குறுக்கிடக் கூடாது என்பதற்காக பேசாமல் இருந்தேன். எதிர்க் கட்சிக்காரர்கள் கொண்டுவரும் பாயிண்ட் ஆப் ஆர்டரில் உண்மையான பாயிண்ட் ஆப் ஆர்டர் எதுவுமில்லை என்று குறிப்பிட்டார். நான் இரண்டு சந்தர்ப்பங்களை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : லெஜிஸ்லேச்சர் டிமாண்ட் வரும்போது பேசுங்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, மிகவும் வேதனை யோடு நாங்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து எங்கள் கருத்தைக் கூறு வதற்கு உள்ளவர்களாக இருக்கிறோம். பெரிய பொறுப்பினை வகிக்கின்ற சபாநாயகர் மீது இந்த மாதிரி ஒரு தீர்மானம் கொண்டுவந்து அதிலே பேசி ஒரு சில கருத்துக்களைச் சொல்வது என்று சொன்னால் மிக வேதனைக்குரிய விஷயந்தான்.

ஆனால் சபாநாயகர் பதவியிலே இருக்கிறவர்கள் எல்லாம் என்ன முறை யிலே இருக்க வேண்டுமென்று எனக்கு முன்பு பேசியவர்கள் அனைவரும் நல்ல நல்ல கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். எதிர்த் தரப்பிலே இருந்து உயர்ந்த கருத்துக்களைச் சொன்னார்கள் உயர்திரு கந்தப்பன் அவர்கள். நானும் அதற்கு எங்கள் கருத்துக்களைக் கூறுகிற வகையில் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

உயர்திரு கந்தப்பன் அவர்கள் அந்தத் தீர்மானத்தை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். இது அரசியல் காழ்ப்புணர்ச்சியோடும், உள்நோக்கத்தோடும் செய்யப்பட்டிருக்கிறது என்று பல ஆட்சேபணைகளை எடுத்துக் கூறினார்கள்.

எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் எங்கள் குற்றச்சாட்டை ஸ்பெசிஃபிகாக, நேரடியாக, அந்தரங்கமாகக் கூற இருக்கிறோம் என்பதை சுட்டிக்காட்டி கடமைப்பட்டவர்களாக இருக்கிறேன். அதையெல்லாமல்லாமல் ஒளிவு மறைவில்லாமல் ஒரு உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டும்.

1974 மார்ச் 29] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

பேரவைத் தலைவர் பதவி அரசியல் சட்டப்படி உயர்ந்த பதவியாகும். அதை யாரும் குறைத்துப் பேசுவதற்கு இங்கே வரவில்லை.

ஆனால், அரசியல் சட்ட காவலர் என்ற முறையில் சபை நடக்கிறதா, சபாநாயகர் நடந்துகொண்டிருக்கிறாரா என்று நினைத்து நாமெல்லாம் அந்தரங்க சுத்தியோடு நடந்துகொள்வதுதான் பொறுப்புணர்ச்சியாகும். நான் இந்த சமயத்தில் டெபுடி ஸ்பீக்கர் தேர்வுக்கு என் வழிவகை செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை சுமத்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சமயத்தில் அரசியல் சட்டத்தின் 178-வது பிரிவைக் குறிப்பிட விரும்புகிறேன்.

'Every Legislative Assembly of a State shall, as soon as may be, choose two members of the Assembly to be respectively Speaker and Deputy Speaker thereof and, so often as the Office of Speaker or Deputy Speaker becomes vacant, the Assembly shall choose another member to be Speaker or Deputy Speaker, as the case may be

என்று இருக்கிறது. ஆனால் இங்கு நேர்மையாக அண்ணா வழியிலே நடக்கிறோம் என்று எப்போதும் பிரச்சாரம் செய்துகொண்டிருக்கிற நமது ஆளுகிற தரப்பினர்கள் இதை ஒழுங்காக நடத்தியிருக்கிறார்களா என்பதை நீங்கள் அந்தரங்க சுத்தியோடு ஆலோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் அமைப்புப்படி டெபுடி ஸ்பீக்கர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் இந்த மன்றத்திலே இன்று தலைமை தாங்கியிருப்பார்கள். ஆனால் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் இந்தச் சபையை தலைமை தாங்கி நடத்த வேண்டியிருக்கிறதே என்று நினைக்கும்போது நான் உள்ளபடியே வருந்துகிறேன்.

எனென்றால் அவர்களுக்குக் கொடுத்த தொல்லைகள் எல்லாம் கொஞ்சநஞ்சமல்ல. அவர்கள் அதையெல்லாம் நல்ல உள்ளத்தோடு தாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைய நிகழ்ச்சிகள் மாதிரி எத்தனை நாட்கள் நடந்திருக்கின்றன. நம்முடைய சபாநாயகர் அவர்கள் அப்பொழுதெல்லாம் உல்லாசமாக தலைமைப்பீடத்திலே உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். என்றைக்காவது அவற்றையெல்லாம் கட்டுப் படுத்தியிருக்கிறார்களா ? ஆளுங்கட்சியாக இருந்தாலும்சரி, எதிர்க் கட்சியாக இருந்தாலும்சரி சமநீதி என்ற முறையிலே நடத்தப்பட வேண்டுமென்று பலமுறையும் அவர்களிடத்திலே எடுத்துக் கூறியிருக்கிறோம்.

எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் எவ்வளவு மரியாதை யாகவும் கண்ணியத்தோடும் நடந்துகொண்டிருக்கிறோம் என்பது நாடறிந்த உண்மையாகும். இந்த மன்றமும் உணரும், சபாநாயகருக்கே தெரியும்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 29

ஆளுங்கட்சியிலே ஒரு சில செல்லப்பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் யார் என்று நான் சொல்ல விரும்பவில்லை.

உதாரணத்திற்குச் சொல்கிறேன், திரு. வீராசாமி அவர்கள் கோபித்துக் கொள்ள மாட்டார் என்று நினைக்கிறேன், அவர் எதோ சூப்பர் அமைச்சர் மாதிரி முந்திரிக்கொட்டை மாதிரி பல நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார்கள். நான் அப்படிச் சொல்வதை நீங்கள் பொறுத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் அரசாங்கத்திற்காக திறம்பட ஒரு வழக்கறிஞர் போல வாதிட்டுக்கொண்டிருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை.

தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் ஒரு தனிச் சலுகை தரப்படுகிறது, நான் அவர்களுடைய பெயரைச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் என்னுடைய பெயரை அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகையால் நானும் திருப்பி அவர்களுக்குக் கொடுப்பது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். நான் அடக்கத்தோடு சொல்லிக்கொள்வேன். என்னுடைய திறமை எனக்குத் தெரியும். நான் ஒரு பெரிய திறமைசாலி இல்லை. என்னுடைய நிறமையை குறைத்துச் சொல்வதற்கு உங்களுக்குப் பூரண உரிமை இருக்கிறது. ஆனால் அவர்கள் ஆளுங்கட்சிக்கு தோழமைக் கட்சியாக இருக்கலாம், வழக்கறிஞராக இருக்கலாம், அரசியல் சட்டத்திலே எல்லாம் பரிபூரணம்பெற்ற ஞானியாகக்கூட இருக்கலாம், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யருக்கு மேலேயோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. அவர்கள் உங்களுடைய ஜூனியராக இருக்கிறேன், உங்களை நான் சீனியராக பாவிக்கிறேன் என்று எள்ளிநகையாடக்கூடிய வகையிலே பேசவேண்டாம் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்திப் : நான் நல்ல எண்ணத்தோடு திரு. பொன்னப்ப நாடார் அவர்களை மதிப்பவன், நான் அவர்களை எள்ளிநகையாட வேண்டுமென்று நிச்சயமாக உள்ளத்தாலும், சூசகமாகவும் நினைக்கவில்லை. அவர்கள் என்னை எள்ளிநகையாடுவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. அவர்களை நான் என்றைக்கும் மதிக்கிறேன். இவ்வளவு தூரம் அவர்கள் தவருகப் புரிந்துகொண்டு பேசுவது நல்லதல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நான் திரு. லத்திப் அவர்களை எந்தவிதமாகவும் இழித்தோ, பழித்தோ பேசவேண்டுமென்ற எண்ணத்தோடு சொல்லவில்லை. நீங்கள் இந்த மன்றத்திலே நல்ல உறுப்பினராகச் செயலாற்றுகிறீர்கள், ஆனால் மற்ற உறுப்பினர்களைப்பற்றிப் பேசும்போது கொஞ்சம் நிதானமாகப் பேசவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களைப்பற்றி ஒரு சில வாசகங்கள் ஆத்திரத்திலே கூறிவிட்டார்கள். இதையெல்லாம் அவர்கள் இப்போது ஆலோசித்துப் பார்த்தால் அவை எவ்வளவு கோபமானவை, எவ்வளவு கடினமானவை, எவ்வளவு ஆத்திரமானவை என்பதை அவர்களே உணர்வார்கள் என்று கூறி அதை அப்படியே விட்டுவிடுகிறேன். அதை மேலும் விவாதிப்பது அதிகப் பயன் தராது.

1974 மார்ச் 29] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

சபாநாயகரைப் பொறுத்தவரையிலும் பல குற்றச்சாட்டுகளைச் சுட்டிக்காட்டுவதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அரசியல் சட்டப்படி நடந்துகொள்ளத் தவறியிருக்கிறார்கள்.

உதவி சபாநாயகர் அவர்கள் தேர்தலை நடத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்கள் தவறியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒழுங்குப்பிரச்னைபற்றி இங்கே காரசாரமாக பலர் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக பெரியவர் மலை அவர்கள் நாங்கள் எல்லாம் தீர்மானத்திலே கையெழுத்துப் போட்டிருந்தாலும் கொள்கையிலே வேறுபாடு இருக்கிறது, கருத்து வேறுபாடு இருக்கிறது, ஒற்றுமையில்லை என்று சொன்னார்கள்.

கருத்துவேறுபாடுகள் அரசியலில் இருக்கலாம். இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையிலும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை என்பதைத் திட்டவட்டமாக ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுமக்களின் அபிப்பிராயங்களைப் பிரதிபலிக்கின்ற கண்ணாடியாக உறுப்பினர்கள் இங்கே செயலாற்றி வருகிறோம். அதற்குத் தலைமை தாங்கி காவலராக நம்முடைய உறுப்பினர்களுடைய உரிமைகள் அத்தனையையும் பாதுகாப்பதற்காக சபாநாயகர் ஒருவரை உயர்ந்த பதவியிலே அமர்த்தியிருக்கிறோம். என்ன முறையிலே அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள் ?

மேனாடுகளிலே, இங்கிலாந்து தேசத்திலே ஸ்பீக்கர் பதவிபற்றி பலவித மான கருத்தோட்டங்கள் முன்பு இருந்தன. அவற்றிலே ஒன்றிரண்டு இந்தச் சந்தர்ப்பத்திலே கூறுவது பொருத்தமாக இருக்கும் ; பாராளு மன்றத்திலே ஸ்பீக்கரைப் பொறுத்தவரையில்

He was a stooge of the Monarch, now he is a stooge of the party in power

என்று சொல்வார்கள்.

அதாவது மன்னருக்கு ஏஜண்டாக இருந்தார்கள் என்று சொல் வார்கள். அதை இப்பொழுது மாற்றி எந்தக் கட்சி அதிகாரத்தில் இருக் கிறதோ அந்தக் கட்சியின் ஏஜண்டாக ஸ்டூஜாக இருக்கிறார்கள் என்று ஆங்கிலத்திலே கூறியிருக்கிறார்கள்.

மத்திய பாராளுமன்றத்திலே 1954-ல் ஒரு விவாதம் நடந்தபோது அதைப்பற்றியெல்லாம் நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சபாநாயகர் எப்படி இருக்கவேண்டுமென்பதற்காக இலக்கணங்களை யெல்லாம் பல பெரியவர்கள் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அதிலே ஒன்றை நான் படிக்க விரும்புகிறேன்.

Here is a man who will fight for your right, fight for you without any sense of loyalty to his party,

என்று கூறியிருக்கிறார்கள்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 29

அதாவது கட்சிக்கு அப்பாற்பட்டு இந்த மன்றத்திற்காக வேண்டி இந்த மன்றத்தின் உறுப்பினர்களுக்காகவேண்டி திறம்பட நடத்தக்கூடிய ஒருவராக சபாநாயகர் இருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

சபாநாயகர் ஒரு வழக்கறிஞராக இருக்கவேண்டுமென்று நான் வாதாட வில்லை. வழக்கறிஞர்களாக இல்லாதவர்கள் எல்லாம் சிறந்த சபா நாயகர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

நல்ல நடுநிலைமையோடு இன்று நடக்கிறதா என்றுல் இல்லை, இல்லை, இல்லை என்று கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். இப்பொழுது நாங்கள் எல்லாம் எதிர்க்கட்சியிலே இருக்கிறோம், நிரந்தரமாக நாங்கள் எல்லாம் எதிர்க்கட்சியிலே இருப்போம் என்று ஆளுங்கட்சி நம்பவேண்டாம். எதிர்க்கட்சி ஆளுங்கட்சியாக வரலாம், ஆளுங்கட்சி எதிர்க்கட்சியாக வரலாம்.

சபாநாயகர் இரு சாராருக்கும் நீதியை நடுநிலையோடு வழங்கக்கூடிய நிலைமையிலே இருக்கவேண்டும்.

ஒழுங்குப்பிரச்னைப்பற்றி நான் முன்பு குறிப்பிட்டேன்.

அடுத்ததாக இன்னொரு கருத்தையும் கூறவேண்டுமென்று நான் நினைக்கிறேன். பலரும் 83-வது விதியின் அடிப்படையிலே ஒழுங்குப் பிரச்னைகள் எழுந்து, கூற அனுமதிப்பதில்லை. அவர்கள் கூறுவதைக் கேட்டு அதிலே ஒழுங்குப் பிரச்னை இருக்கிறதா இல்லையா என்று பார்த்துவிட்டு பிறகு தீர்ப்புச் சொல்லலாம்.

அவர்கள் சொல்வதைக்கூடக் கேட்காமல் அதற்கு முன்பாக நிச்சயமாக ஒழுங்குப் பிரச்னை இதிலே இல்லை என்று சொல்வதற்கு எப்படி முடியும்? ஒரு சில அங்கத்தினர்கள் எழுந்து பேசுவதற்கு முன்னதாகவே There is no point of order என்று மணியடித்து உட்கார வைப்பது நியாயந்தானு என்று கேட்க விரும்புகிறேன். சற்றுப் பொறுமையோடு கேட்டுக்கொள்ளவேண்டும்.

ஒரு சில உறுப்பினர்கள் ஆத்திரமாகப் பேசுவார்கள், நான் இல்லை யென்று சொல்லவில்லை, எல்லோரும் இந்த மன்றத்திலே நடைமுறை விதிகளுக்கு உட்பட்டு நடப்பார்கள் என்று நான் சொல்லவில்லை.

திருமதி அனந்தநாயகி போன்ற உறுப்பினர்களைப் பார்த்து பல முறைகள் இப்படி நீங்கள் நடந்துகொண்டிருக்கிறீர்கள் உட்காருங்கள் என்று சொல்லக் கூடிய அளவிலே இந்த மன்றத்தை நடத்தினால் ஒரு வேளை ஆசிரியர் பிள்ளைகளை நடத்துவது மாதிரி இருக்கிறது. அந்த ஆசிரியர் எங்களை மாணவர்களைப் போல் நடத்த வேண்டாம் என்று சபாநாயகர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒரு அடிப்படையான ஜீவாதாரமான பண்ட மண்டல் ரைட் என்று சொல்லக்கூடிய அளவிலே இருக்கிறது என்று எஸ். எஸ். மூர் பாராளுமன்ற உறுப்பினர் 1954-ல் திறம்பட பல ஆதாரங் களோடு மேற்கோள்களோடு எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

1974 மார்ச் 29] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

ஆகவே, பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லும் நேரத்தில் நீதான மாகச் சிந்திக்க வேண்டும். அதில் பாரபட்சம் காட்ட வேண்டாம். ஆளுங் கட்சி என்றேரு, எதிர்க் கட்சி என்றேரு இந்த மன்றத்தைப் பொறுத்த வரையில் சபாநாயகருக்கு இல்லே. அவர் எல்லோருக்கும் பிரதிநிதியாக, எங்களுக்குத் தலைவராக இருக்கிறார்கள் என்ற கருத்தை இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக எதாவது எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டுமென்றால் 83 (8)-லே ஒரு பகுதி இருக்கிறது, அதையும் இந்த மன்றத்திற்கு படித்துப் காண்பிப்பது பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறேன்.

The Speaker may order the expunction of any portion of proceedings of the House relating to any point of order by the members when in his opinion it is an abuse of the right of raising a point of order.

அதில் இப்படித் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அதே மாதிரி அடுத்தபடியாக எக்ஸ்பங்ஷன் எப்படி இருக்க வேண்டுமென்று ரூல் 235-லே கூறியிருக்கிறது. அந்தக் கருத்தையெல்லாம் எனக்கு முன்னால் பேசிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், மற்ற பெரியவர்களும் வன்மையாகவும், திறமையாகவும் வாதாடி இருக்கிறார்கள். நான் அதை மறுபடியும் அவ்வளவு வேகத்தோடு வாதாட வேண்டுமென்று நினைக்க வில்லே. ஆனால் அதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்த விதிகள் சரியாகப் பின்பற்றப்படவில்லே.

அந்த விதியில் **expunging of words** என்று இருக்கிறது. அதுமட்டு மல்ல, என்ன செய்யவேண்டுமென்ற விவரங்களெல்லாம் அதிலே கூறியிருக்கிறார்கள்.

If the Speaker is of opinion that a word or words has or have been used in debate which is or are defamatory or indecent, or unparliamentary or undignified, or grossly irregular, he may in his discretion, order that such word or words be expunged from the official report of the proceedings of the House and all consequential alterations made in such report and make an announcement in the Assembly of the fact of his having made such order.

என்று கூறியிருக்கிறது. அதற்குப் பிறகு அந்த வழிமுறைகளும் விதி முறைகளும் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் இங்கு நடப்பது என்ன என்பதை நாம் எல்லோரும் சிந்திக்க வேண்டும். எக்ஸ்பங்ஷனைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்தில் நடந்த நிகழ்ச்சிகளே என்னால் மறக்க முடியாது. அன்றைக்கு உயர்திரு மதியழகன் அவர்களே சபாநாயகர் பதவியிலிருந்து நீக்கம் செய்தபொழுது டெப்டி ஸ்பீக்கர் திரு. சீனிவாசன் அவர்கள் கீழே உட்கார்ந்து, அவர் களுடைய தலைமையிலே நடந்ததையெல்லாம் நான் எக்ஸ்பஞ்ச் செய்கிறேன என்று ஒருபுறம் சொல்ல, சீனிவாசன் நடத்திய நிகழ்ச்சிகளெல்லாம் சரி யில்லே, அவைகளே நான் எக்ஸ்பஞ்ச் செய்கிறேன் என்று இவர் சொல்லும் நிகழ்ச்சிகளெல்லாம் இந்த மன்றத்தில் நடந்தது.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 29

அன்றைக்கு நடந்த முறையை என்னால் மறக்க முடியாது. இந்த மாதிரி நம் நாட்டில் வேறு ஒரு சட்டமன்றத்தில் நடந்திருக்க முடியாது.

ஒரு வேளை மற்ற சட்டமன்றங்களிலே பீஹார் போன்ற இடங்களிலே சண்டை சச்சரவுகள் வந்தது என்று பார்க்கும்பொழுது நான் மிகவும் வேதனைப்படுகிறேன்.

இந்த மாதிரி நிகழ்ச்சி நமது தமிழ் நாட்டிலேயும் வந்துவிட்டதே என்று நாங்கள் எல்லோரும் உள்ளபடியே வருத்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். எக்ஸ்பங்ஷன் என்று செய்வதில் ஆர்பிட்ரரியாக உபயோகிக்காமல் "ஜெனரல் டிஸ்கிரிஷன்" என்ற முறையிலே நல்ல முறையில் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 82-வது விதியைப்பற்றி ஒன்று கூற வேண்டுமென்று நினைக்கிறேன். 82-வது விதி என்னால் அமைச்சர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் எழுந்து ஸ்டேட்மெண்ட் சொல்வதற்கான சந்தர்ப்பம் நமது ரூலிலே இருக்கிறது என்று நான் கருதவில்லை. அமைச்சர்கள் ஸ்டேட்மெண்ட் கொடுக்க வேண்டுமானால் அதை நமது ஆர்டர் லீட்டிலே, லிஸ்ட் ஆஃப் பிசினஸிலே போட்டு, என்ன சொல்லப்போகிறார்கள் என்று மன்றத்தில் அறிவிக்க தாங்கள் உதவியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் அதுவொரு தவறான கருத்திலே கொண்டு சென்றுவிடும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அது இந்த ரூல் 42-ஐப் பொறுத்தது. நமது மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் 1973-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 3-ஆம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அந்தத் தேர்தலிலே நாங்களெல்லாம் அன்றைக்குத் தேர்தலிலே கலந்துகொள்ளவில்லை என்று ஒருசில காரணங்களுக்காக தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதை நான் திரும்பவும் கூறவேண்டுமென்று நான் நினைக்கவில்லை. ஆனால் இந்த ரூல் 42-ஐப் பொறுத்தவரையில் எவ்வளவு காரியங்கள் நடந்திருக்கின்றன என்பதை நமது சட்டமன்றத்திலே தந்திருக்கிற, Review புத்தகத்தில் உள்ள ஒருசில தகவலை நான் இந்த மன்றத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆகஸ்ட் 2-ஆம் தேதியிலிருந்து 14-ஆம் தேதி வரையில் நடந்த அந்த நிகழ்ச்சியை இந்தப் புத்தகத்திலே கொடுத்திருக்கிறார்கள்.

During the period 140 notices of adjournment of business of the House were brought before the House and the Hon. Speaker withheld his consent to raise the same.

என்று சொல்லியிருக்கிறார்கள். மூன்று தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானங்கள் எல்லாம் சாதாரணமான காரியங்களா என்றால் நிச்சயமாக இல்லை.

உதாரணத்திற்கு நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். 1973-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 7-ஆம் தேதி, 10, 11 உறுப்பினர்கள் சேர்ந்து முக்கிய விஷயத்தை இந்த மன்றத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள்.

To discuss about the arrest of members of the Action Committee of the Tamil Nadu Agriculturists' Association on 2nd August 1973 near Fort St. George.

1974 மார்ச் 29] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

இம்மாதிரி பல காரியங்களுக்கு, முக்கியமான காரியங்களுக்கு—தனிப் பட்ட காரியங்கள் அல்ல—மாநிலம் முழுதும் பற்றி விவாதிக்கக் கூடிய நல்ல காரியங்களை எடுத்துக் கூறியிருக்கிறது.

ஆனால் அதிலே ஒரு அட்ஜர்ன்மெண்ட் மோஷனையாவது சபாநாயகரவர் கள் அனுமதித்திருக்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை.

அதேபோல் அடுத்த தடவை நடந்த நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். 1973-ஆம் ஆண்டு நவம்பர் 19-ஆம் தேதி முதல் டிசம்பர் 4-ஆம் தேதி வரையில் நடந்ததிலே நான் இந்த அட்ஜர்ன்மெண்ட் மோஷனைப் பற்றிய விவரங்களைக் கொடுக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

During the period 17 notices of motion for adjourning the business of the House were made before the House and the Hon. Speaker withheld his consent to raise the same.

என்று சொல்லி 17 நோட்டீஸ்கள் கொடுத்திருக்கிறது. இங்கு கூடுவார்கள் அந்த நோட்டிஸையெல்லாம் அறையிலேயே தள்ளிவிடலாம், அவையிலே அதைப்பற்றிக் கேட்கக்கூடாது என்ற முறையிலே வாதங்களை இங்கே பலமுறையும் தலைவர் கூறியிருக்கிறார்கள். அதை நாங்கள் ஒத்துக்கொள்ள வில்லை. அதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

உதாரணத்திற்குக் கூற வேண்டுமானால், மத்திய பாராளுமன்றத்திலே ஃப்ராங்க் அந்தோனி என்பவர் சபாநாயகர் நீக்கப் பிரச்சினையில் தன்னு டைய ஒருசில கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அதைத் தங்கள் அனு மதியின் பேரில் இங்கே படிக்கலாம் என்று கருதுகிறேன்.

Practically every adjournment motion was read in the House. Even if it was a frivolous adjournment motion obviously irrelevant adjournment motion, he read it to the House. And I say that it is a right that we should insist on. We have never had it, but it is a right which we should insist on and then all my hon. friends' grievances would be given a comple e Quietus that any adjournment motion should be read because it is not sufficient to say that somebody can dispose of it in his Chamber.

என்ற கருத்தைத் தான் ஃப்ராங்க் அந்தோனியைப் போன்ற திறமையான நல்ல வழக்கறிஞர்களாக இருப்பவர்கள், நல்ல பார்லிமென்டேரியனாக இருப்பவர்கள், திறமையாக வாதாடுபவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஒருவேளை சொல்லலாம், மத்திய பாராளுமன்ற விதிமுறைகளை நிச்சய மாக நாம் பின்பற்ற வேண்டிய தேவையில்லை என்று கூறலாம்.

ஆனால் அதிலே உள்ள கருத்தின் ஆழத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 29

எனென்றால் ஒரு உறுப்பினர் அட்ஜர்ன்மெண்ட் மோஷன் கொடுக்கிறார் என்றால் அது நிச்சயமாக அரசாங்கத்தின் கவனத்தையும், பொது ஜனங்களின் கவனத்தையும் ஈர்ப்பதற்காகத் தான் அந்த தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். "சென்ஷர் மோஷனைப்" போல் எடுத்துக் கொண்டு அதைப்பற்றிக் கூற வேண்டும்.

இங்கே கூறினார்கள், ஆளுங்கட்சியிலே இருப்பவர்களுக்கு சமயம் அதிகமாகக் கொடுக்கப்படவில்லை, எதிர்க் கட்சியிலே இருப்பவர்களுக்குத் தான் அதிகச் சலுகையை சபாநாயகர் கொடுத்துக்கொண்டிருக்கிறார் என்று உயர்திரு கந்தப்பனைப் போன்ற பெரியவர்கள் கூறுவார்கள் என்றால் உள்ளபடியே நாங்கள் அதற்காக வருத்தப்படுகிறோம். வேதனைப்படுகிறோம். வேண்டுமானால் இந்தச் சட்டமன்றத்தின் காலத்தை இரண்டு மாதங்கள் அல்லது மூன்று மாதங்கள் கூட்டுவதிலே எங்களைப் போன்றவர்களுக்கு ஆட்சேபணை இல்லை.

ஆனால் ஆளுங்கட்சியாக இருக்கின்ற அமைச்சர்கள் அதற்குத் தயாராலால் நாங்களும் தயார், இப்பொழுதும்கூட தயாராக இருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்கள் தொகுதிப் பிரச்னையை எடுத்துக் கூற முடியவில்லை. நாங்கள் தொகுதிக்குச் செல்ல வேண்டாமா, எங்கள் தொகுதியில் ஓடை இல்லையா, வாய்க்கால் இல்லையா என்றெல்லாம் கேட்டார்கள்.

(மாலை 5·30)

மிகவும் உருக்கமாகக் கேட்டார்கள். நான் இல்லையென்று சொல்லவில்லை. தொகுதியைப் பற்றியெல்லாம் சொல்லுவதற்கு உங்களுக்கு நிரம்ப சந்தர்ப்பம் இருக்கிறது. அதிகாரம் அத்தனையும் உங்களுடைய அமைச்சர்கள் கையில் இருக்கிறது. அவர்கள் கையெழுத்துப் போட்டால், உத்தரவு பிறப்பித்தால் நிச்சயமாக நடக்கும். எதிர்க் கட்சியில் இருக்கும் நாங்கள் அழுதாலும் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு கருத்தும் இருக்கிறது. ஒருவர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்றால் அவர் தொகுதிக்கு மட்டுமல்ல, ராஜ்யம் முழுவதற்கும் அவர்கள் பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள். He is a representative of the country. எட்மண்ட் பர்க் போன்ற பெரிய மேதைகள் எல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நமக்கு ராஜ்யம் முழுமைக்கும் இருக்கும் பிரச்னைகள் அத்தனையையும் எடுத்துக் கூறச் சந்தர்ப்பம் இருக்கிறது. ஆகையால் நாம் இந்த ராஜ்யத்தின் பிரதிநிதிகளாக இருக்கிறோம்; பொது ஜனங்களின் பிரதிநிதிகளாக இருக்கிறோம். ஆகவே, பொது ஜனங்களின் அபிப்பிராயத்தைத் திறப்பட பிரதிபலிப்பதற்கு முற்பட வேண்டுமென்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அடிப்படையில் பார்த்தால் நமது மன்றமானது அப்படி நடக்கிறதா என்றால் இல்லை. இது இரு கூறாக நடந்து கொண்டே இருக்கிறது.

1974 மார்ச் 29] [திரு. ஆர். பொன்னம்பல நாடார்]

ஸ்பீக்கரைப் பொறுத்தவரை எவ்வளவு பொறுப்பாக, சிறப்பாக இருக்க வேண்டுமென்பதையெல்லாம் இங்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் நடுநிலைமையாக இருக்க வேண்டுமென்பது மட்டுமல்லாமல் அவர்கள் இந்த மன்றத்தின் உறுப்பினர்களுடைய எல்லா உரிமைகளையும் பாதுகாக்கின்ற காவலராகவும் இருக்க வேண்டுமென்று எடுத்துக்கூறப்பட்டிருக்கிறது.

இன்னொரு விஷயத்தையும் கூற விரும்புகிறேன். கேள்வி கேட்பதில் பல சங்கடங்களை எடுத்துக் கூறினார்கள். ஸ்பீக்கருடைய "ஐ"யை காச் பண்ணவேண்டும். Catching the eye of the Speaker பாராளுமன்ற முறைப்படி பல காரியங்களை இருக்கின்றன. பிரிட்டிஷ் பார்லிமெண்டின் முதல்வராக இருந்த பால்டுவின் ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார்கள்.

The eye of the Speaker is the most elusive thing nature has ever created என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவில் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இருந்தால் இங்கு என்ன முறையில் இருக்கிறது என்று நாமே சற்றுச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பொதுவாக, இந்த மாதிரி பல உறுப்பினர்கள் கேள்வி கேட்பார்கள். எல்லாம் அந்தக் கேள்வியை ஒட்டியதாக இருக்காது. கேள்வியை ஒட்டிய தாக இல்லையென்று சொன்னால் ஸ்பீக்கர் மறுப்புத் தெரிவிப்பது கடமை என்பதை உணருகிறோம். ஆனால் மன்றத்தில் இருப்பவர்கள் நேர்மாறாக நடந்து கொண்டிருப்பதை கண்டிக்கும் காரியத்தைச் சபாநாயகர் செய்ய வில்லை என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

பெரியவர் மணலி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த மன்றத்தில் சத்தம் போடுகிறவர்களுக்கும் சண்டை போடுகிறவர்களுக்கும் தான் இடம் இருக்கிறது என்ற கருத்தை எடுத்துக் கூறினார்கள். அப்படி யானால் ஒன்று கூற விரும்புகிறேன். அப்படிச் சத்தம் போடுகிறவர்கள் எந்தப் பகுதியில் இருந்தாலும் வன்மையாகக் கண்டிக்க சபாநாயகர் தவறி இருக்கிறார்கள் என்பதை மறைமுகமாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள், அந்தக் காரணத்தாலே சபாநாயகராக இருப்பதற்கு லாயக்கில்லை என்று கூற விரும்புகிறேன்.

இன்னும் பல காரியங்கள் இருக்கின்றன. பொதுவாக, இந்த மன்றத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை எல்லாம் உற்றுக் கவனித்துப் பார்க்கிறபோது நம்முடைய தரம் குறைந்து கொண்டே போகிறது. மற்றைய மாநிலங்களில் இருப்பது மாதிரி நம்முடைய சட்டமன்றத்தையும் ஆக்கிவிடக்கூடாது. அதிலே நமக்குப் பெரும் பொறுப்பு இருக்கிறது என்பதையும், பொறுப் புணர்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டுமென்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சபாநாயகர் அவர்கள் இன்று ஆளும் கட்சிக்கு ஒரு நீதி, எதிர்க்கட்சிக்கு ஒரு நீதி என்ற முறையில் நடந்து கொள்ளுகிறார்கள் என்று எங்களுடைய உறுப்பினர்கள் பலரும் பல தடவை சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அதைச் சற்று நிதானத்தோடு குற்றச் சாட்டாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 29

எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கு அதிக அவகாசம் வேண்டும். ஆளும் கட்சியை இடித்துப் பேச எதிர்க் கட்சிகளுக்கு அதிக அவகாசம் வேண்டும். அப்படியானால்தான் ஆட்சியில் இருக்கும் தவறுகள் அத்தனையையும் சுட்டிக்காட்ட சந்தர்ப்பம் ஏற்படும். அதற்கு சபாநாயகர் அவர்கள் அனுமதி வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தச் சபாநாயகர் என்ன முறையில் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி எல்லாம் பலரும் பல கருத்துக்களைக் கூறினார்கள். அவர்கள் கட்சிக் கண்ணோட்டத்தோடு நடந்து கொண்டிருக்கிறார்கள். இதுகாறும் கட்சியிலிருந்து ராஜினமா செய்யவில்லை என்று எடுத்துக் கூறினார்கள்.

உண்மையில் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அந்தக் கட்சியிலிருந்து ராஜினமாச் செய்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

சபாநாயகராக இருக்கும் அன்னூர் அவர்கள் ஒருசில காலம் அரசியல் வனவாசம் நடத்தினார்கள். நான் அதையெல்லாம் விமர்சிப்பதற்கு வரவில்லை. அதற்கு என்ன காரணமோ, அது உங்கள் கட்சிப் பிரச்சினை. அதைப் பிரச்சினையாகக் கொண்டு வரவில்லை.

டபிள் யார்ட்ஸ்டிக்–இரண்டு நீதி நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். பல முறைகளில் குறிப்பிட வேண்டிய நிலைமை இருக்கிறது.

ஒரு மன்ற உறுப்பினரை வெளியேற்ற வேண்டுமென்று சொன்னால் சற்று ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும். Recalcitrant member ஆக இருந்தால் ஜாக்கிரதையாக அதிகாரத்தை உபயோகிக்க வேண்டும். ஒரு வேளை அந்த அங்கத்தினர் பிடிக்காதவராக இருக்கலாம். வேண்டுமென்றே செய்து கொண்டிருக்கிறார் என்றால் ஒரு வார்னிங் கொடுக்கலாம்; இரண்டு வார்னிங் கொடுக்கலாம். அதற்குப் பிறகு வேண்டுமென்றால் இந்த மன்றத்தில் உள்ள தலைவர்கள் அவ்வளவு பேரையும் கூட்டி என்ன கருத்தைச் சொல்லுகிறார்கள் என்று சொல்லி அதிலும் முடியவில்லை என்றால் நிச்சயமாக ஒரு உறுப்பினரை வெளியேற்றுவதில் எங்களைப் போன்றவர்களுக்கு ஆட்சேபணை இல்லை.

ஒரு உறுப்பினர் கொஞ்சம் சூடாக, சுவை இல்லாமல் வாதிட்டாலும் உடனடியாக வெளியேற்ற வேண்டுமென்று சபாநாயகராக இருக்கும் தாங்கள், பெரிய பொறுப்பையும், அவ்வளவு உரிமைகளையும் பெற்றிருக்கிற தாங்கள், வெளியேற்றுவதற்கு உத்தரவு போடுவது பொருத்தமல்ல என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

இந்த முறையில் பார்த்தால் எதிர்க் கட்சிகளாக இயங்குகின்றவர்களுக்குப் பல கஷ்டங்கள், தொல்லைகள் இருக்கின்றன.

1974 மார்ச் 29] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

ஆளும் கட்சியில் இருப்பவர்கள் எதிர்க் கட்சியில் இருக்கும் ஒருசில நபர்கள் எழுந்தவுடனேயே எல்லோரும் சேர்ந்து கொண்டு "என்னடா?" என்று சொல்லக் கூடிய சந்தர்ப்பங்கள் எல்லாம் நடந்தன என்பதற்காக வேதனைப் படுகிறேன்.

எதிர்க் கட்சியில் இருப்பவர்களே ஆளும் கட்சியில் இருப்பவர்கள் வலுச் சண்டைக்கு இழுக்கிறார்களே என்று பார்க்கும்போது உண்மையில் வேதனைப்படுகிறேன்.

இந்த மன்றத்தின் மரபைக் கட்டிக் காத்திட நாம் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். அந்தப் பொறுப்பை நல்ல முறையில் உணர்ந்து சபாநாயகர் அவர்கள் நடந்திட வேண்டும். ஆளும் கட்சிக்காரர்களாக இருந்தால் அவர்களே விட்டு விடுவது என்றும், எதிர்க்கட்சியில் இருப்பவர்களாக இருந்தால் வெளியேற்றுவதும் பொருத்தமானது அல்ல என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அண்மையில் நடந்த விவாதங்களில் பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்போது நீண்ட நாட்களாக நல்ல முறையில் நடந்தது என்றுலும்—அண்மைக் காலத்தில்—இதை அண்டர்லைன் பண்ண வேண்டும்—சரியாக நடக்கவில்லை, மோசமாக நடைபெறுகிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். அதற்கு ஏதாவது காரணம் இருக்குமென்று நினைக்கிறேன். அதையும் சொன்னால் நல்லது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : காரணம் எல்லாம் இந்த நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். அதை எல்லாம் இந்த மன்றத்தில் எடுத்துக்கூறி இந்த மன்றத்தில் எதிர்க்கட்சிகளாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற நாங்கள் மோதிக்கொள்ளத் தேவையில்லை. அந்தச் சண்டையை நாங்கள் வெளியே பார்த்துக்கொள்வோம். அந்தப் பிரச்சினை எங்களுக்குத் தெரிந்த விஷயந்தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த விளக்கத்திலிருந்து நாங்கள் ஒருவாறு புரிந்துகொண்டோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : முதலமைச்சரைப் போன்ற திறமைசாலிகளுக்கு உடனடியாகப் புரிந்து விடும். இல்லை என்று சொல்லவில்லை பொதுஜனங்களுக்குப் புரியுமோ என்னவோ தெரியவில்லை.

நான் உள்ளபடியே மிகவும் வேதனையோடு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறேன். இந்த மாதிரி நிகழ்ச்சியை நடத்துவதற்குக்

கஷ்டமான நிலைமை இருந்தபோதிலும் நடுநிலைமையைக் காக்க பல தடவையும் தவறி இருக்கிறீர்கள்; எங்களுக்குப் போதுமான அவகாசம் கிடைக்கவில்லை என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

ஒரு சில நோட்டீஸ்கள் கையில் இருக்கின்றன. எல்லாவற்றையும் படிக்க வேண்டுமென்று நினைக்கவில்லை ஒரு நோட்டீஸைத் தங்களுடைய அனுமதியின்பேரில் படிக்க வேண்டுமென்று கருதுகிறேன்.

Sub—Notice under Rule 42 of the Assembly Rules re-calculated attempts to damage statues of Gandhiji.

"*Ref.*—Your letter, dated 6—3—1974.

I am to inform you that the Hon. Speaker has withheld consent to raise the matter in the Assembly.....

என்று தந்திருக்கிறார்கள். நாங்கள் எல்லாம், காந்தியடிகள் சிலையை உடைத்ததால் அவர்களுடைய கொள்கையை அழித்துவிட முடியாது என்பதை நம்பக் கூடியவர்கள். ஆனால் சமூக விரோதிகள் இந்த மாதிரியான காரியங்களில் அண்மையில் அதிகமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். சேலத்தில் நடந்திருக்கிறது.

திருநெல்வேலியில் நடந்திருக்கிறது, தென்காசியில் நடந்திருக்கிறது, வேறு பகுதிகளிலும் நடந்திருக்கின்றன என்று எல்லா விவரங்களையும் சொல்லி பல தடவைகள் இந்த முக்கியமான விஷயம்பற்றி இந்த சபையில் விவாதிக்கவேண்டும் என்ற கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறினேன். ஆனால் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதே மாதிரி மின்சாரவெட்டை பொறுத்த வரையில் நாங்கள் எல்லாம் ரூல் 41-ன் படி முதலில் ஒரு தீர்மானம் கொடுத்தோம். ஆனால் அதற்குப் பிறகு ரூல் 42-ன் படி பலரும் கொடுத்தார்கள். ரூல் 42-படி கொடுத்ததை ஏற்றுக்கொண்டு, சட்டமன்றத்தில் அந்த அறிக்கை வந்த பிற்பாடு, ஒரு கருத்தைத் தந்தார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காந்தி சிலை பற்றி கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இங்கே அனுமதிக்கப்படவே இல்லை என்று கூறினார்கள். ஐந்தாறு தீர்மானங்கள் வந்திருக்கலாம். ஆனால் இரண்டொரு தீர்மானங்களுக்கு, காந்தி சிலை உடைப்பு, காந்தி சிலையைக் களங்கப்படுத்திய தீர்மானங்கள் குறித்து இங்கு நான் விளக்கங்கள் அளித்திருக்கிறேன். அதற்குப் பிறகு விவாதித்து அதற்குப் பிறகு அவையை ஒத்திவைக்கவேண்டிய தேவை இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது. ஒன்றிரண்டு விடுபட்டிருக்கலாம். ஆனால் அதற்காக காந்தி சிலை உடைப்பு அல்லது காந்தி சிலையைக் களங்கப்படுத்தியது பற்றி இந்த அவையிலே எதுவுமே பேசவில்லை என்ற தவறான கருத்து பொது மக்களிடையே எற்படக்கூடாது என்பதற்காக இதைக் குறிப்பிடுகிறேன்.

1974 மார்ச் 29

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : 1974 மார்ச் திங்கள் 6ஆம் நாளன்று கொடுத்துள்ளதுபற்றி என் கையில் விவரம் இருக்கிறது. மற்றவை பற்றி என் கையில் விவரம் இல்லை. மின்சார வெட்டைப் பொறுத்தவரையில் எங்கள் கட்சி சார்பாக நான் கொடுத்தேன். வேறு நபர்களும் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் கூறியிருப்பது, என்ன கருத்து கூறப்பட்டது என்றால், "With reference to your letter, I am directed to state that the Hon. Speaker has disallowed the motion given notice of by you on the above subject as the Minister for Electricity has made a statement on 23rd March 1974 on the above subject." என்று சொல்லியிருக்கிறார்கள்.

நாங்களும் இது சம்பந்தமாக தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம். இந்தமாதிரி பல நோட்டீஸ்கள் எல்லாம் இருக்கின்றன. நீதி வழங்கப்படக்கூடிய முறையில் சம நீதி வழங்கப்படவேண்டும். **Not only justice should be done, but justice should appear to be done** என்று சொல்வார்கள்.

அந்த அடிப்படையில் சபாநாயகர் அவர்கள் எங்களுக்கு நீதி வழங்க வில்லை என்ற குற்றச்சாட்டை நான் பகிரங்கமாக கூற கடமைப் பட்டவனாக இருக்கிறேன். எங்களுடைய தீர்மானங்களை எல்லாம் அவையில் படித்து அதற்கு முடிவு செய்யவேண்டும். வேண்டுமானால் அதற்கு அனுமதி மறுக்கலாம். ஆனால் நீங்கள் என்ன காரணங்களைக் கூறுகிறீர்கள் என்பதை நிச்சயமாக சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் நாங்கள் எல்லாம் எல்லா விதமான காரியங்களுக்கும் உடனடியாக அவசியம் இல்லாத காரியங்களுக்கெல்லாம் 42-வது விதியை பிரயோஜனப்படுத்துவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முக்கியமான விஷயங்கள் பற்றி தீர்மானங்கள் கொடுத்தால் எதோ அதற்கெல்லாம் அனுமதி மறுப்பது என்றால் இது ஒரு எதேச்சாதிகார ஹிட்லரின் போக்கு மாதிரி இருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூறிக் கொண்டு எங்களுடைய திறமைக்கேற்றவாறு ஒரு சில கருத்துக்களை எல்லாம் கூறியிருக்கிறோம்.

அதல்லாமல் கிரிமினல் சட்டப்படி சார்ஜஸ் எப்படி இருக்க வேண்டுமோ அதேமாதிரி இருக்கவேண்டும், இதிலே எக்ஸெஸிவ் சார்ஜஸ் இல்லை, ஆகவே அதை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று உயர்திரு. கந்தப்பன் அவர்கள் கூறியதுபோல் அந்தமாதிரி எல்லா காரியங்களுக்கும் அந்தமாதிரி சார்ஜஸ் போல் இருக்கவேண்டிய தேவை இல்லை. **Charges need not be exhaustive; charge need only be illustrative.** என்ற அடிப்படையில் அந்த முறையைத்தான் பின்பற்றியிருக்கிறோம்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 29

அதெல்லாமல் ஒரு குற்றப்பத்திரிகை மாதிரி 1, 2, 3 என்று சொல்ல. குற்றப்பத்திரிக்கைபோல் கூறவேண்டுமென்று நினைக்கவில்லே. பாராளு மன்றத்தில்கூட இதே சம்பிரதாயம்தான் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த வாதங்களே எல்லாம் அன்றிருந்த துணைச் சபாநாயகர் பார்த்து இந்தத் தீர்மானம் ஒழுங்காக இருக்கிறது என்று இந்த மன்றத்திலேயே கூறியிருக்கிறார்கள். ஆகவே இந்தத் தீர்மானம் சட்டவிரோதமானதல்ல. நாச்சுரல் ஜஸ்டிஸ்க்கு அப்பாற்பட்டதாக எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லே. ஸ்பெஸிப்பிக்காக ஒரு சில குற்றங்களேத் தாக்கல் செய்திருக்கிறோம். அந்த அடிப்படையில் கூறுகிறோம். ஒருவேளே பெரும்பான்மை இருக்கிற காரணத்தால் இது நிராகரிக்கப்படுவதாக இருந்தாலும் எதிர்க்கட்சிகள் எல்லாம் உணர்வோடு அத்தனே எதிர்க்கட்சிக்காரர்களும் கூறுகிறார்கள் என்று சொன்னால் நிச்சயமாக இதிலே தவறு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களும் இந்த மன்றமும் உணர்ந்து கொள்ளும் என்று கருதுகிறேன்.

எதிர்க்கட்சிகளும் ஆளும் கட்சியும் இரண்டு அவயவங்கள் ஆகும். இரண்டு கால்களாக இருக்கின்றன. ஒரு காலுக்கு ஊனம் ஏற்பட்டால் அந்த ஊனம் அடுத்த காலிலும் ஏற்பட்டுவிடும். ஆகவே இப்படிப்பட்ட நல்லமுறைகளேக் கையாள்வதற்கு சபாநாயகர் அவர்கள் தவறி இருக்கிறார்கள் என்று கூறி என் வார்த்தைகளே முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் திரு. வீராசாமி அவர்களேப் பற்றி முந்திரிக்கொட்டை என்று சொன்னார்கள். இது சரிதானு ?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : வேண்டுமானால் நான் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். உங்களுக்கு அவ்வளவு ஆத்திரம் இருக்குமானால். வேண்டுமென்று அவரை அப்படிச் சொல்லவில்லே. அடிக்கடி அவர்கள் இங்கு வந்து ஆலோசனையைக் கேட்டுக்கொண்டு அங்கு போய் அவர்கள் இப்படிப்பட்ட விவாதங்களே எல்லாம் கிளப்பியிருக்கிறார்கள். இதெல்லாம் என்னேப் போன்றவர்களுக்கு நன்றுகத் தெரியும். நான் அவைகளே பட்டவர்த்தனமாகச் சொல்ல நினேக்கவில்லே. விளக்கத்திற்கு நன்றி.

திரு. நா. வீராசாமி : என்னேப் பொறுத்தவரையில் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்போதே கேட்கவேண்டுமென்று நினேத்தேன். அவர்கள் தலேவர். அவர்கள் பேசும்போது குறுக்கிடுவது நன்றுகயிருக் காது என்று அமைதியாக இருந்தேன். ஆனால் அவர்கள் சொன்னார்கள் முந்திரிக்கொட்டை என்று. திரு. பொன்னப்ப நாடார் அவர்களேப் போன்ற பெரியவர்கள் எல்லாம் சட்டமன்றத்தில் அப்படிப்பட்ட வார்த்தை களேப் பயன்படுத்துவதைக் கேட்டு நாங்கள் வருத்தப்படுகிறோம் என்பதைத் தவிர வேறு ஒன்றும் சொல்ல விரும்பவில்லே.

1974 மார்ச் 29]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அவர்களே முந்திரிக்கொட்டை மாதிரி என்று சொன்னேன். அதல் உங்களுக்கு சங்கடம் இருக்கும் என்று நினைத்தால் நான் நிச்சயமாக அதைத் திரும்பப் பெற்றுக்கொள் கிறேன். நான் அந்தமாதிரியான வார்த்தைகளைப் பயன்படுத்த விரும்ப வில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பதவியில் இருந்து நீக்கம் செய்கிற தீர்மானத்தை எதிர்க்கிற வகையில் சில கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் அவர்கள் மீது கருத்துக்களைத் தெரிவித்து அவர்கள் பதவியில் இருந்து இறங்கவேண்டும் என்பதற்குக் குறிப்பிடப்பட்ட காரணங்களும் அதையொட்டி எடுத்துவைக்கப்பட்ட வாதங் களும் அவ்வளவு பொருந்திவரக் கூடியனவாக இல்லை என்பதை இங்கு மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். பெரியவர் மணலி அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியதைப் போல் இதில் அரசியல் காழ்ப்புணர்ச்சி அடிப்படையில் இங்கே கருத்துக்கள் பரிமாறுகிற அளவிற்கு பலரும் எடுத்து வைத்திருக்கிறார்களே தவிர மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய நடவடிக்கைகளை எடுத்துச் சொல்கிற வகையில் கூறுகிறபோது அவர்கள் இந்த மன்றத்தின் மரபுகளை மீறினார்கள் என்றே அல்லது சட்டதிட்ட விதிகளுக்குப் புறம்பாக பார பட்சமாக நடந்தார்கள் என்ற தன்மையின் அடிப்படையில் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் அவர்கள் மிக அடக்கமாக இருப்பவர்கள் என்றாலும் ஆன்று அவிந்த கொள்கை சான்றோர், நிதானமாக காரியங்களை நடத்தி வருபவர்கள் என்பதை பேரவை உணரும். தலைவருக்கு என்று தனி உரிமைகள் எப்போதும் வந்துவிடுவதில்லை. இந்த அவை பார்த்து எந்த மரியாதையையும் மதிப்பையும் தருகிறதோ அந்த மதிப்பும் மரியாதையும்தான் பேரவைத் தலைவருடைய பதவி இடத்தில் இருக்கும்.

இந்த அவையை எப்படி நடத்திச் செல்லவேண்டுமென்பதற்கான விதி முறைகளை நாமே ஒழுங்குபடுத்தித் தருகிறோம். அரசியல் அமைப்புச் சட்டத் தில் விதித்திருக்கிற விதிகளின் அடிப்படையில் இந்த மன்றத்தை எப்படி நடத்திச் செல்லவேண்டும் என்பதற்காக நாம் விதிகளை அமைப்பதற்கான குழு ஒன்றை அமைத்து அவ்வப்போது திருத்தங்கள் தந்து இந்த அவை இந்த இந்த விதிகளின் அடிப்படையில் நடைபெறவேண்டுமென்று வகுத்துத் தருகிறோம். அந்த விதிகளின் அடிப்படையில் பேரவையின் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துகிற வகையிலும் எப்படி எப்படி எல்லாம் ஒழுங்குபடுத்தி நடத்திச் செல்லவேண்டும் என்பதற்காக அலுவல் ஆய்வுக் குழு ஒன்றை வைத்திருக்கிறோம். அந்த அலுவல் ஆய்வுக் குழுவில் எல்லாக் கட்சித் தலைவர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து பேசுவது வேறு.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச் 29

ஆனால் பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் இருக்கிற குறைபாடுகளை குழுவில் எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்புக்களை கையாள்வதற்கான வகையில் அலுவல் ஆய்வுக் குழு அமைத்திருக்கிறது. அதில் எல்லாக் கட்சித் தலைவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் என்னென்ன வகுத்துத் தருகிறார்களோ அப்படி வகுத்துத் தந்த விதிகளின் அடிப்படையில்தான் பணிகளையாற்றிச் செல்லவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே பேரவைத் தலைவர்க்கு என்று ஒரு தனி உரிமைகள் வந்துவிடுவதில்லை.

தலைவருடைய உரிமையானாலும் சரி அல்லது இந்த அவையை நடத்திச் செல்கின்ற பாங்குகள் அனைத்தும் சரி அனைவரும் சேர்ந்து தந்த ஒன்றுதான். ஆகவே அவர்கள் இப்படி நடந்து கொள்ளவேண்டுமென்று வகையை நாம் வகுத்துத் தருவதைப் பொறுத்து அமைந்திருக்கிறது.

கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு இடம் தரவில்லை, கேள்விகளுக்கு துணைக் கேள்விகள் கேட்பதற்கு இடம் தரவில்லை, ஒத்திவைப்புத் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளவில்லை அல்லது அதற்கு இடம் தரவில்லை என்ற காரணங்களுக்காகவே ஒரு பேரவைத் தலைவர் மீது நம்பிக்கை இல்லை என்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரமுடியும் என்றால் அப்போது ஒரு அவையும் அவைத் தலைவரும் இருக்க முடியாது.

நடைபெற்றிருக்கிற பல்வேறு தன்மைகளின் அடிப்படையில் பார்க்கும் போது மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் அவர்கள் எப்படி நடந்து கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைக் காணலாம்.

காலையிலிருந்து அம்மையார் அவர்கள் தலைமை தாங்கிக்கொண்டு வருகிறார்கள். அந்த இடத்திலிருந்துகொண்டு தலைமை தாங்குவது எவ்வளவு கடினமானது என்பதையும், ஒழுங்குப் பிரச்னை என்ற முறையில் எந்தெந்தப் பிரச்னைகள் எல்லாம் வருகின்றன என்பதையும், அதை அடக்குவதற்கு எவ்வளவு சாமர்த்தியம் வேண்டும் என்பதையும், எப்படிப்பட்ட நேரங்களில் உரத்த குரலில் உறுப்பினர்கள் பேசுகிறார்கள் என்பதையும் இன்றையதினம் இந்தத் தீர்மானத்தை விவாதிக்கின்ற நேரத்திலே ஊடே ஊடே வந்ததை நாம் உணர்ந்தோம். இவ்வளவுக்கும் பேரவைத் தலைவர் எவ்வளவு அமைதியாக இருந்து, சாமர்த்தியமாக இந்த அவையை நடத்திக்கொண்டு இருக்கிறார் என்று கருத வேண்டியிருக்கிறது. நாம் அத்தனைபேரும் சேர்ந்துதான் அந்தப் பெருமையைத் தேடித் தரவேண்டியவர்களாக இருக்கிறோம்.

விதி என்றால் விதிதான் என்று மாண்புமிகு அனந்தநாயகி அவர்கள் கூறினார்கள். விதி என்றால் விதியாக இருக்க வேண்டும். விதியை வகுத்துத் தந்ததும், நாம்தான், பேரவைத் தலைவரிடத்தில் அதைக் கொடுத்து பேரவையை நடத்தச் சொல்வதும் நாம்தான். அவர் அதை எடுத்துச் சொல்லி இந்த அவையை நடத்த வேண்டியிருக்கிறது. நாம் எப்படி இந்த அவை நடக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ அப்படி விதி முறைகளை மாற்றித் தாருங்கள், மாற்றிக் கொடுத்தால்

1974 மார்ச் 29] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அவர் அந்த அடிப்படையில் அவையை நடத்துகிறார். இதை அவர் பல முறை சொல்லியிருக்கிறார். இந்த அவையை நடத்திச் செல்வதற்கு நாம் வகுத்துத் தந்த விதி முறைகளை வைத்துதான் நடத்த முடியும். மீறி வருகிற நேரத்தில் அதை அனுமதிக்கவில்லை என்று சொல்வது முறையாகாது.

அடுத்து, பேரவையில் 45 நிமிடங்களுக்கு மேல் நடந்த நடவடிக்கைகளை குறிப்பேட்டிலிருந்து நீக்க ஆணை பிறப்பித்ததாலும் என்று கூறி, அப்படி ஆணையிட்டது தவறு என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். பாராளுமன்ற நடவடிக்கைகளிலும், பல்வேறு சட்டமன்ற நடவடிக்கைகளிலும் நாம் பார்க்கிறோம். பல்வேறு நிகழ்ச்சிகள் நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. எந்தச் சட்டமன்றத்திலும் இந்த நிகழ்ச்சியைத்தான், இந்த சொற்றொடரைத்தான், இந்த வார்த்தையைத்தான் நீக்கலாம் என்று வரையறை இல்லை. ஒரு மணி நேரம் நிகழ்ச்சிகள், 80 நிமிட நிகழ்ச்சிகள் நீக்கப்பட்டிருக்கிற வரலாற்றை நாம் காண்கிறோம். 40—45 நிமிட நிகழ்ச்சிகள் நீக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம்.

விதிக்குப் புறம்பாக இருக்கிறது என்று கருதினால் அதை நீக்கம் செய்ய தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. சில கருத்துக்கள் விதிக்குப் புறம்பாக இல்லையென்றாலும், அவைக்குப் பெருமையளிக்காது, பொது மக்களிடையே நல்ல எண்ணத்தை ஏற்படுத்தாது, அல்லது இந்தக் கருத்துக்களை முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு பேசுவதற்காக உள்ள வாய்ப்பாக அமையக் கூடாது என்று கருதினால், அதைப் பேரவை, நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்க அதிகாரம் இருக்கிறது.

எந்தெந்தச் சொற்களை, கருத்துக்களை, எந்தெந்த சொற்றொடர்களை எடுக்க வேண்டுமென்று நாம் கொடுத்திருக்கிற விதியின் படிதான் நீக்குகிறோமே தவிர வேறு எந்தவித அடிப்படையிலும் அல்ல.

இப்படி 40—45 நிமிட நேர நிகழ்ச்சிகளை நீக்கிவிடச் சொன்னார் என்பதால் தங்கள் மீது நம்பிக்கை இல்லை என்று ஒரு காரணத்தைக் காட்டி இருப்பது பொருந்தாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதன் மீது ஒரு விவாதம் வந்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்தது போல், அலுவல் ஆய்வுக் குழுவில் இனிமேல் எப்படி நடந்துகொள்வது, எந்த ஒழுங்கு முறையைக் கையாள்வது, முன்னால் வந்த சூழ்நிலையை ஒட்டிப் பல உடன்பாடுகள் அலுவல் ஆய்வுக் குழுவில் விவாதிக்கப்பட்டு, அத்தனைக் கட்சித் தலைவர்களும் ஒப்புக்கொண்டு, எதிர்காலத்தில் எப்படி நடக்க வேண்டும் என்று முடிவு எடுத்து இருக்கிறோம். அந்த முடிவின் அடிப்படையில்தான் இப்போது நாம் செய்து இருக்கிறோம். ஆகவே, அவர் பாரபட்சமாக நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டிற்கு இடம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க் கட்சித் தலைவர்களுக்கு ஒழுங்குப் பிரச்னை எழுப்ப அனுமதிக்கப் படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர்கள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச் 29

எந்தப் பாணியில் எந்தச் சூழ்நிலையில் ஒழுங்குப் பிரச்னை எழுப்புகிறார்கள். அது எந்த தொனியில் இருக்கிறது என்பதைப் பார்த்துத்தான் அவர்கள் ஒழுங்குப் பிரச்னை அனுமதிக்க வேண்டியிருக்கிறது. எந்த அளவுக்கு அவர்கள் ஒழுங்குப் பிரச்னைகளுக்கு அனுமதி வழங்கியிருக்கிறார் என்பதை நாம் குறிப்பில் காணலாம்.

மாண்புமிகு திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் பேரவைத் தலைவராக இருத்த பாங்கைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். திரு. யு. கிருஷ்ண ராவ் அவர்கள் இருந்ததைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அப்போது இந்த மன்றத்தில் இருக்கும் வாய்ப்பு எனக்கு இல்லையென்றாலும் கூட நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனிக்கும் தன்மை இருந்தது.

1962-67-ல் இந்த அவையில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த நேரத்திலும் நான் கவனித்து இருக்கிறேன். மாண்புமிகு மணலி அவர்கள் சொன்னமாதிரி, காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில் ஒழுங்குப் பிரச்னை, ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்திருப்பதைப் பார்த்தால் இந்த அளவுக்கு இல்லை என்பதைக் காணலாம்.

இவ்வளவு ஒழுங்குப் பிரச்னைகளுக்கும் இடம் தந்து, இந்த அவையை நல்ல முறையில் நடத்தியிருக்கிறார்கள். ஒழுங்குப் பிரச்னை எழுப்ப வேண்டுமென்றால், விதி முறைகள் மீறப்படும்போது அதை அவைத் தலைவரின் கவனத்திற்குச் சுட்டிக்காட்டுவதற்குத்தான் எழுப்பலாம்.

சில நேரங்களில் ஒழுங்குப் பிரச்னை எழுப்புவதும், அது ஒழுங்குப் பிரச்னை இல்லை என்று தீர்ப்பு வழங்குவதும், குறிப்பிட்ட சொற்றொடர்களை பயன்படுத்திய முறை தொடர்பு இல்லாதது என்று கருதி, சிலர் தன்னிலை விளக்கம் தருவதற்காக ஒழுங்குப் பிரச்னை என்ற முறையில் கிளப்புகிறார்கள். அதற்கு ஒழுங்கு முறை இல்லை என்று சொல்லலாம்.

அவர் கொடுத்த தீர்ப்பு விதி முறைக்குட்பட்டு இருக்கிறதா என்றுதான் பார்க்க வேண்டும். அனந்தநாயகி அம்மையார் அவர்கள் விதி என்றால் விதி என்றார்கள். அந்த விதி முறையிலேயே நாம் தெளிவாகச் சொல்லி விடலாம். ஒழுங்குப் பிரச்னை என்றால் என்ன முக்கியத்துவம் தருகிறோமோ, அந்த அளவுக்கு முக்கியத்துவம் பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன், பாயிண்ட் ஆப் செல்ப்-எக்ஸ்ப்ளனேஷன், தன்னிலை விளக்கம் போன்றவற்றிற்கும் தர வேண்டுமென்று நாம் விதி முறை வகுத்துத் தந்தால் அந்த அடிப்படையில் அவர்கள் செய்வார்கள்.

தன்னிலை விளக்கம் சொல்ல வேண்டுமானால், பேசுகின்ற உறுப்பினர் யீல்டு செய்தால்தான் சொல்லலாம் என்று இருக்கிறது. அப்படி யீல்டு செய்யவில்லையென்றால் பேச முடியாது. அப்படிப் பேசுவதற்கு அனுமதி வேண்டுமென்றால், தன்னிலை விளக்கம் சொல்ல வேண்டுமென்றாலும் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொன்னால் என்ன முக்கியத்துவம் தரப்படுமோ அந்த முக்கியத்துவம் தரவேண்டுமென்று நம்முடைய விதியை மாற்றலாம்.

1974 மார்ச் 19] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஒழுங்குப் பிரச்னை என்று எழுப்பிவிட்டு தன்னிலை விளக்கம் என்று வருகிறபோதுதான் அவர்களைத் தடுத்து நிறுத்த வேண்டிய சங்கடமான நிலைமை பேரவைத் தலைவருக்கு ஏற்படுகிறது. அம்மையார் அவர்கள் தலைமை தாங்கும்போது பல பேர் ஒழுங்குப் பிரச்னை, பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லும் நிலை ஏற்பட்டது. அவர் உடனே அமைதிப் படுத்தி, ஒழுங்குப் பிரச்னை இல்லை என்று உட்கார வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதைப் பார்த்தோம்.

ஒத்தி வைப்புத் தீர்மானம் ஒன்றுமே ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று சொன்னார்கள். 1962–67-ல் நான் எதிர்க் கட்சித் தலைவராக இருந்து பல ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறேன். அவை எதுவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அப்பொழுது மாலை எந்த அளவில் வந்தது, திரு. கிருஷ்ண ராவ் காலத்தில் எவ்வளவு வந்தது. 6–00 திரு. சிவசண்முகம் பிள்ளை காலத்தில் எவ்வளவு வந்தது, இப்பொழுது எவ்வளவு வந்திருக்கிறது என்பதைக் கணக்குப் பார்த்தால் அதைவிட அதிகமான அளவுக்கு இப்பொழுது ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன.

இப்பொழுது ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கூட அனுமதிக்கப்படவில்லை என்று சொன்னார்கள்.

திரு. செல்லபாண்டியன் காலத்தில் நாங்கள் எதிர்க் கட்சியிலிருந்த பொழுதும் கூட ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கூட அனுமதிக்கப்படவில்லை. அப்பொழுதெல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தால், கொண்டு வருவதற்கான காரணங்களைச் சொல்லிவிட்டு, உட்கார்ந்துவிட வேண்டும். உறுப்பினர்கள் விளக்கம் சொல்லக் கூடாது. மணி அடித்துத் தடுத்து உட்கார வைத்துவிடுவார்கள். குறிப்பைப் பார்த்தால் தெரியும்.

இப்பொழுதெல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதிக்கப்பட்டால் என்னவெல்லாம் பேசுவார்களோ அதையெல்லாம் பேசி முடிந்த பிறகு, அதற்கு அமைச்சர்கள் என்ன பதில் சொல்வார்களோ அதுவும் சொல்லி முடிந்த பிறகு, ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிப்பதற்கு அவசிய மில்லை என்றுதான் பேரவைத் தலைவர் சொல்லக்கூடிய அளவுக்கு, அவ்வளவு தாராளமான போக்கை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கையாண்டு வருகிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்பு கிறேன்.

அதே மாதிரிதான் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்திருந்து வேறு பல கருத்துக்களைச் சொல்ல அனுமதிக்கப்பட்ட சூழ்நிலையும் தன்மை யும் நிறைய இருப்பதைக் காணலாம்.

அன்றைக்கு நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்தபொழுது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டுவந்து, அமைச்சரவையின் மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டுவந்த நேரத்தில் கூட, அதற்குப் போது மான அளவுக்கு உறுப்பினர்கள் எதிர்க் கட்சி வரிசையில் இருக்கிறார்கள்

1974 மார்ச் 29] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்று கையெழுத்துப் போட்டுக் கொடுத்தும் கூட, அப்பொழுது பேரவைத் தலைவராக இருந்தவர், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கூட மறுத்து விட்டார்கள். அதற்குக் காரணம் என்னவென்று கேட்டபொழுது, பட்ஜெட்டில் பொது விவாதம் வருகிறது, அதில் உங்களுடைய கருத்துக்களைப் பேசிக் கொள்ளலாம். ஆகவே, அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வேண்டிய அவசியமில்லை என்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கூட அப்பொழுது இருந்த பேரவைத் தலைவர் அனுமதிக்கவில்லை. அனுமதிக்கவில்லை என்ற காரணத்திற்காக நாங்கள் பல பல நாட்களுக்குச் சட்டப் பேரவையின் கூட்டத்தில் கலந்துகொள்ளாமல் கூட இருந்தோம்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் கூட பேரவைத் தலைவரின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமோ, பதவி நீக்கத் தீர்மானமோ நாங்கள் கொண்டு வரவேண்டுமென்ற முயற்சியில் ஈடுபடவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை கூட இப்பொழுது இல்லை.

கேள்விக்கு இடம் கொடுக்கவில்லை, கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு இடம் கொடுக்கவில்லை, நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து அகற்றப்பட்டது என்ற காரணங்களின் அடிப்படையில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது எல்லா சட்டமன்றங்களிலும் இருக்கிற நிலைமைகள்தான். எல்லாப் பேரவைத் தலைவர்களும் கையாள்கின்ற நிலைமைகள்தான். இந்தப் பேரவைத் தலைவர் மட்டுமல்ல, எந்தப் பேரவைத் தலைவர் தலைமை தாங்கினாலும் இத்தகைய நிலைமைகள் வரும் என்பதை நாம் எல்லோரும் உணர்கிறோம்.

'எதிர்க் கட்சி உறுப்பினர்கள் செயல்படாமல் உரத்த குரலெழுப்பித் தடுக்கவும் ஆளுங் கட்சி உறுப்பினர்களை அனுமதிப்பதாலும்' என்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது.

உரத்த குரலை இரண்டு பக்கங்களிலும்தான் எழுப்புகிறார்கள். இன்று காலையிலே கூட உரத்த குரல் எழுப்பப்பட்டது. மாண்புமிகு அம்மையார் அவர்கள் தலைமை தாங்கும்போது கூட உரத்த குரல் எழுப்பப்பட்டது. இரு சாராரும் தான் உரத்த குரல் எழுப்பினர்கள். எல்லோரும் தலைவருடைய அனுமதியைப் பெற்றுத்தான் உரத்த குரல் எழுப்பினர்கள் என்று சொல்ல முடியாது.

இந்தப் பக்கமாக இருந்தாலும் சரி, அந்தப் பக்கமாக இருந்தாலும் சரி, உரத்த குரல் எழுப்பக் கூடாது என்றாலும், இரு சாராரும் சில சமயங்களில் எழுப்பத்தான் செய்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் கூட மிக உரத்த குரல் எழுப்ப வேண்டிய ஒரு கட்டம் வந்தது.

எல்லா உறுப்பினர்களும், கடமை உணர்ச்சியோடும், பொறுப்பு உணர்ச்சியோடும் நடந்துகொள்ள வேண்டிய உணர்வைப் பெறவேண்டும்.

உரத்த குரலை இரு சாரார்களும் எழுப்புகிறார்கள்

1974 மார்ச் 29] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

எதிர்க் கட்சியினராக இருந்தாலும், ஆளும் கட்சியினராக இருந்தாலும் பேரவைத் தலைவரின் அனுமதி பெற்றுத்தான் பேச வேண்டும். ஒரு நேரத்தில் ஒருவர்தான் பேச வேண்டும். பேரவைத் தலைவருடைய அனுமதி பெற்றுத்தான் பேச வேண்டும். பேரவைத் தலைவர் அனுமதித்த பிறகு பேச வேண்டும் என்ற விதி முறையை மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் கடைப்பிடிக்க வேண்டும்.

அதற்குப் பிறகுதான் பேரவைத் தலைவர் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்ற தீர்மானத்திற்குவர வேண்டும். உறுப்பினர்களே விதிகளை மீறி நடந்துகொள்கிற சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டு, பேரவைத் தலைவர் சரியாக நடந்துகொள்ளவில்லை என்று அப்படிப்பட்ட குற்றச்சாட்டை எப்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் மீது சாட்டுவது?

அதே குற்றச்சாட்டு காலையிலிருந்து தலைமை தாங்குகிற அம்மையார் அவர்களுக்கும் வருகிற அளவுக்குத்தான் காலையில் கூட இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்தன. எல்லா உறுப்பினர்களும் சில அடிப்படை விதிகளை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும்.

பேரவைத் தலைவர் அனுமதி பெற்றுத்தான் ஒருவர் எழவேண்டும். அவர் சொன்னதற்குப் பிறகு இன்னொருவர் பேரவைத் தலைவர் அனுமதி பெற்று எழவேண்டும். அவர் கேட்டு முடிந்ததற்கு பிறகு மற்றவர்கள் அனுமதி பெற்று எழ வேண்டும். ஒவ்வொருவராகத்தான் தலைவருடைய அனுமதி பெற்று எழுந்து பேசவேண்டும். அப்படிப்பட்ட ஒரு முறையை எல்லா உறுப்பினர்களும் கடைப்பிடிக்க வேண்டும். தலைவர் அனுமதி பெற்றுத்தான் செய்கிறார்கள் என்று சொல்லவில்லை. அனுமதி பெறுமல் இரு சாராரும் செய்கிறார்கள். ஒப்புக்கொள்கிறேன்.

ஆளும் கட்சியிலிருந்துதான் உரத்த குரல் வருகிறது, எதிர்க் கட்சிப் பக்கம் இல்லை என்ற கருத்து அடிப்படைத் தீர்மானத்தில் தொனிக்கிறது. ஆனால் நிலைமை அப்படியில்லை. எந்தக் பக்கமாக இருந்தாலும், எந்த சபாநாயகர் தலைமை தாங்கினாலும், இந்த மாதிரி நிலைமைகள் இருந்தால் அவர் அவையை நடத்திச் செல்வது கடினமான ஒன்றுதான். ஆகவே, உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் விதிமுறைகளுக்கு மதிப்புத் தந்தால் ஒழிய இந்த நிலைமை சரிபட்டு வராது.

நேரம் ஒதுக்குவதைப் பற்றியும் பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னர்கள். திருஷ்ண ராவ் அவர்கள் இருக்கும்பொழுதும் சரி, திரு. சிவசண்முகம் பிள்ளை இருக்கும்பொழுதும் சரி, ஆளும் கட்சிக்கும், எதிர்க் கட்சியினருக்கும் நேரம் ஒதுக்கும்பொழுது, எதிர்க் கட்சியினரே அதிக நேரத்தைப் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு நேரம் ஒதுக்கியதில்லை.

திரு. செல்லபாண்டியன் அவர்கள் காலத்திலும் ஆளும் கட்சிக்குப் பாதி நேரம், எதிர்க் கட்சிகளுக்குப் பாதி நேரம் என்ற தன்மையில் பாதி, பாதி அளவுக்குத்தான் நேரம் கொடுக்கப்பட்டது. பொது விவாதமாக இருந்தாலும் சரி, நிதிநிலை அறிக்கையின் பேரில் விவாதமாக இருந்தாலும் சரி, இப்பொழுது நடைபெறுகிற விவாதமாக இருந்தாலும சரி,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச் 29

அதிகமான நேரத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பெறத்தக்க அளவுக்குத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் கொடுத்து வந்தார்கள்.

மாண்புமிகு கந்தப்பனும், மாண்புமிகு வீராசாமியும் குறிப்பிட்டுக் காட்டியது போல எற்கனவே நடைபெற்றிருக்கிற நிகழ்ச்சி குறிப்புகளைப் பார்த்தால், நேரம் ஒதுக்குகின்ற வகையில் ஒரு கட்சிக்கு இவ்வளவு என்று ஒதுக்குகிற அளவுக்குத்தான் எங்களுக்கு நேரம் கிடைக்கிறது.

திரு. செல்லபாண்டியன் காலத்தில் ஆளும் கட்சிக்குக் கிடைத்த நேரம் கூட எங்களுக்குக் கிடைக்கவில்லை. எதிர்க் கட்சியினருக்கு 3 மணி நேரம் என்றால், ஆளும் கட்சிக்கு ஒரு மணி நேரம் தான் கிடைக்கிறது. அது தான் நடைமுறையில் வந்திருக்கிறது.

ஆளும் கட்சிக்குப் பாதி, எதிர்க் கட்சியினருக்குப் பாதி என்றாலும், நடைமுறையில் பேரவைத் தலைவர் எப்படி நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அதிகமான நேரத்தை எதிர்க் கட்சியினர்களுக்குத் தான் கொடுத்திருக்கிறார்கள். 1 : 1 அளவுக்குக் கூட அல்ல.

பெரும்பான்மையாக இருக்கிற ஆளும் கட்சியினருக்குக் குறைவான நேரம், எதிர்க் கட்சியினருக்கு அதிகமான நேரம் ஒதுக்கப்படுகிற வகையிலே தான் பேரவைத் தலைவர் நேரத்தை ஒதுக்கி வந்திருக்கிறார்கள் என்பதை இதற்கு முன்னால் நடைபெற்ற நிகழ்ச்சிக் குறிப்பை எடுத்துப் பார்த்தால், எந்த ஆண்டு எந்த விவாதத்தை எடுத்துப் பார்த்தாலும், தெரிய வரும். அதுபற்றி புள்ளிவிவரத்தைக் கூட எடுத்துச் சொன்னார்கள்.

திரு. கிருஷ்ணாராவ் அவர்களாக இருந்தாலும் சரி, திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்களாக இருந்தாலும் சரி, செல்லபாண்டியன் அவர்களாக இருந்தாலும் சரி, அவர்களை விட பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் தாராளமாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தான் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

எல்லா உறுப்பினர்களின் சார்பாக எடுத்துச் சொல்கிறேன். எதாவது வகையிலே இந்த விதிகள் சரியாக இல்லை, நமக்கு ஏற்றதாக இல்லை என்றால், நமக்கு அந்த விதிகளை மாற்றுவதற்கு உரிமை இருக்கிறது. விதி முறைகளை நாம் மாற்றிக்கொள்ளலாம் தேவைப்படும் பொழுது.

ஆனால், நடைமுறையில் இருக்கக் கூடிய விதிமுறைகளுக்கு அடங்கித் தான் நடக்க வேண்டும். அதையொட்டித்தான் அவையின் நிகழ்ச்சிகள் நடைபெறவேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல, பேரவைத் தலைவர் அவர்கள் மிகச் சங்கடமான சூழ் நிலையில் எவ்வளவு சரியான வகையில் நடக்க முடியுமோ அவ்வளவு சரியான வகையில் நடந்து வந்திருக்கிறார்கள். அந்த வகையில் பார்க்கும் பொழுது மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் சூழ்நிலைமைகளுக்குகேற்ப மிகச் சாமர்த்தியமாகத்தான் சமாளித்து வருகிறார்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

1974 மார்ச் 29] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

போவைத் தலைவருக்கு பாரபட்சமாக நடந்துகொள்வதற்கு அவசியம் இல்லை. பார்க்கப் போனால் மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் கந்தப்பன் அவர்களும் எடுத்துத் தெரிவித்தது போல, ஆளும் கட்சி உறுப்பினரே தங்களுக்குப் பேச வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்று குறைப்பட்டுக் கொள்கிறார்கள், இடம் கொடுக்க வில்லை என்று குமுறுகிறார்கள். ஆகவே, இத்தகைய நிலைமைகளில் அவைத் தலைவர் அவர்களை பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

எந்த அவைத் தலைவரும் சமாளிக்க முடியாத சூழ்நிலை எற்படும் பொழுதுகூட புலவர் கோவிந்தன் அவர்கள் சாமர்த்தியமாக சமாளித்திருக்கிறார். நாம் வகுத்துத் தந்த விதிமுறைகளை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் நடந்து வந்திருக்கிறார்கள். அந்த விதிமுறைப்படி எல்லா உறுப்பினர்களும் நடக்க வேண்டும். அந்த அளவுக்கு பேரவைத் தலைவருக்கு உறுப்பினர்கள் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்.

பேரவைத் தலைவர் பதவிக்கு நாம் எந்த அளவுக்கு மதிப்புக் கொடுக்கிறோமோ அந்த அளவுக்குத் தான் பேரவை நிகழ்ச்சிகள் சுமுகமான முறையில் நடைபெறும். "ஆபீஸ் ஆஃப் ஸ்பீக்கர்" என்ற புத்தகத்திலே Philips Laundy' அவர்கள் மிக அழகாக எடுத்துக்கூறியிருக்கிறார்கள்.

"Excepting only the Sovereign herself, no personage throughout the structure of British Parliamentary Government occupies a higher Pinnacle of prestige than the Speaker of the House of Commons. He embodies in his own person the dignity of the nation 's representative assembly. The honour which is accorded to his office is such as to sustain the authority of any incumbent, weak and strong alike. As in all walks of life some Speakers are better than others. and not every holder of the office has contrived to meet its exacting requirements completely. But the office is above the individual and it is the office which commands the first respect. Whoever assumes the Speaker's historic mantle inherits the dignity that goes with it, a dignity that is unfailingly maintained and enhanced at every opportunty. For the exaltation of the Speaker ship is quite deliberate. It is the guarantee of the independence of the Chair of the House of Commons." என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நாம் எப்படிப்பட்ட மரியாதையும், மதிப்பும் பேரவைத் தலைவர் பதவிக்குத் தருகிறோமோ, அதைப் பொறுத்துத்தான் பேரவை நிகழ்ச்சிகள் அமைகின்றன. எல்லா உறுப்பினர்களும் ஒத்துழைப்புத் தர வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அதைத்தான் சில உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச் 29

ஆகவே, அந்த அடிப்படையில் பார்க்கிறபொழுது மாண்புமிகு பேரவைத் தலைவரை பதவியிலிருந்து நீக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் அதன் அடிப்படையில் எடுத்துவைக்கப்பட்ட கருத்துகள், அதன சார்பாக சொல்லப்பட்டவைகள் உள்ளபடியே ஏற்றுக்கொள்ளத்தக்கவை அல்ல.

ஆகவே நாம் எந்த அளவுக்கு அந்தப் பதவிக்கு மதிப்புத் தரவேண்டுமோ அந்த அளவுக்குத் தரவேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் இந்த அவையை நடத்திச் செல்வதில் தனஞல் முயன்ற அளவுக்கு இயன்ற அளவுக்கு முயன்று பணியாற்றி வந்திருக்கிறார்கள் என்று சொல்லி, இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் (மாண்புமிகு பேரவைத் தலைவர்) : தலைவர் அவர்களே, 1966 நவம்பர் 9-ஆம் தேதி இந்த மன்றத்திலே கடைசியாகப் பேசுகிற வாய்ப்பு பெற்றிருந்தேன் நான். அன்ஞளை, 1962 முதல் 1966–67 வரையிலும் இந்த மன்றத்திலே பணியாற்றியவர்களை எல்லாம் வாழ்த்தி விடைபெறுகின்ற அந்த நாளான அன்று பேசிய நான் இவ்வளவு இடை வெளிகளுக்குப் பின்ஞல் இந்த மன்றத்தில் முதல் முறையாக பேசுகின்ற வாய்ப்பை அளித்த நண்பர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன்பு ஒருமுறை கொண்டுவந்த போதே இது இந்த அவைக்கு வரவேண்டுமென்று விரும்பினேன். அதற்குக் காரணம் எவ்வளவு தான்—ஐந்தாண்டுக் காலம் சட்டமன்றத்திலே எதிர்க் கட்சி வரிசையிலே இருந்து பணி புரிந்தாலும் பிறகு ஆளும் கட்சியின் சார்பில் நின்று வெற்றிபெற்று இந்த மன்றத்திலே துணைத் தலைவராகவும் பேரவைத் தலைவராகவும் பணி புரிந்தாலும் தெரிந்து கொள்ள வேண்டிய பல நிகழ்ச்சிகள் இருக்கின்றன என்ற காரணத்தால் இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு கிடைக்குமேயானல் இந்த மன்றத்திலே இருக்கின்ற தலைவர்கள் எல்லாம் மிக அருமையான கருத்துக்களைக் கூறுவார்கள், அதை ஏற்று இந்த மன்றத்திலே இன்னும் சிறப்பாக பணியாற்ற ஒரு வாய்ப்பு இருக்குமென்ற காரணத்தால் அப்போதே வரவேண்டுமென்று விரும்பினேன். "சுடர் விளக்கே ஆயினும் தூண்டுகோலின்றி சுடர் மங்கும்" என்ற கருத்தை உணர்ந்தவன் நான். "அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால் இன்மை அரிதே வெளிறு" என்ற திருக்குறளை கற்றவன் நான்.

எவ்வளவுதான் படித்து, பண்பு நிறைத்திருந்தாலும் அவர்களிடத்திலும் சிறு குற்றங்கள் இருக்கலாம். அந்த மாதிரியான முறையிலே நம்மிடம் இருக்கும் குற்றம் குறைகளை எடுத்துக்காட்டினால் தெரிந்து கொள்ள நல்ல வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினால் அதை வரவேற்றேன். ஆனால், எனக்கு ஒரு ஏமாற்றம்தான் கிடைத்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மன்றத்திலே நல்ல முறையிலே நான் நடந்துகொள்வதற்கு எந்தெந்த வகையிலே தவறி இருக்கிறேன் என்று சுட்டிக்காட்டுவார்கள் என்று எதிர்பார்த்தேன். இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் நான்கு காரணங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். (1) பாரபட்சமாக நடந்து கொள்கிறேன், (2) 45 நிமிடங்களுக்கு மேல் நடந்த நிகழ்ச்சியை எடுத்து விட்டேன், (3) பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்கு அனுமதி மறுக்கிறேன், (4) கூச்சல் குழப்பம் நடக்கும்போது அடக்க வலிமையற்றவனாக இருக்கிறேன் என்ற நான்கு காரணங்களைக் காட்டி, இந்தத் தீர்மானத்தைக் காத்திருக்கிறார்கள்.

1974 மார்ச் 29] [புலவர் கா. கோவிந்தன்]

நான் எந்த அளவுக்கு பாரபட்சமற்ற முறையிலே இந்த அவையிலே நடந்திருக்கின்றேன் என்பதற்கான காரணங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கந்தப்பன் அவர்களும், திரு. வீராசாமி அவர்களும், இந்த அவையின் முன்னவர் அவர்களும், மணலி கந்தசாமி அவர்களும் தெளிவாகக் கூறினார்கள். இது எந்த வகையில் பொருத்தமற்ற வாதம் என்று கூறிவிட்டார்கள். இதிலே மிக முக்கியமாக கூறப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகள் இரண்டு. (1) 45 நிமிடங்களுக்கு மேல் நடைபெற்ற நிகழ்ச்சியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியது, (2) பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப இடம் தரலிலே என்பது. ஆகவே, இந்த இரண்டு குற்றச்சாட்டுகளுக்கு மட்டும் நான் என்னுடைய பதிலைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

45 நிமிட நேர நிகழ்ச்சியை குறிப்பிலிருந்து நீக்கலாமா என்பது விவாதத்திலே முக்கிய இடத்தைப் பெற்றது. இப்படி எங்கே நடந்திருக்கிறது என்று கேட்டார்கள்.

பல இடங்களில் நடைபெறறிருக்கின்றன. அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. "வெர்ட் ஆர் வெர்ட்ஸ்" நிகழ்ச்சியிலிருந்து நீக்கப்படலாம் என்று விதி இருக்கிறது. வெர்ட்ஸ் என்பதற்கு ஒரு வார்த்தைகள் என்று சொல்வது சரியல்ல.

நான் ஏற்கனவே இதைப்பற்றி தெரிவித்திருக்கிறேன். அது இரண்டு சொற்களைத்தான் குறிக்கும் என்று சொல்ல முடியாது. இரண்டுக்கு மேற்பட்ட சொற்களையும் குறிக்கும். திரு. தங்கமணி அவர்கள் அதைக் குறிப்பிட்டுத்தான் விவாதித்தார்கள். அது பொருந்தாத விவாதம். இரண்டுக்கு மேற்பட்ட சொற்களை குறிக்கும் என்பதற்கு நிறைய சான்றுகளை கூறியிருக்கிறேன். நான் அதைப்பற்றி ஒரு தீர்ப்பு கூறும்போது என்னென்ன வகையிலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்பதற்கு பல சான்றுகளை கூற விரும்புகிறேன்.

1973-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 28-ம் நாளன்று நிதி ஒதுக்க மசோதா விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. காளிமுத்து அவர்கள் உரையின் இடையே நீக்கப்பட்டது பற்றி, 1973-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் நாளில் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எழுப்பிய ஒழுங்கு பிரச்சினைக்கு 1973-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ம் நாளில் நான் கீழே வருமாறு விளக்கம் அளித்துள்ளேன்.

"பேரவை நடவடிக்கைகளில் பகுதிகளை நீக்குவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் நேற்று ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்கள். அதுபற்றி நான் முடிவு கூறியபோது, இவ்வாறு நீக்கப்படுவது இதற்கு முன்னரும் நடைபெற்றிருக்கிறது. அதற்கான சான்றுகளை இன்று தருவதாகக் கூறினேன்.

பேரவையில் நிகழ்ச்சிகள் பெருமளவில் நீக்கப்படுவது நம் நாட்டு பலவேறு சட்டமன்றங்களிலும் நிகழ்ந்த காரணத்தால் 1956-ம் ஆண்டு நடைபெற்ற பேரவைத் தலைவர்கள் மாநாட்டிலேகூட இது குறித்துப் பெரிய விவாதமே நடைபெற்றுள்ளது. அந்த மாநாடு நம்முடைய சென்னை

யிலே நடைபெற்றது. நாடாளுமன்ற தலைவர் திரு. அனந்தசயனம் ஐய்யங்கார் அவர்களும், மேலவைத் தலைவர் செரியன் அவர்களும் அந்த மாநாட்டில் கலந்துகொண்டார்கள். அந்த மாநாட்டிலே விரிவான விவாதம் நடைபெற்றது. எந்த அளவுக்கு நீக்கலாம், எப்போது நீக்கலாம் என்பதைப் பேரவைத் தலைவரே முடிவுசெய்யவேண்டுமென்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள்.

1958-ஆம் ஆண்டில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஓர் உறுப்பினர் ஆற்றிய உரையில் 20 நிமிடம் பகுதி அப்பொழுது பேரவைத் தலைவராக இருந்த டாக்டர் கிருஷ்ணராவ் அவர்களால் நீக்கப்பட்டுள்ளது.

1964-ஆம் ஆண்டில் ஓர் உறுப்பினரின் உரையில் ஒரு பகுதி அப்பொழுது பேரவைத் தலைவராக இருந்த திரு. செல்லபாண்டியன் அவர்களால் நீக்கப்பட்டுள்ளது.

1968-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6-ஆம் நாள் நிகழ்ச்சிகளில் இருபது நிமிட விவாதமும் 1968-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 20-ஆம் நாள் நிகழ்ச்சிகளில் 15 நிமிட விவாதமும் பேரவை நடவடிக்கை குறிப்பிலிருந்து அறவே நீக்கப்பட்டுள்ளன.

டில்லி மக்களவை, மாநிலங்கள் அவைகளிலும் கூட இவ்வாறு நடவடிக்கைப் பகுதிகள் நீக்கம் செய்யப்பட்டதற்கு நிறைய சான்றுகள் உள்ளன. ஓர் உறுப்பினர் ஆற்றிய உரை முழுவதுமாக நீக்கப்பட்ட நிகழ்ச்சியும் அங்கு நிகழ்ந்துள்ளது. ஆகவே, அவ்வாறு நீக்குவது ஒழுங்கற்றதாகாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்."

பிற மாநிலங்கள் அவைகளிலும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதற்கு சான்று கூற விரும்புகிறேன். மேற்கு வங்காளத்தில் திரு. ஜோதி பாசு அவர்கள் தீர்மானத்தை ஏற்று 1956-ஆம் ஆண்டு பிப்பவரி திங்கள் 25-ஆம் நாள் நடைபெற்ற முழு நடவடிக்கையும் நீக்கப்பட்டுள்ளது.

1955-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 25-ஆம் நாளில் மக்கள் அவையில் பேரவைத் துணைத் தலைவராக இருந்த திரு. அனந்தசயனம் ஐய்யங்கார் அவர்கள் திரு. பர்மன் என்ற உறுப்பினர் ஆற்றிய முழுப் பேச்சையும் நீக்கி உள்ளார்.

அது மட்டுமல்ல. பார்லிமென்டரி பிராக்டிஸ் என்பதையும், நிகழ்ச்சிகளையும் பார்க்கும்போது

'Where a Member, without being called upon to speak, continues to speak despite the Chair's asking him to desist from it, the Chair may order expunction of the whole speech from the proceedings.' என்று கொடுத்து, அதற்குச் சான்றாக 1968-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23-ஆம் நாளில் திரு. கணேஷ் கோஸ் அவர்கள் கொண்டுவர இருந்த

1974 மார்ச் 29] [புலவர் கா. கோவிந்தன்]

கவன ஈர்ப்புத் தீர்மானத்தை ஒட்டி, அவைத் தலைவர் திரு. சஞ்சீவ ரெட்டி அவர்கள் முழு பகுதியையும் நீக்கியிருக்கிறார்கள். மறுநாள் தீர்ப்பு வழங்கும்பொழுது,

"Yesterday even when I said "nothing will be recorded", the press has published something, which is not proper. Therefore, when I say that nothing will be taken down, it means absolutely no proceedings and the Press shall not publish anything that has happened at that time. Yesterday some papers have done it. Therefore, I am sorry I have to warn them."

Likewise on 25th March 1964 in the Lok Sabha, when a Member continued to interrupt the speech of anothter Member or Minister, the Speaker has directed that interruptions be not recorded என்று கூறியிருக்கிறார்கள். அதற்கு ஆதாரமாக 1964--ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25-ஆம் நாளில் திரு. எ. கே. சென் அவர்கள் பேச்சின் இடையே பலமுறை குறுக்கிட்டுப் பேசிய திரு. ராம் சேவக் யாதவ் அவர்களின் பேச்சு முழுமையும் துணைத் தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி ராவ் அவர்கள்: நீக்கியுள்ளார்கள்.*

* * *

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்): மாலை 6·30.
சபாநாயகர் புலவர் கோவிந்தன் அவர்கள் முன்புதான் இங்கு பேசியதாக குறிப்பிட்ட பேச்சையும் அதைத் தொடர்ந்து இங்கே நடந்த விவாதங்களையெல்லாம் குறிப்பேடுகளிலிருந்து எடுக்குமாறு ஆணையிடுகிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : (மாண்புமிகு பேரவைத் தலைவர்) : தலைவரவர்களே, என்னுடைய பேச்சை இந்த அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டது என்ற நிகழ்ச்சிக்காக அப்பொழுது நாங்கள் யாரும் மறுக்கவில்லை. அதை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டோம். அதற்காக பேரவைத் தலைவரவர்களின் தீர்ப்பை எதிர்த்து நான் எந்தவிதமான கருத்தையும் சொல்லவில்லை. ஆனால் இந்த நிகழ்ச்சி நான் பேசக்கூடியதுதானா என்று கேட்டார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, *

* * *

இதை எல்லாவற்றையும் அகற்ற வேண்டுமென்று தீர்ப்பு வந்திருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்தில் மேலும் இந்த விவாதத்தில் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்க வேண்டுமென்று நினைக்கவில்லை. ஆகவே நாங்கள் எங்கள் கட்சியின் சார்பில் வெளியேறத் தீர்மானித்திருக்கிறோம் என்று கூறி வெளியேறுகிறோம்.

(அமைப்புக் காங்கிரஸ் அங்கத்தினர்கள் வெளி நடப்பு செய்தார்கள்.)

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, *

* * *

இந்த மன்றத்தின் மரபுகளை அது பாதிப்பதாக இருக்கிறது. அது அங்கத்தினர்களுக்கு பல்வேறு தொல்லைகளுக்கு வழிவகுக்கும் என்பதை ....

---

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அதற்கப்பாற்

[1974 மார்ச் 29

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்): "ரெபரனஸ்"க்காகத் தான் சொன்னார்கள், படித்தார்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : எங்களுடைய எதிர்ப்பைக் காட்டும் வகையில் நாங்களெல்லாம் வெளி நடப்புச் செய்கிறோம்.

(அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தார்கள்) (கூச்சல் குழப்பம்).

புலவர் கா. கோவிந்தன் : (மாண்புமிகு பேரவைத் தலைவர்) : தவறவர்களே, ஆக, இந்த மன்றத்திலே நடைபெற்ற நிகழ்ச்சியை நீக்குவது முறைதானு என்பதை நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சியிலே உள்ளவர்களெல்லாம் கேட்டார்கள். அது முறை தான் என்பதற்கான காரண காரியங்களையும், அதற்கான முன் நிகழ்ச்சி இருக்கிறது என்பதையும் எடுத்துக்காட்டினேன்.

இரண்டாவது, அவர்கள் இந்த பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவதில் எப்படிப்பட்ட நிலையிலிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். அதற்கு இங்கே பேசிய உறுப்பினர்கள் விளக்கமாகச் சொல்லி, பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவதில் முறைகேடான பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பக்கூடாது என்றுதான் பேரவைத் தலைவரவர்கள் சொன்னார்களே தவிர, எழுப்பக் கூடாது என்ற கருத்தைச் சொல்லவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் கூறிய குற்றச்சாட்டுகள் எதுவும் நிரூபிக்கப்படாத குற்றச் சாட்டுகள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்த அவை நல்ல முறையில் நடைபெற, நல்ல முறையில் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

CHAIRMAN : (THIRUMATHI JOTHI VENCATACHELLUM) : Under Rule 73 (2) of the Tamil Nadu Assembly Rules, if at the time of putting the question on a motion to the vote of the House, the mover of the motion is absent. it shall be considered to have been withdrawn by him, unless any Member of the House asks that the question on the motion be put.

The hon. Members Thiruvalargal Kovai Chezhiyan, K.T.K. Tangamani, G. R. Edmund, R. Ponnappa Nadar and Thirumathi T. N. Anandanayaki are not in their seats.

No other Member has asked that the question on the motion be put to the vote of the House.

எனவே, இந்தத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று நாளை காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை மாலை 6-57 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.